பாபாசாகேப்

# டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 19



டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர் :

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு :

தொகுதி 19



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956

''வெறும் பட்டப்படிப்பு அல்லது சட்டத்துறைப் படிப்பு படித்து முடிப்பது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அதிகப் பயன் அளிக்காது. இந்துக்களுக்குக் கூட அது அதிக பலன் அளிக்கவில்லை. எது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உதவுமெனில், விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் உயர்தர கல்வி கற்பதுதான். விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் கல்வி தாழ்த்தப்பட்ட சாதியினரின் சக்திக்கு அப்பாற்பட்டது; எனவேதான் பலர் தங்கள் குழந்தைகளை வெறும் பட்டப்படிப்புக்கோ, சட்டத்துறைப் படிப்புக்கோ அனுப்புகிறார்கள். சர்க்கார் உதவியில்லாமல், விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் உயர்தரக் கல்வியின் கதவுகள் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒருபோதும் திறந்திருக்கமாட்டா; இது விஷயத்தில் அவர்களுக்கு உதவ மத்திய சர்க்கார் முன்வர வேண்டுமென்பது சரியானதும் ' நியாயமானது மாகும்.''

–டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குறைகள், ப.35

This Volume XIX in Tamil forms the Second part of the English Edition Volume 10 Part II of Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches-published by the Education Department, Government of Maharashtra, 1991.

முதல் பதிப்பு : 2001

© உரிமைப் பதிவு

விலை: ரூ.40/-

வெளியீட்டாளர்:

*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்*
*சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகம்,*
*இந்திய அரசு,*
*15, ஜன்பத் சாலை,*
*புதுடில்லி.*

விற்பனை நிலையம்:

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,*
41-B, *சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர், சென்னை-98.*

ஒளி அச்சு:
*பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*ராயப்பேட்டை, சென்னை-14. போன்: 8532441, 8532973.*

அச்சிட்டோர்:
*பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*142, ஜானி ஜான் கான் ரோடு,*
*ராயப்பேட்டை, சென்னை-600 014.*
*தொலைபேசி: 8532441, 8532973.*

# ஆலோசனைக்குழு

திருமதி மேனகா காந்தி
சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சு -
இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு)
இந்திய அரசு

டாக்டர் பிந்தேஸ்வர் பாதக், பிஎச்.டி., டி.லிட்.,
செயல் துணைத் தலைவர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
புது டில்லி

திரு. கிரிஷன்லால்
இயக்குநர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
புது டில்லி

நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்) :
டாக்டர் எஸ். பெருமாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆங்கில நூல் தொகுப்பாளர் :

திரு. வஸந்த் மூன்
மும்பை

தமிழ் நூல் பதிப்பாளர் :

டாக்டர் எஸ். பெருமாள்

மொழிபெயர்ப்பாளர்கள் :

திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)
திரு. ஏ.எஸ். மணி
திரு. வி. ராதாகிருஷ்ணன்
திரு. எஸ். குகராஜ்

ஒப்புநோக்கியோர் :

டாக்டர் எஸ். பெருமாள்
திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)

பிழைதிருத்த உதவி:

திரு. அ. பிச்சையா, (அசரீரி)

# அணிந்துரை

மனிதர்கள் தமது ஆதிக்க பலத்தை நிலைநாட்டுவதற்கு வன்முறையை மேற்கொள்ள நேரிடுகின்றது. தமது பலத்தால் தங்களை எதிர்ப்பவர்களை வெற்றி கொண்டு ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்றனர். இதன் விளைவாகச் சமூகத்தில் அமைதி யின்மை ஏற்படுகின்றது. இதனாலேயே மக்கள் பலவகைப் பிரிவினராகப் பிரிந்து எண்ணற்ற சாதியினராயினர். மனிதர் கள் சிலபோது தமது அறிவுபலத்தாலும், செல்வ வளத் தாலும், அதிகார பலத்தாலும் தமது செல்வாக்கை நிலைநாட்ட முயல் கின்றனர். இதனால் சமூகத்தில் ஏழை, பணக்காரன், வசதிமிக்கவர், வசதியற்றவர், தூய்மையானவர், தூய்மை யற்றவர், அழகானவர்கள், விகாரமானவர்கள், பண்பட்ட வர்கள், பண்படாதவர்கள், உயர் சாதியினர், தாழ்ந்த சாதி யினர் என்னும் ஏற்றத்தாழ்வுகள் மலிந்தன. மக்களிடையே இத்தகையவேறுபாடுகளால் இடைவெளி உள்ளவரையில் சமூக அமைதி என்பது ஏற்பட முடியாது.

இன்றளவும் இந்திய மக்கள் நால்வகை சாதியினராக பிரிந்துள்ளனர். இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி வருண முறையின் கட்டுக்கோப்பு நெகிழ்ந்துள்ள போதிலும், வேறுபாடுகள் முழுமையாக உடைத்தெறியப்படவில்லை. ஜனநாயக நெறிகளில் நம்பிக்கையுள்ளோர் இந்த சாதி முறையை நீக்கப் பெரிதும் பாடுபட வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் நூல்களின் தமிழாக்கம், படிப்போரைச் சிந்திக்க வைத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் புதியதொரு சமுதாயம் அமைவதற்கு உதவக் கூடியதாகும்.

நல்வாழ்த்துக்கள்!

மேனகா காந்தி
(திருமதி மேனகா காந்தி)
சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு
அமைச்சக இணை அமைச்சர்
(தனிப் பொறுப்பு)

புதுடில்லி

# தமிழ் நூல் பதிப்பாசிரியர் உரை

டாக்டர் பாபாசாகேப் பி.ஆர். அம்பேத்கர் இந்திய சமுதாயத்தில் நெடுங்காலமாக ச் சமூக உரிமைகள் மறுக்கப் பட்டு வந்துள்ள மக்களுக்காகத் தமது வாழ்நாள் முழுவதும் இடையறாது போராடி வந்தவர். பிரிட்டிஷாரிடமிருந்து இந்திய நாட்டு மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றி யளிப்பதற்கு முடிவெடுத்து அதற்கான பணிகள் தொடங்கிய காலத்தில் சுதந்திர இந்திய அரசியலமைப்பில் ஷெட்யூல்டு வகுப்பு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை எடுத்துரைத்து ஆங்கில அரசுக்கு எழுதிய கடிதங்களும், பதில் களும் இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்த உரிமை களைக் கோருவதற்குச் ஷெட்யூல்டு வகுப்பாரின் அடிப்படை யான துயரங்கள், குறைகள் ஆகியவற்றை (1) அரசியல், (2) கல்வி (3) மற்ற குறைகள் (4) துன்பத்தில் உழலும் மக்கள்பால் சர்க்காரின் கடமை என்னும் தலைப்புகளில் கோரிக்கை மனுவையும், அறிக்கைகளையும் அளித்துள்ளார்.

ஆங்கிலேய ஆட்சியாளரிடமிருந்து இந்திய மக்களுக்கு அதிகார மாற்றம் ஏற்பட்ட காலத்தில் அளிக்கப்பட்ட இந்த மனுவும், கடிதங்களும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை ஆவணமாக விளங்குபவை. இவற்றை மக்களின் பார்வைக்குக் கொணரும் வகையில் தமிழிலும், ஏனைய இந்திய மொழி களிலும் வெளியிடும் மகத்தான பணியை மேற்கொண்டுள்ள இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச் சகமும், டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனும் பாராட்டுக்கு உரியவை.

இந்த ஆவணங்களை மிகுந்த பொறுப்புணர்வுடன் மொழி பெயர்த்து அளித்துள்ள மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்பு நோக்குவோர் ஆகிய யாவரும் நன்றிக்குரியவர்கள்.

**எஸ். பெருமாள்**
தமிழ் நூல் பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை 5

பகுதி I

பாகம் I

அரசியல் குறைகள் 6

பாகம் II

கல்வி சம்பந்தப்பட்ட குறைகள் 34

பாகம் III

ஏனைய குறைகள் 43

பாகம் IV

இன்னல்படும் மக்கள்பால் சர்க்காரின் கடமை 48

பகுதி II

1. சர் எஸ். கிரிப்சின் குறிப்புகள் 59
2. சர் எஸ். கிரிப்சுக்கு டாக்டர் அம்பேத்கரும் திரு. ராஜாவும் எழுதிய கடிதம் 61
3. லின்லித்கோ கோமானுக்கு சர் ஆர். லும்லே (பம்பாய்) எழுதிய கடிதம் (ஒரு பகுதி)[1] 63
4. கிரிப்ஸ் திட்டம் 67
5. கிரிப்ஸ் திட்டம் பற்றி டாக்டர் அம்பேத்கர் அறிக்கை 70
6. திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் தந்தி 82
7. யுத்த அமைச்சரவையின் அறிவிப்பு 84
8. திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் கடிதம் 86
9. திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் தந்தி 87
10. திரு. லின்லித்கோ கோமானுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம் 89
11. வைஸ்ராய் நிர்வாக சபையில் நடைபெற்ற விவாதத்தின் சுருக்கம் 94
12. திரு. அமெரிக்கு ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் தந்தி 96

பக்கம்

13. ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம் 97

14. பெதிக்-லாரன்ஸ் பிரபுவுக்கு ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் கடிதம் 102

15. அமைச்சரவைத் தூதுக்குழு, ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரிடையில், 1946, ஏப்ரல் 5, வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்ற கூட்டம் பற்றிய குறிப்பு 104

16. இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வேவல் பிரபுவுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம் 111

17. ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு நிர்வாக சபை உறுப்பினர்கள் எழுதிய கடிதம் 116

18. அமைச்சரவைத் தூதுக்குழு உறுப்பினர் ரைட் ஹானரபிள் திரு. ஏ.வி. அலெக்சாண்டருக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம் 117

19. பெதிக்-லாரன்ஸ் பிரபுவுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம் 128

20. டாக்டர் அம்பேத்கருக்கு பெதிக்-லாரன்ஸ் பிரபு கடிதம் 130

21. ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு ராவ் பகதூர் சிவராஜ் கடிதம் 132

22. டாக்டர் அம்பேத்கருக்கு திரு. அட்லி கடிதம் 133

23. திரு. அட்லிக்கு டாக்டர் அம்பேத்கருக்கு கடிதம் 144

24. திரு. அட்லிக்கு பெதிக்-லாரன்ஸ் பிரபு கடிதம் 148

25. திரு. அட்லிக்கு பெதிக்-லாரன்ஸ் பிரபு கடிதம் 151

## பகுதி III

**அறிக்கைகள்**

**I. பி.ஆர். அம்பேத்கர் எழுதிய திறனாய்வுக் கட்டுரை 157**

1. பூர்வாங்க தேர்தல்களின் முடிவுகள் பற்றிய ஓர் ஆய்வு 165
2. அமைச்சரவைத் தூதுக்குழுவும் தீண்டப்படாதவர்களும் 175

சிறப்புப் பெயரகராதி 193

# பகுதி - II

**1942-46 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முக்கியமான கடிதப் போக்குவரத்து, கோரிக்கை மனு மற்றும் அறிக்கைகள் முதலியவை**

# பகுதி I

## கோரிக்கை மனு

<u>இரகசியம்</u>

<u>சுற்றுக்கு விடப்படுவதற்கு அல்ல</u>

# தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குறைகள்

**மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்**
*எம்.ஏ. பிஎச்.டி., டி.எஸ்ஸி, பாரிஸ்டர்,*
*கவர்னர் ஜெனரலின் நிர்வாகக்குழு உறுப்பினரால்*

**மேன்மைதங்கிய கவர்னர் ஜெனரலிடம்**
*1942 அக்டோபர் 29ம் தேதியன்று*
*சமர்ப்பிக்கப்பட்ட*

## கோரிக்கை மனு

*22, பிரிதிவிராஜ் சாலை,*
*புதுடில்லி*

*(இதை ஆக்கியவர் வெளியிட்ட சிறுபிரசுரத்தின் மறுபதிப்பு)*

# தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் துயரங்கள்

## முன்னுரை

பிரிட்டிஷ் இந்தியாவில் வாழும் ஷெட்யூல்டு வகுப்பினரின் (தாழ்த்தப்பட்ட வகுப்பினரின்) குறைகளை எடுத்துக்கூறி, அவற்றிற்கு தீர்வுகாண அவசியப்படும் நடவடிக்கைகள் பற்றி யோசனைகளை வழங்குகிறது இந்த கோரிக்கை மனு.

குறைகளைப் பட்டியலிட்டுக் கூறும்போது, மத்திய சர்க்காரால் மட்டுமே தீர்வு காணக்கூடிய குறைகளை மட்டுமே நான் கவனத்தில் கொண்டேன்.

இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள குறைகள் மூன்று இனங்களாகப் பிரிக்கப்பட்டு தனியாக விவாதிக்கப்பட்டுள்ளன: (1) அரசியல் ரீதியான குறைகள், (2) கல்வி சார்ந்த குறைகள், (3) மற்ற குறைகள். அரசியல் குறைகளை பகுதி I பரிசீலிக்கிறது; பகுதி II கல்வி சார்ந்த குறைகளையும், பகுதி III பிற குறைகளையும் எடுத்துரைக் கின்றன. இத்துடன் பகுதி IVஐயும் சேர்த்துள்ளேன்; அதில் இடை விடாத துன்பகரமான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவர்பால் ஒவ்வொரு சர்க்காரும் அவசியம் மேற்கொள்ள வேண்டிய கடமை பற்றி துணிவுடன் பேச முற்பட்டுள்ளேன்; இதை இந்திய சர்க்கார் அங்கீகரிப்பர், ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு அவர்கள் ஆற்ற வேண்டி யதை ஆற்றுவர் என்ற நம்பிக்கையில் இதைச் செய்திருக்கிறேன்.

சில பகுதிகளாகக் கொண்ட ஓர் அட்டவணையைக் கீழே கொடுப்பது உசிதம் என்று கருதினேன். இந்த அட்டவணை இரு நோக் கங்களை நிறைவேற்றுகிறது என்பதைக் காணலாம். அது முதலாவ தாக இந்தக் கோரிக்கை மனுவின் உள்ளடக்கத்தை கொடுக்கிறது; இரண்டாவதாக, ஆரம்பத்திலேயே இந்தக் குறையீடுகள் பற்றிய ஒரு பொதுவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

### பகுதி I அரசியல் குறைகள்

1. மத்தியச் சட்டமன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாதது.
2. மத்திய நிர்வாக சபையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாதது.
3. அரசுப் பணிகளில் எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லாதது

4. மத்திய அரசுப் பணித்துறை ஆணையத்தில் பிரதிநிதித்துவம் இல்லாதது.

பகுதி II - கல்வி சார்ந்த குறைகள்

5. பல்கலைக் கழகக் கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் நிதி உதவி இல்லாதது.

6. தொழில்நுட்பப் பயிற்சிக்கான வசதிகள் இல்லாதது.

பகுதி III - மற்ற குறைகள்

7. தீண்டப்படாதவர்களும் சர்க்கார் பிரசாரமும்.

8. தீண்டப்படாதவர்களும் சர்க்காரின் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தங்களும்.

பகுதி IV - துன்பத்தில் உழலும் மக்கள்பால் சர்க்காரின் கடமை

## பகுதி I

# அரசியல் குறைகள்

### 1. மத்தியச் சட்டமன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாதது

இன்று அமைக்கப்பட்டுள்ள மத்தியச் சட்டமன்றத்தில் 141 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 102 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்; 39 பேர் நியமிக்கப்பட்டவர்கள்: நியமிக்கப்பட்ட உறுப் பினர்களில் 19 பேர் அதிகாரிகள் அல்லாதவர்கள்; 20 பேர் அதிகாரிகள். இந்த மொத்தம் 141ல் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருவர் உள்ளனர். இதனை ஷெட்யூல்டு வகுப்பினரின் மக்கட் தொகையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒரு அரசியல் விவகாரமாக ஆகியுள்ளது. தங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டுவதற்காக இந்துக்களும், முகமதியர்களும், சீக்கியர் களும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் திரித்துப் புரட்ட முயற்சி செய்து வந்துள்ளனர். தீண்டப்படாதவர்களுக்கு பாதகமான முறை யில் மிகப் பெரும்பாலும் இது செய்யப்படுகிறது. எனவே அவர்களின்

மக்கள் தொகையில் துல்லியமான எண்ணிக்கையை பெறுவது கஷ்டமாகிறது. மக்கள் தொகை கணிப்பு கொடுக்கும் மதிப்பீடு எதுவாக இருந்தாலும், அது குறைந்த மதிப்பீடாகவே இருக்க முடியும். எனினும் 1940 மக்கட் தொகை கணிப்பு கொடுத்துள்ள புள்ளிவிவரப்படி, ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் தொகை 4 கோடி என்று எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு மத்திய சட்டமன்றத்தில் கேலிக்கூத்தான முறையில் மிகக் குறைந்த அளவுப் பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டிருக்கிறது.

2. இந்த நிலையைத் தெளிவுபடுத்த இந்த விஷயம் சம்பந்தப்பட்ட இரு அட்டவணைகளை கீழே கொடுத்துள்ளேன்:

### அட்டவணை I

### பிரிட்டிஷ் இந்தியாவின் மக்கள் தொகை

| சமூகங்கள் 1 | 1941ல் ஒவ்வொரு சமூகத்தின் மொத்த மக்கட் தொகை | மக்கள்தொகைக் கேற்ப முக்கியத்துவத்தின் படிநிலை | மொத்த மக்கள் தொகையில் சதவீகிதம் |
|---|---|---|---|
| மொத்தம் | 295,808,722 | | |
| இந்துக்கள் | 1,50,890,146 | 1 | 50.0 |
| முஸ்லீம்கள் | 79,398,503 | 2 | 23.6 |
| ஷெட்யூல்டு வகுப்பினர் | 39,920,807 | 3 | 13.5 |
| மலைவாசிகள் | 16,713,256 | 4 | 5.7 |
| சீக்கியர்கள் | 4,165,097 | 5 | 1.3 |
| இந்தியக் கிறித்தவர்கள் | 3,245,706 | 6 | 1.0 |
| ஐரோப்பியர்கள் | 122,788 | 7 | ... |
| ஆங்கிலோ-இந்தியர்கள் | 113,936 | 8 | ... |
| பார்ஸிகள் | 101,968 | 9 | ... |

குறிப்பு: இந்த மகஜரின் நோக்கத்திற்கு பொருத்தமாக உள்ள சமூகங்களின் மக்கள் தொகை மட்டுமே. இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை II

## மத்திய சட்டமன்றத்தில் சமூகவாரி இயைபு

| சமூகம் | தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப் பினர்கள் | | நியமிக்கப் பட்ட அதிகார சார்பற்ற உறுப்பினர்கள் | | நியமிக்கப்பட்ட அதிகாரசார் புடைய உறுப் பினர்கள் | | அதிகார சார்புடைய உறுப்பினர்கள் உள்ளிட்டு மொத்தம் | | அதிகார சார்புடைய உறுப்பினர் களைநீக்கி மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சத விகிதம் | எண்ணிக்கை | சத விகிதம் | எண்ணிக்கை | சத விகிதம் | எண்ணிக்கை | சத விகிதம் | எண்ணிக்கை | சத விகிதம் |
| 1 | 2 | | 3 | | 4 | | 5 | | 6 | |
| இந்துக்கள் | 56 | 54.9 | 4 | 21 | 8 | ... | 68 | 48.5 | 60 | 49.5 |
| முஸ்லீம்கள் | 34 | 33.5 | 7 | 37 | 3 | ... | 44 | 31 | 41 | 33.8 |
| சீக்கியர்கள் | 2 | ... | 2 | 10.5 | ... | ... | 4 | 2.8 | 4 | 3.3 |
| பார்ஸிகள் | 1 | ... | 2 | 10.5 | 1 | ... | 4 | 2.8 | 3 | 2.4 |
| ஐரோப்பியர்கள் | 8 | 7.8 | 1 | ... | 7 | ... | 16 | 11.3 | 9 | 7.4 |
| இந்தியக் கிறித்தவர்கள் | | - | 1 | - | - | - | 1 | - | 1 | - |
| ஆங்கிலோ-இந்தியர்கள் | - | - | 1 | - | - | - | 1 | - | 1 | - |
| ஷெட்யூல்டு வகுப்பினர் | - | - | 1 | - | 1 | - | 2 | 1.4 | 1 | - |
| காலியிடம் | 1 | - | - | - | - | - | 1 | - | 1 | - |
| மொத்தம் | 102 | - | 19 | - | 20 | - | 141 | - | 121 | - |

3. மத்திய சட்டமன்றத்தில் இப்பொழுது வெவ்வேறு சமூகங்கள் எந்த அளவு பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றன என்பது பற்றி ஏராளமான விவரங்களை இந்த அட்டவணை தருகிறது. பத்தி 5ல் உள்ள புள்ளிவிவரங்கள் ஒவ்வொரு சமூகமும் பெற்றுள்ள மொத்த பிரதிநிதித்துவத்தையும் அவற்றில் சிலவற்றின் சதவிகிதத்தையும் காண்பிக்கிறது. எனினும் இவற்றுக்கு முக்கியத்துவம் தர நான் விரும்பவில்லை. நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளும் இந்த புள்ளி விவரத்தில் உட்படுவர். அவர்கள் பிரதானமாக சர்க்காரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டவர்கள்; அவர்கள் சார்ந்த சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. இரண்டாவதாக, நியமிக்கப்பட்ட அதிகாரிகளது சமூக வாரி இயைபு, மாறுபடக் கூடியது, நிலையானதல்ல. ஆனால் மற்ற பத்திகளில் உள்ள புள்ளிவிவரங்கள்பால். கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். பத்தி 6லிருந்து துவங்குகிறேன். வெவ்வேறு சமூகங்கள் தேர்தல் மூலமும் நியமனம் மூலமும் பெற்றுள்ள மொத்த பிரதிநிதித்துவத்தின் அளவை அது எடுத்துக்காட்டுகிறது. அதிலும் பத்தி 3ல் உள்ள புள்ளிவிவரங்கள் இதனை இன்னும் அதிகத் துலாம்பரமாகப் புலப்படுத்துகின்றன. தேர்தல் மூலம் இந்துக்கள் 54.9 சதவீத இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; அதற்கு மேலும், நியமனத்துக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்களுக்கு 21 சதவீதம் அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் மூலம் முகமதியர்கள் 33.5% பெற்றுள்ளனர். அவர்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் அவர்களுக்கு எவ்வளவு கிடைக்க வேண்டுமோ அதைவிட மிக அதிக அளவு இது. அதற்கு மேலும், நியமனத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் 37 சதவீதம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. சீக்கியர்கள், பார்ஸிகள் விஷயமும் இதுவே. அவர்களது எண்ணிக்கை அளவுக்கும் மிக அதிகமாக அவர்கள் தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். அது மட்டுமல்ல, இவ்விரு சமூகங்களில் ஒவ்வொன்றும் நியமன இடங்களில் 10.5 சதவீதத்தைப் பெற்றுள்ளன. ஆனால் அதேசமயம் 4 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய சமூகமான ஷெட்யூல்டு வகுப்பினர் தேர்தலில் ஓர் இடத்தைக் கூட பெறவில்லை; நியமனத்தின் மூலம் ஒரே ஓர் இடத்தையே பெற்றுள்ளனர். இது அப்பட்டமான உண்மையாகும்.

4. இந்த விவரங்களைக் கொண்டு பார்க்கும்போது இரண்டு விஷயங்கள் தெள்ளத் தெளிவு. முதலாவதாக, சட்டமன்றம் சமசீரற்ற அமைப்பாகவே உள்ளது. சில சமூகங்களுக்கு தேவைக்கு அதிகமான பிரதிநிதித்துவமும், சில சமூகங்களுக்குத் தேவைக்குக் குறைவான

பிரதிநிதித்துவமும் அளிக்கும் இரு நோய்களால் அது பீடிக்கப்பட்டுள்ளது. இந்த நோய் மிகவும் தீவிர வடிவத்தில் உள்ளது. அளவுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் பெற்றுள்ள சமூகங்கள் அதிக செல்வாக்கும் ஆற்றலுமிக்கவையாக உள்ளன. ஆனால் அதேசமயம் அதிக பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமல் குறைந்த பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ள சமூகத்தினரோ வலிமையற்றவர்களாகவும் வறுமையில் வாடுபவர்களாகவும் உள்ளனர். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய இரண்டாவது கருத்து நியமனம் செய்யும் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவது பற்றியதாகும். பிரதிநிதித்துவத்தின் சமத்துவமற்றத் தன்மையை சீர்செய்வதற்காகவே அரசியல் சட்டத்தில் நியமன அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேறுவிதமாகக் கூற வேண்டுமெனில் தேர்தல் மூலம் போதுமான பிரதிநிதித்துவம் பெறாத சமூகங்களுக்கு நியமனத்தின் மூலம் போதுமான அளவு பிரதிநிதித்துவம் அளிப்பதே நோக்கமாகும்.

மத்திய சட்டமன்றத்தின் இயைபைப் பொறுத்தவரை, தேர்தல் விஷயத்திலோ அல்லது நியமன விஷயத்திலோ அடிப்படையான கோட்பாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியே ஏதாவது ஒரு கோட்பாடு இருக்கிறதெனில் அது என்ன தெரியுமா? பீட்டருக்கு பாலைவிட அதிகமாகக் கொடுப்பதும், ஏறத்தாழ எல்லாவற்றையும் பெற்றுள்ள பீட்டரை மேலும் வளப்படுத்த, கிட்டதட்ட எதுவும் பெற்றிராத பாலை கொள்ளையடிப்பதும்தான் இந்தக் கோட்பாடு.

5. பிரதிநிதித்துவம் விஷயத்தில், ஷெட்யூல்டு வகுப்பினருக்கு இவ்வளவு கொடுமையான அநீதி இழைக்க எந்த நியாயமும் இல்லை. தங்களின் உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் முகமதியர்களும் இந்துக்களும் ஒருவரோடு ஒருவர் போராட்டம் நடத்திவரும் ஒரு சட்டமன்றத்தில், மூன்றாவது சமூகமான தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதையும் விட்டுக்கொடுக்காமல் இருப்பதில் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்கும் 141 உறுப்பினர் உள்ள ஓர் அவையில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரே ஒரு பிரதிநிதி, தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைகளுக்கான போராட்டத்தில் என்ன ஆதரவு பெற முடியும்? எந்த சவுத்பரோ குழுவின் சிபாரிசுகளின் படி மத்திய சட்டமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதோ, அதன் கருத்து என்னவெனில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்களை நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கருத்தில் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம் என்பதாகும். இந்தக் கருத்தை அப்போதைய இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள மறுத்தது என்பது போதுமான அக்கறையுடன் கவனத்தில்

கொள்ள வேண்டிய விஷயமாகும். சவுத்பரோ குழுவின் அறிக்கை மீதான தங்கள் அஞ்சல் விடுக்கையில் இந்திய சர்க்கார் கூறியதாவது:

> ''எங்கள் கருத்தில் சீர்திருத்தங்கள் பற்றி (மாண்டேகு-செம்ஸ்போர்டு) அறிக்கையின் நோக்கத்திற்கேற்ப இந்த ஏற்பாடு இல்லை என்பதாகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் சுய-பாதுகாப்பு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டுமென்று குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். 60 முதல் 90 வரை சாதி இந்துக்களைக் கொண்டுள்ள மன்றத்தில் அந்த சமூகத்தின் ஒரே ஒரு பிரதிநிதியைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்த பலனை எதிர்பார்க்க முடியும் என்று நம்புவது நிச்சயமாக ஒரு கற்பனையே. அறிக்கையின் பத்திகள் 151, 152, 155ன் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த தாழ்த்தப்பட்டவர்களை நாம் அதிக தாராள மனத்துடன் நடத்த வேண்டும்....''

துரதிருஷ்டவசமாக, மத்திய சட்டமன்றத்தின் இயைபு சம்பந்தமாக தனது ஆலோசனையை முன்வைக்கும்போது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இந்திய சர்க்காரால் எந்த தாராளத்தன்மையும் காட்டப்படவில்லை. நியமனத்தின் மூலம் அவர்களுக்கு (சர்க்கார்) ஒரு இடம் அளித்தார்கள்; இந்நிலை 1921லிருந்து தொடர்ந்து வருகிறது.

6. சொற்பமான இந்த பிரதிநிதித்துவத்தின் விளைவு வருந்தத்தக்கதாகும். 141 பேர் கொண்ட மன்றத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரே ஒரு பிரதிநிதி, தனது முற்றிலுமான இயலாமையை உணராமல் இருக்க முடியாது. மன்றத்தில் இந்துக்கள் தரப்பிலிருந்து தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிராக எழும் பெருமளவிலான குரோத எண்ணங்களை எதிர்த்து அவர் சமாளிக்க வேண்டியுள்ளது. தங்கள் நலன்களை முன்கொண்டு செல்லுவதற்கான தங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லீம் தரப்பினரின் ஆதரவையும் அவர் நம்பி இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நியாயமான நலன்களை ஆதரிப்பதைவிட பிரதான இந்து, முஸ்லீம் தரப்பினருடன் தங்களுக்குள்ள நல்லுறவுகளை பாதுகாத்துக் கொள்வதில் அதிக அக்கறை கொண்டுள்ள அதிகாரிகள் தரப்பையும் அவர் நம்பியிருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் குறைகளை மன்றத்தில் தெளிவாக எடுத்துரைக்கவும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரே ஒரு பிரதிநிதியால் சாத்தியமாகாது. சட்டமன்றத்தின் தலைவர் வகுத்துள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்குதான் பேசும் சந்தர்ப்பத்தை முதலில் தலைவர் அனுமதிக்

கிறார் என நான் கேள்விப்படுகிறேன். குறைந்தது 10 உறுப்பினர்களையாவது பெற்றிருக்காத ஒரு கட்சியைத் தலைவர் அங்கீகரிப்பதில்லை என்றும் அறிகிறேன். தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதி, ஒரு கட்சியில் சேரவில்லையெனில், சாதாரணமாக பேசுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்காது என்றாகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதி இத்தகைய நிலையை எதிர்கொள்ள வேண்டியிருப்பது மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் அல்ல. ஒரு கட்சியில் சேர்வது என்றால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்களை அந்த கட்சி நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோட்பாடுகளுக்கும் நலன்களுக்கும் அது முற்றிலும் முரணானதாக இருக்கக்கூடும். மறுபுறத்தில், ஒரு கட்சியில் சேராவிடில், பேசும் உரிமையை முற்றிலுமாக இழக்க வேண்டும். 1942 செப்டம்பரில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் இந்தியாவின் இன்றைய அரசியல் நிலை பற்றிய விவாதத்தின்போது என்ன நடந்தது என்பதை ஒருவர் கவனத்தில் கொண்டால், தாழ்த்தப்பட்ட சாதியினரின் சார்பாகப் பேசுவதற்கு அவர்களின் பிரதிநிதியான மதிப்பிற்குரிய ராவ் பகதூர் என். சிவராஜ் சந்தர்ப்பத்தைப் பெறுவது மிகவும் கஷ்டமாக இருந்தது; ஆனால் அதே சமயம் முகமதியர்களுக்காக 5,6 முகமதிய உறுப்பினர்கள் சுலபமாகப் பேசமுடிந்தது.

7. எனவே, மன்றத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவம் அதிகப்படுத்தப்பட வேண்டியது பெரிதும் அவசியம். அதிகார சார்பற்ற நியமன இடங்களில் காலிகள் ஏற்படும்போதுதான் இதைச் செய்ய முடியும் என்பது உண்மையே. நியாயமாகவே, காலி இடங்கள் ஏற்படும்போது அவை மன்றத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

## II. மத்திய நிர்வாக சபையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாத நிலை

8. மத்திய நிர்வாக சபையில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குள்ள பிரதிநிதித்துவ உரிமையை அங்கீகரிப்பதில் இந்திய சர்க்கார் அதிக மெத்தனம் காட்டி வருகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இது மிகவும் வேதனையளிப்பதாக இருந்து வருகிறது. சென்ற காலத்தில் அவர்களின் அரசியல் அந்தஸ்து எதுவாக இருந்த போதிலும், வட்டமேசை மாநாட்டிற்குப்பின், அவர்களின் அரசியல் அந்தஸ்து முகமதியர்களின் அரசியல் அந்தஸ்துக்கு சமமானதாக ஆகியுள்ளது;

மத்திய நிர்வாக சபையில் பிரதிநிதித்துவம் பெற முகமதியர்களுக்கு உரிமை இருக்குமானால் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் அந்த உரிமை உண்டு. அவர்களின் வாதம் வலுவான அடிப்படையைக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. முகமதியர்களுக்கு மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு போதுமான பிரதிநிதித்துவத்திற்கு சட்டப்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பது வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கைக்கு இந்துக்களின் கருத்து எதிராக இருக்கவில்லை. இந்துக்கள் கூறியதெல்லாம் இதனை ஒரு சம்பிரதாயமாக்கி விட வேண்டும் என்பதாகும். இறுதியாக ஓர் உடன்பாடு எட்டப்பட்டது; முக்கியமான சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ள ஆவன செய்வது கட்டாயமாக்கப்படும் ஒரு விசேடப் பிரிவு மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் கவர்னர்-ஜெனரலுக்கும் அனுப்பப்படும் ஆணைப்பத்திரத்தில் இடம்பெற வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த சமூகங்கள் யாவை என்று குறிப்பிடப் படாவிட்டாலும், ''முக்கிய சிறுபான்மையினர்'' என்ற வாசகம் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் உட்படுத்தும் என்று கருதப்பட்டது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. நீண்ட காலத்திற்குப் பின், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அமைச்சரவையில் பிரதிநிதித் துவம் அளிக்க வேண்டிய கட்டாயத்தை இந்திய சர்க்கார் அங்கீ கரித்துள்ளது.

9. என்றாலும், இந்த உரிமையை அங்கீகரிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தால் தனது சிறப்பை பெரிய அளவு இழந்துவிட்டது மட்டுமல்ல, இந்தக் குறைபாட்டைக் களையவும் தவறிவிட்டது என்பதைக் கூறியாக வேண்டும்; ஏனென்றால் அமைச்சரவையில் தங்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவானது என்று தாழ்த்தப் பட்ட சாதியினர் நினைக்கிறார்கள். 15 பேர் கொண்ட அமைச்சரவை யில் முகமதியர்கள் 3 உறுப்பினர்களைப் பெற்றிருக்கும்போது, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே இருக் கிறார். பல்வேறு சமூகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித் துவத்திற்கும், அவர்களின் தேவைகள் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள மகத்தான வேறுபாட்டின் காரணமாகவே எழுந்துள்ளது இந்த மனத்தாங்கல். மக்கள் தொகைதான் அளவுகோலாக இருந்தால் மக்கள் தொகையில், முகமதியர்களுக்கு மிக அருகில் உள்ளனர் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. 15 பேர் கொண்ட அமைச்சரவையில் முகமதியர்கள் மூன்று பேர்களைப் பெற்றிருந்தால் தாழ்த்தப்பட்ட சாதியினர் இரண்டு பேர்களை

யாவது பெற வேண்டும். இப்பொழுது, அமைச்சரவையில் சமூக வாரியான பிரதிநிதித்துவம் என்பது எந்தக் கோட்பாடு ரீதியான தாகவும் இல்லை என்று தோன்றுகிறது. சில பத்து லட்சம் மட்டுமே மக்கள் தொகை கொண்ட சீக்கியர்களும் 4 கோடி மக்கள் தொகை கொண்ட தீண்டப்படாதவர்களும் ஒரே நிலையில் வைக்கப்பட்டுள் ளனர்.

10. இந்திய அரசியலில் தாழ்த்தப்பட்ட சாதியினரில் நிலை பெருமளவு ஸ்திரப்படுத்த வேண்டிய தேவையுள்ளது; இந்திய அரசியலில் அவர்களின் நிலை ஸ்திரப்படுத்துவதற்கான பயனுள்ள பரிகாரம் அவர்கள் தங்கள் எண்ணிக்கை, தேவைகள் அடிப்படை யில் கோருகின்றபடி அமைச்சரவையில் அவர்களுக்குப் பிரதிநிதித் துவம் அளிப்பதுதான். இப்பொழுது கூறப்போவதன் மூலம் எந்த இரகசியத்தையும் நான் வெளியிடவில்லை என்று உறுதியாக நம்பு கிறேன்; ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு வருகை தந்தபோது அவர் எனக்கு அளித்த பேட்டியில், மாட்சிமை தங்கிய மன்னர்பி ரான் அவர்களின் பிரதான நோக்கங்களில் ஒன்று, தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலையை, மத்திய நிர்வாக சபையில் அவர்களை சேர்ப்பதன் மூலம், ஸ்திரப்படுத்துவது ஆகும் என்று அவர் என்னிடம் கூறினார்; இடைக்காலத்தில் இந்திய மத்திய நிர்வாக சபை அமையக் கூடும் என்றும், அதனால் அவரது ஆலோசனைகளின்படி புதிய அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்கப்படக் கூடும் என்றும், அரசியல் நிர்ணய சபை அவர்களின் நிலைகளை ஐயத்துக்கிடமற்ற முறை யில் ஸ்திரப்படுத்தப்படுவதைக் காணலாம் என்றும் கூறினார். நிர்வாக சபையை இந்திய மயமாக்கும் திசையில் அடுத்த நட வடிக்கை எடுக்கும்போது இந்தக் கொள்கை அமலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

## III. அரசுப் பணித்துறைகளில் பிரதிநிதித்துவம் இல்லாமை

11. அரசுப் பணித்துறைகளில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வேலைவாய்ப்பு சம்பந்தமான விஷயத்தில் இழைக்கப்பட்ட அநீதியைப் போல் அதிக கொடுமையானது வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த மகஜரின் கட்டுக்கோப்பை கணக்கில் கொண்டு, மத்திய சர்க்கார் குறிப்பாக சம்பந்தப்பட்ட அரசுப் பணிகள் பற்றி மட்டுமே, நான் எடுத்துக் கொள்ள முடியும். அவை இரு பிரிவுகளாக உள்ளன:-

(அ) ஐ.சி.எஸ்.

(ஆ) மத்திய அரசுப் பணிகள்:

(i) அகில இந்திய அடிப்படையில் ஆட்களை எடுப்பது;

(ii) ஸ்தல அளவில் ஆட்களை எடுப்பது.

*12.* இந்தப் பணித்துறைகளின் இயைபை ஒருவர் ஆராய்ந்தால், இந்த இரு துறைகளிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் கடுமையாக விலக்கி வைக்கப்பட்டுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் பட முடியாது. இந்தப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர் கடுமையாக விலக்கி வைக்கப்பட்டுள்ளது பற்றி படம்பிடித்துக் காட்ட, கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களை முன்வைக்க விரும்புகிறேன். இப்பொழுது (1942ல்) ஐ.சி.எஸ். பணிகளின் இயைபு பின்வருமாறு உள்ளது:-

### ஐ.சி.எஸ். பதவிகளின் வகுப்புவாரி இயைபு

| சமூகம் | | ஐ.சி.எஸ்ஸின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஐரோப்பியர்கள்... ... ... ... | 488 |
| 2. | இந்துக்கள் ... ... ... ... | 363 |
| 3. | முகமதியர்கள் ... ... ... ... | 109 |
| 4. | இந்தியக் கிறித்தவர்கள் ... ... | 23 |
| 5. | ஆங்கிலோ- இந்தியர்கள் ... ... | 9 |
| 6. | பார்ஸிகள் ... ... ... ... | 9 |
| 7. | சீக்கியர்கள் ... ... ... ... | 11 |
| 8. | தாழ்த்தப்பட்ட சாதியினர் ... ... | 1 |
| 9. | மற்றவர்கள் ... ... ... ... | 43 |
| | மொத்தம் ... | 1,056 |

ஐ.சி.எஸ். அதிகாரிகளாக உள்ள 1056 ஆண்களில் தாழ்த்தப் பட்ட சாதியினரிலிருந்து ஒருவர் மட்டுமே இருக்கிறார். ஐ.சி.எஸ். அதிகாரிகள் சம்பந்தப்பட்டவரை நிலைமை இதுவே.

மத்தியப் பணிகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் விஷயத்திலும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலை இதே அளவு மோசமாகவே உள்ளது. இது சம்பந்தமாக புள்ளிவிவரங்களை அளிக்க நான் விரும்ப வில்லை. இந்த மகஜரை புள்ளிவிவரங்களால் அதிகம் நிரப்புவது தேவையில்லாததாகும். ஏனெனில் இது விஷயத்தில் இந்திய சர்க்காரின் உள்துறை இலாகாவின் தெளிவான ஒப்புதல் இருக்கிறது:-

> ''ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் உறுப்பினர்களை பணி களுக்கு எடுப்பது பற்றி கைவசம் உள்ள தகவல்களின்படி, இவ்வகையில் அநேகமாக முற்றிலுமாக முன்னேற்றம் இல் லாதது பற்றி இலாகா அதிகம் கவலை கொள்கிறது.''

மேற்சொன்ன வாசகம் எந்த அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகிறதோ அதன் எண். 4/5/38 'Ests(s), தேதி ஜூன் 1, 1939; அந்தத் தேதியில் நிலை எவ்வாறு இருந்தது என்பது இது குறிப்பிடு கிறது.

13. இந்திய அரசாங்கத்தின் கீழுள்ள பணிகளில் மற்ற சமூகத் தினர் இடம் பெற்றுள்ளது எவ்வாறு? தாழ்த்தப்பட்ட சாதியினர் விலக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை? தாழ்த்தப்பட்ட சாதியினர்பாலும் இதர சிறுபான்மை வகுப்பினர் பாலும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதில் இந்திய சர்க்காரின் கோட்பாடுகளிலும் வழிமுறைகளிலும் உள்ள பாகுபாட்டில் இதன் காரணங்களைக் காணமுடியும்.

14. அரசுப் பணிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய சட்டமன்றத் தில் 1923 மார்ச் 10ம் தேதி திரு. நாயர் முன்வைத்த தீர்மானத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டபோது, மத்திய அரசுப் பணிகளில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்ற கோட்பாடு 1925ல் நடைமுறைப் படுத்தப்பட்டது; அரசுப் பணிகள் இந்துக்களில் குறிப்பாகப் பிராமணர்களால் முற்றிலுமாக ஏகபோகமாக்கப்பட்டுள்ளன. மற்ற வகுப்பினர் அவற்றில் இடம்பெறுவது மிகவும் கஷ்டம் என்று மேற்

சொன்ன தீர்மானத்தில் திரு. நாயர் புகார் செய்திருந்தார். இந்தத் தீர்மானத்தை பின்பற்றி இந்திய சர்க்கார் மேற்கொண்ட வழிமுறை என்னவெனில், எல்லா நிரந்தரமான காலி இடங்களில் மூன்றில் ஒரு பங்கை வகுப்புவாரி சமத்துவமற்ற தன்மைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒதுக்கி வைப்பது என்பதாகும்.

15. அரசுப் பணிகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கையை அமலுக்குக் கொண்டு வந்த இந்த வழிமுறை இந்துக் களல்லாத சமூகத்தினரை திருப்திபடுத்தவில்லை. இந்த விஷயம் வட்டமேசை மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது; குறிக்கோளை அடைவதற்கு மேலும் அதிகம் பயனுள்ள முறையைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை இந்திய விவகார அமைச்சராலும் மத்திய சர்க்காராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது; உள்துறை இலாகாவின் 1934 ஜுலை 4 தீர்மானம் F. 14-17-8-33இன் மூலம் இது அமுல்படுத்தப்பட்டது.

16. இந்தத் தீர்மானங்கள் இப்பொழுது அமலில் உள்ளன; நாட்டின் அரசுப் பணிகளில் எல்லா சமூகத்தினருக்கும் நீதி பெற்றுத் தரும் மாக்ன கார்ட்டா சாசனமாக அது விளங்குகிறது. இந்தத் தீர் மானத்தின் விதிகளை பற்றிக் குறிப்பிடுவது மிக அவசியமாகும். அரசுப் பணிகளில் மற்ற சிறுபான்மை வகுப்பினர் நன்கு பிரதிநிதித் துவப் படுத்தப்பட்டுள்ளனர் என்பதையும் தாழ்த்தப்பட்ட சாதி யினருக்கு ஏன் எந்தப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்பதை யும் அது எடுத்துக்காட்டும். அந்தத் தீர்மானத்தில் இரண்டு அடிப் படை விதிகள் உள்ளன; பழைய 1923 தீர்மானத்தோடு ஒப்பிட் டால், அவை புதியவையாகும்:

(1) அரசுப் பணிகளுக்கு ஆட்களை எடுக்கும் நோக்கத்திற் காக எந்த சமூகங்கள் சிறுபான்மையினராகக் கருதப் பட வேண்டுமென்று அது பிரகடனப்படுத்துகிறது;

(2) வருடந்தோறும் காலியாகும் இடங்களில், சிறுபான்மை யினர் என்று அறிவிக்கப்பட்ட சமூகத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தை அது வரையறுத்துக் கூறுகிறது.

17. இவைதான் பல்வேறு சமூகங்கள் பிரதிநிதித்துவம் பெற 1934 ஆம் வருடத் தீர்மானம் வகுத்துத் தந்திருக்கும் ஏற்பாடுகளாகும்;

விவரங்களை எடுத்துக் கொண்டால், முதலாவதாக தீர்மானம் கீழ்க் கண்ட சமூகங்களை சிறுபான்மையினர் என்று வரையறுக்கிறது:

(1) முகமதியர்கள், (2) ஆங்கிலோ-இந்தியர்கள், (3) இந்தியக் கிறித்தவர்கள், (4) சீக்கியர்கள், (5) பார்ஸிகள்.

இரண்டாவதாக, மேற்சொன்ன சிறுபான்மை சமூகத்தினர் நிரப்ப வேண்டிய வருடாந்திர காலியிடங்களைக் கீழ்க்கண்ட விகிதாச் சாரத்தில் இந்தத் தீர்மானம் நிர்ணயிக்கிறது:

**1934 ஜூலை 4ம் தேதி தீர்மானம் நிர்ணயித்த விகிதாச்சாரம்**

| சிறுபான்மையினர் | ஐ.சி.எஸ். மற்றும் அகில இந்திய அடிப்படையில் வேலையில் சேர்க்கப் பட்ட பணிகள் | ரயில்வேயும் சுங்க இலாகாவும் | தபால் தந்தி | மதிப்பீடு செய்யும் இலாகாவும் தொகுப்புச் செயல்களுக் கான பணிகளும் |
|---|---|---|---|---|
| முகமதியர்கள் ... | 25% | 25% | 25% | இது தீர்மானம் அமல் செய்யப் படுவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது. விசேஷத் தகுதிகள் இதற்குத் தேவைப்படுவதால், இதற்கு ஆட்கள் எடுப்பதை ஆங்கிலோ-இந்திய சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்டிருக் கலாம் எனத் தோன்றுகிறது. |
| ஆங்கிலோ-இந்தியர்கள் ... | - | 8% | 5% | |
| இந்தியக் கிறித்தவர்கள் ... | *$8\frac{1}{3}$% | 6% | $3\frac{1}{2}$% | |
| சீக்கியர்கள் ... | - | - | - | |
| பார்ஸிகள் ... | - | - | - | |

★குறிப்பு: தீர்மானத்தின் பத்தி 7 (iii) கூறுவதாவது: ஒதுக்கப்பட்ட விகிதா சாரத்தை விடக் குறைவாக வகுப்புகள் பெற்றால், தேவைப்பட்ட தகுதி வாய்ந்த மனுதாரர்கள் இல்லாவிட்டாலும் எஞ்சிய $8\frac{1}{3}$ சதவீதம் முகமதியர்களுக்கு கிடைக்கும்.

18. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலையைப் பாதுகாக்க இந்தத் தீர்மானம் அளித்துள்ள சிறப்பு ஏற்பாடு என்ன? இது சம்பந்தமாக தீர்மானத்தில் செய்யப்பட்டுள்ள இரண்டு ஏற்பாடுகளைக் கீழே தருகிறேன். தீர்மானத்தின் 3வது பத்தி கூறுகிறது:

''இந்துக்களுக்கு மொத்தமாகக் கிட்டும் காலி இடங்களில் அவர்களுக்கு அதாவது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்குவதால் எந்தப் பலனும் கிட்டாது; ஆனால், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை வேலைக்கு நியமிக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை அவர்கள் இழக்காமல் இருக்க உத்தரவாதம் செய்யப்படும் என அவர்கள் நம்புகிறார்கள்''.

அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை உத்திரவாதம் செய்ய எந்த வழியில் சர்க்கார் நம்பிக்கை வைத்தது என்பதை தீர்மானத்தின் பத்தி 7 (1) (vi) விவரிக்கிறது; அது பின்வருமாறு கூறுகிறது:-

''அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பது போட்டி நடத்துவதன் மூலம் நடந்தாலும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் அரசுப் பணிகளில் நியாயமான பிரதிநிதித்துவத்தை அடைவதற்காக, அவர்களில் தகுதிவாய்ந்த உறுப்பினர்கள் நியமனம் செய்யப் படலாம்.''

இந்தப் பிரேரணைகளைப் பரிசீலித்தால், அவை இரு உண்மைகளை வெளிக்கொண்டு வருகின்றன:-

(i) தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒரு சிறுபான்மையினர் என்று தீர்மானம் அறிவிக்கவில்லை.

(ii) வருடாந்திரம் காலியாகும் இடங்களில் எந்த நிர்ணயமான விகிதாசாரத்தையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தீர்மானம் ஒதுக்கவில்லை.

அரசுப் பணிகளில் வேலைக்கு அமர்த்தப்படுவதை உத்திரவாதம் செய்ய தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் மற்ற சிறுபான்மை வகுப்பினருக்குமிடையே இந்திய சர்க்கார் செய்துள்ள வழிவகை ஏற்பாடுகளில் தெளிவான வேறுபாடு இருப்பது சொல்லாமலே

விளங்கும். இந்த வேறுபாட்டை ஒரு வாக்கியத்தில் வெளிப்படுத்திக் கூறலாம். தீர்மானத்தின்படி, மற்ற வகுப்பினர் வேலைக்கு அமர்த்தப் படுவது உசிதத்திற்கு விடப்படவில்லை. அது கட்டாயமான விஷய மாக ஆக்கப்பட்டுள்ளது. ஒரு காலி இடம் எந்த வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தை அந்த வகுப்பினரைக் கொண்டே ஆளெடுக்கும் அதிகாரி நிரப்ப வேண்டும். ஆனால் அதேசமயம், தாழ்த்தப்பட்ட சாதியினர் வேலைக்கு எடுக்கப்படுவது ஒரு வெறும் உசித விஷயமாக மட்டுமே ஆக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப் படாத ஒரு காலியிடத்தை வேலைக்கு ஆள் எடுக்கும் அதிகாரி தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சேர்ந்த ஒருவரை நியமித்து நிரப்பலாம்.

19. கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்பதற்கும் செய்யப் படலாம் என்பதற்குமிடையே உள்ள வித்தியாசத்தின் காரணமாக, அரசு பணிகளில் முகமதியர்களும் மற்ற வகுப்பினரும் மிக நல்ல முறையில் பிரதிநிதித்துவம் பெறுகின்றனர்; தாழ்த்தப்பட்ட சாதி யினர் முற்றிலுமாக விலக்கி வைக்கப்படுகின்றனர். அரசுப் பணி களில் தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சேர்த்துக் கொள்ளும் விஷ யத்தை வேலைக்கு நியமிக்கும் அதிகாரிகளின் உசிதத்திற்கோ நல் லெண்ணத்திற்கோ இந்திய சர்க்கார் விட்டுவைக்கும் வரை எத்தகைய நல்ல பலனும் சாத்தியமல்ல. இந்த அதிகாரிகள் ஐரோப்பியர் களாகவோ, இந்துக்களாகவோ அல்லது முகமதியர்களாகவோ இருக்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினர் பற்றி ஐரோப்பியன் சிறிதும் கவலைப்படாமல் ஏனோதானோ என்று இருக்கிறான். தாழ்த்தப் பட்ட சாதியினரின் நலன்களைப் பாதுகாப்பதை தனது விசேட அக்கறையாக அவன் ஒருபோதும் கொண்டதில்லை. தனது அதிகாரம் பாதுகாக்கப்படும் வரை, தனக்குக் கீழே பணிபுரியும் இந்து அல்லது முகமதியரின் ஆலோசனையைப் பின்பற்ற அவன் தயாராக இருக் கிறான். தங்களுடைய நிலையை இயல்பாகவே பலப்படுத்திக் கொள்ள முகமதியர்கள் முயலுகிறார்கள். எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு காலி இடங்கள் முகமதியர்களுக்கு கிடைப்பதற்கு உறுதி செய்வதில் அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர்; எப்படியாயினும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களையாவது பெற முயலுகிறார் கள். அரசுப் பணிகளில் இதுவரை ஏகபோகத்தைப் பெற்றிருந்த, வாழ்க்கையில் நல்லவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது எவ்வாறு என்று ஒருபோதும் அறியாத இந்துக்கள் எஞ்சிய யாவற்றை யும் தங்களுக்கே வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். இந்துக்கள் தங்களது சுயநலம் காரணமாகவும், அத்துடன் தாழ்த்தப்பட்ட சாதி யினருக்கு எதிராக காலம் காலமாக கொண்டுள்ள தப்பெண்ணங்கள்

காரணமாகவும் அம்மக்கள்பால் இந்துக்கள் ஒருபொழுதும் நியாய மாக நடந்துகொள்ள மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினரை வேலைக்கு அமர்த்தும் விஷயத்தை இத்தகைய அதிகாரிகளின் உசிதத் திற்கு விடுவதும், இதன் மூலம் தாழ்த்தப்பட்ட சாதியினர் நியாய மான பிரதிநிதித்துவத்தை அடைவார்கள் என்று நம்புவதும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

20. அரசுப் பணிகளில் இடம்பெறுவது என்னும் பிரச்சினை எல்லாச் சிறுபான்மை சமூகத்தினருக்கும் ஒரு முக்கியமான பிரச் சினையாகும். ஆனால், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கோ அது ஒரு ஜீவாதாரமான விஷயமாகும்; வாழ்வா, சாவா என்ற விஷயமாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சார்ந்த இளைஞர்களுக்கு இது ஜீவனோபாயத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்த அம்சத்தை தாழ்த்தப்பட்ட சாதி யினரோ, இந்திய சர்க்காரோ கூட அலட்சியப்படுத்த முடியாது. வேலை வாய்ப்புகளுக்கு வழி திறந்துவிடும் வாணிபமும், தொழிலும் தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அடைக்கப் படுகின்றன. சர்க்கார் பணிகளில்தான் அவர்கள் ஒரு உத்தியோகத் தைப் பெறமுடியும். இது ஒரு முக்கிய அம்சமாக இருந்தபோதிலும், இந்தப் பிரச்சினையை இவ்வளவு ஜீவாதாரமாக ஆக்குவது இந்த அம்சம் மட்டுமே அல்ல. மற்றொரு முக்கிய அம்சமும் இதில் இருக் கிறது. ஒரு சமூகத்தில் கல்வி பெருகுவதை உற்சாகப்படுத்துவதில் சர்க்கார் அளிக்கும் ஆதரவின் சாதகமான விளைவைப் பொறுத் துள்ளது இந்த அம்சம். இந்து சமூகத்தின் விஷயம் இவ்வகையில் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இத்துறையில் இந்து சமூகம் அடைந் துள்ள முன்னேற்றம் மிகவும் பிரமிக்கத்தக்கது. இந்து சமூகத்தில் கல்வி இவ்வளவு ஆழமாக வேரூன்றியிருப்பதற்கான அடிப்படைக் காரணம் சர்க்கார் பணிகளில் நுழைவதற்கான வாய்ப்பை கல்வி உத்திரவாதம் செய்வதேயாகும். இந்த உண்மை மிக அரிதாகவே உணரப்படுகிறது. கல்வியில் மிகவும் பின்தங்கியிருக்கும் தாழ்த்தப் பட்ட சாதியினர் சம்பந்தப்பட்டவருக்கு வேலைக்கான இத்தகைய உத்திரவாதம் முற்றிலும் அவசியம். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டை விட அதிக வலுவுள்ள மூன்றாவது வாதம் ஒன்று உள்ளது. தாழ்த்தப் பட்ட சாதியினரில் கல்வி கற்ற வர்க்கத்தினரின் நலன்களிலிருந்து அதே சாதியினரைச் சேர்ந்த சாமானிய மக்களின் நலன்கள் மாறுபட்ட தாக இருப்பது சம்பந்தப்பட்டதே இந்த வாதம். பொதுமக்களின் சுபிட்சநலக் கண்ணோட்டத்தில் பொது நிர்வாகம் எவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்தது என்று உணரப்பட்டால் இது தெள்ளத் தெளிவாகும்.

முதலாவதாக, இந்தக் காலத்தில் நிர்வாக அதிகாரம், சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் உட்கொண்டுள்ளது. தற்காலத்தில் எந்தச் சட்டமும் முழு நிறைவானதாகவோ திட்டவட்டமானதாகவோ இல்லை. இவற்றில் பெரும்பாலானவை சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைக்குக் கொண்டுவர விதிகளை ஆக்கும் சட்டரீதியான உரிமையை நிர்வாகத்திற்கு அளிக்கின்றன. இரண்டாவதாக, அந்தச் சட்டம் பயனுள்ளதாக இருக்கிறதா, இல்லையா என்பது அது எந்த அளவு திறமையாகவும் நியாயமாகவும் நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பொறுத்துள்ளது. எனவே நல்ல சட்டங்களை விட நல்ல நிர்வாகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது கண்கூடு. நிர்வாகம் மோசமாக இருந்தால், நல்ல சட்டங்களும் பயனற்ற தாகிப் போகும். எனவே, நல்ல சட்டங்களை விட நல்ல நிர்வாகத் தில் அதிக அக்கறை கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நிர்வாகம் ஒரு ஜீவாதார விஷயமாகும். இன்றைய நிர்வாகம் நல்ல நிர்வாகமா? இன்றைய நிர்வாகம் பற்றி தாழ்த்தப்பட்ட சாதியினர் என்ன நினைக்கிறார்கள்? இன்றைய நிர்வாகம் இந்தியாவெங் கிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் கடைப்பிடிக்கும் போக்கு பகைமை உணர்வும், அநீதியும், நெறி தவறியதாகவுமே உள்ளது என்ற கருத்தே எங்கும் நிலவுகிறது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் படும் துன்பங்களும் துயரங் களும், வாதனைகளும் வேதனைகளும், இம்சைகளும் பெரும்பாலும் எதிலிருந்து தோன்றுகின்றன? உசிதம்போல் நடந்து கொள்வதற்கு அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் ஏறத்தாழ எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அடக்கி ஒடுக்கி வைக்கும் நோக்கத்தோடு அவர்களது நலன்களுக்கு எதிராகப் பயன் படுத்தப்படுகிறது என்ற நிதர்சன உண்மையிலிருந்தே இவை தோன்று கின்றன என்பது வெள்ளிடைமலை. தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் இந்து, முகமதிய அதிகாரிகள் கொண்டுள்ள மனப்பான்மையைக் கணக்கில் கொண்டால் இப்படித்தான் இருக்க முடியும். தாழ்த்தப் பட்ட சாதியினருக்கு எதிர்ப்பாக உள்ள, அவர்களை ஒடுக்குவதில் முனைப்பாகவுள்ள வர்க்கங்களிலிருந்து நிர்வாக ஊழியர்கள் தேர்ந் தெடுக்கப்படும் வரை, இது தொடர்ந்து நிலவும். அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர் இடம்பெறுவது தாழ்த்தப்பட்ட சாதி யினரைச் சேர்ந்த சாமானிய மக்கள் நற்பயனும் நல்வாழ்வும் பெறுவ தற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை நிலைநாட்ட இதைவிட வலுவான வாதம் ஏதும் இருக்க முடியாது.

21. சில உண்மைகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவை. தீங்கின் தோற்றுவாய் எது என்பது தெளிவாக உள்ளது. தாழ்த்தப் பட்ட சாதியினரின் வேலைவாய்ப்பு நலன் எவ்வளவு ஜீவாதார மானது என்பதும் தெளிவு. தனது 1934 ஜூலை 4 தீர்மானத்தில் மற்ற சமூகத்தினரோடு ஒப்பிடும்போது, தாழ்த்தப்பட்ட சாதியின ருக்கு எதிராக பாரபட்சமான நிலையை சர்க்கார் எடுத்ததானது இந்த ஜீவாதார நலனுக்கு மிகப் பெரும் தீங்கை இழைத்துள்ளது என்பதை யும் யாரும் மறுக்க முடியாது. ஐ.சி.எஸ். அதிகாரிகளின் வகுப்புவாரி இயைபு சம்பந்தமாக கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எத்தகைய நாசகரமான விளைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகும்:-

## அட்டவணை III

### 1942ல் ஐ.சி.எஸ். பதவிகளில் வகுப்புவாரி விகிதாசாரம்

| | சமூகம் | மொத்தம் | ஐரோப்பியர் உட்பட மொத்தம் 1056ல் சதவிகிதம் | ஐரோப்பியர் நீங்கலாக மொத்தம் 568ல் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | ஐரோப்பியர்கள் | 488 | 42.4 | ... |
| 2. | இந்துக்கள் | 363 | 34.4 | 63.2 |
| 3. | முகமதியர்கள் | 109 | 10.3 | 19.2 |
| 4. | இந்தியக் கிறித்தவர்கள் | 23 | 2.2 | 4.0 |
| 5. | ஆங்கிலோ-இந்தியர்கள் | 9 | 0.9 | 1.5 |
| 6. | பார்ஸிகள் | 9 | 0.9 | 1.5 |
| 7. | சீக்கியர்கள் | 11 | 1.0 | 2.0 |
| 8. | தாழ்த்தப்பட்ட சாதியினர் | 1 | இல்லை | இல்லை |
| 9. | மற்றவர்கள் | 43 | 3.9 | 8.0 |
| | மொத்தம் | 1056 | | |

## அட்டவணை IV

### போட்டி மூலமும் நியமனம் மூலமும் ஐ.சி.எஸ். பதவிகள்

| | சமூகம் | போட்டி மூலம் | நியமனம் மூலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | ஐரோப்பியர்கள் | 336 | 152 | 488 |
| 2. | இந்துக்கள் | 332 | 31 | 363 |
| 3. | முகமதியர்கள் | 35 | 74 | 109 |
| 4. | இந்தியக் கிறித்தவர்கள் | 19 | 4 | 23 |
| 5. | ஆங்கிலோ-இந்தியர்கள் | 8 | 1 | 9 |
| 6. | பார்ஸிகள் | 8 | 1 | 9 |
| 7. | சீக்கியர்கள் | 5 | 6 | 11 |
| 8. | தாழ்த்தப்பட்ட சாதியினர்- | ... | 1 | 1 |
| 9. | மற்றவர்கள் | 28 | 15 | 43 |
| | மொத்தம் | 771 | 285 | 1056 |

## அட்டவணை V

### ஐ.சி.எஸ். பதவிகளின் விகிதாசாரத்தோடு ஒப்பிடும்போது மக்கள் தொகை விகிதாசாரம்

| | சமூகம் | ஐரோப்பியர்கள் நீங்கலாக ஐ.சி.எஸ்ஸில் உண்மையான விகிதாசாரம் | மக்கள் தொகையின் விகிதாசாரம் | மக்கள் தொகையின் விகிதாசாரத்தோடு ஒப்பிட்டால் பணி எண்ணிக்கையின் விகிதாசாரம் அதிகம் + குறைவு - |
|---|---|---|---|---|
| 1. | இந்துக்கள் | 63.2 | 50.0 | +13.2 |
| 2. | முகமதியர்கள் | 19.2 | 23.6 | - 4.4 |
| 3. | இந்தியக் கிறித்தவர்கள் | 4.0 | 1.0 | + 3.0 |
| 4. | ஆங்கிலோ-இந்தியர்கள் | 1.5 | .03 | +1.47 |
| 5. | பார்ஸிகள் | 1.5 | 0.3 | +1.47 |
| 6. | சீக்கியர்கள் | 2.0 | 1.3 | + 0.07 |
| 7. | தாழ்த்தப்பட்ட சாதியினர் | - | 13.5 | - 13.5 |
| 8. | மற்றவர்கள் | 8.0 | - | - |

22. இந்த அட்டவணைகளிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகள் மறுக்க முடியாதபடித் தெளிவாகத் தெரிகின்றன:-

(1) ஐ.சி.எஸ். பதவிகளில் தங்களுக்கான பிரதிநிதித்துவப் பங்கை பெறுவதில் எல்லா சமூகங்களும் நியாயமான அளவில் முன்னேறியுள்ளன. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு துரதிருஷ்ட சமூக மான தாழ்த்தப்பட்ட சாதியினரே; இவ்வகையில் அவர்கள் எந்த முன்னேற்றமும் அடையவில்லை.

(2) சில சமூகங்கள் அவர்களின் மக்கள் தொகை விகிதா சாரத்திற்கு மிக அதிகமாகவே ஐ.சி.எஸ். பதவிகளில் பிரதிநிதித் துவம் பெற்றுள்ளன. இந்துக்களைப் பொறுத்தவரை இது மிக நன்றாக காணத்தக்கது. ஐரோப்பியர்களின் பங்கான 50 சதவீதத்தை நீக்கிவிட்டு - இந்தியர்களின் நிலையை ஒப்புநோக்குவதற்கு இதைச் சேர்க்கக்கூடாது - பார்த்தால் ஐ.சி.எஸ். உத்தியோக நியமனங்களில் இந்துக்கள் 63 சதவிகிதத்தைப் பெற்றிருப்பது தெரியவரும். இத்தனைக் கும் மொத்த மக்கள் தொகையில் அவர்கள் 50 சதவிகிதத்தினரே ஆவர். இவ்விதம் அவர்கள் 13 சதவிகித அதிக இடங்களைப் பெற் றுள்ளனர்.

(3) போட்டிகளில் நிலவும் சமத்துவமற்ற நிலைமையைச் சரிப் படுத்தவே நியமனம் உத்தேசிக்கப்பட்டது. எனினும், போட்டிகளில் பெரும் எண்ணிக்கையில் ஐ.சி.எஸ். உத்தியோகங்கள் பெற்றுள்ள, நியமனம் தேவைப்படாத, நியமன அனுகூலங்களுக்கு உரிமை கோர முடியாத சில சமூகங்களுக்கு நியமன அனுகூலங்கள் அளிக்கப்பட் டுள்ளன. சந்தேகமில்லாமல் இந்துக்கள் விஷயம் இதுதான். 1920-42 காலத்தில் போட்டிகளின் மூலம் இந்தியர்களைக் கொண்டு நிரப்பப் பட்ட 435 இடங்களில் இந்துக்கள் 332 இடங்களைப் பெற்றுள்ளனர்; எனினும் இதற்கு மேலும் நியமனத்தின் மூலம் அவர்களுக்கு 31 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1920-42 காலத்தில் போட்டியின் மூலம் முகமதியர்கள் 35 ஐ.சி.எஸ். இடங்கள் மட்டுமே பெற்றனர். ஆனால் நியமனம் மூலம் 74 இடங்கள் அவர்களுக்கு அளிக்கப் பட்டன. போட்டியில் சீக்கியர்கள் 5 இடங்கள் பெற்றனர்; மேலும், நியமனத்தின் மூலம் 6 பெற்றனர். போட்டியில் ஒரு இடத்தைக் கூட பெறாத தாழ்த்தப்பட்ட சாதியினர், நியமனத்தின் வாயிலாக ஒரே ஒரு இடத்தைத்தான் பெற்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலை எவ்வளவு வருந்தத்தக்கதாக உள்ளது என்பதையும், மற்ற சமுதாயத் தினர்பால் பரிவுடன் நடந்து கொள்ள தீவிரமாக முயன்றுவரும்

## அட்டவணை IV

### போட்டி மூலமும் நியமனம் மூலமும் ஐ.சி.எஸ். பதவிகள்

| | சமூகம் | போட்டி மூலம் | நியமனம் மூலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | ஐரோப்பியர்கள் | 336 | 152 | 488 |
| 2. | இந்துக்கள் | 332 | 31 | 363 |
| 3. | முகமதியர்கள் | 35 | 74 | 109 |
| 4. | இந்தியக் கிறித்தவர்கள் | 19 | 4 | 23 |
| 5. | ஆங்கிலோ-இந்தியர்கள் | 8 | 1 | 9 |
| 6. | பார்ஸிகள் | 8 | 1 | 9 |
| 7. | சீக்கியர்கள் | 5 | 6 | 11 |
| 8. | தாழ்த்தப்பட்ட சாதியினர்- | ... | 1 | 1 |
| 9. | மற்றவர்கள் | 28 | 15 | 43 |
| | மொத்தம் | 771 | 285 | 1056 |

## அட்டவணை V

### ஐ.சி.எஸ். பதவிகளின் விகிதாசாரத்தோடு ஒப்பிடும்போது மக்கள் தொகை விகிதாசாரம்

| | சமூகம் | ஐரோப்பியர்கள் நீங்கலாக ஐ.சி.எஸ்ஸில் உண்மையான விகிதாசாரம் | மக்கள் தொகையின் விகிதாசாரம் | மக்கள் தொகையின் விகிதாசாரத்தோடு ஒப்பிட்டால் பணி எண்ணிக்கையின் விகிதாசாரம் அதிகம் + குறைவு - |
|---|---|---|---|---|
| 1. | இந்துக்கள் | 63.2 | 50.0 | +13.2 |
| 2. | முகமதியர்கள் | 19.2 | 23.6 | - 4.4 |
| 3. | இந்தியக் கிறித்தவர்கள் | 4.0 | 1.0 | + 3.0 |
| 4. | ஆங்கிலோ-இந்தியர்கள் | 1.5 | .03 | +1.47 |
| 5. | பார்ஸிகள் | 1.5 | 0.3 | +1.47 |
| 6. | சீக்கியர்கள் | 2.0 | 1.3 | + 0.07 |
| 7. | தாழ்த்தப்பட்ட சாதியினர் | - | 13.5 | - 13.5 |
| 8. | மற்றவர்கள் | 8.0 | - | - |

22. இந்த அட்டவணைகளிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகள் மறுக்க முடியாதபடித் தெளிவாகத் தெரிகின்றன:-

(1) ஐ.சி.எஸ். பதவிகளில் தங்களுக்கான பிரதிநிதித்துவப் பங்கை பெறுவதில் எல்லா சமூகங்களும் நியாயமான அளவில் முன்னேறியுள்ளன. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு துரதிருஷ்ட சமூக மான தாழ்த்தப்பட்ட சாதியினரே; இவ்வகையில் அவர்கள் எந்த முன்னேற்றமும் அடையவில்லை.

(2) சில சமூகங்கள் அவர்களின் மக்கள் தொகை விகிதா சாரத்திற்கு மிக அதிகமாகவே ஐ.சி.எஸ். பதவிகளில் பிரதிநிதித் துவம் பெற்றுள்ளன. இந்துக்களைப் பொறுத்தவரை இது மிக நன்றாக காணத்தக்கது. ஐரோப்பியர்களின் பங்கான 50 சதவீதத்தை நீக்கிவிட்டு - இந்தியர்களின் நிலையை ஒப்புநோக்குவதற்கு இதைச் சேர்க்கக்கூடாது - பார்த்தால் ஐ.சி.எஸ். உத்தியோக நியமனங்களில் இந்துக்கள் 63 சதவிகிதத்தைப் பெற்றிருப்பது தெரியவரும். இத்தனைக் கும் மொத்த மக்கள் தொகையில் அவர்கள் 50 சதவிகிதத்தினரே ஆவர். இவ்விதம் அவர்கள் 13 சதவிகித அதிக இடங்களைப் பெற் றுள்ளனர்.

(3) போட்டிகளில் நிலவும் சமத்துவமற்ற நிலைமையைச் சரிப் படுத்தவே நியமனம் உத்தேசிக்கப்பட்டது. எனினும், போட்டிகளில் பெரும் எண்ணிக்கையில் ஐ.சி.எஸ். உத்தியோகங்கள் பெற்றுள்ள, நியமனம் தேவைப்படாத, நியமன அனுகூலங்களுக்கு உரிமை கோர முடியாத சில சமூகங்களுக்கு நியமன அனுகூலங்கள் அளிக்கப்பட் டுள்ளன. சந்தேகமில்லாமல் இந்துக்கள் விஷயம் இதுதான். 1920-42 காலத்தில் போட்டிகளின் மூலம் இந்தியர்களைக் கொண்டு நிரப்பப் பட்ட 435 இடங்களில் இந்துக்கள் 332 இடங்களைப் பெற்றுள்ளனர்; எனினும் இதற்கு மேலும் நியமனத்தின் மூலம் அவர்களுக்கு 31 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1920-42 காலத்தில் போட்டியின் மூலம் முகமதியர்கள் 35 ஐ.சி.எஸ். இடங்கள் மட்டுமே பெற்றனர். ஆனால் நியமனம் மூலம் 74 இடங்கள் அவர்களுக்கு அளிக்கப் பட்டன. போட்டியில் சீக்கியர்கள் 5 இடங்கள் பெற்றனர்; மேலும், நியமனத்தின் மூலம் 6 பெற்றனர். போட்டியில் ஒரு இடத்தைக் கூட பெறாத தாழ்த்தப்பட்ட சாதியினர், நியமனத்தின் வாயிலாக ஒரே ஒரு இடத்தைத்தான் பெற்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலை எவ்வளவு வருந்தத்தக்கதாக உள்ளது என்பதையும், மற்ற சமுதாயத் தினர்பால் பரிவுடன் நடந்து கொள்ள தீவிரமாக முயன்றுவரும்

சர்க்கார் தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் நேர்மையோடு நடந்து கொள்ளாததே இத்தகைய நிலைமை உருவாவதற்குக் காரணமாகும்.

23. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலைமை மிக வருந்தத்தக்கதாக இருப்பது மட்டுமல்ல, அது சகித்துக் கொள்ள முடியாததாகவும் உள்ளது. இந்திய சர்க்காரின் இன்றைய கொள்கையின் விளைவே இது; இதன்படி, அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினரை வேலைக்கு எடுக்கும் எண்ணிக்கை மற்ற சமூகத்தினர் விஷயத்தில் ஒரு விதிமுறைப்படி நிர்ணயிக்கப்படுவது போலல்லாமல், வேலைக்கு அமர்த்தும் அதிகாரிகளின் மனம் போனப் போக்குக்கு விடப்படுகிறது. இன்றைய இந்த அமைப்பு முறை நீடிக்கும்வரை, தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்கள் தொடர்ந்து அலட்சியப்படுத்தப்படும் என்பதிலும், மற்ற சமூகத்தின் நலன்களுக்காக அவை பலியிடப்படும் என்பதிலும் எனக்கு சந்தேகம் எதுவும் இல்லை. பின்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலையை மேலும் காலதாமதம் இல்லாமல் மேம்படுத்த வேண்டும் :-

(1) அரசுப் பணிகளுக்கு மற்ற சமூகத்தினரைப்போல் இவர்களும் சிறுபான்மையினர் என்று அறிவிக்கப்பட வேண்டும்.

ஐ.சி.எஸ். பதவிகளிலும் மத்திய பணிகளிலும் வருடந்தோறும் காலியாகும் இடங்களில் அது அகில இந்திய அளவில் வேலைக்கு எடுப்பதாக இருந்தாலும் ஸ்தல அளவில் வேலைக்கு எடுப்பதாயிருந்தாலும் 13 1/2 சதவீதம் என்ற விகிதாசாரத்தில் இப்பதவிகள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும்; இதற்கு அவர்கள் உரிமை பெற்றுள்ளனர்; இது நேர்மையானதும் நியாயமானதுமாகும். இவ்வாறு செய்யப்படாவிடில், அரசுப் பணிகளில் தங்களுக்குள்ள பங்கை தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒருபோதும் பெற மாட்டார்கள்.

24. தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையினர் என்று அறிவிக்கப்படாததே இந்த சிக்கலுக்குக் காரணம். அவர்களின் பாதையில் குறுக்கிடும் இந்தத் தடைக்கற்கள் அகற்றப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். காரணம் என்னவெனில், 1934 ஜூலை 4-ம் தேதியத் தீர்மானத்தின்படி ஒரு சமூகம் சிறுபான்மையினர் என்று அறிவிக்கப்பட்டால் மட்டுமே, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு பெறும் உரிமையை அது பெறுகிறது. ஒரு சமூகமே இத்தகைய பயனை அடைந்திருக்கவில்லை எனலாம். தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒரு சிறுபான்மை சமூகம் என்று அறிவிப்பதில் எத்தகைய

ஆட்சேபனை இருக்க முடியும் என்பதைக் காண்பது கடினமாக இருக்கிறது. சிறுபான்மையினர் என்ற பதம் ஒரு அரசியல்பதம். சட்டப் படியான அதன் பொருள் வரையறை எதுவாக இருந்தாலும் அதன் நடைமுறை ரீதியான பொருள் வரையறை சந்தேகத்தில் இருக்க முடியாது. வகுப்புத் தீர்ப்பின் விதிகளின்படி, இந்த விஷயம் தீர்வு காணப்பட்டிருக்கிறது; எனவே மாட்சிமைதங்கிய மன்னர் பிரான் சர்க்காரின் வகுப்புத் தீர்ப்பில் இடம்பெற்றுள்ள எந்த சமூகமும் சிறுபான்மை சமூகம் என்றே கருதப்படும். உண்மையில் இந்த அடிப்படையில்தான் முகமதியர்கள், சீக்கியர்கள், இந்தியக் கிறித்த வர்கள், ஆங்கிலோ- இந்தியர்கள் ஆகியவர்களை இந்திய சர்க்கார் சிறுபான்மையினர் என்று அறிவித்திருக்கிறது. இந்த வகுப்பினர்கள் சிறுபான்மை எனக் குறிப்பிடப்படுகின்றனர் என்றால் அவர்கள் வகுப்புத் தீர்ப்பில் இடம்பெற்றிருப்பதே இதற்குக் காரணம். அப்படி யாயின், தாழ்த்தப்பட்ட சாதியினரை சிறுபான்மையினர் என்று அறிவிக்கப் படுவது ஏன் மறுக்கப்படுகிறது? அவர்களும் இந்தத் தீர்ப்பில் இடம் பெற்றிருப்பவர்கள்தான். அவர்களைச் சிறுபான்மை யினர் என்று அறிவிக்கும் கட்டாயத்தில் சர்க்கார் இருந்தால், அதன் இயல்பான விளைவு பணிகளில் அவர்களின் பங்கை நிர்ணயித்து மற்ற சமூகத்தினரின் பங்கு அவர்களுக்கு எந்த வழிமுறைகள் மூலம் பெற்றுத் தரப்பட்டதோ அதேபோல இவர்களுக்கும் உள்ள பங்கை நிர்ணயித்து அதே வழிமுறைகள் மூலம் அதைப் பெற்றுத் தர சர்க்கார் கடமைப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நியாய மாக கிடைக்க வேண்டிய பங்கை அவர்கள் பெறுவதை யாரும் எதிர்க்க முடியாது. பிரிட்டிஷ் இந்தியாவில் அவர்களின் மக்கள் தொகை 13.6% என்று காண்பிக்கப்பட்டுள்ளது; எனவே பணிகளில் தங்களுக்கு 13.6 சதவீதம் பங்கு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். இது எவ்வகையிலும் இந்துக்களுக்கு தீங்கிழைக்காது; ஏனெனில் அவர்களின் மக்கள் தொகை 50 சதவிகிதம்; ஆனால் அவர்கள் 63 சதவிகிதம் பெற்று வருகின்றனர். அதாவது 13 சதவீதம் அதிகமாக அவர்களுக்குக் கிடைக்கிறது.

25. தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைக்கு விசித்திரமான, எதிர்பாராத இடங்களிலிருந்து எதிர்ப்பு வருகிறது. இந்துக்களிட மிருந்து வந்திருக்க வேண்டும். ஆனால் அது சாத்தியமல்ல. ஏனென் றால் 1932ல் செய்து கொள்ளப்பட்ட புனா ஒப்பந்தத்தில் தாழ்த்தப் பட்ட சாதியினருக்கும் இந்துக்களுக்கும் உள்ள பரஸ்பர உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தத்தின்படி, தாழ்த்தப்பட்ட சாதியினர் சிறுபான்மையினர் என்றும், நாட்டின் அரசுப் பணிகளில்

போதுமான பங்குபெற அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்றும் இந்துக்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். 'போதுமான' என்ற பதம் எவ்வளவு என்பதைக் குறிக்கவில்லை என்பது உண்மையே. மரணத்தின் பிடிகளிலிருந்து திரு. காந்தியை காப்பாற்றுவதற்காக அந்த ஒப்பந்தம் அவசர அவசரமாகச் செய்து கொள்ளப்பட்டதே இதற்குக் காரணம். ஆனால் 'போதுமானது' என்பது மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு குறைவான எதையும் குறிப்பிடவில்லை என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. எனவே தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைகளை இந்துக்கள் எதிர்க்க முடியாது; மேலும் உண்மையில் அவர்கள் அவ்வாறு எதிர்க்கவுமில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைகளை எதிர்ப்பவர்கள் இந்திய சர்க்காரேயன்றி வேறு எவரும் இல்லை. இதுகுறித்து சட்டமன்ற உறுப்பினர் ராவ் பகதூர் என். சிவராஜ் 1942- மார்ச்சில் மத்திய சட்டமன்றத்தில் ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட சாதியினரை சிறுபான்மையினர் என்று ஒப்புக்கொள்ள வேண்டும், அரசுப் பணிகளில் அவர்களுக்குள்ள பங்கை வரையறுத்துக் கூற வேண்டும் என்பதே அந்த வெட்டுத் தீர்மானத்தின் நோக்கம். இதுகுறித்து நடைபெற்ற வாதத்தின்போது முகமதியர்களும், ஐரோப்பியர்களும், ஆங்கிலோ-இந்தியர்களும், சீக்கியர்களும் இத்தீர்மானத்தை ஆதரித்தனர். ஒரே ஒரு நபர் தவிர, இந்துக்களும் அதை எதிர்க்கவில்லை. எனினும், இந்திய சர்க்காரின் பிரதிநிதியால் அது எதிர்க்கப்பட்டது. கதையின் மிக சோகமான பாகம் இதுதான். தாழ்த்தப்பட்ட சாதியினரின் நல்வாழ்வுக்கு தாங்கள்தான் தர்மகர்த்தாக்கள் என்று இந்திய சர்க்கார் தம்பட்டமடித்துக் கொண்டது. தர்மகர்த்தாக்கள் என்பதால், மற்ற சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதை விட தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அவர்கள் அதிகமாக தயாராக இருக்க வேண்டும். அரசுப் பணிகளுக்கு ஆட்கள் எடுக்கப்படுவதில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குள்ள உரிமை மீது இந்துக்கள் தடங்கல் எதுவும் ஏற்படுத்தியிருந்தால், இடம் ஒதுக்குவதில் இந்திய சர்க்காருக்கு உள்ள தயக்கத்திற்கு ஒரு காரணம் இருந்திருக்கலாம். ஆனால் அத்தகைய முகாந்தரம் எதுவும் இல்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் எதிரிகள் இந்துக்களல்ல. அவர்களின் உண்மையான எதிரி இந்திய சர்க்கார் என்று கூறினால் அது தவறாகுமா?

26. தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமையை எதிர்ப்பதற்கு இந்திய சர்க்கார் கூறும் காரணம் யாது? மதிப்பிற்குரிய ராவ் பகதூர் என். சிவராஜ் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது மாண்புமிகு

உள்துறை உறுப்பினர் ஆற்றிய உரையை ஒரு ஆதாரமாகக் கொண்டால், தாழ்த்தப்பட்ட சாதியினரில் கல்வி பெற்ற ஆண்கள் போதுமான அளவில் இல்லை என்பதே அரசு இதற்குக் கூறும் காரணம் எனத் தோன்றுகிறது. ஆனால் இது ஒப்புக்கொள்ளத்தக்க காரணம் இல்லை என்று கூறியாக வேண்டும். முதலாவதாக 1934 தீர்மானம் பத்தி 3ல் கூறப்பட்ட பழைய காரணம் இது. கடந்த 8 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அது கணக்கில் கொள்ள வில்லை. இரண்டாவதாக, 1934 ஆம் ஆண்டுக்குக்கூட இந்தக் காரணம் பொருந்தாது. 1942க்கும் இது மிகத் தவறான கருத்தாகும். உண்மையில், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் களின் எண்ணிக்கை பற்றி 1939-40 வாக்கில் தனிப்பட்ட முறையில் கணக்கு எடுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட சாதியினரில் கல்லூரி மாணவர் களின் எண்ணிக்கை 400 முதல் 500 வரை என்று தெரியவந்தது. மூன்றாவதாக, உண்மையாக இருந்தபோதிலும், தாழ்த்தப்பட்ட சாதியினரை சிறுபான்மையினர் என்று அறிவிக்கவோ அவர்களின் விகிதாசாரத்தை நிர்ணயித்து அறிவிக்கவோ அது தடையாக இருக்க முடியாது. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வருடாந்தரக் காலியிடங் களுக்கு தேவைப்படும் குறைந்தபட்ச தகுதிபெற்ற தாழ்த்தப்பட்ட சாதி விண்ணப்பதாரர் குறைவாக இருந்தால் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள்; ஏனெனில் பயன்படுத்தப்படாத காலி இடங்கள் இந்துக்களுக்குப் போய்ச் சேரும். உள்துறை உறுப்பினர் எதிர்பார்க் கும் சிக்கல் தாழ்த்தப்பட்ட சாதியினர் விஷயத்தில் மட்டும் எழு கிறது என்று கூற முடியாது. இதர சிறுபான்மையினர் விஷயத் திலும் இத்தகைய சிக்கல் எழாது என்பதல்ல. உண்மையில் 1934ல் தீர்மானத்தை வெளியிட்டபோது, மற்றவர்கள் விஷயத்திலும் இந்த சிக்கல் எழும் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் சர்க்கார் அவர் களை சிறுபான்மையினர் என்று அறிவிப்பதையோ, அவர்களின் விகிதாசாரத்தை நிர்ணயிப்பதையோ அது தடுத்து நிறுத்தவில்லை. சர்க்கார் அவர்களைச் சிறுபான்மையினர் என்று அறிவித்து அவர் களது விகிதாசாரத்தையும் நிர்ணயித்தது; ஒரு குறிப்பிட்ட வருடத் தில் ஒதுக்கப்பட்ட காலி இடங்களுக்குப் போதுமான தகுதியுள்ள மனுதாரர்கள் குறைவாக இருந்தால் ஏற்படும் சிக்கலைப் போக்க, தீர்மானத்தில் 7(1)(iii) பத்தியில் சர்க்கார் வழிவகுத்தது; அதாவது மீதியுள்ள காலி இடங்கள் முகமதியர்களுக்குக் கிடைக்கும் என்று அறிவித்தது.

27. மற்ற சிறுபான்மையினர் விஷயத்தில் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் கஷ்டங்கள், தாழ்த்தப்பட்ட சாதியினரின் பாதையில்

நிச்சயமாக தடையாக இருக்க முடியாது. சர்க்கார் அம்மாதிரி செய்தால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நியாயமான உரிமைகளை அநியாயமாக மறுக்கும் அநீதியைச் செய்த குற்றத்திற்கு அது உள்ளாகும். போதிய ஆதாரங்கள் இல்லாமல் வெறும் சாக்குபோக்கு களைக் கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களது கோரிக்கை களை எதிர்க்கிறது என்றும் அது குற்றம் சாட்டப்படும்.

28. மேலே பரிந்துரைக்கப்பட்ட இரு பரிகாரங்களைத் தவிர, அதாவது (1) அவர்களைச் சிறுபான்மையினர் என்று அறிவிப்பது, (2) வருடாந்திர காலி இடங்களில் அவர்களின் விகிதத்தை நிர்ண யிப்பது ஆகிய பரிகாரங்களைத் தவிர, அரசுப் பணிகளில் அவர் களுக்குள்ள நியாயமான பங்கைப் பெற்றுத் தர வேறு சில பரிகாரங் களைச் செய்வதும் அவசியம். அவை:

(1) வயது வரம்பை உயர்த்துவது,

(2) தேர்வுகளுக்கான கட்டணத்தைக் குறைப்பது மற்றும்

(3) இது விஷயத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் நலன்களுக் காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் எல்லா இலாகாக்களிலும் சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள ஒரு தாழ்த்தப்பட்ட சாதி அதிகாரியை நியமிப்பது.

### (1) வயது வரம்பை உயர்த்துவது

29. ஐ.சி.எஸ். பதவிக்கும் மத்திய அரசுப் பணிகளுக்கும் இன்றைய விதிகளின்படி அதிகப்பட்ச வயது வரம்பு 24 ஆகும். இந்த அதிகப்பட்ச வயது வரம்பு தாழ்த்தப்பட்ட சாதியினரை பெரிதும் பாதிக்கிறது. பெரும் வறுமையின் காரணமாக, தாழ்த்தப்பட்ட சாதிப்பையன், உயர் சாதியைச் சேர்ந்த வசதியான வகுப்பினரின் மாணவர்களுடன் இந்த வயது வரம்புக்குள் போட்டியிடத் தேவை யான கல்வித் தரத்தை அடைவது சாத்தியமல்ல. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகள் தங்கள் கல்வி வாழ்க்கையில் பல குறுக் கீடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. தனியாகப் பாடம் கற்பிப்ப வரிடம் கல்வி பயில்வதற்கோ, வீட்டில் படிப்பதற்கோ வசதிகள் எதுவும் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் அதேசமயம் உயர் சாதிகளைச் 'சேர்ந்த குழந்தைகளோ வேகமாகவும் தொடர்ந்தும் முன்னேற்றம் அடைய எல்லா வசதிகளும் உள்ளன. இதன் விளை வாக, தாழ்த்தப்பட்ட சாதியினரின் குழந்தைகள் தங்களின் கல்வியின்

இறுதிக்கட்டத்தை அடைந்து மற்றவர்களுடன் போட்டிபோடும் நிலைமைக்கு வரும்போது, வயதின் காரணமாக தகுதிபெறாமல் போகின்றனர். எனவே வயதுவரம்பை குறைந்தது 3 வருடங்கள் உயர்த்த வேண்டியது அவசியம். இந்தக் கோரிக்கையில் நியாய மற்றது எதுவும் இல்லை. இந்திய சர்க்கார் இதை ஏற்றுக் கொண்டால் வழக்கம் மீறிய எதுவும் இதில் இருக்காது. அநேகமாக அரசுப் பணி களில் விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லா மாகாணங் களிலும், இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயதைவிட தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு ஓரளவு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில மாகாணங்களில் இந்த வித்தியாசம் 2 ஆண்டுகளாகவும், வேறு சில மாகாணங்களில் 3 ஆண்டுகளாகவும் உள்ளன. இந்த சலுகையை அளிப்பதன் மூலம் இந்திய சர்க்கார் நன்கு நிலை நாட்டப்பட்ட ஒரு கோட்பாட்டை பின்பற்றுகிறார்கள் எனக் கூற வேண்டும்.

## (2) தேர்வு கட்டணங்களில் குறைப்பு

30. ஐ.சி.எஸ். பணிக்கான தேர்வுக் கட்டணம் ரூ. 100. தணிக்கை மற்றும் கணக்கு அலுவலர் தேர்வுக்கான கட்டணம் ரூ. 82/8; உதவி யாளர்கள் தேர்வுக் கட்டணம் ரூ. 30/-. இந்தக் கட்டணங்கள் தாழ்த்தப் பட்ட சாதியினருக்கு மிக அதிகம். இவை உண்மையில் ஒரு பெரிய தடையாகும். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பலர், தேர்வுக் கான தகுதிபெற நேரத்தையும் சக்தியையும் செலவழித்தபின், தேர்வு கட்டணம் அவர்களின் பெற்றோர்களின் சக்திக்கு அப்பாற் பட்டதாக இருப்பதால், தேர்வுக்கு செல்வது கடினமானது என்பதைக் காண்கின்றனர். இந்தத் தடை அகற்றப்படுவது அவசியம். இந்த தேர்வுகளுக்காக விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் தாழ்த்தப்பட்ட சாதி மனுதாரர்களுக்கு விதிக்கக் கூடாது.

## (3) தாழ்த்தப்பட்ட சாதி அதிகாரி

31. இந்த இரு சலுகைகளும் அனுமதிக்கப்பட்டால், மற்ற போட்டியாளர்களுடன் அதிக சம நிலைகளில் தாழ்த்தப்பட்ட சாதி வகுப்பினர் போட்டியிட பெரிய அளவில் உதவும் என்பதில் ஐய மில்லை. ஆனால் இந்த நடவடிக்கைகளால் கிட்டும் உதவி போது மானதாகாது. மேலும் ஏதாவது செய்தாக வேண்டும். எடுத்துக்

காட்டாக, இந்திய சர்க்காரில், உள்துறை அல்லது தொழிலாளர் நல இலாகாவில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதி அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். அரசுப் பணிகளில் நுழைவதற்கு தாழ்த்தப்பட்ட சாதியின ருக்குள்ள உரிமைகளை முறைப்படி நடைமுறைப்படுத்துவதைப் பார்த்துக் கொள்வது அவரது கடமையாக இருக்கும். அரசுப் பணி களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயத்தில் சர்க்கார் வகுத் துள்ள விதிகள் தவறாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்ள இத்தகைய அதிகாரிகள் ஒரு சமயம் இந்திய சர்க்காரால் வேலைக்கு அமர்த்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இது எப்படியிருப்பினும் அரசுப் பணிகளில் அமர்த்தப்படுவதில் தாழ்த்தப்பட்ட சாதியினர்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற் காக ஒரு தாழ்த்தப்பட்ட சாதி அதிகாரியை வேலைக்கு அமர்த்து வதன் அவசியமும் அவசரமும் கேள்விக்கு அப்பாற்பட்டது. இம் மாதிரி விஷயங்களைக் கையாள அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரி இல்லையெனில், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிராக உள்ள குரோதங்கள் காரணமாக, இத்தகைய விதிகள் மீறப்படும் பெரிய அபாயம் உள்ளது. விதிகள் சரிவர நிறைவேற்றப்படுவதைச் சரி பார்க்கும் பொறுப்பு அளிக்கப்பட்ட சுதந்திரமாகச் செயல்படும் ஓர் அதிகாரியை நியமிப்பதுதான் இதற்கு ஒரே பரிகாரமாகும்.

## IV. மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் பிரதிநிதித்துவம் இல்லாதது

மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் இப்பொழுது நான்கு உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் இருவர் ஐரோப்பியர்கள், ஒருவர் இந்து, மற்றொருவர் முகமதியர். இந்த ஆணையத்தின் இயைபு நிர்ணயிக்கப்படும் போது அதில் தாழ்த்தப் பட்ட சாதியினர் விடப்பட்டு விட்டனர். மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் மறுக்கப்படு வதற்கு காரணம் எதுவும் இல்லை. இந்தியாவில் மூன்று பிரதான மக்கள் பிரிவினர் உள்ளனர். அவர்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் மூன்றாவது முக்கியப் பிரிவினராவர். இவர்களின் மக்கள் தொகை கோடிகளில் கணக்கிடப்படுகிறது. மக்களின் மற்ற இரண்டு முக்கிய பிரிவினர்களின் நலன்கள் போலவே, பணிகள் விஷயத்தில் இவர்கள் நலனும் முக்கியமானது. மற்ற இரு பிரிவினர்களின் நலன்களை விட இவர்களின் நலனுக்குள்ள ஆபத்து உண்மையில் அப்படி ஒன்றும் குறைந்ததல்ல. மற்ற இரு பிரிவினர்களை விட இந்த

அபாயத்தை தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் இவர்களுக்கு மிக அதிகமாகும். மத்திய அரசுப் பணிகள் தேர்வு ஆணையத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதை மறுப்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மத்திய அரசுப் பணிகள் தேர்வு ஆணையம் வகுப்புவாரி அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்பது நிச்சயம். இதைச் செய்வதற்கு இரண்டு காரணங்களைத்தான் எண்ணிப் பார்க்க முடியும். முதலாவதாக, மக்களின் அதிக அளவிலான பிரிவினர் பிரதிநிதித்துவம் பெறுவது விரும்பத்தக்கதாக இருக்கலாம். கமிஷனுக்கு ஒரு சார்பு வகுப்புவாத பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருப்பதற்கு, இரண்டாவதாக, ஒரு வகுப்பின் வகுப்புவாதத் தன்மையை மற்ற வகுப்பினரின் வகுப்புவாதத் தன்மையைக் கொண்டு சமாளிக்கலாம் என்பதாக இருக்கலாம். எப்படிப் பார்த்தாலும், மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்காமல் விட்டது அப்பட்டமான அநீதியாகும். இந்துக்களுடையவும் முகமதியர்களுடையவும் கண்ணோட்டம் மேலோங்கியுள்ள ஓர் தேர்வாணையத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் எந்த நம்பிக்கையும் வைக்க முடியாது; மேற்சொன்ன இரு வகுப்பினரிடையே என்னதான் சண்டைச் சச்சரவுகள் இருந்தபோதிலும், ஆதாயங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதிலும், தங்களின் நியாயமான பங்கை அடைவதிலிருந்து தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தடுப்பதிலும், அவர்கள் இலகுவாக ஒன்றுபடுவர். தாழ்த்தப்பட்ட சாதியினர் விஷயத்தில் தேர்வாணையம் நியாயமற்று நடந்து கொண்டுள்ளது என்பதை நிரூபிப்பது கஷ்டம்; ஆனால் தாழ்த்தப்பட்ட சாதியினரில் ஒரு மனுதாரர்கூட தகுதி பெற்றிருப்பதாக இதுவரை ஆணையம் சான்றிதழ் அளிக்கவில்லை என்பதுதான் கண்கண்ட உண்மை. பாரபட்சமாக நடந்து கொண்டதாக, எந்த ஆணையத்தின் மீதும் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் ''தகுதியில்லாதவர்'' என்ற பதத்திற்கு பின் எந்த ஆணையமும் ஒளிந்து கொள்வது சாத்தியமே. அந்தப் பதம் சரியான விளக்கம் கொடுப்பதற்கு பதிலாக பலதரப்பட்ட பாவங்களை மூடிமறைக்கும் நோக்கம் கொண்டதாகவே அமைந்துள்ளது. மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் அவசியம் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதே நீதியின் கோரிக்கை.

## பாகம் II

# கல்வி சம்பந்தப்பட்ட குறைகள்

## V. உயர்தரக் கல்விபெற உதவி இல்லை

33. தாழ்த்தப்பட்ட சாதியினரின் குழந்தைகளிடையே உயர்தர கல்வியின் முன்னேற்றத்தைக் கவனித்தால். கீழ்க்கண்ட முடிவு களுக்கு வரலாம்:-

(1) பொதுக்கல்வி துறையிலும் சட்டத்துறையிலும் கல்வி திருப்திகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

(2) விஞ்ஞானம், பொறியியல் கல்வி எந்த முன்னேற்றத்தை யும் அடையவில்லை.

(3) வெளிநாடுகளின் பல்கலைக்கழகங்களில் உயர்தரக் கல்வி கற்பது என்பது எட்டாக்கனியாக உள்ளது.

34. இந்த வருந்தத்தக்க நிலை சரியாகப் புரிந்து கொள்ளப் பட வேண்டும். அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர் இடம் விஷயமான விவாதத்தில் கூறப்பட்டதுபோல, தாழ்த்தப்பட்ட சாதி யினரின் நல்வாழ்வு பரிவுணர்வு கொண்ட அரசுப் பணிகளையே முற்றிலும் சார்ந்துள்ளது; அப்பணிகள் பரிவுணர்வோடு இருக்க வேண்டுமெனில், நாட்டில் தேசிய வாழ்வின் பல்வேறு பகுதியினரை யும் அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினரை பிரதிநிதித்துவப் படுத்துவதாக அவசியம் அது இருக்க வேண்டும். இத்துடன் மற்றொன் றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதாவது, தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவம் துணைநிலை பதவிகளில் மட்டுமே இருந்தால் அவர்கள் இடம்பெறுவதன் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், பயனுள்ளதாக இருக்காது. கல்வி கற்ற இளைஞர்களுக்கு ஓர் உத்தியோகம் அளிக்கப்படுவது என்ற கண் ணோட்டத்தில் பார்த்தால் அது நல்லதாக இருக்கலாம். தாழ்த்தப் பட்ட சாதியினரின் நிலையை அது மாற்றாது. மாறாக, நிர்வாக பதவிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர் இடம் பெற்றால் மட்டுமே, அவர்களின் அந்தஸ்தும் வாழ்க்கை நிலையும் அபிவிருத்தியடையும். நிர்வாகப் பதவிகள் கேந்திரமான பதவிகள்; அவற்றிலிருந்து கொண்டு

அரசு விவகாரங்களுக்கு வழிகாட்டுதல் அளிக்க முடியும். நிர்வாகப் பதவி பெறுவதற்கு உயர் மட்ட கல்வி அவசியம் என்பது தெளிவு. உயர்தரக் கல்வி பெற்றவர்களுக்கு மட்டுமே அல்லாமல் அத்தகைய பதவிகள் மற்றவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை.

35. வெறும் பட்டப் படிப்பு அல்லது சட்டத்துறைப் படிப்பு படித்து முடிப்பது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அதிகப் பயன் அளிக்காது. இந்துக்களுக்குக் கூட அது அதிக பலன் அளிக்கவில்லை. எது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உதவுமெனில், விஞ்ஞானத் திலும் தொழில்நுட்பத்திலும் உயர்தர கல்வி கற்பதுதான். விஞ்ஞானத் திலும் தொழில்நுட்பத்திலும் கல்வி தாழ்த்தப்பட்ட சாதியினரின் சக்திக்கு அப்பாற்பட்டது; எனவேதான் பலர் தங்கள் குழந்தைகளை வெறும் பட்டப் படிப்புக்கோ, சட்டத்துறைப் படிப்புக்கோ அனுப்பு கிறார்கள். சர்க்கார் உதவியில்லாமல், விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் உயர்தரக் கல்வியின் கதவுகள் தாழ்த்தப்பட்ட சாதி யினருக்கு ஒருபோதும் திறந்திருக்க மாட்டா; இது விஷயத்தில் அவர் களுக்கு உதவ மத்திய சர்க்கார் முன்வர வேண்டுமென்பது சரி யானதும் நியாயமானதுமாகும்.

36. கீழ்க்கண்ட ஆலோசனைகளை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்:

(1) இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் அல்லது விஞ்ஞானப் பயிற்சி நிறுவனங்களில் விஞ்ஞான, தொழில்நுட்ப படிப்பு மேற்கொள்ளும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் மாணவர் களுக்கு உதவித் தொகையாக வருடத்திற்கு 2 லட்ச ரூபாய் மான்யம் அளிக்க வேண்டும்.

(2) இங்கிலாந்து, ஏனைய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், ஐரோப்பாவில், அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் விஞ்ஞான, தொழில்நுட்ப படிப்புப் படிப்பதற்கு முன்வரும் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு உதவித் தொகையாக ஒரு லட்ச ரூபாய் வழங்க வேண்டும்.

37. இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலிருந்து சர்க்காரைத் தடுப்பது எதுவும் இல்லை. கல்வி சம்பந்தமாக சட்டங்கள் இயற்றும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இல்லை என்பது உண்மையே. மத்தியச் சட்டமன்றம் சட்டம் இயற்றுவது சம்மந்தப்பட்ட நோக்கங் களுக்கு உட்பட்டதாக இல்லாவிடினும் மற்ற எந்த நோக்கத்திற்காக

வும் மத்திய சர்க்கார் மானியம் வழங்கலாம் என்று இந்திய சர்க்கார் சட்டம், பிரிவு 150 (2) கூறுகிறது. கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு தருவதற்காக இந்திய சர்க்காரால் இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நேரடியாக மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படும் பிர தேசங்களுக்கு வெளியே உள்ள மத்திய வருவாயிலிருந்து மான்ய உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது:

| | | |
|---|---|---|
| **I.** | **கல்வி நிறுவனங்கள்** | **வருடம் வழங்கப்படும் தொகை** |
| 1. | இந்திய பெண்கள் பல்கலைக் கழகம், பம்பாய் | திரும்ப வழங்கப்பட வேண்டியிராத மானியம் ரூ. 50,000/- இருமுறை 1937-38லும் 1941-42லும் இந்த நிறுவனத்திற்கு அளிக்கப் பட் டுள்ளது. |
| 2. | விஸ்வபாரதி, சாந்தினிகேதனம் | ரூ. 25,000 |
| 3. | அனைத்துப் பல்கலைக்கழகக் குழுமம், இந்தியா | 1,000 |
| 4. | ஆங்கிலோ-இந்திய ஐரோப்பிய கல்விக்கான இடைநிலை மாகாணக் குழுமம் | 3,600 |
| **II.** | **விஞ்ஞானக் கழகங்கள்** | |
| 1. | இந்திய விஞ்ஞான வளர்ச்சி அமைப்பு, கல்கத்தா | 18,000 |
| 2. | வங்காள ராயல் ஆசியக் கழகம், கல்கத்தா | 2,500 |
| 3. | இந்தியப் புள்ளிவிவரக் கழகம், கல்கத்தா | 37,000 |
| 4. | இந்திய தேசிய விஞ்ஞானக் கழகம், கல்கத்தா | 6,000 |
| 5. | விஸ்வேஸ்வரானந்த வேத ஆய்வுக் கழகம், சிம்லா | 2,500 |
| 6. | இந்திய விஞ்ஞானக் கழகம், பெங்களூர் | 1,50,000 |
| 7. | பந்தார்கர் கீழ்த்திசை நாடுகள் ஆய்வுக்கழகம், புனா | 4,000 |
| 8. | போஸ் ஆய்வுக் கழகம், கல்கத்தா | 45,000 |
| **III.** | **பலவிதமான அமைப்புகள்** | |
| 1. | இந்திய ஒலிம்பிக் கழகம் | 2,000 |
| 2. | இந்திய சாரணப் பெண்கள் அமைப்பு | 2,500 |
| | ஆண்டுதோறும் தொடர்ந்து அளிக்கப்படும் மானியத் தொகை மொத்தம் | 2,99,100 |

38. அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்திற்கு வருடத்திற்கு 3 லட்ச ரூபாயும், காசி இந்து பல்கலைக் கழகத்திற்கு வருடத்திற்கு 3 லட்ச ரூபாயும் இந்திய சர்க்கார் அளிக்கும் உதவித் தொகை இதில் உட்படவில்லை. இந்த இரு பல்கலைக் கழகங்களுக்கும் மத்திய சர்க்கார் அளிக்கும் உதவி, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் உயர்கல்வி பெறுவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் மானியம் உண்மையில் இந்து, முகமதியர் வகுப்பினருக்கு உயர் கல்விக்கு அளிக்கப்படும் மானியமேயாகும். இவ்விதம் இருக்கும்போது, தாழ்த்தப்பட்ட சாதியினரின் உயர் கல்வியை ஊக்குவிப்பதற்காக வருடத்திற்கு 3 லட்ச ரூபாயை இத்தகைய மான்யமாக வழங்க மத்திய சர்க்கார் ஏன் பொறுப்பேற்றுக் கொள்ளக் கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் அந்தஸ்தை உயர்த்துவது தங்கள் கடமை என்று அடிக்கடி பிரகடனப்படுத்தி வரும் இந்திய சர்க்கார் உண்மையில் அவ்வாறு செய்ய விரும்பினால், மத்திய சர்க்காரின் கல்வி வரவு-செலவுத் திட்டத்தில் இத்தகைய ஒதுக்கீடு செய்வதற்கு இதுதான் சரியான சமயம்.

39. இந்தத் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலையையும் அந்தஸ்தையும் அது புரட்சிகரமாக மாற்றும். தாழ்த்தப்பட்ட சாதியர் இதில் மாபெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்தத் திட்டம் மான்யம் அளிக்கும் திட்டமாக இருப்பதைவிட கடன் வழங்கும் திட்டமாக ஆக்கப்படுவதற்கும் அவர்கள் தயாராக இருப்பர். உபகாரச் சம்பளத் தொகையை, அதை அவர்களுக்கு வேலை கிடைத்தவுடன் அல்லது குறைந்த சம்பள விகிதத்தில் சர்க்காருக்கு சேவை செய்ய வேண்டிய நிலைமையில் திருப்பி கொடுக்க வேண்டி இருந்தாலும், அதனைத் தாழ்த்தப்பட்ட சாதி இளம் தலைமுறையினர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வர். இந்த ஆலோசனைகளை சர்க்கார் ஒப்புக் கொள்வதற்கு ஆட்சேபனை எதுவும் இருக்க முடியாது.

40. தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்கள் மேம்பட்ட விஞ்ஞான-தொழில்நுட்ப கல்வி பெறும் நோக்குடன், வேறு இரண்டு யோசனைகளையும் முன்வைக்கிறேன். ஒன்று:

## (3) சுரங்கங்கள் பற்றிய பள்ளியில் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களுக்கு இடம் ஒதுக்குவது

தான்பாத்திலுள்ள சுரங்கங்கள் பற்றிய இந்தியப் பள்ளி இந்திய சர்க்காரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. சுரங்க பொறியியல் பற்றியும் புவியியல் பற்றியும் உயர் கல்வியை இப்பள்ளி அளிக்கிறது. இந்தியச் சுரங்கங்கள் பற்றிய பள்ளியில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் நிலக்கரித் தொழிலிலும் மற்ற தாதுப்பொருட்கள் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுவதற்கு மாணவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள். சுரங்கங்கள் பற்றிய இந்தியப் பள்ளியில் இப்பொழுது கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 97க்கு பக்கம் உள்ளது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் இதில் இடம்பெறுகின்றனர். விசாரித்ததில் 97 மாணவர்களில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர் அல்ல என்பது கண்டுபிடிக்கப்பட்டது. சுரங்கங்கள் பற்றிய இந்தியப் பள்ளியைப் பயன்படுத்தும் நிலையில் தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சார்ந்த மாணவர்களை வைக்க இந்திய சர்க்கார் சில விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிக அவசியம். இந்த நோக்கத்தை அடைய தேவைப் படுவது:

(அ) இப்பள்ளியில் சேர்வதற்கு தேவைப்படும் குறைந்த பட்ச கல்வித் தகுதியுள்ள தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களுக்கு ஒரு குறிப் பிட்ட எண்ணிக்கையில் இட ஒதுக்கீடு செய்தல்.

(ஆ) இலவசக் கல்வி அளித்தல்.

(இ) உபகாரச் சம்பளம் வழங்குதல்.

மொத்தம் உள்ள இடங்களில் பத்தில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கோருவது அதிகமாகாது. இது தொழிலாளர் நல இலாகாவின் அதிகார வரம்புக்குட்பட்டது. இலவசக் கல்வி, உபகாரச் சம்பளம் என்கிற வகையில் அரசின் வருமானத்தில் இழப்பு ஏற்படும் என்பதால், நிதி இலாகா சம்பந்தப்பட்டதுமாகும் இது. ஆனால் இந்த நடவடிக்கைகளால் ஏற்படும் நஷ்டம் மிக அதிகமாக இருக்காது. சுரங்கம் பற்றிய பள்ளியில் ஒரு மாணவன் செலுத்த வேண்டிய கட்டணம் மாதம் சராசரியாக சுமார் 60 ரூபாயாகும்.

ஒரு மாணவனுக்கு மாதம் செலவழிக்க வேண்டிய சராசரி தொகை மாதத்திற்கு ரூ. 60/- என்று இதற்குப் பொருள். அப்படியாயின் ஒரு மாணவனுக்கு மாதம் செலவாகும் தொகை ரூ. 60/- ஆகும்.

41. நான் முன்வைக்க விரும்பும் மற்ற கோரிக்கை வருமாறு:-

(4) மத்திய கல்வி ஆலோசனைக் குழுமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பிரதிநிதித்துவம்.

42. இந்தக் குழுமத்தில் பின்வருபவர்கள் இடம்பெறுவார்கள்:-

(1) கல்வி, சுகாதாரம், நிலம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பாக உள்ள மாண்புமிகு உறுப்பினர் (தலைவர்);

(2) இந்திய சர்க்காரின் கல்வி ஆணையர்;

(3) இந்திய சர்க்கார் நியமிப்பவர்கள் 10 பேர்; இவர்களில் குறைந்தது ஒருவராவது பெண்மணியாக இருப்பார்;

(4) மேல் அவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அவையின் ஓர் உறுப்பினர்;

(5) சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இருவர்;

(6) அனைத்துப் பல்கலைக்கழகக் குழுமத்தால் நியமிக்கப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகக் குழும உறுப்பினர் மூவர்.

(7) ஸ்தல சர்க்காரின் ஒரு பிரதிநிதி; அவர் கல்வி இலாகாப் பொறுப்பில் உள்ள அமைச்சரோ (அல்லது அவரது துணை- அமைச்சரோ); அல்லது கல்வி இயக்குனர் (அல்லது துணை இயக்குனர்), அல்லது மாகாண சர்க்காரால் தன் சார்பில் நியமிக்கும் ஒருவர்.

43. இந்தக் குழுமத்தின் செயல்பாடுகள் வருமாறு:

(அ) இந்திய சர்க்காராலோ அல்லது ஸ்தல சர்க்காராலோ

அதற்கு அனுப்பப்படும் எந்த கல்வி சம்பந்தமான விஷயத்திலும் ஆலோசனை வழங்குதல்.

(ஆ) இந்தியாவுக்கு விசேட அக்கறையும் முக்கியத்துவமுள்ள கல்வி சம்பந்தமான தகவல்கள் பெறுவதும் ஆலோசனை வழங்குவதும்.

44. குழுமத்தின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு விசேஷ அக்கறையுள்ள கல்விப் பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்து மத்திய, மாகாண சர்க்காருக்கு பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்க குழுமத்தால் முடியும் என்பது மிகத் தெளிவாக உள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே உயர் கல்வியைப் பரப்புவது பற்றி சர்க்கார்கள் மற்றும் பல்கலைக் கழகங்களின் கவனத்தை ஈர்ப்பதில் இத்தகைய செயல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க முடியும்.

45. எனினும், முதலாவதாக, தாழ்த்தப்பட்ட சாதியினர் போன்ற வகுப்பினரின் விசேடக் கல்விப் பிரச்சினை பற்றி குழுமம் அக்கறை கொள்ளச் செய்வது அவசியமாகும். குழுமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும். எனவே, குழுமத்திற்கு தாழ்த்தப்பட்ட சாதியினரின் இரு பிரதிநிதிகளை அவசியம் நியமிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகிறது.

## VI. தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப கல்விக்கு வசதிகள் இல்லாதது

46. பொருளாதார நிலையை உயர்த்தும் விஷயத்திலிருந்து நோக்கும்போது, தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பொதுக் கல்வியை விட தொழில்நுட்பக் கல்வி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவு. ஆனால் தொழில்நுட்பக் கல்விக்காகும் செலவு மிக அதிகமானது; தொழில்நுட்பக் கல்வி பயில்வது தாழ்த்தப்பட்ட சாதியினரின் குழந்தைகளுக்குச் சாத்தியமல்ல; தொழில்நுட்பக் கல்வி இல்லாமல் அவர்களது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய முடியாது. இந்துக்களது சமூக அமைப்பின் காரணமாக, இந்தியப் பொருளாதாரத்தில், தாழ்த்தப்பட்ட சாதியினர் பொருளாதார ரீதியில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளனர். செழிப்பான காலங்களில் அவன்

தான் கடைசியாக வேலைக்கு நியமிக்கப்படுவான்; பொருளாதார மந்த நேரங்களில் அவன்தான் முதலில் வேலைநீக்கம் செய்யப் படுவான். அவன்பால் இந்துக்கள் கொண்டுள்ள சமூக விரோதக் கண்ணோட்டத்தின் விளைவே இது; இது அவனுக்கு எதிராகச் செயல்படுகிறது. மேலும், அவன் பாதையில் குறுக்கிடும் வேறு ஒரு இடர்ப்பாடும் உள்ளது; அவன் பொதுவாக, பயிற்சி பெறாத, தொழில் நுட்ப ஞானம் இல்லாத ஒரு தொழிலாளியாக இருப்பதே அந்த இக்கட்டு.

47. அவன் இப்பொழுது பெற்றிராத தொழில்நுட்பத் திறமையை அவன் அடைவதைச் சாத்தியமாக்குவதன் மூலம் அவனுடைய வாழ்வு வளம்பெற, நலம்பெற இந்திய சர்க்கார் எவ்வளவோ செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது; இந்திய சர்க்காரால் நடத்தப்படும் அல்லது அவர்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் முறையைக் கொண்டு வருவதன் மூலம் இதைச் சுலபமாகச் செய்யலாம்.

இவ்வகையில் இருவிதப் பயிற்சிகளைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்:-

### (1) சர்க்கார் அச்சகங்களில் தொழில்முறைப் பயிற்சி:

இந்திய சர்க்காரின் பராமரிப்பில் பல அச்சகங்கள் உள்ளன. இவற்றில் பயிற்சி பெறும் நபர்களுக்கு அச்சுக் கோப்பவர்கள், அச்சடிப்பவர்கள், பைண்டர்கள் முதலிய பல்வேறு வேலைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அச்சுத் தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு தொழில்களை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இளைஞர்கள் கற்றுக் கொள்வதற்கு வகை செய்யும் ஒரு திட்டத்தை இந்திய சர்க்கார் ஏன் வகுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் எதுவும் இல்லை.

### (2) ரயில்வே தொழிற்சாலைகளில் பயிற்சி:

இந்தியாவிலுள்ள ரயில்வேக்களில் பெரும்பாலானவை இந்திய சர்க்காருக்குச் சொந்தமாக உள்ளன. இந்த ரயில்வேக்கள் தொழிற்சாலைகளை நிர்வகிக்கின்றன. பிட்டர்கள், தச்சர்கள் மற்றும் தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் பலர் இங்கு வேலைக்கு அமர்த்தப்

படுகின்றனர். பலருக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளித்து அவர்களை ரயில்வே பணிகளில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் எதுவும் ரயில்வே இலாகாவுக்கு உள்ளதா என்பது எனக்குத் தெரியாது. அத்தகைய திட்டம் இப்பொழுது இல்லாமலிருந்தாலும், தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலனுக்காக அம்மாதிரியான திட்டம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியம்.

*48.* எனவே, இத்தகைய ஒரு பயிற்சி திட்டம் அவசியம் என்பது என் கருத்து. அதன்படி அச்சகங்களிலும் ரயில்வேத் தொழில் கூடங்களிலும் ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட சாதி இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும். இதற்கான செலவு அதிகமாக இருக்காது.

## பாகம் III

# ஏனைய குறைகள்

## VII. விளம்பர விஷயத்தில் புறக்கணிப்பு

47. இந்தியாவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பிரதான சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தனி நபர்கள் மற்றும் கட்சிகளின் கருத்துகளையும் செயல்பாடுகளையும் விளம்பரப்படுத்த இந்திய சர்க்கார் மிக விரிவான அளவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது நன்கு தெரிந்த ஒன்றாகும். இந்திய சர்க்காரின் தகவல் துறை அலுவலகம் ''இந்தியாவும் ஆக்கிரமிப்பாளரும்'' (1935-40 இடையே இந்திய கருத்துப்போக்கு) என்ற தலைப்பில் வெளியிட்ட தொகுப்பு நூலை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிட விரும்புகிறேன். அந்த நூலின் தலைப்பு தவறான அர்த்தத்தை அளிக்கிறது. ஆக்கிரமிப்பாளரோடு அது எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை. மாறாக நாட்டின் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் கூற்றுகள் மற்றும் செயல்பாடுகளை அது தொகுத்துரைக்கிறது; இந்தியாவின் பெரும்பான்மையினரதும், சிறுபான்மையினரதும் கருத்துக்களை முழுமையாகத் திரட்டித் தருகிறது.

48. இந்த தொகுப்பு நூலின் மிகவும் வேதனை அளிக்கக் கூடிய விஷயம் என்னவெனில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் கருத்துகளும் செயல்பாடுகளும் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டிருப்பதாகும். மொத்தம் 940 பக்கங்களில், 158 பக்கங்கள் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன; முகமதியர்களுக்காக 85 பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; இந்து மகாசபையும், இந்து லீகும் தலா 10 பக்கங்களை கைப்பற்றியுள்ளன. லிபரல் பெடரேஷன் 16 பக்கங்கள் பெற்றுள்ளது. சீக்கியர் 6 பக்கங்களும், இந்தியக் கிறித்தவர்கள் 2 பக்கங்களும் பெற்றுள்ளனர்; தாழ்த்தப்பட்ட சாதியினர் 3 பக்கத்தோடு விட்டு விடப்பட்டுள்ளனர். இதில் ஆச்சரியமளிப்பது என்னவெனில், இந்த மூன்று பக்கங்களும் கூட மிக அற்பமானத் தகவல்களைக் கொண்டவை. இந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான

சம்பவங்களும், தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சார்ந்த பிரமுகர்களின் அறிவிப்புகளும் முற்றிலுமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. இத்தகைய ஒரு நிகழ்ச்சியை இங்கு கூறுவது உசிதமாக இருக்கும். அதாவது மதமாற்றத்திற்கான இயக்கத்தையே இங்கு குறிப்பிடுகிறேன். இந்து சமூகத்தை ஆட்டம் கொள்ளச் செய்தது அந்த இயக்கம் என்பதும் உலகம் முழுவதன் கவனத்தை அது ஈர்த்தது என்பதும் கேள்விக்கு அப்பாற்பட்டதாகும். இந்தத் தொகுப்பு நூலில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எந்த லட்சணத்தில் முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது என்பதற்கு ஒன்றைக் குறிப்பிட்டால் போதும். குர்சியாங்கிலுள்ள புனித மேரிக் கல்லூரி ஒரு சமயம் தாழ்த்தப்பட்ட சாதியினரின் லட்சியங்களைப் பிரபலப்படுத்தும் பணியை மேற் கொண்டது; அக்காலகட்டத்தை சேர்ந்த பல்வேறு விவரங்களை 507 பக்கங்கள் கொண்ட நூலில் வெளியிட்டது. அந்த அளவுக்கு 1935-40 காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் சக்திகள் மிகுந்த தாக் கத்தை ஏற்படுத்தியிருந்தன; அவர்களது இயக்கங்கள் விரிந்து பரந் திருந்தன. என்னைப் பொறுத்தவரை, தாழ்த்தப்பட்ட சாதியினர் பற்றி எத்தனை எத்தனையோ கருத்துகளை நான் வெளியிட்ட போதிலும், அவற்றில் ஒன்றுகூட இந்திய சர்க்கார் தகவல்துறை வெளியிட்ட தொகுப்பில் இடம்பெறவில்லை.

49. இந்தத் தொகுப்பு அதிகாரபூர்வ உபயோகத்திற்காக மட்டுமே உத்தேசிக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால் எனது கருத்தில், இந்தத் தொகுப்பிற்குள்ள மகத்தான முக்கியத்துவத்தை இது எவ்வகையிலும் மாற்றிவிடவில்லை. அரசின் விவகாரங்கள் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை பெருமளவுக்கு நிர்ண யிப்பது அதிகாரியின் சிந்தனைப் போக்குதான் என்பது சொல்லா மலே விளங்கும். வகுப்பு நலன்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் அதுதான் நிர்ணயிக் கிறது. எந்த மாதிரியான விவரங்கள் அதிகாரியிடம் முன்வைக்கப் படுகிறதோ அவற்றின் அடிப்படையில்தான் அவருடைய கண்ணோட் டமும் சிந்தனையும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த சிந்தனைப் போக்கைத்தான் இம்மாதிரியான ஒரே தொகுப்பு நூலில் அவர் வெளியிடுகிறார். மேலும், ஒரு சர்க்கார் வெளியீட்டில் ஒரு குறிப் பிட்ட பிரச்சினைக்கு சர்க்கார் அளிக்கும் முக்கியத்துவத்தையே அதற்கு அரசு அளிக்கும் முக்கியத்துவமாக அந்த அதிகாரி கருதுகிறார்;

பல்வேறு சமூகங்களின் தேவைகளையும் உரிமைகளையும் மதிப்பிடு வதற்கான திசைவழியாகவும் அதை அவர் எடுத்துக் கொள்கிறார். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் தாழ்த்தப்பட்ட சாதியினர் மதிக்கப்பட வேண்டாத, கவலைப்பட வேண்டாத ஒரு சக்தி என்ற எண்ணத்தைத்தான் மத்திய தலைமைச் செயலகத்திலும் மாகாண செயலகங்களிலும் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், பிரிட்டிஷ் வெளி விவகார அமைச்சருக்கும் கூட இந்தத் தொகுப்பு நூல் நிச்சயமாக அளிக்கும். இம்மாதிரி பாதிப்பை இந்தத் தொகுப்பு நூல் ஏற்படுத்தி யுள்ளது என்பது பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து தெளிவாகிறது; அதில் முகமதியர் களைப் பற்றிக் கூறப்பட்டவை அழுத்தம் திருத்தமாக ஆக்கபூர்வ மாகவும் இருந்தன; ஆனால் அதேசமயம் தாழ்த்தப்பட்ட சாதியினர் பற்றிக் குறிப்பிட்டது ஏனோதானோ என்ற தன்மையையே பெற்றி ருந்தது. இது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய கொடுமையாகும்; அவர்கள் விஷயத்தில் அரசாங்கம் கடைப் பிடிக்கும் ஒரு நிலையற்ற, நேர்மையற்ற போக்கால் அவர்களது போராட்டத்தின் மிக நெருக்கடியான கட்டத்தில் அவர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, தாழ்த்தப்பட்ட சாதி யினர் நடத்திய இயக்கங்களையும் அவர்களின் தலைவர்கள் வெளி யிட்ட அறிக்கைகளையும் முழுவதுமாக கொடுக்கும் வகையில், தகவல்துறை அலுவலகம் ஏற்கெனவே தான் வெளியிட்ட தொகுப்பு நூலுக்கு அனுபந்தமாக தயாரித்து வெளியிட வேண்டுமென வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன்.

50. கட்சிகளையும் வகுப்புகளையும் பற்றிப் பிரசாரம் செய்ய தான் கடமைப்பட்டிருக்கவில்லை என்றும், கட்சிகளும் வகுப்பு களும் தான் தாமே தம்மைப் பற்றி பிரசாரம் செய்து கொள்ள வேண்டு மென்றும் சர்க்கார் நிச்சயம் கூறக்கூடும். ஆனால் இங்கு விஷயம் அதுவல்ல. நான் எடுத்துக் காட்டியுள்ளபடி, இந்தப் பிரசாரப் பணியில் சர்க்கார் தன்னை மிகவும் ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது. இதைச்சர்க்கார் செய்யும்போது, பிரசாரம் செய்யும் விஷயத்தில் எல்லாக் கட்சிகளையும் சமநிலையில் நடத்துவதும், நாட்டில் செயல்பட்டுவரும் இயக்கங்கள் பற்றி சரியான படப்பிடிப்பினை வழங்குவதும் சர்க்காரின் கடமையாகிறது.

# VIII. சர்க்காரின் தொழில் ஒப்பந்தங்களில் விலக்கி வைக்கப்படுதல்

51. பொதுத்துறை வேலைகளில் பெரும்பகுதி இலாகா ரீதியாகச் செய்யப்படாமல் ஒப்பந்தங்கள் மூலம் நிறைவேற்றப்படு கின்றது. சாதாரண காலங்களில் நிலைமை இதுவே. யுத்த காலத் தில் ஒப்பந்தங்கள் முறை மூலம் சர்க்காருக்காகச் செய்யப்படும் வேலைகள் பல நூறு மடங்கு பெருகியுள்ளன. மத்திய பொதுப் பணித்துறை பற்றி மட்டும்தான் இங்கு நான் பேச முடியும். மத்திய பொதுப்பணித்துறையினரிடம் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக் காரர்களின் பட்டியலில் 1171 பேர் உள்ளனர். இவர்களில் தாழ்த்தப் பட்ட சாதியினரைச் சார்ந்த ஒப்பந்தக்காரர் ஒரே ஒ்ருவர்தான் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். மற்றவர்கள் இந்துக்கள், முகமதியர்கள், சீக்கியர் ஆவர். எல்லா சமூகத்தினரும் ஆதாயம் அடையும் வகையில் ஒப்பந்தமுறை இருக்குமாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும். சர்க்காரின் ஒப்பந்த பணிகளை நிறை வேற்றுவதற்கு நம்பிக்கையுடன் ஒப்படைக்கக் கூடியவர்கள் பலர் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே உள்ளனர். ஏற்கெனவே இந்து, முகமதிய, சீக்கிய ஒப்பந்ததாரர்களிடம் தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சேர்ந்த பலர் சிப்பந்திகளாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார் கள். விளைவு என்னவெனில், இந்து, முகமதிய, சீக்கிய ஒப்பந்தக் காரர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்துவரும் அதேசமயம் தாழ்த்தப் பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் வெறும் கூலிக்காக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

52. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் பட்டியலில் தாழ்த்தப்பட்ட சாதியினரிலிருந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதில் கஷ்டம் எதுவுமில்லை. ஆனால் முக்கியமானது என்னவெனில், அவர்கள் ஒப்பந்த வேலையைப் பெறுவதைச் சாத்தியமாக்குவதுதான். சர்க்கார் ஒப்பந்தப் பணிகள் சம்பந்தப்பட்ட இரண்டு விதிகள் உள்ளன:-

(1) எந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மற்றவர்களை விட மிகக் குறைவாக இருக்கிறதோ அவரது ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்ளப்படும்;

(2) ஆனால் அதேசமயம் மற்ற எல்லாவற்றையும் விட குறைவான ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது சர்க்காருக்கு கட்டாயம் இல்லை.

53. எனவே ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு ஓர் ஒப்பந்த வேலை அளிக்கப்படுமா இல்லையா என்பது பொறுப்பில் உள்ள அதிகாரி தமது உசிதப்படி முடிவு செய்வதற்கு அவருக்குள்ள அதிகாரத்தைப் பொறுத்த விஷயம் இது. ஆனால் தமது உசிதப்படி முடிவு செய்வதற்கு ஓர் அதிகாரிக்குள்ள இந்த அதிகாரம் ஒரு தாழ்த்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு சாதகமாக பயன்படுத்தப்படும் என்பது நடக்காது. அவருடைய ஒப்பந்தப்புள்ளி மற்றெல்லாவற்றை யும் விட குறைந்ததாக இருக்கலாம்; வகுப்பு குரோதத்தின் காரணமாக அந்த அதிகாரி அதை ஏற்றுக் கொள்ளாமல் போகலாம்; ''எல்லா வற்றையும் விடக் குறைந்ததை ஏற்றுக் கொள்ளும் கட்டாயம் அவருக்கு இல்லை'' என்ற இரண்டாவது விதியின்படி அவர் நடந்து கொள்ளலாம். அவருடைய ஒப்பந்தப்புள்ளி எல்லாவற்றிற்கும் குறை வானதை விட அதிகமாக இருந்தாலும் அவர் அதை ஏற்றுக் கொள்ள முடியும். என்றாலும் அவ்வாறு செய்ய மாட்டார். அவர் இரண்டு விதிகளில் முதல் விதியைச் சார்ந்து நிற்பார். எப்படியாயினும் தாழ்த்தப்பட்ட சாதி ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை நிராகரிப்பதை அவர் நியாயப்படுத்த முடியும்.

54. வகுப்புக் குரோதத்திற்கு எந்தப் பரிகாரமும் நிச்சயமாக இல்லை. என் மனதில் படும் ஒன்றை இச்சந்தர்ப்பத்தில் கூறுகிறேன். மிகவும் குறைந்த ஒப்பந்த புள்ளியை விட 5 சதவிகிதம் அதிகமாக ஒரு தாழ்த்தப்பட்ட சாதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி இல்லாது இருந்தால், மற்ற எல்லாவற்றையும் விடக் குறைந்தது என்று கருதி அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று விதியைத் திருத்தலாம் என்பது என் கருத்தாகும். இதன் காரணமாக அரசுக்கு நஷ்டம் ஏற்படக் கூடும். நிதி இலாகா இதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். இத்தகைய சலுகையால் எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்படும் என்பது பற்றி எனக்குக் கருத்து எதுவும் இல்லை. எனினும் ஒன்று மட்டும் நிச்சயம். ஒட்டகத்தின் முதுகை உடைப்பது போன்று அது பெரும் சுமையாக இருக்காது.

## பாகம் IV

# இன்னல்படும் மக்கள்பால் சர்க்காரின் கடமை

55. தாழ்த்தப்பட்ட சாதியினர் சார்பில் சமர்ப்பிக்கப்படும் இந்தக் கோரிக்கை மனுவில் கொடுக்கப்பட்டுள்ள சில பரிந்துரைகள், குறிப்பாக அரசியல் குறைகளை அகற்றுவதற்காக முன்வைக்கப் பட்டவையாகும்; இவை பொது கஜானாவுக்கு எந்த நிதி பளுவையும் உட்படுத்த மாட்டா. இவை பரிந்துரைகள் என்பதைவிட அரசியல் கோரிக்கைகள் எனக் கூறலாம்; இவை மிகவும் நியாயமான, நேர்மையான கோரிக்கைகள்; ஆகவே, இவற்றை சர்க்கார் அவசியம் ஏற்க வேண்டும். இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் மத்திய சர்க்காரின் வருவாயில் இவை ஏற்படுத்தும் அதிக சுமைதான். நிதிப் பளு இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதன் காரணமாகவே அவற்றை நிராகரிக்க முடியாது. காரணம், தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் சர்க்காருக்கு ஒரு கடமை உள்ளது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது; இது விஷயத்தில் தங்களுக்குள்ள கடமையை அவர்கள் உணர்ந்தால், பொதுப் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை நிதிச் சுமையாக இருந்தாலும் கூட, அவர்கள் அவற்றை நிறைவேற்ற கடமைப்பட்டவர்களாவர்.

56. தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை அவர்களை தொடர்ந்து முற்றிலும் புறக்கணிக்கும் கொள்கையாகவே இருந்து வந்துள்ளது. தங்கள் கடமை சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவது மட்டுமல்ல, மக்களுக்குக் கல்வி வசதி அளிப்பதும் அவர்களின் நலவாழ்வைக் கவனிப்பதும் தங்கள் கடமை என்று பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்த காலம் முதலே இந்தப் புறக்கணிப்பு இருந்து வருகிறது. 1850-51-ம் ஆண்டுக்கான பம்பாய் மாகாண கல்வி வாரிய அறிக்கையிலிருந்து தரப்படும் கீழ்க்கண்ட வாசகத்திலிருந்து இது தெளிவாகும்:

### இந்தியாவின் மேல்தட்டு வர்க்கங்கள் பற்றிய ஆய்வு

''பத்தி 16. இந்தியாவில் அரசு வழங்கும் கல்வியின்

செல்வாக்கின் கீழ் மக்கள் தொகையின் ஒரு சிறு பகுதியைத் தான் கொண்டு வர முடியும் என்பது நிரூபிக்கப்பட்டதால், இந்தப் பகுதி 'மேல்தட்டு வர்க்கங்களை' கொண்டதாக இருக்க வேண்டும் என்று மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசு முடிவு செய்ததால், பின்னால் குறிப்பிடப்பட்டவர்கள் யார் யார் என்று உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும்.

## இந்தியாவில் மேல்தட்டு வர்க்கங்கள்

''பத்தி 17.செல்வாக்குள்ளவை என்று கருதப்படும் இந்தியாவின் மேல்தட்டு வர்க்கங்களை பொறுத்தவரை, அவற்றை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்:

1வது: நிலச்சுவான்தார்கள், ஜாகீர்தார்கள், முன்னாள் ஜமீன்தார்களின் பிரதிநிதிகள், குறுநில மன்னர்கள், படை வீரர்கள் வர்க்கம் என்று அழைக்கப்படுபவர்கள்.

2வது: தொழில்-வாணிகத்தில் சொத்துச் சேர்த்தவர்கள் அல்லது வாணிக வர்க்கத்தினர்.

3வது: உயர் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள்.

4வது: பிராமணர்கள்; பேனாவினால் வாழ்கிற எழுத்தாளர்களையும் இவர்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்; பம்பாயின் பர்புக்கள், சீன்வீக்கள், வங்காளத்தின் காயஸ்தர்கள் - இவர்கள் கல்வியில் அல்லது சமுதாய படி நிலையில் உன்னத இடத்தை அடைந்திருந்தால்.

## பிராமணர்கள் மிகுந்த செல்வாக்கு பெற்றவர்கள்

பத்தி 18: இந்த நான்கு வர்க்கங்களில், ஒப்பிட முடியாத அளவில் மிகவும் செல்வாக்குள்ளவர்கள், மிக அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள், மொத்தத்தில் மிக சுலபமாக சர்க்காரால் சமாளிக்கப்படக் கூடியவர்கள், பின்னால் சொல்லப்பட்டவர்களேயாவர். பண்டைய ஜாகீர்தார்கள் அல்லது போர் வீரர்கள் வர்க்கம் நமது ஆட்சியில் தினமும் சீரழிந்துக் கொண்டிருக்கிறது.

★ ★ ★

சில விதிவிலக்குகள் தவிர்த்து, வணிக வர்க்கத்தினருக்கும் உயர் கல்வியின் கதவுகள் மிகத் தாராளமாகத் திறந்துவிடப் பட்டிருக்கின்றன என்றும் கூற முடியாது.

★ ★ ★

கடைசியாக, சர்க்காரோடு தொடர்பு கொள்ள வரும் பெரும் எண்ணிக்கையானவர்களிடையே அரசு ஊழியர்கள் பெருமளவு செல்வாக்கைப் பெற்றிருந்தாலும், சர்க்காரிடமிருந்து சுதந்திர மாக உள்ள இன்னும் அதிக எண்ணிக்கையுள்ளவர்களிடையே இவர்களுக்குச் செல்வாக்கு எதுவும் இல்லை.

**பிராமணர்களின் வறுமை**

பத்தி 19. மேற்சொன்ன பரிசீலனை நீளமாக இருந்தாலும், சில முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு இது இன்றியமை யாதது. முதலாவதாக, பல்வேறு வகையான கல்வியைப் பரப்பு வதற்கு சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய செல்வாக் குள்ள வர்க்கம் பிராமணர்களும் அவர்களுக்கு அடுத்த நிலை யில் உள்ள மற்ற உயர் சாதியினரும் என்பதை இது நிரூபிக் கிறது.

**கீழ்ச்சாதிகளுக்குக் கல்வி அளிக்கும் பிரச்சினை**

''பத்தி 21. நம்மிடமிருந்து கல்வி வசதி பெற விரும்பும் உயர் சாதிகளைச் சேர்ந்த ஏழைகளின் குழந்தைகளுக்கு வெகு விரிவாக கதவு திறந்துவிடப்பட வேண்டுமென்பதே ஆண்டுக் கணக்கான அனுபவம் நம்மீது திணித்துள்ள உண்மைகளி லிருந்து நாம் பெறக்கூடிய நடைமுறை சாத்தியமான முடி வாகும். ஆனால் இங்கு வேறு ஒரு சங்கடமான பிரச்சினை எழுகிறது என்பதை கவனிப்பது அவசியம். அரசுக் கல்வி நிறுவனங்களில், ஏழைகளின் குழந்தைகளை இலவசமாகச் சேர்க்கும்போது இழிவாகக் கருதப்படும் தெட்கள், மகர்கள் முதலிய பல்வேறு சாதியினரும் பெரும் எண்ணிக்கையில் மந்தைக் கூட்டம் போல் வருவதை தடுப்பதற்கு என்ன இருக் கிறது?

568341

### இந்துக்களின் சமூக குரோதப் போக்குகள்

''பத்தி 22. பின் சொன்னவர்களுக்காக பம்பாயில் வகுப்பு அமைக்கப்பட்டால், வாரியத்தின் கீழ் பணிபுரியும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் வழிகாட்டுதலில் இந்த வகுப்பில் எவரையும் விட அறிவில் மிகச் சிறந்த மனிதர்களாக இவர்களை ஆக்க முடியும்; அப்பொழுது இத்தகைய கல்வி தகுதியைப் பெற்றுள்ள அவர்கள் நீதிபதிகள், ஜுாரிகள், மாட்சிமை தங்கிய மன்னரின் சமாதான ஆணையத்தின் உறுப்பினர்கள் போன்ற மிக உயர்ந்த பதவிகளில் சேர விரும்புவதிலிருந்து அவர்களை யாரும் தடுக்க முடியாது. இவ்வாறு அவர்களை உயர் உத்தியோகங்களில் அமர்த்தப்படுவது சாதி இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தும். இந்த விரோத குரோதங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பணிவதை பண்பற்ற குறுகிய மனோபாவத்தின் உச்சக்கட்டம் என்றும், பலவீனம் என்றும் தாராள மனப்பான்மை உள்ளவர்களில் பலர் நினைக்கிறார்கள்; சாதி தடைகள் மீது பகிரங்கத் தாக்குதல் நடத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

### மதிப்பிற்குரிய மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டனின் கருத்துகள்

''பத்தி 23. இந்தியாவின் இந்தப் பகுதியினரை நன்கு அறிந்தவரும், பரந்த மனப்பான்மை கொண்ட நிர்வாகியுமான திரு. எலிபின்ஸ்டன் இத்துறையில் நாம் எத்தகைய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் கூறுகிறார்: அடிமட்டத்திலுள்ள சாதியினர் தான் சிறந்த மாணவர்களாகத் திகழ்கின்றனர் என்று மதபோதகர்கள் கூறுகிறார்கள்; ஆனால் இம்மாதிரியான மக்களுக்கு எவ்வாறு விசேட ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; அவர்கள் மிகவும் இழிவாகக் கருதப்படுபவர்கள் மட்டுமல்ல; சமுதாயத்திலுள்ள மாபெரும் பிரிவுகளில் மிகவும் குறைவான எண்ணிக்கை கொண்டவர்களும் ஆவர். நமது கல்வி முறை இவர்களிடம் முதலில் வேரூன்றினால், அது ஒருபோதும் மேலும் பரவாது என்று அஞ்சப்படுகிறது; பயனுள்ள ஞானத்தில் மற்றவர்களை விட அதிகம் உயர்வான ஒரு புதிய வர்க்கத்தின் தலைமையில்

நலம் இருப்பதைக் காண்போம். வெறுக்கப்படும், கேவலமாகக் கருதப்படும் சாதியினருக்கு அவர்களின் இந்தப் புதிய ஆற்றல்களின் காரணமாக, முன்னுரிமை அளிக்க நாம் எப்பொழுதும் தூண்டப்படுவோம். நமது ராணுவத்தின் மீது அல்லது மக்களில் ஒரு பகுதியினரது பிணைப்பின் மீது நமது அதிகாரம் ஆதாரப்பட்டிருப்பதோடு நாம் திருப்தியடைவோமெனில் இத்தகைய ஒரு நிலவரம் விரும்பத்தக்கதே; ஆனால் மேலும் விரிவுபடுத்தப்பட்ட அடிப்படை மீது அதை நிலைநிறுத்தச் செய்யும் ஒவ்வொரு முயற்சிக்கும் அது முரணானது.''

★ ★ ★

57. தாழ்த்தப்பட்ட சாதிகள்பால் உள்ள பகைமை உணர்வு இத்தகையது; இந்தியர்களுக்கு கல்வி அளிக்கும் சர்க்கார் கொள்கை இவ்வாறுதான் துவங்கியது. இந்தக் கொள்கை உறுதியுடன் பின்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவது இங்கு உசிதமாக இருக்கும்; தார்வார் மாவட்டத்திலுள்ள ஒரு சர்க்கார் பள்ளியில் சேர்க்கப்படுவதற்காக 1856ல் ஒரு மகர் சாதிப் பையன் (தீண்டப்படாதவர்) சர்க்காருக்கு மனு செய்து கொண்டான். இந்த மனுவின் பேரில் சர்க்கார் வெளியிட்ட தீர்மானத்தின் வாசகம் வருமாறு:

''கடிதப் போக்குவரத்தில் விவாதிக்கப்பட்டுள்ள விஷயம் மிகுந்த நடைமுறைச் சிக்கலான ஒன்றாகும்.

''1. கோட்பாட்டளவில் பார்க்கும் போது மகர் மனிதர் பக்கம் நியாயம் உள்ளது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. கார்வாரில் இன்று நிலவும் கல்வி வசதியை அவர் பயன்படுத்துவதற்கு தடையாக உள்ள பகைமை உணர்வு அகற்றப்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று சர்க்கார் நம்புகிறது.

''2. ஆனால் காலம் காலமாக உள்ள குரோதங்களுக்கு எதிராக திடீர் தீர்வுமுறையில் ஒரு தனி நபருக்காக அல்லது சில தனி நபர்களுக்காக தலையிடுவது கல்வி லட்சியத்துக்கே பெரும் தீங்கை ஏற்படுத்தலாம் என்பதை சர்க்கார் கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மனுதாருக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்தப் பாதகமான நிலைமை இந்த

சர்க்காரிடமிருந்து தோன்றவில்லை. அவர் சர்க்காரை வேண்டி கேட்டுக் கொண்டுள்ளபடி, அவருக்கு சாதகமாக, தலையிட்டுத் தன்னிச்சையாகப் போக்கக்கூடிய ஒன்றல்ல அது''.

58. 1882ல் கல்விக் கொள்கையைப் பரிசீலிக்க ஹண்டர் ஆணையத்தை சர்க்கார் நியமித்தது. முகமதியர்கள் மத்தியில் கல்வியைப் பரப்ப முக்கிய பல ஆலோசனைகளை ஆணையம் அளித்தது. தீண்டப்படாதவர்களைப் பொறுத்தவரை அது எதுவும் செய்யவில்லை. அது செய்தது எல்லாம் ஒரு கருத்தைத் தெரிவித்ததுதான்: ''சர்க்கார் கல்லூரி அல்லது பள்ளியில் எவரையும் சேர்த்துக் கொள்ள சாதியைக் காரணம் காட்டி மறுக்கக் கூடாது என்ற கோட்பாட்டை அவசியம் சர்க்கார் ஏற்று கொள்ள வேண்டும்'' என்பதேயாகும் அது; ''ஆனால் இந்தக் கோட்பாடு போதுமான முன்னெச்சரிக்கையுடன் செயல்படுத்தப்பட வேண்டும்'' என்று அதற்கு ஒரு வரையறையையும் வகுத்துத் தந்தது.

59. இந்தக் குரோத மனோபாவம் மறைந்தபோது, அதன் இடத்தை புறக்கணிப்பும் அககறையின்மையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இந்தப் புறக்கணிப்பும் அக்கறையின்மையும் கல்வித் துறையில் மட்டுமே வெளிப்படவில்லை. அது மற்ற துறைகளிலும், குறிப்பாக ராணுவத்திலும் தோன்றியது. கிழக்கு இந்தியக் கம்பெனியின் ராணுவம் முழுவதும் தாழ்த்தப்பட்ட சாதியினரைக் கொண்டதாக இருந்தது. தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரின் ராணுவம் மட்டும் இல்லை யென்றால், இந்தியாவை பிரிட்டன் கீழ்ப்படுத்தியிருக்க முடியாது என்பது உண்மை. தீண்டப்படாதவர்கள் 1892 வரை தொடர்ந்து ராணுவத்தை நிரப்பிக் கொண்டிருந்தனர். 1892-ல் ராணுவத்தில் அவர்கள் சேர்க்கப்படுவது திடீரென்று நிறுத்தப்பட்டது; கல்வியையோ, கௌரவமாக வாழ்வதற்கு மற்ற வழிகளையோ தேடிக் கொள்வதற்கு வசதி எதுவும் இல்லாமல் அவர்கள் வெந்துயரில் வாடும்படி நடுத்தெருவில் விடப்பட்டனர்.

60. இப்பொழுது அவர்கள் உழன்று கொண்டிருக்கும் துயரிலிருந்து தாழ்த்தப்பட்ட சாதியினரை யார் கைதூக்கி விடமுடியும்? அவர்களின் சொந்த முயற்சியால் அவர்கள் இதைச் செய்ய முடியாது. தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு அவர்களுக்குள்ள ஆதார அடிப்படைகள் மிக மிகக் குறைவு. இந்துக்களின் அருளிரக்கத்தின் மீது அவர்கள் நம்பிக்கை வைக்க முடியாது. இந்துக்களின் தரும

சிந்தனை வகுப்புவாதத் தன்மை கொண்டது; அதன் பலன்கள் தருமம் செய்பவர்களைச் சார்ந்தவர்க்கே சென்றடையும். தானம் செய்யும் இந்துக்கள் வியாபாரிகளாகவோ அல்லது உயர் அரசாங்க அதிகாரிகளாகவோ இருக்கிறார்கள். இதில் வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், அவர்கள் பொதுமக்களிடமிருந்தே தங்கள் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். தருமம் செய்ய வேண்டுமென்ற விஷயம் வரும் போது, அவர்கள் பொதுமக்களை மறந்து விடுகின்றனர்; தங்கள் சாதி அல்லது வகுப்பை ஞாபகத்தில் கொள்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை; மேற்சொன்ன இரு பகுதியினர் நிறுவியுள்ள அறநிலையங்களிலிருந்து அவர்கள் பெருமளவுக்கு ஒதுக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் நம்பி இருக்கக் கூடிய ஆதாரம் சர்க்காரிடமிருந்து வரக்கூடிய நிதி உதவி தான். தாழ்த்தப்பட்ட சாதியினரைப் போன்று துன்பத்தில் உழலும் மக்களின் உதவிக்கு வரவேண்டியது மத்திய சர்க்காரின் கடமை என்று துணிந்து கூறுவேன். தாழ்த்தப்பட்ட சாதியினரின் நியாயமான உரிமைகளை ஏற்றுக்கொண்டு தங்களுடன் போட்டி போடுபவர் களோடு சமமான நிலையிலிருந்து போட்டியிட அவர்களுக்கு உதவ மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலையை உயர்த்த விசேட கவனம் செலுத்த வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கோருவதில் அசாதாரணமானது எதுவும் இல்லை. இம்மாதிரி நினைப்பவர்கள், ஆங்கிலோ-இந்திய சமூகத்தின் நல்வாழ்வை உத்திரவாதம் செய்ய இந்திய சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி கருத்தில் கொள்ளட்டும்.

### (1) உயர்வான சம்பளங்கள்

இந்தியரை விட ஆங்கிலோ-இந்தியர்கள் அதிகமான சம்ப ளத்தைப் பெற்ற காலம் ஒன்று இருந்தது. இதை எடுத்துக்காட்ட மூன்று ரயில்வேக்களில் பொறுக்கி எடுக்கப்பட்ட ஒரு சில பதவி கள் பற்றிய புள்ளிவிவரங்களைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்; ஆங்கிலோ-இந்தியருக்கும் இந்தியருக்கும் இடையே சம்பளத்தில் எவ்வளவு வித்தியாசம் இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகும்:

| பதவி | ஆங்கிலோ-இந்தியர்கள் | இந்தியர்கள் |
|---|---|---|
| **வடமேற்கு ரயில்வே:** | | |
| நிரந்தர பயண மேற்பார்வை யாளர்கள் | 625-25-675 | 475-25-500 |
| | 550-25-600 | 400-25-450 |
| இஞ்சின் ஓட்டுனர்கள் | 260-10-280 | நாள் ஒன்றுக்கு ரூ. 1 முதல் 1 ரூபாய் 14 அணா வரை. விசேட விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ. 2/- |
| **கிழக்கு இந்திய ரயில்வே:** | | |
| பயணச்சீட்டுப் பரிசோதகர்கள் | 300-25-400 | 125-15-180 |
| | 200-20-280 | |
| **ஜி.பி.ஐ. ரயில்வே** | | |
| தலைமை பயணச்சீட்டும் பரிசோதகர்கள் | ·275 | 125-275 |
| | 315 | |
| | 365 | |
| சுத்தம் செய்யும் ஊழியர்கள் | 145 | 115 |

சம்பளத்தில் உள்ள வித்தியாசம் 1920 வரை தொடர்ந்து இருந்தது. அதன் பின்பு அது நீக்கப்பட்டது. ஒரு வித்தியாசம் இன்னமும் இருக்கிறது; ஆங்கிலோ-இந்தியர் அடிப்படை சம்பளமாக மாதத்திற்கு ரூ. 55 பெறுகிறார். அரசு ரயில்வேயில் அவர் பியூனாக இருந்தாலும் இதைப் பெறுகிறார். ஆனால் இந்திய சப்ராசி ரூ. 13-15 தான் பெறுகிறார். ஆங்கிலோ-இந்தியர்களுக்கு இவ்வாறு அளிக்கப்பட்ட சலுகையின் காரணமாக வருடந்தோறும் தபால் தந்தி துறையில் ரூ. 10,000மும் சர்க்கார் பராமரிக்கும் ரயில்வேக்களில் 75,000மும் கம்பெனி பராமரிக்கும் ரெயில்வேக்களில் ரூ. 75,000மும் அரசுக் கருவூலத்திலிருந்து செலவிட வேண்டி வந்தது. மொத்தத்தில் ரூ. 1,50,000.

ஆங்கிலோ-இந்தியர்கள் போட்டிகளில் வெற்றிபெற உதவும் முறையில் தந்தி இலாகாத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் வெற்றி

பெறுவதற்கான மதிப்பெண் 50லிருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டது. மொத்தத்தில் 66 சதவிகிதத்திலிருந்து 60 ஆகக் குறைக்கப்பட்டது.

61. இந்தியர்களை விட மேலும் பல சலுகைகளை ஆங்கிலோ- இந்தியர்கள் பெறுவதற்கு ஸ்டூவர்ட் குழு இதர பல பரிந்துரைகளையும் செய்தது. இந்தக் கோரிக்கை மனுவை மேலும் பெரியதாக ஆக்க விரும்பாததால் அவற்றை நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் இடையே எடுக்கப்பட்ட நிலையிலுள்ள தெளிவான வித்தியாசத்தை எடுத்துக்காட்டவே அக்கறை கொண்டுள்ளேன். முந்தியவர்களுக்குக் காட்டப்பட்ட சலுகையும் பிந்தியவர்கள்பால் காட்டப்பட்ட புறக்கணிப்பும் மிகத் துலாம்பரமாக தெரிகின்றன. இந்த வேறுபாட்டை எதனைக் கொண்டு நியாயப்படுத்த முடியும்? என் அபிப்பிராயத்தில் எதுவுமில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உதவ மத்திய அரசு எவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கிறதோ அந்த அளவுக்கு நல்ல சர்க்கார் என்ற பெயரை அது எடுக்கும். ஆங்கிலோ-இந்தியர்களை உயர்த்த வருடத்திற்கு 1,5000ஐ உற்சாகத்துடன் ஏற்றுக் கொள்ளும். ஒரு சர்க்கார், அதற்கு மனமிருந்தால் தாழ்த்தப்பட்ட சாதியினருக்காக ஒரு சில லட்சங்களையாவது செலவிட முடியும்.

# பகுதி II

## அதிகார மாற்றம் சம்பந்தமான

## முக்கிய கடிதப் போக்குவரத்து

# 1

## [1]சர் எஸ். கிரிப்சின் குறிப்புகள்

*எல்ஜேபி & ஜேஐ 1014: எப்எப் 51-2*

### தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகளான டாக்டர் அம்பேத்கர் மற்றும் திரு. ராஜாவுடன் நேர்காணல்

*மார்ச் 30, 1942*

இந்தியாவில் அதிலும் குறிப்பாக மதராசிலும் பம்பாயிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலைமையை என்னிடம் அவர்கள் எடுத்துரைத்தனர். பின்னர், தற்போதைய தேர்தல் முறையின்படி அரசியல் நிர்ணய சபையில் தங்களுக்கு மிகக் குறைந்த பிரதிநிதித் துவமே கிட்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர்; தங்கள் பிரதிநிதி கள் எனப்படுவோரில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்களாக இருப் பதே இதற்குக் காரணம் என்றும், இதனால் தங்கள் நிலைமை பெரிதும் பலவீனமாக இருக்கும் என்றும் தெரிவித்தனர். அரசியல் நிர்ணயசபையில் தாங்கள் சமர்ப்பிக்கவிருக்கும் கோரிக்கைகளைச் சுருக்கமாகக் கூறினர். அடுத்து, வருண, மத சிறுபான்மையினராக எங்களை நீங்கள் கருதுவீர்களா என்றும் கேட்டனர். 'ஆம்' என்று இதற்குப் பதிலளித்தேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பாதுகாப்புக் காக ஒப்பந்தத்தில் எவ்வகையான ஷரத்துகள் இடம் பெறக்கூடும் என்றும் வினவினர். இதற்குப் பின்வருமாறு பதிலளித்தேன்: இந்த ஷரத்துகள் சர்வதேச சங்கத்தின் சிறுபான்மையினரின் ஒப்பந்தங் களில் காணப்படும் ஷரத்துகளின் அடிப்படையில் அமைந்திருக்கக் கூடும்; அரசியலமைப்புச் சட்டத்தில் இது சம்பந்தமாக ஏற்கெனவே விசேட ஷரத்துகள் இருக்குமாயின் ஒப்பந்தத்தில் அவை அப்படியே

1. அதிகார மாற்றம் பிரதம ஆசிரியர் நிக்கொலஸ் மான்செர்க்; மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசின் ஏட்டுப் பதிவுரிமை நிறுவனம், லண்டன், 1970; தொகுதி I, எண் 442, பக்கங்கள் 552-553.

இடம் பெறும்; இதில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமானால் இப்பிரச்சினை ஒரு நிபுணர் குழுவின் பரிசீலனைக்கு விடப்படும்; இந்திய ஒன்றிய அரசாங்கம் இக்குழுவின் முடிவை ஏற்றுச் செயல்படுத்தக் கடமைப்பட்டுள்ளது; அவ்வாறு செய்யவில்லை எனில் அது ஒப்பந்தத்தை மீறிய செயலாகக் கருதப்படும்; இதன் பேரில் அந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைமைகளுக்கு உகந்த நடவடிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொள்ளும். இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கை போதுமானதல்ல என்று அவர்களுக்குத் தோன்றக்கூடும் என்பதில் ஐயமில்லை; எனினும் இந்தியாவில் எந்த ஒரு சிறுபான்மையினரையும் பாதுகாப்பதற்கு நாங்கள் தலையிட இதைத் தவிர வேறு வழியேதும் இல்லை என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

இடைக்காலத்தைப் பொறுத்தவரையில், மத்தியில் அமைக்கப்படும் நிர்வாகக் கவுன்சிலில் பணியாற்றுமாறு தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சில பிரதிநிதிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்; மாகாண அரசாங்கங்கள் செயல்படுவது சம்பந்தமாக சில தாற்காலிக ஏற்பாடுகளை மேற்கொள்வது இந்த நிர்வாகக் குழுவின் முதல் பணிகளில் ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

பிரதான சக்திகளில் ஒன்றாகத் தாங்கள் கருதப்பட வேண்டும், புதிய நிர்வாகக் குழுவை அமைக்கும்போது வைசிராய் தங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற கருத்தினை திரு. அம்பேத்கர் வெளியிட்டார். இது நான் சம்பந்தப்பட்ட விஷயமல்ல, இது விஷயத்தில் யாரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதை வைசிராய் தான் முடிவெடுப்பார் என்று தெரிவித்தேன்.

நிலைமை குறித்து அவர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடையாதது முற்றிலும் இயல்பே. எனினும் இத்திட்டத்தை அவர்கள் எதிர்ப்பார்கள் என்று நான் கருதவில்லை; ஏனென்றால் இதைவிட அவர்களுக்கு அதிகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய மாற்று ஏற்பாடு வேறு எதுவும் இல்லை.

□□□

# 2

## [1]சர் எஸ். கிரிப்ஸுக்கு டாக்டர் அம்பேத்கரும் திரு. ராஜாவும் எழுதிய கடிதம்[2]

*சிஎம்டி 6350*

*ஏப்ரல் 1, 1942*

இந்தியாவின் அரசியலமைப்பு சம்பந்தமாக மன்னர் பிரான் அரசாங்கம் வெளியிட்டுள்ள பிரேரணைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஏற்புடையவை அல்ல என்பதை மார்ச் 30 ஆம் தேதி[3] தங்களைச் சந்தித்தபோது தங்களிடம் கூறினோம்; இதற்கான காரணங்களையும் அந்த நேர்காணலில் உங்கள் முன்வைத்தோம். இதன் பின்னர் பல்வேறு மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பல பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்தோம். இந்தப் பிரேரணைகள் சம்பந்தமாக தங்களிடம் நாங்கள் தெரிவித்த கருத்தையே அவர்கள் அனைவரும் ஒருமனதாக உறுதி செய்தனர்.

இந்தப் பிரேரணைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மிகப் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியவை, மிகக் கடுமையான, கொடூரமான இந்து ஆட்சியின் கீழ், ஆதிக்கத்தின் கீழ் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை. துயர் மிக்க, இருள் படிந்த கடந்த காலத்துக்கு மீண்டும் எங்களை இட்டுச் செல்லும் இத்தகைய பயங்கர விளைவை நாங்கள் ஒரு போதும் சகித்துக் கொள்ள மாட்டோம்; இப்படிப்பட்ட பெருங் கேட்டை, அவலத்தை எங்கள் சக்தி முழுவதையும் கொண்டு எதிர்ப்பதற்கு நாங்கள் திட உறுதி கொண்டுள்ளோம்.

---

1. *அதிகார மாற்றம், தொகுதி I, எண் 487, பக்கம் 603.*
2. *இந்த கடிதத்தின் வாசகம் ஏப்ரல் 18 ஆம் தேதியிட்ட 207-எஸ்.சி. தந்தியின் மூலம் திரு. அமெரிக்கு லின்லித்கோ பிரபுவால் அனுப்பப்பட்டது. எம்.எஸ்.எஸ்., இயூஆர்-எஃப். 125/22*
3. *எண். 442.*

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எதிர்காலம் சம்பந்தமாக நாங்கள் கொண்டுள்ள ஆழ்ந்த கவலையை, பெருத்த அச்சத்தை மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசாங்கத்துக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாங்களே முன்வந்து ஏற்காத, அவர்களது பாதுகாப்புக்கு அவசியமான விதிமுறைகளைத் தன்னுள் கொண்டிராத ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை அவர்கள் மீது திணிக்க மன்னர் பிரான் அரசாங்கம் முடிவு செய்யுமானால் அதனை நம்பிக்கைத் துரோகமாகவே நாங்கள் கருதுவோம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறோம், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒரு சிறு கட்சியினராக மன்னர் பிரான் அரசாங்கம் கருதவில்லை என்னும் எண்ணத்தை எங்களிடம் தோற்றுவித்தமைக்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம் - இதுகுறித்து எங்களிடம் ஓரளவு ஐயம் இருந்தது என்பதும், எங்கள் நிலைமை குறித்த ஒரு சரியான விளக்கத்தைத் தங்களிடம் கேட்டிருந்தோம் என்பதும் தங்களுக்கு நினைவிருக்கும்.

# 3

## லின்லித்கோ கோமானுக்கு சர் ஆர். லும்லே (பம்பாய்) எழுதிய கடிதம் (ஒரு பகுதி)[1]

எம்.எஸ்.எஸ். இயூஆர்.எஃப். 125/56

**இரகசியம்**

அரசினர் மாளிகை, பம்பாய்,
ஏப்ரல் 24, 1942

அறிக்கை எண். 104

**சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் தூதுக்குழுத் தோல்வியின் எதிரொலிகள்:**

சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்து போனது குறித்து மக்களின் அபிப்பிராயத்தைத் துல்லியமாக எடை போடுவது எப்போதும் போலவே இப்போதும் எளிதல்ல. எனினும் சீர்குலைவையோ, எத்தகைய கசப்பு உணர்வையோ நான் காண வில்லை. ஒன்று மட்டும் இதற்கு விதிவிலக்கு. அதைப் பற்றிப் பின்னால் கூறுகிறேன். கிரிப்ஸின் யோசனைகள் ஏற்கப்படவில்லை யாயினும், குறிப்பாக முன்னர் நமது பரம வைரிகளாக இருந்தவர் களிடம் ஒட்டுமொத்தத்தில் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தி இருக் கிறது என்றே கருதுகிறேன். நமது இறுதி நோக்கங்கள் குறித்து எப்போதும் ஐயப்பாடுகள் கொள்வோரிடையே, பெருமளவுக்கு நல்லெண்ணம் நிலவுகிறது என்று நம்பகமான ஒருவரிடமிருந்து எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்த வகையில் நகல் பிரகடனம் மிகப் பலரைத் திருப்திப்படுத்தியிருக்கிறது என்றே கூற வேண்டும். எதிர்கால அரசியலமைப்பு குறித்து விவாதிப்பதற்கு முஸ்லீம் லீகின் சம்மதத்தைப் பெற இப்போது பதவியேற்காதிருப்பதே ஒரே வழி என்று விஷயம் அறிந்த காங்கிரஸ் வட்டாரத்தின் கருத்து என்றும் கேள்விப்படுகிறேன். இந்தக் கருத்துக்கு ஸ்தல காங்கிரஸ்காரர் களிடையே நல்ல ஆதரவு இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இதை அவர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தத் தயாராக இல்லை.

---

1. அதிகார மாற்றம், தொகுதி I, எண் 684, பக்கங்கள் 846-47.

கிரிப்ஸின் யோசனைகள் இந்தியாவைப் பிளவுபடுத்த வழிவகுக்கும் என்ற அடிப்படையில் தேசிய செய்திப் பத்திரிகைகள் பிரதானமாக அவற்றைக் கண்டித்துள்ளன.

இங்குள்ள முஸ்லீம்கள் பகிரங்கமாக அறிக்கைகள் எவற்றையும் வெளியிடவில்லை. ஆனால் பெரும்பாலான முஸ்லீம் செய்திப் பத்திரிகைகள் பேச்சுவார்த்தைகளின் பலன்களைப் பற்றித் திருப்தி தெரிவித்திருப்பதாகத் தோன்றுகிறது. இதற்கு அவை பின்கண்ட இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டிருக்கின்றன: முதலாவதாக, முஸ்லீம்கள் அஞ்சியதைப் போல் அவர்கள் கைவிடப்படவில்லை; இரண்டாவதாக, காங்கிரசின் முரட்டுப் பிடிவாதம்தான் உடன்பாடு ஏற்படுவதற்கு உண்மையில் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதைக் காணும்படி இது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கண்களைத் திறந்துவிட்டிருக்கிறது. காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வராதது குறித்து பார்ஸிகள் தற்காலிகமாகவாவது பொதுவாக நிம்மதி அடைந்திருப்பதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

நான் முன்னரே குறிப்பிட்டது போன்று இதில் ஒரு விதிவிலக்கானவர் அம்பேத்கர். தேசிய போர்முனை அமைப்பது குறித்து விவாதிப்பதற்காக என்னைக் காண அவர் வந்திருந்தார். உற்சாகம் ஏதுமின்றி இதற்கு ஆதரவளிக்க உடன்பட்ட போதிலும், நகல் பிரகடனம் பற்றி தமது கடும் மனக் கொதிப்பை வெளியிட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். காங்கிரசும் முஸ்லீம் லீகும் தான் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய அமைப்புகள் என்றும், அவை கிரிப்ஸ் யோசனைகளை ஏற்றுக் கொண்டால் போதும், மற்றபடி தாமோ அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினரோ அந்த யோசனைகளைப் பற்றி எத்தகைய கருத்து கொண்டிருந்தாலும் அதைப் பற்றி கவலை இல்லை என்றும் கிட்டத்தட்ட தம்மிடம் கூறப்பட்டதாக அவர் தமது மனக்குமுறலைக் கொட்டினார். இது தம்மைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது என்றும், தம்மை வெகுவாக இழிவுபடுத்திவிட்டது என்றும் வருத்தப்பட்டார். இந்த யோசனைகள் ஆகஸ்டு பிரகடனத்தை மறுதலிப்பதாக இருக்கின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார். ஐரிஷ் ஒப்பந்த உதாரணம் தம் முன்னே இருப்பதாகவும், அதனைப் படிப்பினையாகக் கொண்டு பார்க்கும்போது, ஓர் ஒப்பந்தத்தின் மூலம் சிறுபான்மையினரைப் பாதுகாக்க முடியும் என்பது பெரிய கேலிக் கூத்து என்றும் அவர் கூறினார். இவ்வாறு தாங்கள் கைவிடப்

படும்போது தாமும் தம்முடைய நண்பர்களும் அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ஆதரவளிப்போம் என்று எவ்விதம் எதிர்பார்க்க முடியும் என்று அவர் வினவினார். தேசியப் பாதுகாப்புச் சபை யிலிருந்து விலகி விடலாம் என்றுகூட அவர் நினைத்தது உண்டு. எனினும் இப்போதைக்குத் தொடர்ந்து அதில் நீடிப்பதெனத் தீர் மானித்தார். ஆனால் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் அவர் எத்தகைய உற்சாகமும் காட்டுவார் என்று எதிர்பார்க்க முடியாது. என்னால் முடிந்தளவு அவரைச் சமாதானப்படுத்த முயன்றேன். ஆனால் இந்த முயற்சியில் வெற்றி பெற்றேன் என்று கூற முடியாது. இந்த மனநிறைவில்லாத போக்கு அம்பேத்கரிடம் நீண்ட கால மாகவே குடிகொண்டு வந்திருப்பதைக் கவனித்திருக்கிறேன்; அதிலும் நீங்கள் நிர்வாக சபையை விஸ்தரித்தபோது அதில் தனக்கு இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார், அவ்வாறு அவர் எதிர்பார்த்தபடி கிடைக்காதது முதலே இந்தப் போக்கு அவரிடம் காணப்படுகிறது. இந்த மாகாணத்தில் தம்முடைய ஆதரவாளர் களிடையே தமது கருத்துகளுக்கு அவர் ஓரளவு ஆதரவு திரட்ட முடியும் என்றே எதிர்பார்க்கிறேன்; ஏனென்றால் அவர்களைப் பற்றிச் சிந்திக்கும் அவர்களிடையே உள்ள ஒரே மனிதர் அவர் தான். எனினும் அவரது மனக்குறைக்கு அவரது சொந்த விவகாரமே பெரும்பாலும் காரணம் என்பதில் எனக்கு எத்தகைய ஐயமும் இல்லை. அவருடைய பொருளாதார நிலைமை சிறிது கால மாகவே அவரை அலைக்கழித்து வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். கடந்த காலத்தில் அவருக்கு உதவி செய்த சிலருக்கு அவர் பணம் தர வேண்டியிருந்தது என்று நினைக்கிறேன்; அதனைத் திருப்பித்தர அவரால் இயலவில்லை; இத்தகைய நிலைமை யில் இந்த விஷயத்தை அவர்கள் பிரஸ்தாபித்தாலே அவர்கள் மீது எரிந்து விழுவதாகத் தோன்றுகிறது. உயர்நீதிமன்றத்திலோ அல்லது வேறு இடத்திலோ தமது தகுதிக்கேற்ற பதவி பெற்று தமது எதிர் காலத்தை நிர்ணயித்துக் கொள்ள சிறிது காலமாகவே அவர் ஆவலாக இருந்து வருகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். தம்மைப் பின்பற்று பவர்களுக்காகப் பாடுபடுவதில் உண்மையில் ஆர்வமில்லாத, மாறாக வேறு ஏதேனும் துறையைத் தேர்ந்தெடுப்பதில் நாட்டம் கொண்ட ஒரு மனிதராகவே சில சமயங்களில் எனக்குக் காணப்பட்டு வந்திருக் கிறார். தாம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பது தமது துன்ப துயரங்களுக்கு எல்லாம் காரணம் என்று அவர் நினைக்

கிறார்; தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஆதரவைப் பெறுவதால் எந்தப் பலனும் இல்லை என்று நாம் நினைப்பதாலேயே அவரை நாம் உதாசீனம் செய்கிறோம் என்றும் துரதிருஷ்டவசமாக அவர் கருது கிறார். இத்தகைய நிலைமையில் அவருக்கு நாம் ஏதேனும் செய்ய வேண்டும் என்று நான் பெரிதும் உணர்கிறேன்; உங்களுடைய நிர்வாக சபையை விரிவுபடுத்துவது இப்போது சாத்தியமானால், அவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்று நம்புகிறேன்; இதனை அவருக்காக தனிப்பட்ட முறையில் செய்வதாக மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் செய்வதாக நாம் கருத வேண்டும். மகர்களை படைகளில் சேர்க்க வேண்டும் என்று அவர் நீண்டகாலமாகவே ஆர்ப்பரித்து வந்திருக் கிறார்; அப்படியிருந்தும் அவர்களைப் படைகளுக்கு அணிதிரட்டு வதில் இப்போது அவர் அத்தனை உதவிகரமாக இல்லை; இதில் அவர் தமது செல்வாக்கைப் போதிய அளவுக்குப் பிரயோகிக்க வில்லை. இருப்பினும் மகர்களை படைகளுக்குத் திரட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது; ஆனால் இதில் அவர் உண்மை யில் ஆர்வம் காட்டினால் எவ்வாறு நடைபெறுமோ அவ்வாறு நடைபெறவில்லை.

அம்பேத்கர் காட்டும் கசப்பு உணர்வு ஒருபுறமிருக்க, கிரிப்ஸ் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததால் நமது நிலைமை அப்படி ஒன்றும் மோசமாகி விடவில்லை என்றே கருதுகிறேன்; ஒட்டு மொத்தத்தில் நமக்கு ஓரளவு ஆதாயம் கிட்டியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

# 4

## கிரிப்ஸ் திட்டம்[1]

### மாண்புமிகு சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சமர்ப்பித்த அரசியலமைப்புச் சட்ட யோசனைகளின் வாசகம்

இந்தியாவின் எதிர்காலம் சம்பந்தமாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதது குறித்து இந்த நாட்டிலும் இந்தியாவிலும் தெரிவிக்கப்பட்டுள்ள கவலைகளை மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் கருத்தில்கொண்டு, இந்தியாவில் கூடிய விரைவில் சுயாட்சியை ஏற்படுத்துவதற்கு தாங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு புதிய இந்தியக் கூட்டரசை உருவாக்குவதே எமது குறிக்கோள். மன்னர்பால் கொண்ட பொது விசுவாசத்தால் பிரிட்டனும் இதர குடியேற்ற நாடுகளுடன் இணைந்த ஒரு குடியேற்ற நாடாக இந்தியா அமைந்திருக்கும்; எல்லா அம்சங்களிலும் அவற்றுக்குச் சமமாக அது திகழும்; தனது உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் அது எவ்வகையிலும் யாருக்கும் கீழ்ப்பட்டதாக இருக்காது.

எனவே, மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் பின்கண்ட பிரகடனத்தை வெளியிடுகிறது:-

(அ) போர் நடவடிக்கை முடிந்த உடனேயே கீழ்க்கண்ட துறையில் இந்தியாவுக்கு ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கும் கடமை வழங்கப்பட்ட ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பை பின்வருமாறு விளக்கப்பட்ட விதத்தில் இந்தியாவில் நிறுவ நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்:

(ஆ) அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் அமைப்பில் சமஸ்தானங்கள் பின்கண்ட விதத்தில் பங்கெடுத்துக் கொள்ள வகை செய்யப்படும்.

---

1. *1942 ஜுலை 18, 19, 20 தேதிகளில் நாகபுரியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மாநாட்டின் அறிக்கை, பக்கங்கள் 98-99.*

(இ) இவ்வாறு வகுத்தளிக்கப்படும் அரசியலமைப்புச் சட்டத்தை கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி ஏற்கவும் உடனடியாக அதனைச் செயல்படுத்தவும் மன்னர்பிரான் அரசு சம்மதிக்கின்றது:-

(1) புதிய அரசியலமைப்பை ஏற்கத் தயாராக இல்லாத பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த எந்த ஒரு மாகாணமும் தனது இப்போதைய அரசியல் சட்டரீதியான நிலையைத் தக்கவைத்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும்; அது விரும்பினால் பின்னர் சேருவதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

இவ்விதம் புதிய அரசியலமைப்பில் சேராத மாகாணங்கள் விரும்பும் பட்சத்தில் இந்தியக் கூட்டரசுக்குள்ள அதே அந்தஸ்தை அளிக்கக்கூடிய ஒரு புதிய அரசியலமைப்பை அவை உருவாக்கிக் கொள்வதற்கு மன்னர் பிரான் அரசு சம்மதிக்கும்; கீழ்க்கண்ட ஒத்த நடைமுறைகள் இது விஷயத்தில் பின்பற்றப்படும்.

(2) மன்னர் பிரான் அரசும் அரசியலமைப்பை உருவாக்கும் அமைப்பும் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும். பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர் கைகளுக்கு பொறுப்பை முற்றிலுமாக மாற்றுவதால் எழக்கூடிய எல்லா முக்கிய விஷயங்களும் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கும்; மன்னர்பிரான் அரசு அளித்த வாக்குறுதிகளுக்கு இணங்க இன மற்றும் சமய சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு ஒப்பந்தத்தில் வகை செய்யப்படும்; ஆனால் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் இதர உறுப்பு நாடுகளுடனான தனது உறவை எதிர்காலத்தில் தீர்மானிக்கும் விஷயத்தில் இந்தியக் கூட்டரசுக்குள்ள அதிகாரம் எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படமாட்டாது.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தைப் பின்பற்ற ஓர் இந்திய சமஸ்தானம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதனுடனான ஒப்பந்த ஏற்பாடுகளைத் திருத்தியமைப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்; ஏனென்றால் புதிய அரசியலமைப்பில் இவ்வாறு செய்வது அவசியமாகலாம்.

(ஈ) பிரதான சமூகங்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் தலைவர்கள் போர் முடிவடைதற்குள் வேறு ஏதேனும் ஏற்பாடு குறித்து ஓர் உடன்பாட்டுக்கு வந்தாலொழிய அரசியலமைப்பை உருவாக்கும் அமைப்பு பின்கண்டவாறு அமைந்திருக்கும்:

போர் முடிவில் மாகாண சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவது அவசியமாகக் கூடும்; அவ்வாறு தேர்தல்கள் நடைபெற்று முடிவுகள் தெரியவந்த உடனேயே மாகாண சட்டமன்றங்களின் கீழ்ச்சபைகளது உறுப்பினர்கள் அனைவரும் அடங்கிய ஒரு தேர்தல் குழுமம் அமைக்கப்படும்; அந்தக் குழுமம் மாகாண பிரதிநிதித்துவ அடிப்படையில் அரசியலமைப்பை உருவாக்கும் அமைப்பினைத் தேர்ந்தெடுக்கும். இந்தப் புதிய அமைப்பின் உறுப்பினர்கள் எண்ணிக்கை தேர்தல் குழுமத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்காக இருக்கும்.

இந்திய சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் விஷயத்தில் போன்றே அவற்றின் மொத்த மக்கட்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படும்.

(உ) தற்போது இந்தியாவை எதிர்நோக்கும் நெருக்கடியான கட்டத்தின்போதும், புதிய அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்படும் வரையிலும் மன்னர்பிரான் அரசு தனது உலகப்போர் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பையும், அதற்கான கட்டுப்பாட்டையும் திசைவழியையும் தன்னிடமே வைத்துக்கொள்ளும் பொறுப்பையும் தவிர்க்கமுடியாதபடி ஏற்க வேண்டும்; ஆனால் இந்தியாவின் ராணுவ, தார்மிக, பொருளாயத ஒத்துழைப்புடன். இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும். இந்திய மக்களின் பிரதான பகுதியினரது தலைவர்கள் தங்கள் நாட்டின், காமன்வெல்த்தின், ஐக்கிய நாடுகளின் கலந்தாலோசனையில் உடனடியாகவும் பயனுறுதியுள்ள முறையிலும் பங்கு கொள்ள வேண்டும் என்று மன்னர் பிரான் அரசு விரும்புகிறது, வேண்டுகிறது. எதிர்காலத்தில் இந்தியாவின் சுதந்திரத்திற்கு உயிர்நாடியான, இன்றியமையாத ஒரு பணியை நிறைவேற்றுவதில் இதன் மூலம் அவர்கள் தங்களது செயலூக்கமிக்க, ஆக்கப்பூர்வமான உதவியை செய்தவர்களாவார்கள்.

# 5

## கிரிப்ஸ் திட்டம் பற்றி டாக்டர் அம்பேத்கர் அறிக்கை[1]

சட்டமன்ற உறுப்பினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவருமான டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பத்திரிகைகளில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அது வருமாறு:

''யுத்த மந்திரிசபையின் யோசனைகள் மன்னர் பிரான் அரசாங்கத்திடம் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றத்தைக் காட்டுகின்றன. சிறுபான்மையினரின் உரிமைகள் மீது படையெடுப்பு என்று அவர்களே கண்டித்த யோசனைகளை இப்போது முன்வைத்திருப்பது வலிமை பெறுவதற்கு நேர்மையை அறவே பலிகொடுக்கப்பட்டிருப்பதையே புலப்படுத்துகிறது. இதனை மூனிச் மனோபாவம் எனக் கூறலாம்; மற்றவர்களைப் பலி கொடுத்து ; தங்களைக் காப்பாற்றிக் கொள்வதுதான் இந்த மனோபாவத்தின் சாராம்சம். இந்த மனோபாவம்தான் இந்த யோசனைகளில் மேலோங்கியிருப்பதைக் காண்கிறோம். புதிய அரசியலமைப்பை உருவாக்கும் திசைவழியில் இந்தியா முன்னேறுவதற்கு மன்னர்பிரான் அரசு முன்வைத்த யோசனைகளை இந்தியர்கள் வரவேற்காதது குறித்தும், இதனால் சர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸின் தூது தோல்வியடைந்தது குறித்தும் அமெரிக்கர்களும் பிரிட்டிஷ் மக்களும் திகைத்துப் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. அமெரிக்கர்களை அவர்களது போக்குக்காக மன்னித்து விடலாம்; ஆனால் பிரிட்டிஷ் மக்களும் சர் ஸ்டாப்போர்டு கிரிப்சும் உண்மையை நன்கு அறிந்தவர்கள். மிகச் சிறந்த யோசனைகள் என்று கூறி மன்னர் பிரான் அரசாங்கம் இப்போது முன்வைத்துள்ள இதே யோசனைகள்தான் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் மன்னர் பிரான் அரசால் மிக மோசமானவை என்று வன்மையாகக் கண்டிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டவை என்ற உண்மை சரிவர உணரப்பட

---

★ *1942 ஜூலை 18, 19, 20 தேதிகளில் நாகபுரியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மாநாட்டின் அறிக்கை, பக்கங்கள் 100-106.*

வில்லை என்றே தோன்றுகிறது. இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மன்னர் பிரான் அரசு தனது முந்திய பிரகடனங்களுக்கு மாறாக இப்போது அரசியலமைப்புச் சட்டம் நோக்கிய முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும், திடீரென்று அதற்கான முயற்சியில் இறங்கி யிருப்பதும் மிகவும் வெட்கக்கேடானது என்று கூறவே செய்வார்கள்.

கிரிப்ஸ் யோசனைகள் மூன்று பகுதிகளைக் கொண்டவை. அவை வருமாறு:

(1) இந்தியாவுக்கு ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை உரு வாக்கித் தரும் உரிமை கொண்ட ஓர் அரசியல் நிர்ணய சபை ஏற் படுத்தப்படும். இந்த சபையில் இடம் பெறுவோரில் பெரும்பாலோர் விரும்பும் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தரும் முழு அதி காரத்தை இச்சபை பெற்றிருக்கும்;

(2) இந்தப் புதிய அரசியலமைப்பில் இந்தியாவின் தற் போதைய மாகாணங்கள் அனைத்தும் இடம்பெற மாட்டா; அந்த அரசியலமைப்புக்குக் கட்டுப்படத் தயாராக இருக்கும் மாகாணங் கள் மட்டுமே அதில் இடம்பெறும். புதிய அரசியல் அமைப்பில் சேருவதற்கோ அல்லது சேராமல் இருப்பதற்கோ மாகாணங்களுக்கு உரிமை வழங்கப்படும். இது பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். சாதாரண பெரும்பான்மையைக் கொண்டே இந்த விஷயம் முடிவு செய்யப்படும்.

(3) அரசியல் நிர்ணய சபை பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இன மற்றும் சமய சிறு பான்மையினரின் பாதுகாப்புக்கும் பந்தோபஸ்துக்கும் இந்த ஒப்பந் தத்தில் வழிவகை செய்யப்படும். இத்தகைய ஒப்பந்தம் கையெழுத் தான பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் தனது அரசுரிமையை விலக்கிக் கொள்ளும்; இதன் பிறகு, அரசியல் நிர்ணய சபை வகுத்துத் தந்த அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும்.

இதுதான் மன்னர் பிரான் அரசாங்கம் சமர்ப்பித்த திட்டத் தின் சத்தும் சாரமும். அரசியல் நிர்ணய சபை சம்பந்தமான யோசனை புதியது ஒன்றுமல்ல. போர் வெடித்ததும் அரசியல் நிர்ணய சபை சம்பந்தமான ஒரு யோசனையை காங்கிரஸ் முன்வைத்தது. காங்கிரஸ் பிரேரபித்த இந்த யோசனை அச்சமயம் மன்னர்பிரான் அரசாங் கத்தால் நிராகரிக்கப்பட்டது இங்கு கவனிக்க வேண்டிய விஷய

மாகும். அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக 1940 ஆகஸ்டு 14ஆம் தேதி காமன்ஸ் சபையில் திரு. அமெரி பின்வருமாறு கூறினார்:-

''காங்கிரஸ் தலைவர்கள்... சிறப்பு மிக்க ஒரு ஸ்தாபனத்தை, மிகவும் ஆற்றல் வாய்ந்த ஓர் அரசியல் எந்திரத்தை இந்தியாவில் உருவாக்கி இருக்கிறார்கள். அவர்கள் மட்டும் இந்திய தேசிய வாழ்க்கையின் எல்லா சக்திகளுக்காகவும் பேசுவதில் வெற்றி பெற்றிருந்தால், அவர்களது கோரிக்கைகள் என்னதான் அதிகமாக இருந்தாலும் நமது பிரச்சினை பல அம்சங்களில் இன்று எளிதானவையாக இருந்திருக்கும். அவர்கள் இன்று பிரிட்டிஷ் இந்தியாவில் எண்ணிக்கை ரீதியில் தனிப் பெரிய கட்சியாக இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த அடிப்படையில் இந்தியாவுக்காகப் பேசும் உரிமை அவர்களுக்கு இல்லை என்று இந்தியாவின் சிக்கலான தேசிய வாழ்வில் இடம் பெற்றுள்ள முக்கியமான சக்திகள் மறுக்கின்றன. இச்சக்திகள் தம்மை வெறும் எண்ணிக்கை அடிப்படையிலான சிறுபான்மையினராக அல்லாமல் எந்த எதிர்கால இந்தியக் கொள்கையிலும் தனித்தன்மை வாய்ந்த சக்திகளாகத் தம்மைக் கருத வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. இத்தகைய சக்திகளில் மாபெரும் முஸ்லீம் சமுதாயம் முன்னணியில் இருக்கிறது. பூகோள ரீதியான தொகுதிகளில் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசியல் நிர்ணய சபையால் வகுத்தளிக்கப்படும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். எந்த அரசியலமைப்புச் சட்ட விவாதங்களிலும் தங்களை ஒரு தனிச் சக்தியாகக் கருதப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். வெறும் எண்ணிக்கை அளவிலான பெரும்பான்மையினரின் செயற்பாடுகளுக்கு எதிரான ஒரு தனித்த சக்தி என்ற நிலையைத் தங்களுக்கு உத்தரவாதம் செய்யும் ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை மட்டுமே ஏற்க அவர்கள் உறுதிகொண்டுள்ளனர். ஷெட்யூல்டு வகுப்பினர் எனப்படும் ஒரு மாபெரும் அமைப்புக்கும் இது பொருந்தும். தங்கள் சார்பில் திரு. காந்தி எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும் காங்கிரசால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டும் பிரதான அமைப்பான இந்து சமுதாயத்துக்கு வெளியேதான் ஒரு சமூகம் என்ற முறையில் தாங்கள் இருந்து வருவதாக அவர்கள் உணர்கின்றனர்.''

1940 ஆகஸ்டு 8 ஆம் தேதி வைசிராய் வெளியிட்ட அறிவிப்புக்கு விளக்கம் அளித்துப் பேசுகையிலேயே திரு. அமெரி மேற்கண்டவாறு கூறினார். இந்த அறிவிப்பில் சிறுபான்மையினருக்கு மன்னர் பிரான் அரசாங்கம் சார்பில் பின்கண்ட உறுதிமொழியை அவர் அளித்தார்:

> ''இப்போது இரண்டு முக்கிய விஷயங்கள் நம்முன் எழுந்துள்ளன. இந்த இரண்டு விஷயங்கள் குறித்து தங்கள் நிலையைத் தெளிவுபடுத்தும்படி மன்னர் பிரான் அரசாங்கம் என்னைப் பணித்துள்ளது. முதல் விஷயம் எந்த எதிர்கால அரசியலமைப்புத் திட்டம் சம்பந்தமாகவும் சிறுபான்மையினரின் நிலை குறித்ததாகும்... இந்தியாவின் தேசிய வாழ்க்கையிலுள்ள பெரிய, ஆற்றல் மிக்க சக்திகள் ஏற்காத எவ்வகையான அரசாங்க அமைப்பு முறைக்கும் அவர்கள் (மன்னர் பிரான் அரசாங்கம்) இந்தியாவின் சுபிட்ச வாழ்வு, சமாதானம் சம்பந்தமாக தங்களுக்குள்ள பொறுப்புகளை, கடமைகளை மாற்றுவது பற்றி சிந்திக்க முடியாது என்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய ஓர் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி இந்த சக்திகளை நிர்ப்பந்தப்படுத்தும் எந்த முயற்சிக்கும் அவர்கள் உடந்தையாகவும் இருக்க முடியாது.''

அரசியல் நிர்ணய சபையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தமாக 1941 ஏப்ரல் 23 ஆம் தேதி பேசும்போது அமெரி பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ''இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அல்லாமல், இந்தியர்கள் தாங்களாகவே வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பு அடிப்படையில் ஓர் இந்திய அரசியலமைப்பாக இருக்க வேண்டும்; இந்திய நிலைமைகளையும் இந்தியாவின் தேவைகளையும் குறித்த இந்தியக் கண்ணோட்டத்துக்கு இணங்க அது வகுக்கப்பட வேண்டும். இதிலுள்ள ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அரசியலமைப்பும் சரி, அதனை வகுக்கும் அரசியல் நிர்ணய சபையும் சரி இந்தியாவின் தேசிய வாழ்க்கையின் பிரதான சக்திகளிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக தோன்றியவையாக இருக்க வேண்டும்.''

இவைதான் அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக மன்னர் பிரான் அரசாங்கம் தெரிவித்த கருத்துகளும், அவர்கள் அளித்த உறுதி மொழிகளுமாகும். பாகிஸ்தான் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்தவரையில், இது முஸ்லீம் லீக் முன்வைத்த கோரிக்கை. இந்த கோரிக்கையும் மன்னர் பிரான் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. இது குறித்து 1940 ஆகஸ்டு 1ல் காமன்ஸ் சபையில் திரு. அமெரி பேசும்போது குறிப்பிட்டதாவது:

''காங்கிரஸ் ராஜ்யம் அல்லது இந்து ராஜ்யம் எனப்படும் அபாயங்களுக்கு எதிரான கருத்துப்போக்கு இந்தியாவை இந்து அரசுப் பகுதி என்றும் முஸ்லீம் அரசுப் பகுதி என்றும் முற்றிலுமாகப் பிரிக்க வேண்டும் என்று முஸ்லீம்கள் தரப்பிலிருந்து கோரிக்கை முன்வைக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது. இத்தகைய கோரிக்கைக்கு ஏற்பட்டுள்ள கடும் எதிர்ப்பைப் பற்றி நான் எதுவும் கூறத் தேவையில்லை. நிரந்தரமான சிறுபான்மையினர் பிரச்சினையை அதற்குத் தீர்வு காணாமலேயே சிறு பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக அது மாற்றி விட்டது என்பதை மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.''

1941 ஏப்ரல் 23 ஆம் தேதி காமன்ஸ் சபையில் பேசும்போது இந்தப் பிரச்சினை குறித்து அமெரி பின்வருமாறு கூறினார்:-

''பாகிஸ்தான் கோரிக்கைக்கு குறுக்கே நிற்கும் மிகப் பெரும் நடைமுறை சிக்கல்களைப் பற்றி இங்கு நான் கூற வேண்டியதில்லை. இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை சீர்குலைக்கப் படுவதிலுள்ள பயங்கர அபாயங்களை எடுத்துரைப்பதற்கு 18ஆம் நூற்றாண்டைய இந்தியாவின் துயரமிக்க வரலாற்றையும் இங்கு நான் நினைவுகூர வேண்டியதில்லை; இன்று நம் கண்முன்னேயே காணும் பால்கன் நாடுகளின் கசப்பான அனுபவத்தை நான் எடுத்துரைக்க வேண்டியதில்லை. இந்த வகையில் பார்க்கும்போது, இந்திய நாட்டுக்கு நாங்கள் அளித்துள்ள ஒற்றுமைதான் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மிகப் பெரிய சாதனையாகத் திகழ்கிறது. அதற்காக நாங்கள் பெருமிதமடைகிறோம்.''

அரசியல் நிர்ணய சபை குறித்தும், பாகிஸ்தான் குறித்தும் ஓராண்டுக்கு முன்னர் வரைகூட மன்னர்பிரான் அரசாங்கம் இத்தகைய கருத்துக்களைத்தான் கொண்டிருந்தது.

அப்படியிருக்க இப்போது அரசியல் நிர்ணய சபையை அமைப்பது சம்பந்தப்பட்ட யோசனையை முன்வைத்திருப்பது காங்கிரஸைத் திருப்திபடுத்துவதற்காகவும், பாகிஸ்தான் சம்பந்தப் பட்ட யோசனை முஸ்லீம் லீகை திருப்திப்படுத்துவதற்காகவும் தான் என்பது தெளிவு. சரி, இனி தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை என்ன? இரத்தினச் சுருக்கமாகக் கூறினால் அவர்கள் கைகளும் கால்களும் கட்டப்பட்டு சாதி இந்துக்களிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கின்றனர். இந்துக்கள் அவர்களுக்கு ரொட்டிக்குப் பதிலாக கல்லைத் தருகின்றனர். அரசியல் நிர்ணய சபை என்பது தாழ்த்தப் பட்ட வகுப்பினரைப் பொறுத்தவரையில் ஓர் ஏமாற்று வித்தையே ஆகும். அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை பற்றி எந்த சந்தேகமும் இல்லை; அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் பிரதிநிதிகள் எவரும் இருக்க மாட்டார்கள்; ஏனென்றால் இதற்கு வகுப்புவாரி ஒதுக்கீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அப்படியே தாழ்த்தப்பட்ட இனத் தோரின் பிரதிநிதிகள் இடம் பெற்றாலும் அவர்கள் எத்தகைய நிர்ப்பந்தமுமின்றி, சுதந்திரமாகவும், தீர்மானமாகவும் வாக்களிக்க முடியாது. ஏனென்றால், முதலாவதாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் மிகவும் சிறுபான்மை யினர்களாக இருப்பார்கள். இரண்டாவதாக, அரசியல் நிர்ணய சபையின் எல்லா முடிவுகளும் ஏகமனதான வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும் என்ப தில்லை. எந்த ஒரு பிரச்சினையும் அது எத்தனை அரசியல் சட்ட ரீதியானதாக இருந்தாலும் அதுபற்றி முடிவு எடுப்பதற்கு பெரும் பான்மை வாக்குகள் இருந்தாலே போதும். இத்தகைய நிலைமை யில் அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குரல் எடுபடாது என்பது தெளிவு. மூன்றாவதாக, மன்னர் பிரான் அரசு தெரிவித்துள்ள யோசனைகளின்படி, அரசியல் நிர்ணய சபைக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கும் இப்போதைய முறை அரசியல் நிர்ணய சபைக்கு தாழ்த்தப்பட்ட இனப் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமையை சாதி இந்துக்களுக்கு வழங்குகிறது. இத்தகைய தாழ்த்தப் பட்ட இனப் பிரதிநிதிகள் சாதி இந்துக்களின் கைக்கூலிகளாகவே இருப்பார்கள். நான்காவதாக, அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் காரர்களே பெரும் எண்ணிக்கையில் இருப்பார்கள்; அவர்கள்தான் ஆதிக்கம் செலுத்தும் பெரும்பான்மை கட்சியினராக இருப்பார்கள்; இதனால் அச்சபையில் தங்கள் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வர்களாக இருப்பார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சமூக முன் னேற்றத்துக்குப் பாடுபட்டு வருபவர் என்று திரு. காந்தி என்னதான்

வருணிக்கப்பட்டாலும், தாழ்த்தப்பட்டவர்கள் இந்திய தேசிய வாழ்க்கையில் ஒரு தனித்த, வேறுபட்ட சக்தியினர் என்று அரசிய லமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படுவதை அவர் முற்றிலும் எதிர்ப்பார். இத்தகைய சூழ்நிலையில், அரசியல் நிர்ணய சபையில் உள்ள பெரும்பான்மைக் கட்சியின் திட்டம் இப்போதைய அரசிய லமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப் பட்டுள்ள பாதுகாப்புகளை ஒழித்துக் கட்டிவிடும்.

அரசியல் நிர்ணய சபையின் இயல்பை உணர்ந்தவர்கள் எவரும் மன்னர் பிரான் அரசு தான் தெரிவித்துள்ள யோசனைகள் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை அநேகமாக ஓநாய்களின் முன் எறிந்து விட்டனர் என்ற முடிவுக்கே வருவர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அரசியல் சட்டப் பாதுகாப்புகளை வழங்க அரசியல் நிர்ணய சபை மறுத்துவிட்டாலும் அதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தப் பாதகமும் ஏற்பட்டு விடாது, ஏனென்றால் மன்னர் பிரான் அரசாங்கம் தனது யோசனைகளில் ஒரு நிபந்தனையைப் புகுத்தியுள்ளது. அதாவது அரசியல் நிர்ணய சபை பிரிட்டிஷ் அரசாங் கத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று நிர்ண யித்துள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாது காப்பதே இந்த முன்னெச்சரிக்கையான நடவடிக்கையின் நோக்கம் என்று சிலர் வாதிக்கலாம். இந்த ஒப்பந்த யோசனை ஐரிஷ் சிக்க லுக்குத் தீர்வு காணுவதற்கு மன்னர் பிரான் அரசு மேற்கொண்ட திட்டத்திலிருந்து கடன் வாங்கப்பட்டதாகவே தோன்றுகிறது. மன்னர் பிரான் அரசு எத்தகைய பாதுகாப்புகளை இந்த ஒப்பந்தத்தில் சேர்க் கும் என்பது பற்றி இந்த ஒப்பந்த யோசனை எதுவும் கூறவில்லை. இது ஒரு முக்கியமான விஷயம், ஏனென்றால் புதிய அரசியலமைப் பின்படி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான அரசியல் பாதுகாப்புகளின் தன்மை, எண்ணிக்கை, அவற்றைக் கையாளும் முறை போன்ற விஷயங்களில் மன்னர் பிரான் அரசுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு எழக்கூடும்.

இரண்டாவது முக்கியமான விஷயம் இந்த ஒப்பந்தத்திற்கு ஆதார பிரமாணமாக இருக்கப்போவது என்ன என்பதாகும். இந்த ஒப்பந்தம் அரசியல் நிர்ணய சபை வகுத்துத்தரும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இருக்குமா? ஒப்பந்தத்துக்கு முரணாக அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருக்கும் எந்த விதியும் செல்லுபடியற்றதாக ஆக்கப்படுமா? அல்லது இந்த ஒப்பந்தம்

இரண்டு அரசாங்கங்களுக்கிடையேயான அதாவது இந்திய தேசிய அரசாங்கத்துக்கும் மன்னர் பிரான் அரசாங்கத்துக்கும் இடையேயான வெறும் சம்பிரதாயபூர்வமான ஒப்பந்தமாக மட்டுமே இருக்குமா? இந்த ஒப்பந்தம் முதலில் கூறிய வகையைச் சேர்ந்ததாக இருக்கு மாயின் அது நாட்டின் சட்டமாக இருக்கும், இந்திய அரசாங்கத்தின் சட்ட இசைவாணை அதற்கு ஆதார அடிப்படையாக இருக்கும். இவ்வாறின்றி, இந்த ஒப்பந்தம் இரண்டாவது வகையைச் சேர்ந்ததாக இருக்குமாயின் அது நாட்டின் சட்டமாக இருக்க முடியாது, அதற்கு எவ்வித சட்ட வலுவும் இருக்காது என்பது தெளிவு. அதன் பிரமாணம் அரசியல் பிரமாணமாகவே இருக்கும். ஐரிஷ் சுதந்திர அரசு விஷயத் தில் நடந்தது போன்ற காரணங்களுக்காக, ஓர் ஒப்பந்தம் தேசிய அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை மீறிச் செல்ல முடியாது. இத்தகைய ஒப்பந்தத்துக்குப் பின்னாலுள்ள ஒரே இசைவாணை அரசியல் இசைவாணையே ஆகும். இத்தகைய இசை வாணையைப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் இயல்பையும் பொது மக்களின் அபிப்பிராயத்தையும் பொறுத்திருக்கும் என்பது தெளிவு.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது பின்கண்ட கேள்விகள் எழுகின்றன: (1) ஒப்பந்த விதிகளைச் செயல்படுத்துவதற்கு மன்னர் பிரான் அரசிடம் எத்தகைய வழிமுறைகள் இருக்கின்றன? (2) இரண் டாவதாக, ஒப்பந்த விதிகளின்படி நடந்து கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த மன்னர் பிரான் அரசு இந்த வழி முறைகளைப் பயன்படுத்தத் தயாராக இருக்குமா? முதல் கேள்வி யைப் பொறுத்தவரையில், ஒப்பந்தத்தை இரண்டு வகைகளில் செயல் படுத்தலாம்; படைபலத்தைப் பயன்படுத்துதல், வாணிகப் போர் நடத்துதல். படைபலத்தைப் பொறுத்தவரையில் இப்பணிக்கு இந்திய சைன்யத்தின் சேவை கிட்டாது. அது முற்றிலும் புதிய இந்திய தேசிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்படும். எனவே, ஒப்பந் தத்தை அமல்படுத்துவதற்கான இந்த வழிமுறையை மன்னர் பிரான் அரசு பயன்படுத்த முடியாது. ஒப்பந்தப்படி செயல்படுமாறு தேசிய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த மன்னர்பிரான் அரசு தனது சொந்தப் படைகளை அனுப்பும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதேபோன்று வாணிகப்போரும் சாத்தியமில்லை. இது தற்கொலைக்கு ஒப்பான கொள்கையாகும். நில ஆண்டுத் தொகைகளை வசூலிப்பது சம்பந்த மாக ஐரிஷ் குடியரசுடன் நடைபெற்ற ஐரிஷ் போர் அனுபவம் காட்டுவது என்ன? கடைக்காரர்களை ஏராளமாகக் கொண்ட ஒரு தேசம் இதை அனுமதிக்காது.

எனவே, இந்த ஒப்பந்தம் ஒரு வெத்துவேட்டாகத்தான் இருக்கப் போகிறது. இந்தியர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையில் மன்னர்பிரான் அரசாங்கம் இந்தப் பிரேரணைகளை முன் வைத்திருக்கிறது. ஆனால் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தாங்களே வன்மையாகக் கண்டித்து நிராகரித்த அதே யோசனைகள் இப்போது இந்தியர்கள் முன் ஏன் வைக்கப்படுகின்றன என்பதை மன்னர் பிரான் அரசும் சரி, சர் ஸ்டாபோர்டு கிரிப்சும் சரி எவ்வகையிலும் விளக்க வில்லை. அரசியல் நிர்ணயசபை அமைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம், ஏனென்றால் அது சிறுபான்மையினருக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் ஓர் ஏற்பாடாக இருக்கும் என்று ஓர் ஆண்டுக்கு முன்னர் மன்னர்பிரான் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் இப்போது அரசியல் நிர்ணயசபை அமைப்பதை அனுமதிப்பதற்கும் சிறுபான்மையினரை வல்லந்தப்படுத்துவதற்கும் அது தயாராக இருக்கிறது. பாகிஸ்தான் உருவாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம், ஏனென்றால் அது இந்தியாவைத் துண்டாடிவிடும் என்று ஓராண்டுக்கு முன்னர் மன்னர் பிரான் அரசாங்கம் கூறிற்று. இன்று இந்தியாவை இருகூறாகப் பிரிப்பதை அனுமதிக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் அரசாங்கம் சிறிதும் கூச்சநாச்சமின்றி கோட்பாட்டை எவ்வாறு காற்றில் பறக்க விடுகிறது என்பது தெரியவில்லை. யுத்தத்தின் விளைவாக மன்னர் பிரான் அரசாங்கம் மிகுந்த கிலி அடைந்து போயிருக்கிறது என்பதுதான் இந்தக் கேள்விக்கு விடையாக இருக்க முடியும். பிரிட்டிஷ் அரசு நம்பிக்கை இழந்துபோனதன் விளைவே இந்தப் பிரேரணைகள். காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கைகளையும் லீக் முன்வைத்த கோரிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த யோசனைகளின் மூலம் அக்கட்சிகளுக்கு அளித்துள்ள சலுகைகளை எண்ணிப் பார்த்தால் மன்னர்பிரான் அரசாங்கம் எந்த அளவுக்குப் பெரும் பீதியடைந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்தியாவுக்கான அரசியல் அமைப்புச் சட்டம் ஓர் அரசியல் நிர்ணய சபையால் சாதாரண பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கோரிற்று. ஆனால் காங்கிரசின் இந்தக் கோரிக்கை சிறுபான்மையினரை வல்லந்தப் படுத்துவதாக இருந்தால் அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உடந்தையாக இருக்காது என்று வைசிராய் அறிவித்தபோது, காங்கிரஸ் காரியக் கமிட்டி 1940 ஆகஸ்டு 22ல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றிற்று:-

''எந்த சிறுபான்மையினரையும் கட்டாயப்படுத்துவது குறித்து காங்கிரஸ் என்றுமே எண்ணியதில்லை. அவ்வாறு செய்யும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒருபோதும் வலியுறுத்தியதும் இல்லை. அவ்வாறிருக்கும்போது முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை மூலம் அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்பட வேண்டும் என்ற காங்கிரசின் கோரிக்கை ஒரு நிர்ப்பந்த நடவடிக்கையாக தவறாக சித்தரிக்கப்பட்டிருப்பதையும், சிறுபான்மையினர் பிரச்சினை இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரும் தடைக்கல்லாக ஆக்கப்பட்டிருப்பதையும் கண்டு கமிட்டி மிகவும் வருந்துகிறது.''

காரியக் கமிட்டி மேலும் கூறியதாவது:

''சிறுபான்மையினரின் உரிமைகள் அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் உடன்பாடு கண்டு முழு அளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்துகிறது.''

சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய முடிவு அரசியல் நிர்ணய சபையின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கூட கோரவில்லை என்பதையே இது காட்டுகிறது. எனினும் இந்த சிறுபான்மையினர் உரிமைகள் குறித்த பிரச்சினைக்கு முடிவு காணும் கூடுதல் உரிமையை மன்னர் பிரான் அரசாங்கம் அவர்களுக்கு அளித்தது. பாகிஸ்தான் பிரச்சினையிலும் இதே போக்கு கடைப்பிடிக்கப்பட்டதைக் காணலாம். பாகிஸ்தான் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்று முஸ்லீம் லீக் கோரவில்லை. முஸ்லீம் லீக் கோரியதெல்லாம் அரசியலமைப்புச் சட்டம் அடுத்தமுறை திருத்தியமைக்கப்படும்போது முசல்மான்கள் பாகிஸ்தான் பிரச்சினையை எழுப்புவதைத் தடுக்கக்கூடாது என்பதேயாகும். ஆனால் இப்போதைய யோசனைகள் மேலும் ஒருபடி மேலே சென்று, பாகிஸ்தானைத் தோற்றுவிக்கும் உரிமையை முஸ்லீம் லீகுக்கு அளித்துள்ளன. இவை அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட யோசனைகள், இந்துக்களும், முசல்மான்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும், சீக்கியர்களும் முழு மனதோடு பங்கு கொள்ளக் கூடிய ஒரு யுத்தத்துக்கு இந்தியாவை வழிநடத்திச் செல்லும் நோக்கம் கொண்டவை. அப்படியிருந்தும் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் மன்னர்

பிரான் அரசாங்கத்தின் அனுமதியுடனோ அல்லது அனுமதி இல்லாமலோ பிரதான கட்சிகளுக்கும் சிறு கட்சிகளுக்கும் இடையே பாரபட்சம் காட்டினார். எவற்றின் சம்மதம் அவசியமோ அவை பிரதான கட்சிகள் எனப்படுகின்றன; எவற்றுடன் கலந்தாலோசனை செய்வது மட்டும் போதுமானது என்று கருதப்படுகிறதோ அப்படிப்பட்ட கட்சிகள் சிறு கட்சிகள் எனப்படுகின்றன. கட்சிகளை வேறுபடுத்திக் காண்பதில் இது ஒரு புதுவகையான முறையாகும். மன்னர் பிரான் அரசாங்கமோ, வைசிராயோ தமது முந்திய அறிக்கைகளில் இதை ஒருபோதும் குறிப்பிட்டதில்லை. 'இந்தியாவின் தேசிய வாழ்க்கையில் பிரதான சக்திகளின் சம்மதம்' பற்றி அறிவிப்பு குறிப்பிட்டுள்ளது.''

தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்த வரையில், எந்த ஓர் அறிக்கையிலும் முஸ்லீம்களுக்கு தரப்பட்டுள்ள இடத்துக்குக் கீழான இடம் தரப்படுவதை நான் பார்த்ததில்லை. 1941 ஜனவரி 10 ஆம் தேதி பம்பாயில் வைசிராய் நிகழ்த்திய உரையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை முசல்மான்களுடன் இணைத்துக் கூறியிருப்பதைக் காணலாம். அவரது உரையிலிருந்து ஒரு மேற்கோளை இங்கு தருகிறேன்:

> ''சிறுபான்மையினர்கள் இடையறாது பல கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். இவர்களில் மாபெரும் முஸ்லீம் சிறுபான்மையினரையும் ஷெட்யூல்டு வகுப்பினரையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கடந்த காலத்தில் சிறுபான்மையினருக்கு பல உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களது நிலை பாதுகாக்கப்பட வேண்டும்; இந்த உத்தரவாதங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.''

ஆனால் இப்போது பரஸ்பரம் பகைமையை உண்டு பண்ணக் கூடிய வகையில் சிறுபான்மையினர் பிரித்துக் காட்டப்படுகின்றனர்; இதனால் அவர்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். அரசியலமைப்பு ரீதியில் பார்க்கும்போது நாட்டில் இது அமைதிக் கேட்டையும் விசுவாசமின்மையையுமே தோற்றுவிக்கும். ஏற்கெனவே இதர நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிவு செய்துவிட்டவர்களின் நட்பைப் பெறுவதற்காக செய்யப்படும் இந்த முயற்சியில் தங்களது உண்மையான நண்பர்களை இழக்க நேரிடும் என்பதை பிரிட்டிஷார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மன்னர்பிரான் அரசு திடீர் குட்டிக்கரணம் அடித்துள்ளதையே இந்த கிரிப்ஸ் யோசனைகள் காட்டுகின்றன. சிறுபான்மையினர் மீது தொடுக்கப்படும் படையெடுப்பு என்று தாங்களே வருணித்த அதே யோசனைகளை இப்போது முன்வைத்திருப்பது வலிமை பெறுவதற்காக நேர்மை பலியிடப்பட்டிருப்பதையே காட்டுகிறது. இது மூனிச் மனோபாவமே தவிர வேறல்ல; தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மற்றவர்களைப் பலியிடுவதே இந்த மனோபாவத்தின் சாரமாகும். இந்த மனப்போக்கே இந்த யோசனைகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. இவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நான் கூறும் யோசனையாகும். நேர்மைக்கும் நீதிக்கும் அவர்களால் போராட முடியவில்லை என்றால், தாங்கள் அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் அவர்கள் வாய்மூடி மௌனமாக இருப்பதே உசிதம். அதன் மூலம் குறைந்தபட்சம் தங்களது மரியாதையையும் கௌரவத்தையுமாவது காப்பாற்றிக் கொள்ளலாம்.

★ ★ ★

# 6

## [1]திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் தந்தி

*எம்எஸ்எஸ்.இயூஆர்.எஃப். 125/23*

*மிகவும் அவசரம்,*

இரகசியம் மற்றும் நேரடிப்பார்வை *ஜூலை 1, 1942*

எண். 1968-எஸ். எனது நேரடிப் பார்வைக்கு தாங்கள் அனுப்பிய ஜூலை 1 ஆம் தேதிய 799 எண்[2] இரகசிய தந்தி கிடைத்தது. (அ) பத்தி 4ல் ஒரு தனி அறிவிப்பாக வெளியிடவும் (ஆ) அத்துடன் பின்கண்டவாறு ஓர் அரசு அறிக்கை வெளியிடவும் விரும்புகிறேன்:-

'சர் சி.பி. ராமசாமி ஐயர், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், சர் இ.சி. பெந்தால், சர் ஜோகேந்திர சிங், சர் ஜே.பி. ஸ்ரீவஸ்தவா, சர் முகமது உஸ்மான் ஆகியோர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலது நிர்வாக சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பதை அங்கீகரிக்க மன்னர்பிரான் திருவுளங் கொள்கிறார்.'

கவர்னர் ஜெனரல் பின்வருமாறு இலாகாக்களை ஒதுக்கியிருக்கிறார்:-

ரைட் ஹானரபிள் சர் அக்பர் ஹைதரிக்குப் பதிலாக சர் சி.பி. ராமசாமி ஐயர் ''தகவல் துறை'' உறுப்பினராக இருப்பார்.

டாக்டர் ராகவேந்திர ராவுக்குப் பதிலாக சர் ஜே.பி. ஸ்ரீவஸ்தவா ''சிவில் பாதுகாப்புத்துறை'' உறுப்பினராக இருப்பார்.

''தகவல் தொடர்பு'' உறுப்பினராக இருந்த சர் ஆண்ட்ரூ க்ளோ அசாம் ஆளுநராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து சர் இ.சி. பெந்தாலும் சர் முகமது உஸ்மானும் முறையே ''யுத்தப் போக்குவரத்து'', ''அஞ்சல் மற்றும் ஒலிபரப்புத்துறை'' உறுப்பினர்களாக இருப்பர்.

---

1. அதிகார மாற்றம், தொகுதி II, எண். 211, பக்கங்கள் 300-01.
2. எண். 206

சர் பிரோஸ் கான் நூன் ''பாதுகாப்புத் துறை'' உறுப்பினராக இருப்பார்.

வாணிகத்துறை உறுப்பினராக உள்ள சர் ராமசாமி முதலியார் யுத்த அமைச்சரவையில் இந்தியாவின் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டிருப்பதால் அவரது இடத்தை திரு. என்.ஆர். சர்க்கார் பூர்த்தி செய்வார்.

கல்வி, சுகாதாரம், நிலங்கள் துறை உறுப்பினரான திரு. சர்க்காரின் இடத்தில் சர் ஜோகேந்திர சிங் நியமிக்கப்படுகிறார்.

சர் பிரோஸ் கான் நூனுக்குப் பதில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தொழிலாளர் நலத்துறை உறுப்பினராக இருப்பார்.

மேதகைய தலைமை தளபதியின் இலாகா எதிர்காலத்தில் ''யுத்த'' இலாகாவெனப் பெயர் பெறும்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புத் துறை தற்போது ஆற்றிவரும் பணிகளுக்கும், அத்துடன் ''யுத்த'' இலாகாவிலும் ''சிவில் பாதுகாப்பு'' இலாகாவில் இடம்பெறாத இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட இதர விஷயங்களுக்கும் புதிய பாதுகாப்புத்துறை உறுப்பினர் பொறுப்பாக இருப்பர்ர்.

# 7

## யுத்த அமைச்சரவையின் அறிவிப்பு டபிள்யூ.பி. (42) 283

*எல்ஜேபி & ஜே/8/510: எஃப்எஃப் 407-16*

## இந்தியாவுக்கான தூதுக்குழு குறித்த அறிக்கை பிரிவி சீல் பிரபு சமர்ப்பித்த குறிப்பு[1]

ஜூலை 6, 1942

நான் அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது இந்தியத் தலைவர்களுடன் விரிவாக விவாதம் நடத்தினேன். இந்த விவாதங்கள் பற்றி விரிவாக எடுத்துரைப்பது அதிகாரபூர்வமான ஆவணங்களைப் பராமரிப்பதற்குத் துணைபுரியும் என்பதோடு, எதிர்காலத்தில் இந்தியாவுக்குச் செல்லும் இதுபோன்ற தூதுக் குழுவினருக்கும் உதவியாக இருக்கும் என்றும் கருதுகிறேன்..

★ ★ ★

## [2](எஃப்) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

டாக்டர் அம்பேத்கரும் திரு. ராஜாவும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் என்ற முறையில் மார்ச் 30 ஆம் தேதி என்னைச் சந்தித்தனர். புனா ஒப்பந்தப்படி[3] மாகாண சட்டமன்றங்களுக்கு

---

1. அதிகார மாற்றம், தொகுதி II, எண். 227, பக்கங்கள் 336-37.

2. அதிகார மாற்றம், தொகுதி II, எண். 227, பக்கங்கள் 336-37. டாக்டர் அம்பேத்கர் சம்பந்தப்பட்ட பகுதி மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது - ஆசிரியர்

3. இந்துத் தலைவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட புனா ஒப்பந்தம் 1932 ஆகஸ்டு 4 ஆம் தேதிய வகுப்புத் தீர்ப்பை மாற்றியமைத்தது (குறிப்பு II பார்க்க). இந்த ஒப்பந்தத்தின் பிரதான நிபந்தனை வாசகங்கள் வருமாறு: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 71 இடங்களுக்குப் பதிலாக 148 இடங்கள் ஒதுக்கப்படும்; ஆனால் அவர்களது பிரதிநிதிகள் சாதி இந்து வாக்காளர்களாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு வாக்காளர்களாலும் கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; எனினும் தாழ்த்தப்பட்ட வகுப்பு வாக்காளர்கள் மட்டுமே பங்கெடுக்கக் கூடிய பூர்வாங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் நான்கு வேட்பாளர்களில் ஒருவரைத்தான் கூட்டு வாக்காளர்கள் தேர்ந்தெடுக்க முடியும்; அச்சமயம் புனா சிறையிலிருந்த காந்தியின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இந்து சமுதாயத்தின் உறுப்பினர்களாக அவர் கருதினார்; அவர்களுக்குத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுவதை எதிர்த்தார்; தமது ஆட்சேபங்களை ஏற்று வகுப்புத் தீர்ப்பு மாற்றப்பட்டாலொழிய 'சாகும் வரை' உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அச்சுறுத்தினார்; அவ்வாறே செப்டம்பர் 20 ஆம் தேதி உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்; இதன்பேரில் 1932 செப்டம்பர் 24 ஆம் தேதி புனா ஒப்பந்தம் ஏற்பட்டது; நவம்பர் 26 ஆம் தேதி மன்னர் பிரான் அரசு இதற்கு தனது ஒப்புதலை அளித்தது.

தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் இப்போதைய முறையின் பிரகாரம் அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மிகச் சிறு அளவிலான பிரதிநிதித்துவத்தையே பெறுவர். ஏனென்றால் அவர்களுடைய பிரதிநிதிகள் எனப்படுவோரில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்களாகவே இருப்பார்கள் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இன, சமய சிறுபான்மையினரில் ஒருவராக நீங்கள் கருதுகிறீர்களா என்று அவர்கள் என்னைக் கேட்டபோது, 'ஆம்' என்று பதிலளித்தேன். அவ்வாறாயின் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பாதுகாப்புக்காக ஒப்பந்தத்தில் எவ்வகையான வழிவகை ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அவர்கள் வினவினர். சர்வதேச சங்க சிறுபான்மையினர் ஒப்பந்தங்களின்படி அவை அமைந்திருக்கும் என்றும், அரசியலமைப்புச் சட்டத்தில் இவை சம்பந்தமான விசேட ஷரத்துகள் இருந்தால் அநேகமாக அவை ஒப்பந்தத்திலும் இடம்பெறும் என்றும், இது விஷயத்தில் ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்படுமானால், அது அயலார் மத்தியஸ்துக்கு விடப்படும் என்றும், அதன் தீர்ப்புக்கு இந்திய யூனியன் அரசாங்கம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் கூறினேன். இந்திய அரசாங்கம் இவ்வாறு செய்யத் தவறினால், அது ஒப்பந்தத்தை மீறிய செயலாகக் கருதப்படும், அப்போது அந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைமைகளுக்கு உகந்த நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். இத்தகைய பாதுகாப்பு போதுமானதல்ல என்று அவர்களுக்குத் தோன்றினாலும், இந்தியாவுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படும்போது இது ஒன்றுதான் சாத்தியமானது என்பதை அவர்களிடம் தெரிவித்தேன்.

மறுநாள் டாக்டர் அம்பேத்கரும் திரு. ராஜாவும் எனக்கு ஒரு கடிதம் எழுதினர்; இந்த யோசனைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உடன்பாடானவை அல்லவென்றும், இவை அவர்களை மிகக் கொடூரமான இந்துக்களது ஆட்சியின் நுகத்தடியின்கீழ் கொண்டு வரும் என்றும், அவற்றைத் தங்கள் சக்தி முழுவதையும் கொண்டு அவர்கள் எதிர்ப்பார்கள் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். தங்களது ஆழ்ந்த கவலையை மன்னர் பிரான் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கும்படி அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர்; தங்களது தன்னிச்சையான, சுதந்திரமான இணக்கத்தைப் பெறாத, தங்களது நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான வழிவகை ஏற்பாடுகளை தன்னுள் கொண்டிராத ஓர் அரசியலமைப்புச் சட்டத்தைத் தங்கள் மீது திணிக்க மன்னர் பிரான் அரசாங்கம் முற்பட்டால் அதனை நம்பிக்கை துரோகமாகவே நாங்கள் கருதுவோம் என்று மன்னர் பிரான் அரசாங்கத்திடம் எடுத்துரைக்குமாறும் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர்.

# 8

## திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் தந்தி[1]

எம்எஸ்எஸ்.இயூஆர்.எஃப்.125/23

அவசரம் புதுடில்லி, ஜூலை 23, 1942, மாலை 5.35

பெறப்பட்டது: ஜூலை 23, மாலை 5.30

எண். 2169 - எஸ். லும்லேயின் தந்தி, ஜூலை 22:-

இந்த சமயத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவது ''இந்தியாவுக்கு நம்பிக்கைத் துரோகம்'' செய்வதாகும், ''பகைவனுக்குச் சாதகம்'' செய்வதாகும் என்று அம்பேத்கர் நேற்றிரவு தமது உரையில் வன்மையாகச் சாடினார்; ''சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்க காங்கிரஸ் மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் தங்களுக்குள்ள அனைத்து சக்தியையும் ஆற்றலையும் கொண்டு எதிர்ப்பது'' எல்லா இந்தியர்களது தேசபக்தக் கடமையாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

2. சுதந்திரத் தொழிலாளர் கட்சியும் ஏனைய நேச அமைப்புகளும் எத்தகைய கொள்கை வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதை விளக்கி டில்லி செல்லுமுன்னர் தாம் ஓர் அறிக்கை வெளியிடுவதாகவும் அவர் அறிவித்தார். அந்த அறிக்கையை ஊன்றிப் படித்து, அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நெறிமுறைகளை இம்மியும் பிசகாது பின்பற்றும்படித் தமது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

1. அதிகார மாற்றம், தொகுதி II, எண். 310, பக்கங்கள் 436.

# 9

## [1]திரு. அமெரிக்கு லின்லித்கோ கோமான் தந்தி எம்எஸ்எஸ்.இயூஆர்.எஃப். 125/23

*அவசரம்* *அக்டோபர் 24, 1942*

*எண். 47-க்யூ.சி. எனது தந்தி எண். 46-க்யூ.சி*

*(அ) நிர்வாக சபை உறுப்பினர்கள் பின்கண்ட தந்தியை அனுப்பியிருந்தனர்:-*

*''இந்தப் பதவிகளுக்குத் தகுதி வாய்ந்த இந்தியர்கள் கிடைப்பது சிரமமாக இருக்கும் காரணத்தால்தான் இப்போதைய ஐரோப்பிய உறுப்பினர்களை விடாது வைத்திருக்க வேண்டியதிருக் கிறது'' என்று காமான்ஸ் சபையில் அயல் விவகார அமைச்சர் வெளி யிட்டதாகக் கூறப்படும் அறிக்கை[2]யைப் படித்து நாங்கள் மிகுந்த வியப்படைந்தோம். இத்தகைய ஓர் அறிக்கையை அவர் வெளி யிட்டது உண்மையானால், அவர் மேற்கொண்ட நிலைப்பாட்டி லிருந்து எங்களை முற்றிலுமாக விலக்கிக் கொள்கிறோம். இந்திய அரசாங்கத்தின் எந்தப் பதவிகளுக்கும் தகுதி வாய்ந்த இந்தியர் களைக் கண்டுபிடிப்பதில் எத்தகைய சிரமமும் இல்லை என்பது எங்களது அசைக்க முடியாத உறுதியான கருத்தாகும்; காங்கிரசும் லீகும் கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், விரிந்து பரந்த அதிகாரங்களைக் கொண்ட முற்றிலும் இந்தியர்களைக் கொண்ட ஓர் அரசாங்கம் இன்று மத்தியில் இருந்திருக்கும் என்பதை அயல் விவகார அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறோம். சம்பந்தப்பட்ட இந்த அறிக்கை உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்பதை*

---

1. அதிகார மாற்றம், தொகுதி III, எண். 116, பக்கம் 153

2. இந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் திரு. அமெரி மற்றும் சைமன் பிரபுவின் அறிக்கைகளுக்கு எண். 119 பார்க்க.

யும், இந்தியர்களை அவமதிப்பதாகும், நிந்திப்பதாகும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். எங்களது இந்தக் கருத்துகளை அயல் விவகார அமைச்சருக்குத் தெரிவிக்குமாறு மேதகையீரைக் கேட்டுக் கொள்கிறோம். காங்கிரஸ் தலைவர்களைப் பேட்டி காணுவதை அனுமதிக்கவோ, இந்தக் கொள்கையில் இந்திய அரசாங்க உறுப்பினர்களின் நிலை என்ன, இது விஷயத்தில் அவர்களது கருத்து யாது என்பதை அறியவோ தற்போதைய சந்தர்ப்பத்தில் அயல் விவகார அமைச்சர் தயாராக இல்லை என்பதை அவரது அறிக்கை காட்டுவதையும் இங்கு உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். இது விஷயமாக சைமன் பிரபு வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்க உறுப் பினர்களை ஆலோசகர்கள் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகத் தோன்றுகிறது.[1] இத்தகைய இயல்புடைய ஓர் அறிக்கை எங்கள் நிலையை பெரிதும் இக்கட்டுக்குள்ளாக்கி விட்டது என்று நாங்கள் பெரிதும் உணர்கிறோம், இல்லையேல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு இந்தத் தந்தியை அனுப்பியிருக்க மாட்டோம்.

மேற்கண்ட தந்தி மோடி, சுல்தான் அகமது, ஆனே, சர்க்கார், அம்பேத்கர், ஸ்ரீவஸ்தவா, ஜோஜேந்திர சிங் ஆகியோர் அனுப்பியதாகும்.

1. 'குறிப்பிடத்தக்க ஒன்று' என்பது விசேட முக்கியத்துவம் வாய்ந்தது என்று (?) பொருள் கொள்ளப்படுகிறது.

# 10

## லின்லித்கோ கோமானுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்[1]

எம்எஸ்எஸ்.இயூஆர்.எஃப். 125/124

புதுடில்லி, அக்டோபர் 29, 1942

எனது அன்பிற்குரிய லின்லித்கோ பிரபு அவர்களே,

உங்களுடனான எனது இரண்டாவது வாராந்திர நேர் காணலின்போது, ஷெட்யூல்டு வகுப்பினரின் நிலைமை அத்தனை திருப்திகரமானதாக இல்லை என்பதைத் தெரிவித்தேன்; அவர்கள் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேனோ அவ்வாறு மத்திய அரசாங்கம் நடந்து கொள்ள வில்லை என்பதையும் தங்களிடம் எடுத்துரைத்தேன். இதன்பேரில், ஷெட்யூல்டு வகுப்பினருக்குள்ள குறைகளையும், அவற்றை அகற்று வதற்கான பரிகாரங்களையும் விவரித்து ஒரு கோரிக்கை மனுவைத் தயாரித்துத் தங்கள் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கும்படி என்னை அன்போடு கேட்டுக் கொண்டீர்கள். இவை எல்லாம் நிச்சயமாக உங்களுக்கு நினைவிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டு மல்ல, கோரிக்கை மனு தயாராகி விட்டதா என்று நீங்களேதான் அடிக்கடி எனக்கு நினைவூட்டினீர்கள். ஆனால் இந்தக் கோரிக்கை மனுவைத் தயாரிக்கும் பணிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பிய போதிலும்கூட, இப்போதைய பொறுப்பை ஏற்றது முதல் எனக்கு ஏற்பட்ட கடுமையான வேலைப் பளு காரணமாக, துரதிருஷ்டவசமாக இவ்வாறு செய்ய எனக்கு இயலாது போயிற்று. எனினும் இறுதியில் இந்தக் கோரிக்கை மனுவைத் தயாரித்து உங்கள் பரிசீலனைக்கு முன்வைக்க முடிந் தமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

2. துரதிருஷ்டவசமாக இந்தக் கோரிக்கை மனு[2] மிகவும் நீண்டுவிட்டது. அதனைத் தயாரிக்க முற்பட்டபோது என் முன் இரண்டு வழிகள் இருந்தன: ஒன்று, ஷெட்யூல்டு வகுப்பினருக்குள்ள

---

1. அதிகார மாற்றம், தொகுதி III, எண். 125, பக்கங்கள் 148-68.

2. இந்தக் கோரிக்கை மனு இத் தொகுதியின் இரண்டாவது பாகத்தின் முதல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறைகளையும் அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகளையும் சுருக்கமாகக் கூறுவது; இரண்டு, இக்குறைகளையும் அவற்றுக்கான பரிகாரங்களையும் விரிவாக எடுத்துரைப்பதோடு, பரிகாரங்களுக்கான பரிந்துரைகளை காரண காரியத்தோடு, தக்க ஆதாரத்தோடு, அசைக்க மறுக்க முடியாத முறையில் எடுத்துரைப்பது. இவற்றில் இரண்டாவது வழியையே நான் தேர்ந்தெடுத்தேன். இவ்வாறு எண்ணும்போது ஒரு முக்கிய விஷயத்தை நான் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தது: அதாவது கோரிக்கை மனுவில் முன்வைக்கப்படும் குறைகளும் அவற்றை அகற்றுவதற்குப் பரிந்துரைக்கப்படும் பரிகாரங்களும் பல்வேறு துறைகளுக்கு அவற்றின் கருத்தறிய அனுப்பி வைக்கப்படும் என்பதையும், இந்தப் பரிகாரங்களைப் பரிந்துரைப்பதற்கான காரணங்கள் கோரிக்கை மனுவில் இடம் பெற்றிருந்தாலொழிய அவை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவே என்பதையும் நான் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது.

3. இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் கோரிக்கை மனுவில் தாழ்த்தப்பட்டோருக்குள்ள குறைகளும் அவற்றிற்கான பரிகாரங்களும் அடங்கியுள்ளன. உங்கள் சௌகர்யத்திற்காக இவற்றைக் கீழே இரத்தினச் சுருக்கமாகத் தந்திருக்கிறேன்:


| | | பக்கங்கள் |
|---|---|---|
| I. | அரசியல் குறைகள் | |
| 1. | மத்திய சட்டமன்றத்தில் அதிகப் பிரதிநிதித்துவம் | 5-9 |
| 2. | மத்திய நிர்வாக சபையில் அதிகப் பிரதிநிதித்துவம் | 9-10 |
| 3. | அரசுப் பணிகளில் நியாயமான பிரதிநிதித்துவத்திற்கு உறுதியளித்தல் | 10-21 |
| (i) | தாழ்த்தப்பட்ட வகுப்பினரை சிறுபான்மையினராக அறிவித்து, வருடாந்திரக் காலி இடங்களில் அவர்களுக்கு 13 1/2 சதவீதம் ஒதுக்குதல் | |
| (ii) | வயது வரம்பை உயர்த்துதல் | 21 |
| (iii) | தேர்வுக் கட்டணங்களைக் குறைத்தல் | 21 |
| (iv) | தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பணித்துறை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பு அதிகாரியை நியமித்தல் | 21-22 |
| 4. | மத்திய அரசுப் பணிகள் தேர்வாணையத்தில் பிரதிநிதித்துவம் | 22 |

பக்கங்கள்

II. கல்வி சம்பந்தப்பட்ட குறைகள் -

1. பல்வேறு பல்கலைக் கழகங்களில் விஞ்ஞான, பொறியியல் தொழில்நுட்பக் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகையாக ரூ. 2 லட்சம் வழங்குதல். 23-25

2. தாழ்த்தப்பட்ட சாதியினரின் மாணவர்கள் அயல்நாடுகளில் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொறியியல் கல்வி கற்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 1 லட்சம் மானியம் அளித்தல் 23-25

3. மத்திய அரசு நடத்தும் சுரங்கப் பயிற்சிப் பள்ளி களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குதல் 25-26

4. இந்திய அரசாங்கம் நிறுவியுள்ள மத்தியக் கல்வி வாரியத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளை நியமித்தல் 26-27

5. தொழில்நுட்பப் பயிற்சிக்கு வசதிகள் செய்து தருதல்:
(அ) அரசு அச்சகங்களில் தொழில்முறைப் பயிற்சி 27
(ஆ) அரசு ரயில்வே தொழிற்சாலைகளில் தொழில்முறைப் பயிற்சி 27-28

III. ஏனைய குறைகள்

1. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சமூக, அரசியல் குறைகளைப் பிறர் போதிய அளவு தெரிந்து கொள்ளச் செய்வதற்கு வழிவகை செய்தல் 29-30

2. பொதுத்துறைப் பணிகள் சம்பந்தப்பட்ட அரசு ஒப்பந்த முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் காலூன்றிக் கொள்ள விசேட ஏற்பாடு செய்தல். 30-31

4. கோரிக்கை மனு முழுவதையும் ஆழமாக பரிசீலிப்பதற்கு உங்களுக்குப் போதிய அவகாசம் இருக்காது என்பதை நான் நன்கு அறிவேன்; இதனால்தான் அதன் சுருக்கத்தை இங்கு தந்திருக்கிறேன். எனினும் கோரிக்கை மனு முழுவதையும் நீங்கள் படிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அவ்வாறு முழுவதும் படிக்க இயல வில்லை என்றால் இந்த கோரிக்கை மனுவின் IV பகுதியையாவது படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலையை ஆங்கிலோ-இந்தியர்களின் நிலையுடன் இப்பகுதியில் ஒப்பிட்டுக் காட்டியிருப்பதோடு, பிந்தியவர்களின் மேம்பாட்டிற்காக அரசு எடுத்துவரும் முயற்சிகளையும் விவரித்திருக்கிறேன். இதனைப் படிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு படித் தால், நான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் எவ்வளவு நியாய மானவை, வரம்பு மீறாதவை என்பதையும், தாழ்த்தப்பட்ட வகுப் பினர்களை விட எவ்வகையிலும் துரதிருஷ்டசாலிகள் அல்லாத ஓர் இனத்தவரைக் கைதூக்கிவிட அரசாங்கம் என்னவெல்லாம் செய் திருக்கிறது என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

5. நீங்கள் போவதற்கு முன்னால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் குறைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டுவிடும் என்று நம்புகிறேன். அடுத்த ஏப்ரலில் நீங்கள் பதவியிலிருந்து விலகுகிறீர்கள் என்பதைப் படித்து மெய்யாகவே வருத்தமடைந்தேன். உங்களுக்குப் பிறகு யார் இந்தப் பதவிக்கு வரப்போகிறார், தாழ்த்தப்பட்ட சாதியினர்பால் அவர் என்ன மனப்போக்கைக் கடைப்பிடிப்பார் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலனுக்காகப் பாடுபடுபவர் என்று உங்கள் மீது நான் மிகுந்த நம்பிக்கை வைத் திருந்தேன். உங்களுடைய நிர்வாகக் கவுன்சிலில் அவர்களுக்கு ஓர் இடம் கொடுத்ததன் மூலம் அவர்களுக்காக நீங்கள் மிகப் பெரிய காரியம் செய்திருக்கிறீர்கள். அது ஒரு மிகவும் புரட்சிகரமான காரியம். இந்தியாவின் வரலாற்றில் அதற்கு ஈடு இணையே கிடையாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் குறைகளை நீங்கள் அறிந்திருந்தால், அவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கு நீங்கள் ஒருபோதும் தயங்க மாட்டீர்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை; அதே போல் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த யாருக்கும் எவ்வித ஐயமும் இல்லை. இந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான், அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று அறிந்துள்ள ஒருவரிடமிருந்து

என்னுடைய மக்களுக்கு நீதி கேட்க வேண்டியிருப்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறுகிறேன். அதைச் செய்வதற்கு நீங்கள் உறுதி பூண்டிருக்கிறீர்கள் என்பதையும், நீங்கள் எதைச் செய்ய விரும்பு கிறீர்களோ, உங்களால் என்ன செய்ய முடியுமோ அதை நீங்கள் உங்களுக்குப் பின்னால் வருகிறவருக்கு அதை நீங்கள் விட்டுவிட மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். நீதியின் பாற்பட்ட இந்த செயலுக்காக நானும் 5 கோடி தாழ்த்தப் பட்ட சாதியினரும் என்றென்றும் உங்களுக்கு நன்றியுடையவர் களாக இருப்போம் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.[1]

தங்கள் உண்மையுள்ள,
**பி.ஆர். அம்பேத்கர்**

1. *1943, ஜனவரி 8ம் தேதியிட்ட ஒரு கடிதத்துடன் டாக்டர் அம்பேத்கர், லின்லித்கோ பிரபுவுக்கு மேலும், ஓர் கோரிக்கை மனுவை சமர்ப்பித்தார். அதில் அவர், இந்த அறிக்கை, தாழ்த்தப்பட்ட வர்க்கங்களின் கண்ணோட்டத்திலிருந்து, அரசியல் நிர்ணய சபைக்கு எதிரான வாதத்தை முன்வைக்கிறது; மேலும் இந்தியா மந்திரியிடமிருந்து தாழ்த்தப் பட்ட வகுப்பினர் பெற விரும்பும் உறுதிமொழி குறித்த விஷயங்களையும் எடுத் துரைக்கிறது.*

# 11

## வைஸ்ராய் நிர்வாக சபையில் நடைபெற்ற விவாதத்தின் சுருக்கம்[1]

எண். 298க்கு உள்ளடக்கம்

*டிசம்பர், 1942*

விவாதம் சகஜமான அடிப்படையில் இருக்க வேண்டியதும், தற்போதிருந்துவரும் அரசியல் சட்ட ஏற்பாடுகளுக்குக் குந்தகம் இல்லாமல் இருக்க வேண்டியதும் அவசியம் என்று ஆரம்பத்தி லேயே **வைஸ்ராய்** விளக்கினார். பின்னர் சுருக்கமாகவும் எதார்த்த பூர்வமாகவும், அவர் விரும்புகின்ற மூன்று திசைவழிகளைப் பற்றி விளக்கினார் -

(அ) அவருடைய நிர்வாக சபையை முழுவதுமாக இந்திய மயமாக்குவது;

(ஆ) இந்தியா மந்திரியின் ஆதிக்க அதிகாரங்களையும், தலை யீட்டையும் அகற்றுவது அல்லது குறைப்பது; மற்றும்

(இ) பிரிவு 93க்கு உட்பட்ட மாகாணங்களில் நிர்வாகம் முற்றிலும் அதிகாரத்தன்மை உடையதாக இருப்பதைக் குறைப்பது. பின்னர், பொதுவிவாதம் தொடங்கியது.

★ ★

**டாக்டர் அம்பேத்கர்** (தொழிலாளர் நலத்துறை உறுப்பினர்), 1940 ஆகஸ்டு பிரகடனத்திற்கு (முக்கிய சிறுபான்மையோருடன் ஆலோசனை கலப்பதற்கு வகைசெய்வது) இசைவில்லாத எந்த மாற்றத்தையும் எதிர்த்தார். ஆகஸ்டு பிரகடனத்திற்கு இசைவான

---

1. அதிகார மாற்றம், தொகுதி III (எண். 298க்கு உள்ளடக்கம்), பக்கம் 426 (டாக்டர் அம்பேத்கர் சம்பந்தப்பட்டது மட்டும் மறுபிரசுரம் செய்யப்படுகிறது. விவாதத்தின் பிறபகுதிகள் சேர்க்கப்படவில்லை - ஆ-ர்.)

மாற்றத்தை அவர் ஆதரித்தார். ஏனெனில், ஒரு வலுவான அரசே தேவையாயிருந்தது; அதாவது பொதுஜன அபிப்பிராயத்தின் ஆதரவு பெற்றதாக அது இருக்க வேண்டும். மாகாணங்களில் அமைச்சரவையுடன் கூடிய அரசே சிறந்ததாகும், அது சிறுபான்மை அமைச்சரவையாக இருந் தால்கூடப் பரவாயில்லை. ஆலோசகர்களைக் காட்டிலும் ஒரு நிர்வாகசபை மேலானது. மையத்தைப் பொறுத்தமட்டிலும் இந்திய மயமாக்குவது மட்டுமே காங்கிரசுக்குத் திருப்தி தராது, அது அவர்களுக்கு எரிச்சலூட்டவே செய்யும்; காங்கிரசல்லாத நபர்களைக் கொண்டு அமைச்சரவை அமைப்பது பயனுள்ளதா? இந்தியமய மாக்குவதற்கு முன்னால், நிர்வாக சபையின் வகுப்புவாரி இயைபு பற்றி தீர்வு காணவேண்டும், இது இந்தியர்களாலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் இந்தப் பிரச்சினையைத் தட்டிக்கழித்து விட்டது. இதற்குத் தீர்வு காண்பதற்கான மனஉறுதி அவர்களிடமில்லை. கிரிப்ஸ் பிரேரணைகளை ஓர் அடிப்படையாகக் கொண்டு, காங்கிரஸ், முஸ்லீம் லீக், தாழ்த்தப்பட்ட பகுதியினர், சீக்கியர்கள் மற்றும் கிறித்தவர்களைக் கொண்டு ஒரு தேசிய அரசு அமைப்பதற்கு முயல வேண்டும் என்பது அவருடைய ஆலோசனையாகும். நிர்வாக சபையின் இந்திய உறுப்பினர்கள் கூடி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். தொலை தூரத்திலுள்ள ஓர் பிரிட்டிஷ் அமைச்சரைக் காட்டிலும் ஓர் எதேச்சாதிகார வைஸ்ராயையே அவர் விரும்பிய போதிலும், பிரிட்டிஷ் அமைச்சரின் அதிகாரங்களில் தலையிடுவதை அவர் வற்புறுத்தவில்லை.

# 12

## திரு. அமெரிக்கு ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் தந்தி[1]

*எல்/ஜேபி அண்ட் ஜே/8/522: எஃப் 198*

**அவசரம்** புதுடில்லி, ஜூன் 7, 1945, மாலை 7.55
பெறப்பட்டது: ஜூன் 7, இரவு 10 மணி

சாதி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பிரேரணை செய்யப் பட்டுள்ள சமத்துவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பேத்கரும் ஸ்ரீவத்ஸவாவும் காரேயும் இன்று காலை கூட்டாக ஒரு குறிபபு[2] சமர்ப்பித்துள்ளனர். மேன்மை தங்கிய அரசினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பிரேரணைகள் இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட சாதியின ருக்கும் அநீதியானதாகும் என்று அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முஸ்லீம்களைக் காட்டிலும் சாதி இந்துக்களுக்குப் பெரும்பான்மை இருக்க வேண்டுமென்றும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஓர் உறுப் பினருக்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்றும் அவர்கள் கருதுகின்றனர். அவர்களுடைய கருத்துக்கள் மன்னர் பிரான் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

2. மன்னர் பிரான் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் ஓர் இடைக்கால ஏற்பாட்டுக்கு மட்டுமே என்பதும், கட்சிகளை ஒன்றுபட்டு செயல்பட வைப்பதே தற்போது பிரதான நோக்கம் என்பதுமே அதற்குச் சுருக்கமான பதிலாகும். என்னுடைய அதிகாரபூர்வமான தந்திகளில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளைத் திருத்துவதற்கு எந்தக் காரணத்தையும் நான் காண வில்லை.

---

1. அதிகார மாற்றம், தொகுதி V, எண். 482, பக்கம் 1094.
2. இந்தக் குறிப்பு வேவல் ஆவணங்களில் - அரசியல் வரிசை, ஏப்ரல் 1944 - ஜூலை 1945, I-ம் பகுதியில் அச்சிடப்பட்டுள்ளது.

# 13

## ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்[1]

**வேவல் ஆவணங்கள், அரசியல் வரிசை, 1944 ஏப்ரல் - 1945 ஜூலை பகுதி I, பக்கம் 207-9.**

*புதுடில்லி, ஜூன் 7, 1945*

*அன்புள்ள வேவல் பிரபு அவர்களே,*

*நிர்வாக சபையை இந்தியமயமாக்குவதற்கான உங்களுடைய பிரேரணையின் தொடர்பாக, நீங்கள் ஏற்பாடு செய்வதற்கு உத்தேசித்துள்ள மாநாட்டில் கலந்து கொள்ளும்படி தாழ்த்தப்பட்ட சாதியினரின் தலைவர் என்ற வகையில் என்னை நீங்கள் கேட்டுக் கொண்டுள்ளதற்கு உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இங்கு நான் மீண்டும் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லாத காரணங்களுக்காக, உங்களுடைய அழைப்பை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்று உங்களிடம் கூறினேன். அதற்குப் பின்னர், எனக்கு பதிலாக ஒருவருடைய பெயரைக் கூறும்படி நீங்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டீர்கள். உங்களுடைய பிரேரணைகளுக்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துள்ள போதிலும், உங்களுடைய மாநாட்டில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதி இருப்பதன் மூலமாக உங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவியை மறுப்பதற்கு நான் விரும்பவில்லை. எனவே எனக்குப் பதில் வேறு ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். எனக்குத் தோன்றுகிற பல்வேறு பெயர்களின் பொருத்தத்தைப் பற்றி மதிப்பீடு செய்கிறபோது, ராவ்பகதூர் என். சிவராஜ், பி.ஏ., பி.எல்.லைத் தவிர வேறு எந்தப் பெயரைப் பற்றியும் என்னால் சிந்திக்க முடியாது. அவர், அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர் சம்மேளனத்தின் தலைவராக இருக்கிறார். மேலும், அவர் மத்திய சட்டப்பேரவை உறுப்பினராகவும், தேசியப் பாதுகாப்பு சபை உறுப்பினராகவும் இருக்கிறார். நீங்கள் விரும்பினால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதி என்ற வகையில் அந்த மாநாட்டிற்கு நீங்கள் அவரை அழைக்கலாம்.*

1. *அதிகார மாற்றம், தொகுதி V, எண். 483, புக். 1094-97.*

2. இப்பொழுதே மற்றொரு விஷயத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று கருது கிறேன். நிர்வாக சபையைத் திருத்தி அமைப்பதற்கான மன்னர் பிரான் அரசாங்கத்தின் பிரேரணைகளில் தாழ்த்தப்பட்ட சாதி யினருக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் மிகவும் பற்றாக் குறையாக இருப்பது சம்பந்தப்பட்டதாகும். 9 கோடி முஸ்லீம் களுக்கு 5 இடங்கள், 5 கோடி தீண்டப்படாதாருக்கு ஓர் இடம், 60 இலட்சம் சீக்கியர்களுக்கு ஓர் இடம் என்பது விநோதமானதும், வஞ்சக வகைப் பட்ட அரசியல் கணக்கீடுமாகும். நீதி மற்றும் பகுத்தறிவு சம்பந்தப்பட்ட என்னுடைய கருத்துக்களுக்கு இது சிறிதும் உடன்பாடானதல்ல. இதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. தீண்டப்படாதவர்களின் தேவைகளைக் கணிக்கும்போது, அவர் களுக்கு முஸ்லீம்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற பிரதிநிதித்துவம் - அதற்கு அதிகம் இல்லாதபோதிலும் - தரப்பட வேண்டும். தேவைகள் ஒருபுறமிருக்க, எண்ணிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டாலே, தீண்டப்படாதவர்களுக்குக் குறைந்த பட்சம் மூன்று இடங்கள் கிடைக்க வேண்டும். அதற்கு மாறாக, பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபையில் அவர்களுக்கு ஒரே ஒரு இடம்தான் கொடுக்கப்படுகிறது. இது சகித்துக் கொள்ள முடியாத ஒரு நிலையாகும்.

ஜுன் 5ம் தேதியன்று நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத் தில், நிர்வாக சபை சம்பந்தமான அரசாங்கத்தின் பிரேரணைகளை நீங்கள் விளக்கியபோது, இந்த விஷயத்தை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். 6ம் தேதி காலையில் நடைபெற்ற கூட்டத்தில், பிரேரணைகளின் தகுதி பற்றி முந்திய நாள் மாலையில் உறுப்பினர்கள் செய்த விமர்சனங்களுக்கு நீங்கள் பதிலளித்தீர்கள். நான் எழுப்பிய பிரச்சினை பற்றியும் நீங்கள் பதிலளிப்பீர்கள் என்று இயல்பாகவே நான் எதிர்பார்த்தேன். ஆனால் நீங்கள் அதை முழுவது மாகப் புறக்கணித்து, அதுபற்றி எதுவும் கூறாதது கண்டு மிகவும் வியப்படைந்தேன். நான் போதிய அளவு அழுத்தமாகக் கூறவில்லை என்று கூற முடியாது. ஏனெனில் நான் போதுமான அளவுக்கு அதிக மாகவே வலியுறுத்திக் கூறினேன். அதுபற்றிக் கூறுவதற்கு நீங்கள் விட்டுவிட்டதிலிருந்து, ஒன்று, நீங்கள் கவனிக்க வேண்டிய அள விற்கு அதுபோதிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக நீங்கள் கருதாமலிருக்கலாம், அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அப்பால் எனக்கு வேறுநோக்கமில்லை என்று நீங்கள் நினைத்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கே வந்தேன். இந்த எண்ணத்தைப் போக்கவும்

நிவர்த்திப்பதற்கும் மன்னர்பிரான் அரசாங்கம் தவறினால் திட்டவட்டமான நடவடிக்கையை நான் மேற்கொள்வேன் என்று மிகவும் தெளிவாக உங்களுக்கு எடுத்துக் கூறுவதற்குமே இந்தக் கடிதம் எழுதுவது அவசியம் என்று கருதுகிறேன். இத்தகைய ஒரு பிரேரணை காங்கிரசிடமிருந்தோ அல்லது இந்துமகாசபையிடமிருந்தோ வந்திருந்தால், நான் இந்த அளவுக்கு வருத்தமடைந்திருக்க மாட்டேன். ஆனால் இது மன்னர்பிரான் அரசாங்கத்தின் முடிவு. பொதுவான இந்து அபிப்பிராயமும்கூட சட்டமன்றத்திலும், நிர்வாக சபையிலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு ஆதரவாகவே உள்ளது. சப்ரூ கமிட்டியின் பிரேரணைகளைப் பொதுவான இந்து அபிப்பிராயத்தின் ஒரு குறியீடாக எடுத்துக் கொள்வதெனில், மன்னர்பிரான் அரசாங்கத்தின் பிரேரணை பிற்போக்கானது என்று நிச்சயமாக ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சப்ரூ கமிட்டி இவ்வாறுதான் கூறியுள்ளது:

> ''இந்திய அரசு சட்டத்தில் சீக்கியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் போதுமானதல்ல மற்றும் அநீதியானது என்பது தெளிவு. இது கணிசமாக அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கூடுதல் பிரதிநிதித்துவத்தின் அளவு அரசியல் சட்டத்தைத் தயாரிக்கும் அமைப்புக்கு விட்டு விடப்பட வேண்டும்.

''(ஆ) பிரிவின் விதிகளுக்கு உட்பட்டு, யூனியனின் நிர்வாகக் குழு ஓர் கலப்பு அமைச்சரவையாக இருக்க வேண்டும்; அதாவது, பின்வரும் சமூகங்கள் அதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும்:

(i) இந்துக்கள், தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தவிர

(ii) முஸ்லீம்கள்

(iii) தாழ்த்தப்பட்ட சாதியினர்

(iv) சீக்கியர்கள்

(v) இந்தியக் கிறித்தவர்கள்

(vi) ஆங்கிலோ - இந்தியர்கள்

''(ஆ) நிர்வாகக் குழுவில் இந்த சமூகங்களின் பிரதிநிதித்துவம் சாத்தியமான வரையில், சட்டமன்றத்தில் அவர்களின் பலத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.''

நிர்வாக சபையில் உள்ள என்னுடைய இரண்டு இந்து சகாக்கள் இன்று காலையில் உங்களிடம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில்[1] மேன்மை தங்கிய அரசாங்கத்தின் பிரேரணைகளில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் போதுமானதல்லவென்றும் நியாயமற்றதென்றும் தெரிவித்துள்ளனர். தாழ்த்தப்பட்ட சாதியினருக்குத் தாங்கள் பாதுகாவலர்களாக இருப்பதாக மன்னர் பிரான் அரசாங்கம் பறைசாற்றிய போதிலும், மேலும், மீண்டும் மீண்டும் அவர்கள் வெளியிட்ட பிரகடனங்களுக்கு மாறாகவும், தங்களது பராமரிப்பில் உள்ளவர்களின்பால் இவ்வளவு கருமித்தனமாகவும், அநீதியாகவும், நியாயமற்ற முறையிலும், இந்துக்களின் அபிப்பிராயத்தைக் காட்டிலும் மிகவும் மோசமாகவும் நடந்து கொண்டது எனக்கு அதிர்ச்சியை அளிக்கிறது. எனவே, இந்தப் பிரேரணையை உறுதியாக எதிர்ப்பது என்னுடைய தலையாய மற்றும் புனிதமான கடமை என்று கருதுகிறேன். இந்தப் பிரேரணை தீண்டப்படாதாருக்குச் சாவுமணியடித்துவிடும்; தங்களுடைய விமோசனத்திற்குக் கடந்த 50 ஆண்டுகளாக செய்யப்பட்ட அவர்களது முயற்சிகளை இது ஒழித்துக் கட்டிவிடும். மன்னர்பிரான் அரசாங்கம், அதனுடைய பல அறிவிப்புகளுக்கு மாறாக தீண்டப்படாதவர்களின் கதியை இந்து-முஸ்லீம் கூட்டணியின் வசம் அவர்களின் தயவுக்கு ஒப்படைக்க விரும்பினால் மன்னர்பிரான் அரசாங்கம் அதன்படி செய்து கொள்ளலாம். ஆனால் என்னுடைய மக்களை ஒடுக்குவதற்கு நான் உடந்தையாக இருக்க முடியாது. இழைக்கப்பட்ட அநீதியை நிவர்த்தி செய்து, புதிய நிர்வாக சபையில் தீண்டப்படாதவர்களுக்குக் குறைந்தபட்சம் 3 இடங்களாவது கொடுக்குமாறு மன்னர்பிரான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். மன்னர்பிரான் அரசாங்கம் இதை வழங்குவதற்குத் தயாராயில்லாவிட்டால், புதிய நிர்வாக சபையில் அதில் எனக்கு ஓர் இடம் வழங்கப்பட்டாலும் - நான் ஓர் உறுப்பினராக இருக்க முடியாது என்பதை மன்னர்பிரான் அரசாங்கம் உணர வேண்டும். கடந்த சில காலமாக, தீண்டப்படாதவர்கள், தமது அரசியல் உரிமைகள் முழுமையாக அங்கீகரிக்கப்படுவதை எதிர்பார்த்து வந்துள் ளனர். மன்னர்பிரான் அரசாங்கத்தின் முடிவினால் அவர்கள் அதிர்ச்சி யடைவார்கள் என்பது குறித்து எனக்கு ஐயமில்லை. கண்டனம் தெரிவிக்கும் முகத்தான், புதிய அரசுடன் எவ்வித உறவும் கொள்வ தில்லை என்று தாழ்த்தப்பட்ட சாதியினர் முழுவதும் முடிவு செய்தால் நான் ஆச்சரியப்

1. எண். 482 ஐ பார்க்கவும் (அதிகார மாற்றம்)

பட மாட்டேன். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஏமாற் றத்தின் விளைவாக நாம் பிரிந்து செல்ல வேண்டியேற்படும் என்று திடமாக நம்புகிறேன். மன்னர்பிரான் அரசாங்கத்தின் பிரேரணைகள் திருத்தி அமைக்கப்படா விட்டால், அதன் விளைவாக இவ்வாறுதான் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன். என்னைப் பொறுத்தமட்டிலும் நான் முடிவு செய்துவிட்டேன். இறுதி நிலவரம் இதுவல்ல என்று எனக்குக் கூறப்படலாம். இது ஓர் இடைக்கால ஏற்பாடுதான் என்று கூறலாம். நான் நீண்ட காலமாக அரசியலில் இருந்து வருகிறேன். சலுகைகளும், இணக்க ஏற்பாடுகளும் ஒரு தடவை வழங்கப் பட்டு விட்டால் அவை நிரந்தர உரிமைகளாக வளர்ந்துவிடும் என்பதை யும், ஒரு தடவை ஒத்துக்கொள்ளப்படும் தவறான உடன்பாடுகள் வருங்கால உடன்பாட்டுக்கு முன்னுதாரணங்களாகி விடுகின்றன என்பதையும் நானறிவேன். எனவே என்னுடைய காலடியில் புல் முளைப்பதற்கு என்னால் அனுமதிக்க முடியாது. சரியாக மதிப் பிடுவதற்கு எனக்கு ஆற்றல் இருக்குமானால், இடங்கள் பரி வர்த்தனை, ஒரு தற்காலிக ஏற்பாடாகத் தொடங்கிய போதிலும், நிரந்தரமானதாகப் போய் முடியும். இறுதியில் வருந்துவதற்கு பதிலாக, தொடக்கத்திலேயே என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று உணர்கிறேன்.

வருங்கால இந்திய சர்க்காரில் நான் இல்லாமற் போவதையோ, தாழ்த்தப்பட்ட சாதியினர் இடம் பெறாமற் போவதையோ கூட மன்னர்பிரான் அரசாங்கம் பொருட்படுத்தாமலிருக்கலாம். இதன் விளைவாக இந்த நாட்டிலுள்ள பிரிட்டிஷ் அரசுக்கும் ஷெட்யூல்டு சாதியினருக்கும் இடையில் பிளவு ஏற்படுவதைப் பற்றி வருத்தப் படாமலுமிருக்கலாம். ஆனால் இந்த விஷயம் பற்றி நான் சொல்ல வேண்டியிருப்பதை மன்னர் பிரான் அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டியது நியாயமானதேயாகும். எனவே நிர்வாக சபையில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டு மென்ற என்னுடைய பிரேரணையையும், அவர்களால் என்னுடைய பிரேரணை நிராகரிக்கப்பட்டால், நான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை பற்றியும் மன்னர்பிரான் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கு மாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையுள்ள,
பி.ஆர். அம்பேத்கர்

# 14

## பெதிக்-லாரென்ஸ் பிரபுவுக்கு ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் கடிதம்[1]

*எல்/பிஓ/10/22*

தமது பார்வை மற்றும் இரகசியம்
எண். *45*

வைஸ்ராயின் இல்லம்,
புதுடில்லி,
டிசம்பர் *5, 1945*

★ ★ ★

*14. 1946* பட்ஜெட் கூட்டத் தொடரில் தொழிலாளர் சம்பந்தப் பட்ட சட்டத்திற்கான தனது பிரேரணைகளை அண்மையில் அம்பேத்கர் அவைக்குச் சமர்ப்பித்துள்ளார். ஒன்று, தொழிற்சாலை கள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா. வேலை நேரத்தை வாரத்திற்கு 56 மணியிலிருந்து 50 மணியாகக் குறைப்பதை இது கோருகிறது. மாகாண சர்க்கார்களிடமிருந்து கருத்துக்கள் பெறப் பட்டதற்குப் பின்னர் அவை இதுபற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும். இரண்டாவது பரிசீலனை, குறைந்தபட்ச ஊதியங்களை நிர்ணயம் செய்வதற்கான ஒரு மசோதா. இதுகுறித்து அனைத்து மாகாண சர்க்கார்களும் ஆலோசனை கலக்கப்படுகின்றன. ஆனால், இந்த மசோதா, மிகப் பல தொழில்களுக்கு குறைந்தபட்ச சம்பளங் களை நிர்ணயிக்க முயல்வதில் எல்லை மீறி ஆர்வம் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை. இந்த அட்டவணையில் விவசாயமும் கூட சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவின் அனைத்து 6,50,000 கிராமங்களிலும் இவ்வாறு குறைந்தபட்ச ஊதியங்களை அமல் படுத்துவதற்கான நிர்வாக இயந்திரம் அமைக்கப்படுவது சாத்திய மில்லை என்பது தெளிவு. ஆயினும், தொழிலாளர்களிடம் கடுமை யாக வேலை வாங்கப்படுவதாகக் கருதப்படும் தொழில்களின் விஷயத்திலாவது இந்தப் பிரேரணையை அமல் நடத்துவதற்கான ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டுமென்று அவையில் பெரு மளவு ஆதரவு இருக்கிறது. மாகாண சர்க்கார்களிடம் இதுகுறித்து

---

1. அதிகார மாற்றம், தொகுதி VI, எண். *268*, பக்கம் *605*. அம்பேத்கார் சம்பந்தப்பட்ட 14வது பத்தி மட்டுமே இங்கு தரப்படுகிறது. மற்ற பாராக்கள் தரப்படவில்லை. - ஆர்.

ஆலோசனை கலக்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுதிய சட்டத்தைத் திருத்துவதற்கான கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லாத ஒரு மசோதா வையும் வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) மசோதாவை யும் ஏற்றுக் கொண்டது. இது பெருந்தொழில் நிறுவனங்களில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள், தங்களுடைய வேலை நிலைமைகள் என்ன என்பதை அறிந்து கொள்வதை உத்தரவாதம் செய்வதை நோக்கமாகக் கொண்டது. இறுதியாக, தொழிற்சங்க சட்டத்தைத் திருத்துவதற்கும், அதை ஒரு தெரிவுக்குழுவின் பரி சீலனைக்கு விடுவதற்குமான ஒரு மசோதாவை அறிமுகம் செய்ய வகை செய்யும் ஒரு பிரேரணையையும் சபை அங்கீகரித்தது. இந்த மசோதா, தொழிற்சங்கங்களை முதலாளிகள் அங்கீகரிப்பதைக் கட்டாயமாக்குகிறது.

15. பின்னர் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அம்பேத்கர் திடீரென்று (போதிய முன்தயாரிப்பின்றி), ஆலைத் தொழிலாளர் களுக்குக் காப்பீடு மற்றும் சமூகப் பாதுகாப்பு சம்பந்தமான ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இத்தகைய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்னும் அம்பேத்கரின் விருப்பத்திற்கு நான் முழுமையாய் பரிவுகாட்டுகிறேன். ஆனால் இந்த முயற்சிக்கு, இலாக்காக்களுக்கு இடையிலான உடன்பாட்டைத் தேவையான அளவு அவர் பெறவில்லை. மேலும், திட்டத்தின் மருத்துவப் பகுதியை அமலாக்குவதற்கான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்வதற்கு அனைத்து மாகாணங்களும் தயாராக இருக்கின்றனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்துவதற்குத் தேவை யான பூர்வாங்கப் பணியைச் செய்து, பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளும் வகையில் அதை சுற்றுக்கு விடுவதற்கு ஒரு பிரேரணை செய்யப்படுமென்று நாங்கள் நம்புகிறோம்.

# அமைச்சரவைத் தூதுக்குழு, ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவல் மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரிடையில், 1946, ஏப்ரல் 5, வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்ற கூட்டம் பற்றிய குறிப்பு[1]

*(எல்/பி அண்ட் ஜே/5/337: பக்கம் 83-5)*

இரகசியம்

தான் சமர்ப்பித்த கோரிக்கை மனுவுக்கு[2] அப்பால் கூடுதலாகக் கூறுவதற்கு வேறெதுவுமில்லை என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். இதன் பிரதிகள் தூதுக்குழுவினருக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில், ஏப்ரல் 2ல் நடைபெற்ற அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர் சம்மேளனத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த மனுவின் 5வது பத்தியில் பாதுகாப்புகளின் ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு சர்க்காரிலும், அரசுப் பணிகளிலும் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டதாகும். இவை சேர்க்கப்படாத எந்த அரசியல் சட்டத்தையும் சம்மேளனம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

பாகிஸ்தான் பிரச்சினையில், புதிய தேசம் உருவாக்கப்படுவதனால் முஸ்லீம்கள் அனைவருக்கும் மெய்யாகவே நன்மை கிடைக்குமா என்பது பற்றி டாக்டர் அம்பேத்கர் ஐயம் தெரிவித்தார். அவர்களில் மிகப் பலர் இந்துஸ்தானத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டியிருக்கும். அவர்கள் வெளியேறிச் செல்வதற்கு விருப்பமில்லாதவர்களாக, அல்லது முடியாதவர்களாக இருப்பார்கள்.

பாகிஸ்தான் என்பது முஸ்லீம்களின் ஒரு நிரந்தரமான அல்லது தற்காலிகமான மனோபாவமாக இருக்குமா என்பது குறித்து அவர் ஐயம் தெரிவித்தார். அனேகமாக அது தற்காலிகமானதாக இருக்கக் கூடும். ஆனால் பொறுத்திருந்து பார்ப்பது சாத்தியமல்ல. முஸ்லீம்களின் கோரிக்கை மிகவும் வலுவாக வளர்ந்திருப்பதினால்; அதை

1. அதிகார மாற்றம், தொகுதி VII, எண். 58, பக்கம் 144-47

2. எல்/பி அண்ட் ஜே/10/50

எவ்வாறாவது பூர்த்தி செய்வது அவசியமாகியுள்ளது. இந்த விஷயம் பற்றிய அவருடைய புத்தகத்தில்[1] ஐரிஷ் பிரச்சினைக்கு 1920ல் திரு. ஆஸ்குவித் பிரேரணை செய்திருந்த தீர்வை கடைப்பிடிப்பதன் மூலம் இந்தப் புதிருக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் பிரேரணை செய்திருந்தார்.

அல்ஸ்டர், அயர்லாந்தின் பிற பகுதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குத் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஆஸ்குவித் யோசனை கூறியிருந்தார்; அதேசமயத்தில், இந்தக் காலகட்டத்தின் போது, பொதுவான அக்கறை உள்ள விஷயங்களை சமாளிப்பதற்கு நாட்டின் இரு பகுதிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கவுன்சில் நிறுவப்பட வேண்டும். ஆறு ஆண்டுகளின் முடிவில், தனியாக நீடிப்பதா அல்லது தெற்கு அயர்லாந்துடன் ஒன்றுபடுவதா என்பதை அல்ஸ்டர் முடிவு செய்ய வேண்டும். இதுபோன்றே பாகிஸ்தான் பத்தாண்டு காலம் சுதந்திரமாக இருக்க விட வேண்டும் என்றும், அதன் முடிவில், அது பொருளாதார ரீதியில் நிலையாக இருக்க முடியுமா என்பது தெரிந்துவிடும் என்றும் டாக்டர் அம்பேத்கர் யோசனை கூறினார். அப்பொழுது பாகிஸ்தான் மக்கள் இந்துஸ்தானத்துடன் சேர்ந்து கொள்வதற்கு விரும்பினால், பேரம் பேசுவதற்கு அவர்கள் பலவீனமான நிலையில் இருப்பார்கள் என்றும், மற்றைய தரப்புக்கு அனுகூலமான நிலைமை இருக்கும் என்றும் அம்பேத்கர் ஒப்புக்கொண்டார். அந்தப் பத்தாண்டுக் காலத்தில் ஒரு பொதுவான கவுன்சில் ஏற்படுத்தப்படலாம், ஆனால் அது முற்றிலும் ஓர் ஆலோசனை அமைப்பாகத்தான் இருக்கும், நிர்வாக அதிகாரங்கள் எதையும் கொண்டிருக்காது. முஸ்லீம்கள் தற்போதுள்ள மனோநிலையில், அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் எந்த அகில-இந்திய மத்திய அரசும் மிகவும் பலவீனமாகவும், பயனற்ற தாகவும் இருக்கும். பாகிஸ்தான் வேண்டுமென்ற முஸ்லீம் கோரிக்கை அன்னியில் வேறுபல பிரிவினைப் போக்குகளும் உள்ளன. எனவே, நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்க முடிகின்ற ஒரு பலமான மத்திய அரசாங்கம் மட்டுமே தகுதி உடையதாக இருக்கும்.

அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எந்த முறையிலான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற ஒரு கேள்விக்கு

1. பி.ஆர். அம்பேத்கர், ''பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை'' (தாக்கர் அண்ட் கம்பெனி, பம்பாய், 1946)

பதிலளிக்கையில் டாக்டர் அம்பேத்கர், ஓர் அரசியல் நிர்ணய சபையையே தான் விரும்பவில்லை என்று கூறினார். அதில் சாதி இந்துக்கள் ஆதிக்கம் வகிப்பார்கள். அதில் ஷெட்யூல்டு வகுப்பு சாதி உறுப்பினர்கள் ஒரு சிறிய சிறுபான்மையினராகவே இருப்பார்கள், பேரவையின் முடிவுகளுக்கு நான்கில் மூன்று பங்கு அல்லது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்பட்டாலும்கூட, அவர்கள் எப்போதும் தோற்கடிக்கப்படக் கூடும். சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு மன்னர்பிரான் அரசாங்கம் கொடுத்துள்ள அனைத்து வாக்குறுதிகளும் நடைமுறையில் பெயரளவில் மட்டுமே இருக்கும். மேலும் பேரவையில் பெருமளவான லஞ்ச ஊழல் நிலவும்; தமது சமூகங்களின் நலன்களுக்கு எதிராக ஓட்டளிக்குமாறு உறுப்பினர் கள் விலை கொடுத்து வாங்கப்பட்டு விடுவார்கள்.

அரசியல் நிர்ணய சபையை எதிர்நோக்கியுள்ள பணிகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று அவர் யோசனை கூறினார். அதாவது:

(அ) அரசியல் சட்டரீதியான பிரச்சினைகள் என்று அழைக்கப் படுபவை; உதாரணமாக, சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான உறவுகளும் முறையே அவற்றின் இயைபும், செயல் பாடுகளும். இந்த விஷயங்களைப் பற்றி பெரிய கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை. இவை மன உணர்வுகளைத் தூண்டுவதில்லை. இவற்றைப் பரிசீலனை செய்வதானது மாகாண சட்டமன்றங்கள் அனுப்பி வைக்கும் வகைப்பட்ட நபர்களின் மன ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விஷயமாகும், இது நிபுணர்களுக்குரிய ஒரு விஷய மாகும்.

(ஆ) வகுப்புகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்.

இந்தத் தலைப்புகளில் முதலாவதன் கீழ்வரும் பிரச்சினை கள் ஒரு கமிஷனின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டும். அதற்கு பிரிட்டனிலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ வரும் சிறந்த அரசியல் சட்ட நுணுக்கம் தெரிந்த ஒரு வழக்கறிஞர் தலைமை தாங்க வேண்டும். அதன் இதர உறுப்பினர்கள் - இரு இந்திய நிபுணர்களும், இந்து மற்றும் முஸ்லீம் சமூகங்களின் தலா ஒரு பிரதிநிதியும் ஆவார்கள். கமிஷனின் விவாதத்திற்குரிய விஷ யங்கள் 1935ம் வருட இந்திய அரசு சட்டம் ஆகும். இந்த சட்டத்தில் -

தற்போது அது இருந்துவரும் நிலைமையில் - எந்த மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டும்.

(ஆ) பிரிவின் கீழ்வரும் பிரச்சினைகள் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களின் ஒரு மாநாட்டின் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த மாநாடு ஓர் ஒன்றுபட்ட முடிவுக்கு வருவதற்குத் தவறினால், மன்னர்பிரான் அரசாங்கம் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டியேற்படும். அது நியாயமானதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

பின்னர் டாக்டர் அம்பேத்கர், இன்று தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலைமை பற்றி விவரித்தார். அவர்களின் எண்ணிக்கை ஆறுகோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை இந்தப் புள்ளி விவரம் பிழையானதாகக் கூட இருக்கலாம், ஏனெனில், முதலாவதாக, சமஸ்தானங்களில் இதுகுறித்த நம்பகமான புள்ளிவிவரங்கள் இல்லை; இரண்டாவதாக, மக்கட் தொகைக் கணக்கெடுப்பு அரசியலுடன் பிணைந்து போயுள்ளது. இந்த மக்கள் அனைவரும் மிகவும் கடுமையான சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களில் அவர்களுக்கு நிலமில்லை, நடைமுறையில் அவர்கள் சாதி இந்துக்களின் அடிமைகளாக இருக்கிறார்கள். சாதி இந்துக்களின் அதிகாரம் எந்த அளவுக்கு உச்சக்கட்டத்தில் இருக்கிறது என்பதற்கு அவர் ஓர் உதாரணம் கூறினார். சில தீண்டப்படாதவர்கள் தமது கிராமங்களிலிருந்து தப்பிச் சென்று, ராணுவ அதிகாரிகளின் கீழ் நல்ல சம்பளம் கிடைக்கும் வேலையில் சேர்ந்தபோது, சாதி இந்துக்கள் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அந்த வேலைகளை விட்டு வெளியேறி, மீண்டும் கிராமத்தில் தங்களுக்காக வேலை செய்வதற்கே அழைத்து வந்துவிட்டதை அவர் குறிப்பிட்டார். கீழ்நிலை காவல்துறை மற்றும் வருவாய்த்துறைப் பணிகளில் சாதி இந்துக்கள் மிகப் பெருவாரியாக இருப்பதனால், சர்க்கார் தீண்டப்படாதவர்களின் கண்ணோட்டத்தில் பிரிட்டிஷ் சர்க்காராக இல்லை, மாறாக ஒரு இந்து சர்க்காராகவே இருக்கிறது. இதற்கு ஓர் உதாரணமாக, அண்மையில் பம்பாயில் திரு. காந்தியை நோக்கிக் கல்லெறிந்ததற்காக 100 தீண்டப்படாத சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், இந்த சம்பவத்தை சாக்காகக் கொண்டு நகரத்தின் தீண்டப்படாத சாதியினர் வசிக்கும் பிரதேசத்தில் போலீசார் பெருமளவு நாசம் விளைவித்துள்ளனர்.

அரசியல் ரீதியாக, பிற சமூகங்களைப் போன்று தாழ்த்தப் பட்ட சாதியினருக்கு 1932ல், தனித் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், புனா ஒப்பந்தத்தினால்[1] நடைமுறையில் அவர்களுக்கு அது இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. அதற்கு பதிலாக, அவர் களுக்கு இரட்டைத் தேர்தல்கள் முறை கிடைத்துள்ளது. இதன் பொருள், இரண்டாவது தேர்தலில் - இதில் எல்லா இந்துக்களும் வாக்களிக்கிறார்கள் - தீண்டப்படாதவர்கள் மட்டுமே வாக்காளர் களாக உள்ள முதல் தேர்தலின் முடிவை சாதி இந்துக்கள் ஒழித்துக் கட்டிவிட முடியும். ஏப்ரல் 2ம் தேதிய நிர்வாகக் குழுத் தீர்மானத்தின் பின் அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருந்த புள்ளிவிவரங் களை அவர் எடுத்துக் காட்டினார். அவை, முதலாவதாக, பல சம்ப வங்களில், காங்கிரஸ் தாழ்த்தப்பட்ட சாதி வேட்பாளர்கள், பூர்வாங்கத் தேர்தல்களில், சம்மேளன வேட்பாளர்களால் தோற்கடிக்கப்பட் டிருந்த போதிலும், இறுதித் தேர்தல்களில் அவர்கள் சம்மேளன வேட்பாளர்களைத் தோற்கடித்துவிட்டனர்; இரண்டாவதாக பொது வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, தாழ்த்தப்பட்ட சாதி வாக்காளர்களின் எண்ணிக்கை மிகவும் சிறிய தாகும். அப்படியிருந்தும் தங்களுடைய வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகக் காங்கிரஸ் கொள்ளையடிப்பதிலும், தீ வைப்பதிலும் ஈடுபட்டது. அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைக் காட்டுவதற்கு அவர் ஏராளமான புகைப்படங்களைக் காட்டினார்.

மத்திய சட்டப் பேரவை 1919ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. ஆயினும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் எந்தக் கேள்வியும் ஒருபோதும் அதில் கேட்கப்பட்ட தில்லை, தீர்மானங்கள் பிரேரணை செய்யப்பட்டதில்லை, அல்லது வேறு எதுவும் செய்யப்பட்டதில்லை.

இந்திய சமஸ்தானங்களில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. சிலவகை உணவுகள் கூட சாப்பிடுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சில சமஸ் தானங்களில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுவரும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் முஸ்லீம்களைத் தவிர வேறு எந்த சமூகத்திற்கும் தனிப் பிரதிநிதித்துவம் கிடையாது. அரசியல் இலாகா இந்த அரசியல் சட்டப் பரிசோதனைகளில் கூடுதல் அக்கறை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும், தாழ்த்தப்பட்ட சாதியினர்களுக்குத் தனித்

1. எண். 45, குறிப்பு 3ஐப் பார்க்கவும்.

தொகுதிகள் கிடைக்கும்படி செய்திருக்க வேண்டும். வருகின்ற தூதுக் குழு அகில இந்திய தாழ்த்தப்பட்ட சாதியினர் சமஸ்தான மாநாட்டின் தலைவரைச் சந்திக்க வேண்டும்.

கிழக்கு இந்தியக் கம்பெனியின் ராணுவத்திற்கு முதல் முதலாக ஆட்கள் கிடைத்தது தாழ்த்தப்பட்ட சாதியினரிடமிருந்துதான். எனவே அவர்களுடைய உதவியுடன்தான் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைப் பிடித்தனர். அன்று முதல் அவர்கள் பிரிட்டிஷ்காரர்களின் நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். இருந்தபோதிலும் பிரிட்டிஷ்காரர்கள் ஒருபோதும் உணர்வுபூர்வமாகவும், திட்டமிட்ட முறையிலும் அவர்களுக்கு உதவி செய்ததில்லை; ஆனால், 1892 முதல் அவர்கள் முஸ்லீம்களுக்கு ஏராளமான உதவிகள் செய்துள்ளனர்.

இந்தியா சுதந்திரமடைந்தால், அது ஒரு மிகப் பெரிய விபத்தாக இருக்கும் என்று டாக்டர் அம்பேத்கர் கருதினார். பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறுவதற்கு முன்னால் புதிய அரசியல் சட்டம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வாழ்க்கையின் அடிப்படையான மனித உரிமைகள், சுதந்திரம், மகிழ்ச்சியான வாழ்க்கை முதலியவற்றை உத்தரவாதம் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும். அது அவர்களின் தனித் தொகுதிகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டும், அவர்கள் கோரியுள்ள பிற பாதுகாப்புகளையும் வழங்கிட வேண்டும். தற்பொழுது, அவரைப் பின்பற்றுவோரின் ஏமாற்றம், அவர்களை பயங்கரவாதத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கி உந்தி தள்ளி வருகிறது. அரசியல் சட்டப்பூர்வமான வழிமுறைகளின் பயன்பாடு சம்பந்தமாக அவர்கள் விஷயத்தில் அவர் சோதனையிலிருந்தார் என்றே கூறவேண்டும்.

இதுவரையிலும் இந்திய அரசியலில் இரண்டு பிரச்சினைகள் ஆதிக்கம் வகித்தன; பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தை வெல்லும் பிரச்சினை, மற்றும் இந்து-முஸ்லீம் பிரச்சினை என்பவையே அவை என்று பெதிக்-லாரன்ஸ் பிரபு கூறினார். இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டால், ஒருவேளை பொருளாதாரப் பிரச்சினைகள் மீதுதான் கட்சிப் பிரிவினைகள் ஏற்படக் கூடும். தாழ்த்தப்பட்ட சாதியினர், தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு, அதிகாரத்தை கைமாற்றிக் கொடுக்கவிருக்கிற பிரிட்டிஷ்

காரர்களை சார்ந்திருப்பதைக் காட்டிலும், இடதுசாரிகளுடன் தங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் மேம்பட்ட வாய்ப்பைப் பெறுவார்கள் என்பது நிச்சயம். இதற்குத் தனது பதிலில் டாக்டர் அம்பேத்கர், கூட்டுத் தொகுதிகள் இருக்கின்ற வரையில், தாழ்த்தப் பட்ட சாதி வாக்காளர்கள் மிகவும் குறைவாக இருப்பதினால், இந்து வேட்பாளர்கள் அவர்களின் விருப்பங்களை சௌகரியமாகப் புறக்கணிக்கக் கூடும். சாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட சாதி வேட் பாளர்களை ஒருபோதும் ஆதரிக்க மாட்டார்கள். இன்றைய ஏற் பாட்டின்கீழ் இறுதித் தேர்தல்களில் தீண்டத்தகாதவர்களுக்கு அவர்கள் வாக்களித்துத்தான் ஆக வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்வதில் அவர்களுடைய நோக்கம் தங்களுடைய சொந்த வேட் பாளருக்கு ஆதரவு கொடுக்க வேண்டு மென்று ஒருபோதும் இல்லை, மாறாக, தாழ்த்தப்பட்டவர்கள் சம் மேளனத்தின் வேட்பாளரைத் தோற்கடிக்க வேண்டும் என்பதேயாகும். தனித் தொகுதிகள் ஜீவா தாரமானவையாகும். ஏனெனில், அவை இல்லாமல், தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒருபோதும் தங்களுடைய சொந்த வேட்பாளர்களை வெற்றியடையச் செய்ய முடியாது.

# 16

# இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வேவல் பிரபுவுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்

***பீமராவ் ஆர். அம்பேத்கர்***[1]
*எம்.ஏ.பிஎச்.டி., டிஎஸ்சி., பார்-அட்-லா,*
*உறுப்பினர், கவர்னர் ஜெனரலின்*
*நிர்வாக சபை*

*22, பிரிதிவிராஜ் சாலை,*
*புதுடில்லி*
*3.5.1946*

*அன்பார்ந்த வேவல் பிரபு அவர்களே,*

*சிம்லாவில் நடைபெற்ற மாநாட்டில், அமைச்சரவைத் தூதுக் குழு தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதியை அழைப்பதற்குத் தவறியதானது, சட்டபூர்வமான பாதுகாப்புகளுக்கான தங்களுடைய கோரிக்கைக்கு அமைச்சரவைத் தூதுக்குழு எவ்வாறு பரிகாரம் தேடப் போகிறது என்பது குறித்து தாழ்த்தப்பட்ட சாதியினரின் மனங் களில் அவநம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது. நிலைமை மோசமாக இருப்பதால், இது தொடர்பாக, தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதி பலிப்புகளை உங்களிடம் எடுத்துச் சொல்வதற்கு விரும்புகிறேன்.*

*தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதியைச் சிம்லா மாநாட் டிற்கு அழைக்காமலிருந்ததற்குப் பல விளக்கங்கள் கூறப்படக்கூடும். இவ்வாறு கூறப்படத் தோது உள்ள ஒரு விளக்கம் தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோரிக்கைகள் பிற கட்சிகளின் நியாயமான உரிமை களில் தலையிடாத வரை அக்கட்சிகளின் இசைவு அவற்றுக்குத் தேவையில்லை எனக் கூறப்படலாம். குறைந்தபட்சம் அவர்களின் மூன்று கோரிக்கைகள் சம்பந்தமாக நிச்சயமாக இவ்வாறு கூறலாம். அவை வருமாறு: (1) தனித் தொகுதிகள், (2) மத்திய நிர்வாகக் குழு வில் போதிய பிரதிநிதித்துவம், மற்றும் (3) ஓர் இடைக்கால அரசு ஏற்படுவதற்கு முன்னதாக ஒரு நிபந்தனை என்ற வகையில், வருங் கால அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்களைப் பாதுகாப்பது சம்பந்தமான சில பொதுவான கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதாகக் கட்சிகள் உறுதிமொழி அளிக்க வேண்டும்.*

---

*1. ஆதாரம்: டாக்டர் அம்பேத்கர் தனிப்பட்ட முறையில் அச்சடித்த துண்டுப் பிரசுரம் - ஆ-ர்.*

தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோரிக்கைகளுக்குப் பிற கட்சி களின் சம்மதம் தேவையில்லை என்ற கருத்தை, 1946 ஏப்ரல் 5ம் நாளன்று என்னுடைய பேட்டியின்போது அமைச்சரவைத் தூதுக்குழு விடம் நான் மிகவும் பலமாக வலியுறுத்தியிருந்தேன்.

பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து மற்றும் வங்காளத்திலுள்ள பெரும்பான்மை சமூகமாகிய முஸ்லீம்கள் தனித் தொகுதிகள் வேண்டுமென்று கோருவது, தாழ்த்தப்பட்ட சாதி யினரைப் போன்ற ஒரு சிறுபான்மை சமூகத்தினரின் கோரிக்கை யினின்றும் வேறுபட்டதாகும். ஒரு பெரும்பான்மை சமூகத்தினரின் தனித் தொகுதிகளுக்கான கோரிக்கைக்கு சிறுபான்மை சமூகத் தினரின் சம்மதம் அவசியம் தேவை. ஆனால் ஒரு சிறுபான்மை சமூகத்தின் தனித் தொகுதிகள் பெரும்பான்மை சமூகத்தின் விருப் பங்களைச் சார்ந்ததாக ஒருபோதும் இருக்க முடியாது. இத்தகைய தொகுதி, அடிப்படையாகவே, பெரும்பான்மைக்கு எதிராக ஒரு சிறுபான்மையைப் பாதுகாப்பதற்காக வகுக்கப்பட்ட ஒரு ஏற் பாடாகும். இது இவ்வாறிருக்க, ஒரு தேர்தல் தொகுதி கூட்டுத் தொகுதியாக இருக்க வேண்டுமா அல்லது தனித் தொகுதியாக இருக்க வேண்டுமா என்பதை இவற்றில் எது தங்கள் நலன்களுக்கு உகந்தது என்பதை சிறுபான்மையினர் அறிவார்கள் என்ற அடிப்படையில் அவர்களது முடிவுக்கே முற்றிலும் விட்டுவிட வேண்டும். பெரும் பான்மையினர் இந்த விஷயத்தில் எதுவும் சொல்வதற்கு இட மில்லை. சிறுபான்மையோரின் முடிவை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு தனித்தொகுதி இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதில் இந்துக் களுக்கு சொல்வதற்கு ஏதும் இருக்க முடியாது.

தனித் தொகுதிக்கான தாழ்த்தப்பட்ட சாதியின் கோரிக்கை வேறு எந்த சமூகத்தையும், இன்னும் சொல்லப்போனால் இந்துக் களையும் கூட பாதிக்காது. அதனால்தான் இந்தக் கோரிக்கையை பிற எல்லா சமூகத்தினரும் ஏற்றுக் கொண்டனர். தாழ்த்தப்பட்ட சாதி யினர் இந்துக்களென்றும், எனவே அவர்கள் தனித் தொகுதிகள் கேட்க முடியாது என்றும் இந்துக்கள் வாதிப்பது அர்த்தமற்றதாகும்; ஏனெனில், தனித் தொகுதியானது மெய்யாகவே சிறுபான்மை யோரின் பாதுகாப்புக்கான ஓர் ஏற்பாடாகும். அதற்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை என்ற அம்சத்தை இந்த வாதம் பார்க்கத் தவறு கிறது. இதற்கு ஏதாவது சான்று தேவையெனில், நீங்கள் ஐரோப்பி யர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் மற்றும் இந்திய கிறித்தவர்களின்

விஷயத்தை எடுத்துக் கொண்டு பார்க்கலாம். இவர்கள் அனைவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்களேயாயினும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தொகுதி இருக்கிறது.

இந்த விவரங்களையும் வாதங்களையும் அமைச்சரவைக் குழு கவனத்தில் எடுத்துக் கொண்டு தனித் தொகுதி முறைக்கு இந்துக்களின் சம்மதம் தேவை'யில்லை, அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவம் என்பதை கூட்டுத் தொகுதிகள் கேலிக் கூத்தாக்கியிருக்கும் நிலைமையில் இது முற்றிலும் அமைச்சரவைத் தூதுக்குழு முடிவு செய்ய வேண்டிய விஷயமேயாகும் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வாதத்தை ஏற்றுக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது.

இடைக்கால அரசில் தங்களுடைய பிரதிநிதித்துவம் முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவத்தில் 50 சதவீதமாக இருக்க வேண்டுமென்ற தாழ்த்தப்பட்ட சாதியினரின் இரண்டாவது கோரிக்கைக்கும், அது வழங்கப்படுவதற்கு முன்னால் இந்துக்களின் சம்மதம் பெறத் தேவையில்லை. மத்திய நிர்வாக சபையில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பதும் அமைச்சரவைத் தூதுக்குழு முடிவு செய்ய வேண்டிய ஒரு விஷயமாகும். இதுபற்றி முடிவு செய்வதற்கு முன்னால், தாழ்த்தப்பட்ட சாதியினரின் எண்ணிக்கை, அவர்கள் அனுபவித்துவரும் இழிநிலைகள், பிற முன்னேற்றமடைந்த சமூகங்களுக்கு இணையாக அவர்கள் முன்னேறச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகள் ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கடந்த சிம்லா மாநாட்டின் சமயத்தில் இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியது உங்களுக்கு நினைவிருக்கும். அப்பொழுது நீங்கள் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இரண்டு இடங்கள் தருவதற்குத் தயாராயிருந்தீர்கள். அது முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டதில் 50 சதவீதத்திற்கும் சற்றுக் குறைவானதாகும்.

மூன்றாவது கோரிக்கையில் புதிதொன்றுமில்லை. 1944 ஆகஸ்டு 15ம் தேதிய உங்களுடைய கடிதத்தில் திரு. காந்திக்கு நீங்கள் தெரிவித்திருந்த உங்களுடைய சொந்தக் கருத்தை மீண்டும் வலியுறுத்துவதேயாகும். அந்தக் கடிதத்தின் 5வது பாராவில் நீங்கள் இவ்வாறு கூறியிருந்தீர்கள்:-

''இந்த சூழ்நிலைமைகளில் நீங்கள் கூறும் அடிப்படையில் விவாதம் நடத்துவதினால் எந்தப் பயனும் ஏற்படாது என்பது தெளிவு. ஆயினும் தற்போதைய அரசியல் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டு செயல்படும் ஓர் இடைக்கால சர்க்காரில் ஒத்துழைப்பதற்கு இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் முக்கிய சிறுபான்மையோரின் தலைவர்கள் தயாராயிருந்தால், நல்ல முன்னேற்றம் ஏற்படலாம் என்று நம்புகிறேன். **அத்தகைய ஓர் இடைக்கால அரசு வெற்றியடைவதற்கு, அது அமைக்கப்படு வதற்கு முன்னால், புதிய அரசியல் சட்டம் எந்தவிதத்தில் உரு வாக்கப்பட வேண்டும் என்பது குறித்து இந்துக்கள், முஸ்லீம் கள் மற்றும் அனைத்து முக்கிய உறுப்புகளிடையிலும் கோட்பாடு ரீதியில் உடன்பாடு ஏற்பட்டாக வேண்டும்.''**

நீங்கள் எடுத்துக்கூறிய இந்தக் கோட்பாடு மன்னர்பிரான் அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டதாகக் கொள்ள வேண்டும். அந்த வகையில் அது அமைச்சரவைத் தூதுக்குழுவைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்தக் கோட்பாட்டை அமைச்சரவைத் தூதுக்குழு அமலாக்குவதற்குக் கட்சிகளின் சம்மதம் வேண்டுமென்பது தேவை யில்லை என்று தோன்றும். இதைத்தான் தாழ்த்தப்பட்ட சாதியினர் கோரியுள்ளனர்.

இந்த நிலைபாடுகள் போதிய வலுவுள்ளதாக இருப்பதால், தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோரிக்கைகள் மீது தீர்ப்புக் கூறுவ தற்கு முன்னர் இந்துக்களின் சம்மதம் தேவை என்று அமைச்சரவைத் தூதுக்குழு கருதவில்லை, அதனால்தான் தங்களுடைய பிரதிநிதி களை சிம்லா மாநாட்டுக்கு அனுப்பும்படி தாழ்த்தப்பட்ட சாதி யினர் அழைக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வருவதற்கு இட்டுச் செல்கிறது என்று கூறுவேன்.

ஆனால், துரதிருஷ்டவசமாக நம் மனத்தில் தோன்றுவது இந்த ஒரு விளக்கம் மட்டுமல்ல. மற்றொரு விளக்கமும் சாத்தியமே. ஓர் இடைக்கால அரசை அமைக்கும் பணியை மேற்கொள்வதற்கும், இந்தியாவின் வருங்கால அரசியல் சாசனத்தை உருவாக்குவதற்கான ஏற்பாட்டை நிர்ணயம் செய்வதற்கும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் கோரிக்கை பற்றிப் பரிசீலனை செய்வதற்குக் காத்திராமல், காங்கிரசுக் கும் முஸ்லீம் லீகுக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டாலே போதும் என்று அமைச்சரவைத் தூதுக்குழு கருதுகிறது என்பதே அந்த விளக்கம்.

தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒருவித ஏக்கத்துடன் இருக்கின்றனர், ஏனெனில், தூதுக்குழுவின் திட்டம் என்ன என்பதைப் பற்றி அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. தூதுக்குழு இரண்டாவதாகக் கூறிய திட்டத்தைக் கடைப்பிடிக்கிறார்களென்றால் - அது உண்மையாகவும் இருக்கக்கூடும் - தாழ்த்தப்பட்ட சாதியினர் இவ்வாறு ஏமாற்றப்பட்டிருப்பதற்கு எதிராக தன்னுடைய கண்டனத்தைத் தெரிவிக்காமலும், இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அவர்களே முற்றிலும் பொறுப்பாவார்கள் என்று தூதுக்குழுவிற்குத் தெரிவிக்காமலும் இருந்துவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து நான் தவறியவனாவேன் என்று உணருகிறேன்.

தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு பிரதிநிதி என்ற வகையில் இந்தக் கடிதத்தை நான் எழுதியிருக்கிறேன். தங்கள் அமைச்சரவைத் தூதுக்குழுவின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். உங்களுடைய சகாக்களுக்கு இந்தக் கடிதத்தை நீங்கள் சுற்றுக்கு விட்டால், நன்றியுடையவனாயிருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள,
**பி.ஆர். அம்பேத்கர்**

பெறுநர்
மேதகைய ஃபீல்ட் மார்ஷல்
ரைட் ஹானரபிள் வைகவுண்ட் வேவல்
(சைரனைகா மற்றும் வின்செஸ்டர்),
சிம்லா
ஜி.சி.பி., ஜி.எம்.எஸ்., ஐ, ஜி.எம்.ஐ.இ., சி.எம்.ஜி., எம்.சி.,
இந்தியாவின் வைஸ்ராய் மற்றும் கவர்னர் ஜெனரல்

# 17

## ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு நிர்வாக சபை உறுப்பினர்கள் எழுதிய கடிதம்[1]

*எல்ஜேபி அண்ட் ஜே/5/337: பக்கம் 248)*

*புதுடில்லி, மே 8, 1946*

*மிகவும் இரகசியம்*

அன்பார்ந்த வேவல் பிரபு அவர்களே,

இந்தியாவின் கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையின் கீழே கையொப்பமிட்டுள்ள உறுப்பினர்களாகிய நாங்கள், மேதகைய தாங்களும் அமைச்சரவைத் தூதுக்குழுவும் கருத்தில் கொண்டுள்ள ஏற்பாடுகளுக்கு உதவும் என்ற நம்பிக்கையுடன், முறையே எங்களுடைய இலாக்காக்களை மன்னர்பிரானும் மேதகைய தாங்களும் தங்கள் விருப்பப்படி முடிவு செய்வதற்காக சமர்ப்பிக்கிறோம்.

உண்மையுள்ள,

ஏ. இராமசாமி முதலியார்
இ.சி. பெந்தால்
முகம்மது உஸ்மான்
பி.ஆர். அம்பேத்கர்
ஜே.பி. ஸ்ரீவஸ்தவா
எம். அஸிஸுல் ஹக்
என்.பி. காரே
அசோகா கே. ராய்
ஏ. ரௌலாண்ட்ஸ்
ஜே.ஏ. தோர்னே
ஏ. ஹைதரி

(**பின் இணைப்பு:** கலந்து கொள்ளாத மூன்று உறுப்பினர்கள்: ஃபீல்ட் மார்ஷல் சர் கிளாட் ஆகின்லெக், சர் ஆர்தர் வாக் மற்றும் சர். ஜோகேந்திர சிங் ஆகியோர் தங்களுடைய ராஜினாமாக்களைத் தனியாக சமர்ப்பித்தனர். யுத்தசபை உறுப்பினர் பிரிட்டனில் இருந்தார். தொழில் மற்றும் சப்ளை உறுப்பினர் பணி நிமித்தம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயத்துறை உறுப்பினர் சுற்றுப்பயணத்தில் இருந்தார்.)

1. அதிகார மாற்றம், தொகுதி VII, எண். 218, பக்கம் 460-61.

# 18

## அமைச்சரவைத் தூதுக்குழு உறுப்பினர் ரைட் ஹானரபிள் திரு. ஏ.வி. அலெக்சாண்டருக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்

*பீமராவ் ஆர். அம்பேத்கர்,*[1]
*எம்.ஏ., பிஎச்.டி., டி.எஸ்சி., பார்-அட்-லா,*
*கவர்னர் ஜெனரலின்*
*நிர்வாகசபை உறுப்பினர்*

*22, பிருத்விராஜ் சாலை,*
*புதுடில்லி,*
*மே 14, 1946*

*அன்பார்ந்த திரு. அலெக்ஸாண்டர் அவர்களே,*

காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகுக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தது குறித்து வருந்துகிறேன். உங்களுக்குப் பரிவும் நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அதே சமயத்தில் உடன்பாடு ஏற்படுத்துவதற்காக தூதுக்குழு மேற்கொண்ட முயற்சியானது ஒரு முதிய பனியா தனது சொத்துக்கு வாரிசு இல்லாத நிலையில், ஒரு வாரிசைப் பெறுவதற்காக ஓர் இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட சம்பவத்தை எனக்கு நினைவூட்டுகிறது என்று என்னால் கூறாமலிருக்க முடியவில்லை. மணமகள் கருவுற்றாள். ஆனால் மணமகன் கடும் நோய்வாய்ப்பட்டான். ஆயினும், குழந்தையைப் பார்க்காமல் தான் மரணமடையப் போவதில்லை என்று உறுதி பூண்ட அவன் பிரசவமாகும் வரையில் காத்திருக்க விரும்பவில்லை. பிரசவமாவதற்கு நிறையக் காலமிருந்தது. மிகவும் பொறுமை இழந்த அவன் மருத்துவரை அழைத்து, மனைவியின் வயிற்றை அறுத்து, பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தனக்குக் காட்டும்படி கூறினான். அறுவை சிகிச்சையின் விளைவாகக் குழந்தை, தாய் இருவருமே மரணமடைந்தனர். அந்த பனியா செய்ததைப் போலவே தூதுக்குழுவும் செய்ய விரும்பியது என்று கூறுவேன். உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம், ஆனால், கர்ப்பம் முதிர்ச்சியடைவதற்கு இயற்கையாகத் தேவைப்படும் காலத்திற்கு முன்பாகவே வலுக்கட்டாயமாகப் பிரசவத்தை ஏற்படுத்தும் பணியில் தூதுக்குழு இறங்கியது என்று என்னைப் போலவே பலர் நினைக்கிறார்கள்.

---

1. ஆதாரம்: அம்பேத்கர் தனிப்பட்ட வகையில் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் - ஆ-ர்.

2. இந்துக்களும் முஸ்லீம்களும் இந்த நாட்டின் வருங் காலத்தைப் பற்றி முடிவு செய்வதற்கு இன்று மனரீதியில் தகுதி யற்றவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுவது சரியே என்று எனக்குத் தோன்றுகிறது. இந்துக்களும் முஸ்லீம்களும் வெறும் கும்பல்கள். ஒரு கும்பல் கூட்டு முறையில் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஆவேசத்தைக் காட்டிலும் பொருளாயத ஆதாயத்தினால் அவ்வளவாகக் கவரப் படுவதில்லை என்பதை உங்களுடைய அனுபவத்தில் கண்டிருப்பீர் கள். ஏற்படவிருக்கும் அனுகூலங்களைப் பற்றி நிதானமாக மதிப்பீடு செய்து அதனடிப்படையில் செயல்படச் செய்வதைக் காட்டிலும் ஒரு மக்கள் திரளைக் கூட்டாகத் தியாகம் செய்யும்படி இணங்க வைப்பது எளிதாகும். ஒரு கூட்டம் லாப, நட்டம் பற்றிய உணர்வை இலகுவாக இழந்து விடுகிறது. அது உயர்வான அல்லது தாழ்ந்த, அன்பான அல்லது காட்டுமிராண்டித்தனமான, கருணையான அல்லது கொடூரமான நோக்கங்களால், உந்துதல்களால் நெகிழ்ந்து விடுகிறது. ஆனால் எப்போதும் விவேகத்துக்கு அப்பாற்பட்ட தாகவோ கீழான தாகவோ இருக்கிறது. அனைவரின் ஆவேச உணர்ச்சி யில் ஒவ்வொருவரின் பகுத்தறிவும் இழக்கப்பட்டு விடுகிறது. மரபுரிமைப் பண்பை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் தற்கொலை செய்து கொள்ளும்படி ஒரு கூட்டத்தை இணங்க வைப்பது எளிதான தாகும். நீங்கள் எவ்வாறு முன்செல்ல வேண்டும் என்று உங்களுக்கு ஆலோசனை கூற வேண்டியது என்னுடைய பொறுப்பல்ல. பங்கி பஸ்தி[1]யிலும் 10, அவுரங்கஜிப் சாலை[2]யிலும் தூதுக்குழு கூடுதல் அறிவொளியையும், உயர்வான உத்வேகத்தையும் பெற்றுள்ளது. அத்தகைய அறிவொளியையும் உத்வேகத்தையும் மட்டுப்படுத்தும் வகையில் நான் எதையும் கூறமாட்டேன். ஆனால் அதேசமயத் தில், அவசரப்பட்டு செயல்பட்ட முதியவரைப் போன்ற ஒரு பரிதாப கரமான காட்சியை தூதுக்குழு வெளிப்படுத்தாமலிருக்க வேண்டு மெனில் (அயர்லாந்தின் சுயாட்சிக்கான தனது பிரச்சாரத்தில் கிளாட்ஸ்டன் ஈடுபட்ட முறையை வர்ணிப்பதற்கு சேம்பர்லேன் உபயோகப்படுத்திய சொற்றொடர்) ராஜதந்திரத்தில் 'நிதானமடை வதற்கான காலகட்டம்' என்று அழைக்கப்படுவதை அனுமதிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நிலைமைக்குப் பரிகாரம் காண்பது அவர்களுக்கு இலகுவாக இருக்கும் என்று நிச்சயமாகக் கருதுகிறேன்.

---

1. பங்கி பஸ்தி - மகாத்மா காந்தி தங்கியிருந்த இடம்
2. 10, அவுரங்கஜிப் சாலை - எம்.ஏ. ஜின்னா தங்கியிருந்த இடம் (மொ.ர்)

3. தூதுக்குழு, பெரிய கட்சிகள், மற்றும் பெரிய கட்சிகளிடம் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட விஷயம் இது. தீண்டப்படாதவர்களின் பிரச்சினைக்கும் அரசியல் சட்டப்பூர்வமான பாதுகாப்புகள் வேண்டுமென்ற அவர்களது கோரிக்கைக்கும் நீங்கள் எவ்வாறு பரிகாரம் காணப்போகிறீர்கள் என்று தெரிந்து கொள்வதில் நான் அக்கறை உடையவனாக இருக்கிறேன். சிம்லா பேச்சுவார்த்தைகளின் கடைசி நாளன்று தூதுக்குழு வெளியிட்ட அறிக்கையில், தாங்கள் டில்லிக்குத் திரும்பியபின், ஒரு சில நாட்களுக்குள், தாங்கள் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் அடுத்த நடவடிக்கை குறித்து அறிவிக்கப் போவதாகக் கூறப்பட்டிருந்தது. அனைத்து தாழ்த்தப்பட்ட சாதியினரும் இந்த அறிவிப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவு. தூதுக்குழு அடுத்து செய்யப்போவது இறுதியாக அவர்களது எதிர்காலத்தை முடிவு செய்யும். தூதுக்குழுவின் முடிவு, ஒன்று தீண்டப்படாதவர்களுக்கு வாழ்க்கை, விடுதலை, மகிழ்ச்சிக்கான பாதையைத் திறக்கும், அல்லது அது அவர்களது சவப்பெட்டியில் ஓர் ஆணியை அறையும். பிரச்சினை வாழ்வா சாவா என்றிருப்பதனால், தீண்டப்படாதவர்களின் பிரச்சினையை ஒரு சில நிமிடங்கள் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது தவறாகாது என்று நினைக்கிறேன்.

4. தீண்டப்படாதவர்களின் பிரச்சினையானது அவர்களை எதிர்நோக்கும் மிகவும் கடினமான பிரச்சினையாகும். ஆனால் அதிர்ஷ்டவசமாகக் கீழ்வரும் உண்மைகளை மனதில் பதியவைத்துக் கொண்டால், அதைப் புரிந்து கொள்வது எளிதாகும்: தீண்டப்படாதவர்கள் மிகப் பரந்த இந்து மக்கள் திரளினால் சூழப்பட்டுள்ளார்கள். அவர்கள் பகை உணர்ச்சி கொண்டவர்களாக இருக்கிறார்கள். தீண்டப்படாதவர்களுக்கு எதிராக எத்தகைய அநீதியையும் அட்டூழியத்தையும் இழைப்பதற்கு அவர்கள் வெட்கப்படுவதில்லை. அன்றாடம் நிகழ்ந்து வருகின்ற இந்தக் கொடுமைகளை நிவர்த்தி செய்வதற்குத் தீண்டப்படாதவர்கள் அரசாங்கத்தின் உதவியைக் கோர வேண்டிய வர்களாக இருக்கின்றனர். இந்த நிர்வாகத்தின் (அரசின்) தன்மையும் இயைபும் என்ன? சுருங்கக் கூறின், இந்தியாவிலுள்ள அரசு நிர்வாகம் முற்றிலும் இந்துக்களின் கைகளில் உள்ளது. அது அவர்களின் ஏக போகமாகும். மேலிருந்து கீழ்வரை அது அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்கள் ஆதிக்கம் செலுத்தாத இலாகாவே இல்லை. காவல் துறை, நீதித்துறை மற்றும் வருவாய்த் துறை, உண்மையில் அரசு நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும்

அவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். நினைவில் கொள்ள வேண்டிய அடுத்த விஷயம் என்னவெனில், நிர்வாகத்தில் உள்ள இந்துக்கள் சமூக-நேசமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமன்றி, அவர்கள் சமூக-விரோதிகளாகவும், தீண்டப்படாதவர்களின் பகைவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் ஒரே நோக்கம் தீண்டப்படாதவர்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டுவதும், அவர்களுக்கு சட்டத்தின் அனுகூலங்கள் கிடைக்காமல் பறிப்பதும் மறுப்பதும் மட்டுமன்றி, கொடுங்கோன்மை மற்றும் ஒடுக்குமுறையிலிருந்து சட்டத்தின் பாதுகாப்பை அவர்களுக்கு மறுப்பதுமாகும். இதன் விளைவாக, தீண்டப்படாதவர்கள் இந்து மக்களுக்கும் இந்துக்கள் நிரம்பிய நிர்வாகத்திற்கும் இடையில் வைக்கப்படுகிறார்கள். இவற்றில் ஒருவர் அவர்களுக்கு எதிராக அநியாயங்கள் புரிகிறார், மற்றொருவர் பாதிக்கப்படுவோர்களைக் காப்பாற்றுவதற்கு பதிலாக அநீதி இழைப்பவரைப் பாதுகாக்கிறார்.

5. இந்தப் பின்னணியில், காங்கிரஸ் வகைப்பட்ட சுயராஜ்யம் தீண்டப்படாதவர்களுக்கு என்ன பொருள்பட முடியும்? அதன் பொருள் ஒன்றே ஒன்றுதான்: அதாவது, இன்று, நிர்வாகம் மட்டும் தான் இந்துக்களின் கைகளில் உள்ளது, சுயராஜ்யத்தின் கீழ் சட்டப் பேரவையும் அரசும் கூட இந்துக்களால் நிரப்பப்பட்டுவிடும். சுயராஜ்யம் தீண்டப்படாதவர்களின் துன்ப துயரங்களை உக்கிரமாக்கவே செய்யும் என்பதைக் கூறத் தேவையில்லை. ஏனெனில், பகைமை உணர்வு கொண்ட நிர்வாகத்தை எதிர்கொள்வதோடு கூட, தீண்டப்படாதவர்கள் பகைமையான அல்லது அசட்டையான சட்டப் பேரவையையும், ஒரு சொரணையற்ற அரசையும், தீண்டப்படாதவர்கள்பால் கட்டுப்பாடற்ற மற்றும் கடிவாளமில்லாத நச்சுமனப் பாங்கையும், கொடுமையும், அநீதியான போக்கையும் கொண்ட ஒரு நிர்வாகத்தையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வேறு விதமாக இதைக் கூறவேண்டுமெனில், காங்கிரஸ் வகைப்பட்ட சுயராஜ்யத்தின் கீழ் தீண்டப்படாதவர்களுக்கு இந்துக்களும் இந்து மதமும் அவர்களுக்கு நிர்ணயித்துள்ள இழிவார்ந்த எதிர்காலத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு அவர்களுக்கு வழியே இருக்காது.

6. இந்தச் சுயராஜ்யம் தங்களுக்கு ஒரு பேரழிவாவதினின்றும் தடுப்பதற்குள்ள ஒரேவழி சட்டப்பேரவையில் தங்களுடைய பிரதிநிதிகள் இடம்பெறச் செய்வதுதான் என்று தீண்டப்படாதவர்கள் ஏன் வலியுறுத்தி வருகிறார்கள் என்பதற்கான காரணத்தை இது ஓரளவு உங்களுக்குப் புரியவைக்கும் என்று நம்புகிறேன், அப்பொழுது

தான், இந்துக்களினால் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களையும் அநீதிகளையும் எதிர்த்து அவர்கள் தொடர்ந்து கண்டனம் தெரிவித்துக் கொண்டிருக்க முடியும். அரசில் தங்களுடைய பிரதிநிதி கள் இருப்பதன் வாயிலாக அவர்கள் தங்களுடைய மேம்பாட்டுக் கானத் திட்டங்களை உருவாக்க முடியும். அரசுப் பணிகளில் பிரதி நிதிகள் இருப்பதன் வாயிலாக, அரசு நிர்வாகம் முற்றிலும் தங்க ளுக்குப் பகைமையாக இல்லாமற் செய்ய முடியும். சட்டப்பூர்வ மான பாதுகாப்புகள் வேண்டுமென்ற தீண்டப்படாதவர்களின் கோரிக்கையின் நியாயத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானால், தீண்டப்படாதவர்கள் ஏன் தனித் தொகுதிகளை விரும்புகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வதில் எவ்வித சிரமமுமிருக்காது. சட்டப்பேரவையில் தாழ்த்தப்பட்டவர்கள் சிறுபான்மையினராக இருப்பார்கள், அவர்கள் சிறுபான்மையாக இருக்குமாறு விதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களால் பெரும்பான்மையினரை சமாளிக்க முடியாது, இந்தப் பெரும்பான்மையினர் வகுப்புவாதிகளாக இருப்பது நிலையானது, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டது என்றுதான் கூற வேண்டும். பெரும்பான்மையினருடன் எந்த அடிப்படையில் தங்க ளால் ஒத்துழைத்துப் பணியாற்ற முடியும் என்ற நிபந்தனைகளை நிர்ணயிக்கும் நிலையில் தங்களை வைத்துக் கொள்வது மட்டுமே அவர்களால் செய்ய முடியும். பெரும்பான்மையினர் விதிக்கும் நிபந்தனைக்ளை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை நிர்ப்பந்தப் படுத்தக்கூடாது. இரண்டாவதாக, பெரும்பான்மையினர் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு மறுத்து, தங்களுடைய அநீதிகளைப் போக்குவதற்கு இணங்காவிடில், சட்டப்பேரவையில் பெரும்பான்மை யினருக்கு எதிராக குறைந்தபட்சம் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிப்பதற்காவது அவர்களுக்கு சுதந்திரம் இருக்கும். கண்ட னத்தைத் தெரிவிப்பதற்கான தங்களுடைய சுதந்திரத்தைத் தாழ்த்தப் பட்டவர்கள் எவ்வாறு நிலைநாட்டுவது? சட்டப்பேரவைகளில் உள்ள அவர்களது பிரதிநிதிகள், தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பெரும்பான்மையினரின் வாக்கு காரணமாயில்லாமல் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். தனித் தொகுதிகள் வேண்டுமென்ற அவர் களுடைய கோரிக்கைக்கு இதுதான் அடிப்படை.

7. தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கிடைத்தா லன்றி, எந்தப் பாதுகாப்புகளும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வித மதிப்புடையவையாகவும் இருக்கப் போவதில்லை. தனித் தொகுதி தான் பிரச்சினையின் மையமான அம்சமாகும். 1946 ஏப்ரல் 9ம் தேதி யன்று, தூதுக்குழுவினர் பேட்டி கண்ட மூன்று காங்கிரஸ் ஹரிஜனங்

கள் அமைச்சரவைத் தூதுக்குழுவிடம் சமர்ப்பித்த மனுவின் ஒரு நகல் எனக்கு முன்னால் இருக்கிறது. அவர்கள், ''இங்கிலாந்தின் மக்களாகிய நாங்கள்'' என்று கூறி, நாடாளுமன்றத்திற்கு ஒரு மனுவை சமர்ப்பிப்பதற்குத் துணிவுகொண்ட டூலி தெருவின் மூன்று தையற்காரர்களைக் காட்டிலும் எவ்விதத்திலும் மேம்பட்டவர்கள் அல்ல. இதைத் தவிர, தாழ்த்தப்பட்ட சாதியினரின் சம்மேளனத்தின் சார்பில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் இந்தக் காங்கிரஸ் ஹரிஜனங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் எத்தகைய வேறுபாடும் இல்லை என்பதை உணர்வது உசிதமாகும். இதிலுள்ள ஒரே வேறுபாடு, தேர்தல் தொகுதிகள் பிரச்சினை சம்பந்தமானதே யாகும். காங்கிரஸ் ஹரிஜனங்களின் கோரிக்கைகளை நீங்கள் எவ்வாறு வியாக்கியானம் செய்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. அவை உண்மையில் கோரிக்கைகள் அல்ல. அரசியல் பாதுகாப்புகள் என்ற வகையில் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் காங்கிரஸ் என்ன கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறது என்பதையே அவை பிரதிநிதித் துவப்படுத்துகின்றன. இது நான் புரிந்து கொண்டிருக்கும் விஷயம் மட்டுமல்ல. இதுதான் நான் அறிந்து கொண்டதும் ஆகும். கூட்டுத் தொகுதிகளை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராயிருந்தால், காங் கிரஸ் அதனுடைய பங்குக்கு, என்னுடைய இதர கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்பதற்குத் தயாராயிருக்கும் என்று காங்கிரசின் மனநிலையை அறிந்த நபர்கள் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினரின் இதர எல்லா கோரிக்கைகளையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கும் காங்கிரஸ் ஒரே ஒரு கோரிக் கையை, அதாவது தனித் தொகுதிகளை மட்டும் அது ஆட்சேபிப்பது ஏன் என்று நீங்கள் வியப்படைவீர்கள். காங்கிரஸ் என்ன சூழ்ச்சி யைக் கையாள்கிறது என்பதை நீங்கள் அறிந்தால் வியப்படைய மாட்டீர்கள். அது ஒரு மிகவும் ஆழமான சூழ்ச்சியாகும். தாழ்த்தப் பட்டவர்களுக்கு சில பாதுகாப்புகள் வழங்குவதினின்றும் தப்பித்துக் கொள்வதற்கு வழி இல்லை என்பதை உணர்ந்துள்ளதினால் காங் கிரஸ், அந்த பாதுகாப்புகளைப் பயனற்றவையாக ஆக்குவதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்கு விரும்புகிறது. கூட்டுத் தொகுதிகள் ஏற்பாட்டில், பாதுகாப்புகளைப் பயனற்றதாகச் செய்யும் கருவி அடங்கியுள்ளதாகக் காங்கிரஸ் கருதுகிறது. அதனால்தான் காங்கிரஸ் கூட்டுத் தொகுதிகளை வலியுறுத்தி வருகிறது. ஏனெனில் கூட்டுத் தொகுதிகள் என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிகார மில்லாத பதவியைக் கொடுப்பது என்று பொருள். அதிகாரத்துடன் கூடிய பதவியையே தாழ்த்தப்பட்டவர்கள் விரும்புகிறார்கள். தனித்

தொகுதிகள் மூலமாகத்தான் அவர்கள் இதைப் பெற முடியும். அதனால்தான் அவர்கள் அதை வலியுறுத்தி வருகின்றனர்.

8. தாழ்த்தப்பட்ட சாதியினருக்குத் தனித்தொகுதிக்கு ஆதரவான வாதம் மிகவும் உறுதியான வாதமாகும். காங்கிரசைத் தவிர பிற கட்சிகள் அனைத்தும் அதை ஏற்றுக் கொள்கின்றன. தனித் தொகுதிகளுக்கு ஆதரவான வாதங்களை, 1946, மே 3ம் தேதியன்று வேவல் பிரபுவுக்கு நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதை அவர் உங்களுக்குக் காண்பித்திருப்பார், எனவே அவற்றை மீண்டும் இங்கே எடுத்துக் கூறுவது அவசியமில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் இந்தக் கோரிக்கை சம்பந்தமாக தூதுக்குழு என்ன செய்யப் போகிறது என்பதே கேள்வி. தீண்டப்படாதவர்களை இந்துக் களின் அரசியல் நுகத்தடியின் கீழிருந்து அவர்கள் விடுவிக்கப் போகிறார்களா? அல்லது காங்கிரசையும் அது பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இந்து பெரும்பான்மையோரையும் நண்பர்களாக்கிக் கொள்வதற்காகக் கூட்டுத் தொகுதிகள் முறைக்கு ஆதரவளிப்பதன் வாயிலாக அவர்களை ஓநாய்களுக்கு இரையாக்கப் போகிறார்களா? பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறிச் செல்வதற்கு முன்னதாக சுய ராஜ்யம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு கழுத்துச் சுருக்காக மாறாமல் இருப்பதை மன்னர்பிரான் அரசாங்கம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மன்னர்பிரான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வ தற்கு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரிமை இருக்கிறது.

9. தாழ்த்தப்பட்ட சாதியினரின்பால் பிரிட்டிஷாருக்கு ஒரு தார்மிகப் பொறுப்பு இருக்கிறது என்று கூறுவதற்கு என்னை அனுமதி யுங்கள். எல்லாச் சிறுபான்மையோர்பாலும் அவர்களுக்கு தார்மிகப் பொறுப்பு இருக்கக்கூடும். ஆனால் அது ஒருபோதும் தாழ்த்தப்பட்ட வர்கள்பால் அவர்கள் மீது சார்ந்துள்ள பொறுப்பைக் கடந்து அப்பால் செல்ல முடியாது. மிகச் சொற்பமான பிரிட்டிஷ்காரர்களே இதை உணர்ந்துள்ளனர் என்பதும் மிகக் குறைவான பிரிட்டிஷ் காரர்களே இதை நிறைவேற்றத் தயாராயிருக்கிறார்கள் என்பதும் பரிதாபத்துக்குரிய விஷயமாகும். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருப்பதற்கு தீண்டப்படாதவர்கள் நல்கிய உதவிதான் காரணமாகும். கிளைவ்கள், ஹேஸ்டிங்கள், கூட்ஸ்கள் முதலியோரால் இந்தியா வெல்லப்பட்டது என்று பல பிரிட்டிஷ்காரர்கள் நினைக்கிறார் கள். இதைக் காட்டிலும் பெரிய தவறு வேறொன்றும் இருக்க முடியாது. இந்தியா, இந்தியர்களைக் கொண்ட ஒரு ராணுவத்தினால்

வெல்லப்பட்டது. அந்த ராணுவத்தில் இருந்த இந்தியர்கள் அனைவரும் தாழ்த்தப் பட்டவர்கள். இந்தியாவை வெல்வதற்கு பிரிட்டிஷ்காரர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் உதவி செய்யாமலிருந்திருந்தால், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி சாத்தியமாயிருக்காது. பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்கத்திற்கு அஸ்திவாரம் அமைத்த பிளாசி சண்டையை, இந்தியாவை வெல்வதைப் பூர்த்தி செய்த கிர்கி போரை எடுத்துக் கொண்டு பாருங்கள். விதியை நிர்ணயித்த இந்த இரண்டு போர்களிலும் பிரிட்டிஷ்காரர்களுக்காக போரிட்ட படைவீரர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவர்களே.

10. தங்களுக்காகப் போரிட்ட இந்த தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பிரிட்டிஷ்காரர்கள் என்ன செய்தார்கள்? அது ஓர் அவமானகரமான வரலாறு ஆகும். அவர்கள் செய்த முதல் காரியம் அவர்களை ராணுவத்தில் சேர்ப்பதை நிறுத்தியதுதான். இதைக் காட்டிலும் ஈவு இரக்கமற்ற, கருணையற்ற, நன்றியற்ற, கொடூரத்திலும் கொடூரமான செயலை வரலாற்றில் எங்கும் காணமுடியாது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு ராணுவத்தின் கதவை மூடியதில் அவர்களின் ஆட்சியை இங்கு நிறுவுவதற்கு தாழ்த்தப்பட்டவர்கள் அவர்களுக்கு உதவி செய்ததையும், 1857ம் வருடக் கலகத்தின்போது சுதேசிப் படைகளின் ஒரு சக்தி வாய்ந்த கூட்டணியினால் பேராபத்துக்குள்ளானபோது அவர்களைப் பாதுகாத்து நின்றதையும் பிரிட்டிஷ்காரர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பாதிப்புக்குள்ளானார்கள் என்பது குறித்து பிரிட்டிஷ்காரர்கள் எவ்விதக் கவலையும் படவில்லை; அதற்கு மாறாக ஒரே ஒரு வரி எழுதி அவர்களின் வாழ்க்கை ஆதாரத்தைப் பறித்துவிட்டு, அவர்களுடைய முந்திய இழிவான நிலைக்குள் அவர்களை மீண்டும் விழும்படிச் செய்தார்கள். அவர்களைச் சமூக இழிவுகளிலிருந்து மீட்பதற்கு எவ்வகையிலாவது பிரிட்டிஷ்காரர்கள் அவர்களுக்கு உதவி செய்தார்களா? மீண்டும் இதற்கு பதில் ''இல்லை'' என்பது தான். பள்ளிக்கூடங்கள், கிணறுகள், பொது இடங்கள் முதலியவை தாழ்த்தப்பட்டவர்களுக்கு மூடப்பட்டன. பொதுநிதிகளிலிருந்து நிர்வகிக்கப்படும் எல்லா நிலையங்களிலும் அனுமதிக்கப்படுவதற்கு, குடிமக்கள் என்ற வகையில் தீண்டப்படாதவர்கள் தகுதி பெறும்படிச் செய்வதற்கு உதவுவது பிரிட்டிஷ்காரர்களின் கடமையாகும். ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் அது எதையும் செய்யவில்லை. இன்னும் மோசமானது என்னவென்றால் தீண்டாமையைத் தாங்கள் தோற்றுவிக்கவில்லை என்று கூறுவதன் மூலம் தங்களுடைய செயலற்ற தன்மையை அவர்கள் நியாயப்படுத்தினர். தீண்டாமை

பிரிட்டிஷ்காரர்களால் தோற்றுவிக்கப்படாமலிருந்திருக்கலாம். ஆனால் அன்று ஆட்சிபுரிந்த அரசு என்ற முறையில், தீண்டாமையை அகற்றுவது நிச்சயமாக அவர்களின் பொறுப்புத்தான். ஓர் அரசின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளைப் பற்றி உணர்வுள்ள எந்த அரசும் அதைத் தவிர்த்திருக்க முடியாது. பிரிட்டிஷ் அரசு என்ன செய்தது? இந்த சமுதாயத்தை எந்த வகையிலும் சீர்திருத்தம் செய்வது சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையையும் தொடுவதற்கு அவர்கள் மறுத்தனர். இது விரைவில் சமூக சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட மட்டிலும் தீண்டப்படாதவர்கள் வாழ்ந்து வரும் இக்காலத்திய அரசு, அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, துன்புற்று, வாழ்ந்து, மரணமடைந்துவந்த, மறக்கப்பட்ட வரலாற்றுக் காலத்திய சுதேச மன்னராட்சிகளினின்றும் எந்த ஜீவாதார அம்சத்திலும் வேறுபாட்டிருக்கவில்லை. அரசியல் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, மாற்றம் பெயரளவானதேயாகும். இந்துக்களின் கொடுங்கோன்மை எப்போதும் போலவே தொடர்ந்து நீடித்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அது தடை செய்யப்படுவதற்கு மாறாக, அது தட்டிக் கொடுத்து வளர்க்கப்பட்டது. சமூகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது பிரிட்டிஷ்காரர்கள், ஏற்கெனவே இருந்து வந்த ஏற்பாட்டை அப்படியே ஏற்றுக்கொண்டு அவற்றைப் பேணிக் காத்தனர். இதற்கு உதாரணமாக ஒரு சீனத் தையற்காரர் செய்ததைத் தான் கூறமுடியும். பழைய கோட்டு ஒன்று அவரிடம் மாதிரிக்காகக் கொடுக்கப்பட்டது. அவர் அதிலிருந்ததைப் போன்றே கிழிசல்களையும், ஒட்டுத் தையல் துண்டுகளையும் கொண்ட அதே போன்று ஒரு புதிய கோட்டைத் தைத்துப் பெருமிதத்துடன் கொடுத்தாராம்! இதன் விளைவு என்ன? இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு 200 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப் பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குப் பரிகாரம் காணப்படாமலேயே இருந்து வருகிறது. அவர்களது முன்னேற்றம் ஒவ்வொரு கட்டத்திலும் தடுக்கப்பட்டு வருகிறது. உண்மையில், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி எதையாவது சாதித்திருக்கிறதென்றால், அது, தீண்டப்படாத வர்களின் நிலையான விரோதியாக இருந்து வருவதும், தொன்றுதொட்டு தீண்டப்படாதவர்கள் அனுபவித்து வரும் அனைத்துக் கொடுமைகளுக்கும் பிதாமகராக இருந்து வருவதுமான பிராமணீயத்தை வலுப்படுத்தி, அதற்குப் புத்துயிர் ஊட்டியதேயாகும்.

11. பிரிட்டிஷ்காரர் தங்கள் அதிகாரத்தைக் கைவிட்டுப் போகப் போகிறார்கள் என்று அறிவிப்பதற்காக நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். ''ஆட்சியையும் அதிகாரத்தையும் நீங்கள் யார் கையில் கொடுத்துவிட்டுப் போகப் போகிறீர்கள்?'' என்று ஒரு தீண்டப்படாதவர் கேட்டால், அது தவறல்ல. பிராமணீயத்தின் ஆதர வாளர்களின் கையிலா? அவ்வாறாயின் இதன் பொருள் என்ன? வன்னெஞ்சக் கொடுங்கோலர்களின், தீண்டப்படாதவர்களை கொடூர மாக ஒடுக்கின்றவர்களின் கைகளில் அதிகாரம் தரப்படுகிறது என்றுதான் இதற்குப் பொருள். இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தை ஒழித்துக் கட்டுவதானது பிற கட்சிகளின் உறுப்பினர்களிடை யில் எத்தகைய மனசாட்சி உறுத்தல்களையும் ஏற்படுத்த தேவை யில்லை. ஆனால் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் நிலைபாடு என்ன? உரிமைகளற்றவர்களுக்காகவும் சமூகத்தின் அடித்தட்டிலுள்ளவர் களுக்காகவும் நிற்பதாகத் தொழிற்கட்சி உரிமை கொண்டாடுகிறது. அது தன் மனசாட்சிக்கு உண்மையாக நடந்து கொள்வதென்றால், அது இந்தியாவின் ஆறு கோடி தீண்டப்படாதவர்களுக்கு ஆதரவாக நிற்கும் என்பதிலும், அவர்களின் நிலையைப் பாதுகாப்பதற்குத் தேவையான யாவற்றையும் செய்யுமென்பதிலும், தமது மதத்தி னாலும் தமது வாழ்க்கைத் தத்துவத்தினாலும் நிர்வாகம் செய்வ தற்குத் தகுதியற்றவர்களாக உள்ள, உண்மையில் தீண்டப்படாத வர்களின் பகைவர்களாக உள்ளவர்களின் கைகளில் அதிகாரம் போய்ச் சேர்வதற்கு அது அனுமதிக்காது என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் தர்மகர்த்தாக்கள் என்று எப்போதும் தங்களைக் கூறிக்கொண்டு வந்திருக்கும் பிரிட் டிஷ்காரர்கள், அந்த தாழ்த்தப்பட்ட சாதியினரைப் புறக்கணித் ததற்குப் பிராயச்சித்தமான ஒரு நடவடிக்கையாக இது இருக்கும் என்பதைத் தவிர வேறல்ல.

12. இவ்வளவு விரிவாக இதைப் பற்றி நான் கூறுவதற்கு, தீண்டப்படாதவர்கள் எழுப்பிய சட்டபூர்வமான பாதுகாப்புகள் என்ற பிரச்சினை சம்பந்தமாக தூதுக் குழுவினர் சாதித்துவரும் மௌனத்தினால் எழுந்துள்ள கவலையே காரணமாகும். தீண்டப் படாதவர்களுக்கும் சிறுபான்மையோருக்கும் மன்னர் பிரான் அரசி னால் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் சம்பந்தமாகத் தூதுக் குழு கடைப்பிடித்துவரும் கண்ணோட்டத்தினால் இந்தக் கவலை ஆழமாகியுள்ளது. இந்த உறுதிமொழிகள் குறித்த தூதுக்குழுவின் கண்ணோட்டம் பால்மர்ஸ்டன் பிரபுவை எனக்கு நினைவுப்படுத்து கிறது. ''எங்களுக்கு நிரந்தரமான விரோதிகள் இல்லை; நிரந்தர மான நண்பர்களும் இல்லை. நிரந்தரமான நலன்கள் மட்டுமே

எங்களுக்கு உண்டு'' என்று அவர் கூறியிருந்தார். இந்தப் பால்மர்ஸ்டனின் கோட்பாட்டைத் தனது வழிகாட்டியாக தூதுக்குழு ஏற்றிருக்கிறது என்ற எண்ணம் உருவாகுமேயானால், தீண்டப்படாதவர்களுக்கு இது எவ்வளவு பயங்கரமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம். பிரிட்டனின் உரிமைகளற்ற வர்க்கங்களிலிருந்து நீங்கள் வந்துள்ளீர்கள். எனவே, இந்தியாவின் உரிமைகளற்ற 6 கோடி மக்களுக்கு செய்யப்படவிருக்கும் உத்தேச துரோகத்தைத் தடுப்பதற்கு உங்களாலான எல்லாவற்றையும் நீங்கள் செய்வீர்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் அவர்களின் கோரிக்கையை உங்கள் முன் வைப்பதற்கு எண்ணினேன். தூதுக்குழுவில் உங்களைக் காட்டிலும் மேலான நண்பர் தங்களுக்கு இல்லை என்று தீண்டப்படாதவர்கள் கருதுகிறார்கள் என்று உங்களிடம் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்''.

தங்கள் உண்மையுள்ள,
பி.ஆர். அம்பேத்கர்

பெறுநர்:
ரைட் ஹானரபிள் திரு. ஏ.வி. அலெக்சாண்டர்,
சி.எச். எம்.பி., உறுப்பினர், அமைச்சரவைத் தூதுக்குழு,
வைஸ்ராய் மாளிகை,
புதுடில்லி.

# 19

## பெதிக் லாரென்ஸ் பிரபுவுக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்

*(எல்/பி அண்ட் ஜே/10/43: எஃப்/96-8)*

22, பிருத்விராஜ் சாலை,
புதுடில்லி
மே 22, 1946

[1]அன்பார்ந்த பெதிக்லாரென்ஸ் பிரபு அவர்களே,

அமைச்சரவைத் தூதுக்குழுவின் அறிக்கையை வாசித்ததில், சில விஷயங்கள் மிகவும் ஐயப்பாட்டுக்குரியதாக இருப்பதைக் காண்கிறேன். அவற்றைக் கீழே தருகிறேன்:

(1) அறிக்கையின் 20வது பத்தியில் ''சிறுபான்மையோர்'' என்ற சொல் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் உட்படுத்துகிறதா?

(2) 20வது பத்தியில், பிரஜைகள், சிறுபான்மையோர், பழங் குடியினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களின் உரிமைகள் பற்றிய ஆலோசனைக் குழுவில் சம்பந்தப்பட்டவர்களின் நலன்களுக்கு முழுப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. சம்பந்தப்பட்டோரின் நலன்களுக்கு ஆலோசனைக் குழுவில் உண்மையில் முழுப் பிரதிநிதித்துவம் இருக்கிறதா என்பதை யார் மேற்பார்வையிடுவது?

(3) சம்பந்தப்பட்டவர்களின் நலன்களுக்கு முழுப் பிரதிநிதித் துவம் கிட்டும்படி பார்த்துக் கொள்வதற்கு, அத்தகைய நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற, அரசியல் நிர்ணய சபைக்கு வெளியி லுள்ள நபர்களை குழுவில் கூடுதல் உறுப்பினர்களாகச் சேர்க்கும் உரிமையை மன்னர்பிரான் அரசாங்கம் தன்னிடமே வைத்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறதா? வெளியிலிருந்து பிரதிநிதிகளை நியமிக்க வேண்டியதன் அவசியம் இன்றியமையாததாகத் தோன்றுகிறது. ஏனெனில், அவ்வாறில்லாவிட்டால், அரசியல் நிர்ணய சபைக்குள் ளிருந்து பழங்குடியினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்குப்

---

1. அதிகார மாற்றம், தொகுதி VII, எண். 359, பக்கம் 661-62.

பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வேறு எந்த வழியும் இல்லை. நியமனம் செய்வதற்கான அவசியம் ஒத்துக்கொள்ளப்பட்டால், அரசியல் நிர்ணய சபைக்கு வெளியிலிருந்து தாழ்த்தப்பட்ட சாதி உறுப்பினர்களை நியமனம் செய்யும் கோட்பாடு, ஆலோசனைக் குழுவில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் முழுப் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு விஸ்தரிக்கப்படுமா?

(4) அறிக்கையின் 22வது பத்தியில் யூனியன் அரசியல் நிர்ணய சபைக்கும் பிரிட்டனுக்கும் இடையில், அதிகார மாற்றத்திலிருந்து எழும் சில விஷயங்களுக்கு வகை செய்யும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான ஒரு ஷரத்து இருக்கிறது. இந்த உத்தேச ஒப்பந்தத்தில், கிரிப்ஸ் பிரேரணைகளில் வரையறுத்திருந்தபடி, சிறுபான்மையோரின் பாதுகாப்புக்கான ஒரு ஷரத்தும் சேர்த்துக் கொள்ளப்படுமா? அந்த ஒப்பந்தத்தில் அத்தகைய ஒரு ஷரத்து இல்லாதிருக்குமேயானால், மன்னர் பிரான் அரசாங்கம் ஆலோசனைக் குழுவின் முடிவுகள் அரசியல் நிர்ணய சபையை எவ்வாறு கட்டுப்படுத்தும்படிச் செய்யும்?

(5) அறிக்கை ஐரோப்பியர்களை, ''பொது'' என்ற பிரிவில் சேர்த்துள்ளது. இதிலிருந்து, அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் ஐரோப்பியர்களுக்கும் வாக்குரிமை உண்டு என்று ஊகித்துக் கொள்ளப்படலாம். அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில், ஐரோப்பியர்களை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு ஐரோப்பியர்களுக்கு உரிமை உண்டா? அறிக்கையில் இது தெளிவாக்கப்படவில்லை.

இந்தக் கேள்விகளெல்லாம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு தயைகூர்ந்து நீங்கள் பதிலளித்தால் மிகவும் நன்றியுடையவனாயிருப்பேன். நான் இன்றிரவு டில்லியிலிருந்து பம்பாய்க்குப் புறப்படுகிறேன். மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கு நீங்கள் அளிக்க விரும்பும் எந்த பதிலும் பம்பாயில் என்னுடைய கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்:

(விலாசம்: சலூன் எண். 27, சென்ட்ரல் ரயில் நிலையம், பி:பி. அண்ட்.சி.ஐ. ரயில்வே, பம்பாய்).

தங்கள் உண்மையுள்ள,

**பி.ஆர். அம்பேத்கர்**

# 20

## டாக்டர் அம்பேத்கருக்கு பெதிக்-லாரென்ஸ் பிரபு கடிதம்[1]

(எல்/பி அண்ட் ஜே/5/337: பக்கம் 371-2)

மே 28, 1946

உங்களுடைய மே 22ம் தேதிய கடிதத்திற்கு[2] நன்றி. அதில் நீங்கள், சமீபத்திய அறிக்கையில் உள்ள சில விஷயங்களைப் பற்றித் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டிருந்தீர்கள்.

இந்தியர்கள், ஒரு சுதந்திர இந்தியாவுக்கான தமது சொந்த அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கான ஓர் அமைப்பை ஏற்படுத்துவதுதான் தூதுக் குழுவின் நோக்கம் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். எங்களுடைய அறிக்கையின் குறிக்கோள், அந்த நோக்கத்திற்காகக் கட்சிகள் ஒன்று பட்டு வருவதற்கான ஓர் அடிப்படையை ஏற்படுத்துவதேயாகும். சம்பந்தப்பட்ட எல்லோரும் இதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்து வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த நோக்கத்திற்குத் தேவை யென்று எங்களுக்குத் தோன்றிய குறைந்தபட்ச அளவோடு எங்க ளுடைய அறிக்கையை மட்டுப்படுத்திக் கொண்டோம். எழக்கூடிய பிற விஷயங்கள் அரசியல் நிர்ணய சபையினால் முடிவு செய்யப்பட வேண்டும்.

அறிக்கையின் 20வது பத்தியில் ''சிறுபான்மையோர்'' என்ற சொல் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் உட்படுத்துகிறது என்பது தான் நிச்சயமாக எங்களுடைய எண்ணமாகும். மறுபுறத்தில், ஆலோ சனைக் குழுவை ஏற்படுத்துவது அரசியல் நிர்ணய சபையின் பணி யாகும். அது பூரண பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபை விரும்பும் என்று நாங்கள் கருது கிறோம்.

---

1. அதிகார மாற்றம், தொகுதி VII, எண். 399, பக். 723
2. எண். 359,

அரசியல் நிர்ணய சபையில் தலையிடுவது எங்களுடைய நோக்கமல்ல. ஆயினும், எங்களுடைய அறிக்கையில் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் களிடமிருந்து மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வரம்பு ஏதும் கட்டவில்லை.

உங்களுடைய இதர கேள்விகளுக்கு எங்களுடைய கூடுதல் அறிக்கை[1] பெருமளவு பதிலளிக்கிறது. அந்த அறிக்கையை தூதுக் குழு சனிக்கிழமையன்று வெளியிட்டது. அதனுடைய ஒரு பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன்.

திரு. அலெக்சாண்டருக்கு நீங்கள் அண்மையில் எழுதிய கடிதம் கிடைத்ததென்றும், அதற்கு நன்றி தெரிவிக்குமாறும் அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் இப்பொழுது டில்லியில் இல்லை. ஒரு சில நாட்கள் பயணமாக இலங்கைக்குச் சென்றுள் ளார். அவர் திரும்பி வந்தபின் உங்களுக்குப் பதில் எழுதுவார்.

□□□

1. எண். 36. இந்தியா அலுவலக ஆவணங்களில் காணப்படவில்லை.

# 21

## ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கு ராவ் பகதூர் சிவராஜ் கடிதம்[1]

*எல்/பி அண்ட் ஜே/5/337: பக். 410-13*

*எண். 592/73/43* *ஜூன் 5, 1946*

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் நிர்வாகக் குழுவின் கூட்டம் 1946 ஜூன் 4ம் தேதியன்று பம்பாயில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்தியாவின் வருங்கால அரசியலமைப்புச் சட்டம் சம்பந்தமான அமைச்சரவைத் தூதுக்குழுவின் பிரேரணைகளிலிருந்து எழும் நிலைமை பரிசீலனை செய்யப்பட்டது. நிர்வாகக்குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அமைச்சரவைத் தூதுக் குழுவின் உறுப்பினர்களின் பரிசீலனைக்கு அத்தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். அதன்படி, அத்தீர்மானத்தின் ஒரு பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன். இந்தத் தீர்மானத்தின் 6ம் பத்தியில் அடங்கியுள்ள கோரிக்கைகள் சம்பந்தமாக அமைச்சரவைத் தூதுக்குழுவின் கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கு நன்றியுடையவனாக இருப்பேன்.

**எண். 454க்குப் பின்இணைப்பு**

### 1946 ஜூன் 4ல் பம்பாயில் நடைபெற்ற அ.இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

அ.இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் நிர்வாகக் குழு பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்தது. (1) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி அமைச்சரவைத் தூதுக்குழு வெளியிட்ட முதலாவது அறிக்கை; (2) அவர்களது அறிக்கையை விளக்கும்

1. அதிகார மாற்றம், தொகுதி VII, எண். 454, பக். 808-12.

வகையில் தூதுக் குழுவின் உறுப்பினர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டிகள்; (3) தூதுக்குழுவின் இரண்டாவது அறிக்கை மற்றும் (4) தூதுக் குழுவிற்கும் மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத் கருக்கும் இடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்து.

அமைச்சரவைத் தூதுக்குழுவின் அறிக்கையிலிருந்து எழும் பல அம்சங்கள் சம்பந்தமாக நிர்வாகக் குழு தனது கருத்துகளைக் கூற விரும்புகிறது. தற்போதைக்கு, இந்தியாவின் வருங்கால அரசிய லமைப்புச் சட்டத்தை உருவாக்குவது சம்பந்தமான அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் தாழ்த்தப்பட்ட சாதியினரை எவ்வாறு பாதிக் கிறது என்பதைப் பற்றி மட்டும் பரிசீலனை செய்வதற்கு நிர்வாகக் குழு விரும்புகிறது.

2. 5000 சொற்கள் கொண்ட தனது அறிக்கையில் அமைச் சரவைத் தூதுக்குழு தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பற்றி ஒரு தடவை கூடக் குறிப்பிடாததை நிர்வாகக் குழு மிகுந்த சீற்றத்துடன் கவ னித்தது. அமைச்சரவைத் தூதுக்குழுவின் மனம் எவ்வாறு செயல் படுகிறது என்பதை அறிவது கடினமாக உள்ளது. தீண்டப்படாத வர்கள் இருப்பதையும், அவர்களுடைய சிரமங்களையும், இந்தியா முழுவதிலும் சாதி இந்துக்களால் அவர்கள் மீது அன்றாடம் நடத்தப் படும் கொடுமைகளையும் தூதுக்குழு அறியாமல் இருக்க முடியாது. தீண்டப்படாதவர்கள் சாதி இந்துக்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்றும், அவர்கள் இந்தியாவின் தேசிய வாழ்வில் ஒரு தனி அம்ச மாக இருந்து வருகின்றனர் என்றும் மன்னர் பிரான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்புகளை தூதுக்குழு அறியாமல் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் சம்மதம் பெறாத எந்த அரசிய லமைப்புச் சட்டமும் அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது என்று மன்னர்பிரான் அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகளையும் அமைச்சரவைத் தூதுக்குழு அறியாமல் இருக்க முடியாது. ஓர் ஆண்டுக்கு முன்னர்தான் வேவல் பிரபு கூட்டிய சிம்லா மாநாட்டில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு சாதி இந்துக்களிலிருந்து தனிப் பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டதை அமைச்சரவைத் தூதுக்குழு அறியாமல் இருக்க முடியாது. இந்தச் சூழ்நிலைமைகளில், தாழ்த்தப்பட்ட சாதி யினர் இவ்வாறு புறக்கணிக்கப்பட்டதன் மூலம் கேபினட் தூதுக் குழு பிரிட்டிஷ் தேசத்தின் பெயருக்கு அவமதிப்பையும் அவமரியாதை யையும் கொண்டு வந்துள்ளது என்று கூறுவதில் நிர்வாகக் குழு எவ்விதத் தயக்கமும் கொள்ளவில்லை.

(3) அரசியல் நிர்ணய சபையிலும், ஆலோசனைக் குழுவிலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இரட்டிப்புப் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாகப் பத்திரிகையாளர் பேட்டியின்போது அமைச்சரவைத் தூதுக்குழு கூறியுள்ளதை நிர்வாகக்குழு கவனித்தது. இவ்வாறு ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறுவது முற்றிலும் கற்பனை யானது, ஆழமான பரிசீலனைக்குத் தகுதியற்றது என்று நிர்வாகக் குழு கருதுகிறது. அவர்கள் வகுத்துள்ள திட்டத்தில் அரசியல் நிர்ணய சபைக்கு மாநில சட்டமன்றங்களில் நடைபெறும் தேர்தலில், சீக்கியர் களுக்கும் முஸ்லீம்களுக்கும் வகை செய்திருப்பதைப் போல் தாழ்த்தப் பட்ட சாதியினருக்கு ஓர் இடம்கூட தூதுக்குழு ஒதுக்கவில்லை. அரசியல் நிர்ணய சபைக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு சட்டமன்றத் திற்கு எவ்வித கடப்பாடும் இல்லை. இதனால் அரசியல் நிர்ணய சபையில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் எந்த ஒரு பிரதிநிதியும் இடம் பெறாமல் போவதும் சாத்தியமே. தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஒரு சில பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றாலும் கூட, அவர்கள் இந்துக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள நிலைமையில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் மெய்யான நலன்களை அவர்கள் ஒருபோதும் பிரதி நிதித்துவப்படுத்த முடியாது. ஆலோசனைக் குழுவைப் பொறுத்த வரையில் அது அரசியல் நிர்ணய சபையிலிருந்து சாராம்சத்தில் வேறுபட்டிருக்க முடியாது. அது அரசியல் நிர்ணய சபையின் ஒரு பிரதிபிம்பமாக மட்டுமே இருக்க முடியும்.

4. அரசியல் நிர்ணய சபையிலும் ஆலோசனை குழுவிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பயனுறுதியுள்ள முறையில் குரல் எழுப்பு வதற்குப் போதிய அளவு, சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாக அமைச்சரவைத் தூதுக்குழு எவ்வாறு நம்புகிறது என்பதைப் புரிந்து கொள்வது நிர்வாகக் குழுவுக்கு மிக மிகக் கடின மாக உள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான தனித் தொகுதிகளில் பூர்வாங்கத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியினரின் மெய்யான பிரதிநிதிகளாவர் என்பதை எடுத்துக்காட்டுவதற்குத் தூதுக் குழுவிடம் அபரிமிதமான, மறுக்க முடியாத சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டன. மற்றும், மாநில சட்ட மன்றங்களில் தற்போது தாழ்த்தப்பட்ட சாதியினரின் உறுப்பினர் களாக உள்ளவர்கள் பூர்வாங்கத் தேர்தல்களில் மிகவும் குறைந்த

வாக்குகளைப் பெற்று கீழ் நிலையில் இருந்தவர்கள். ஆனால் அவர்கள் கூட்டுத் தொகுதிகள் என்னும் தீய தேர்தல் முறையின் காரணமாக இறுதித் தேர்தலில் மேல்நிலைக்கு வந்துவிட்டார்கள். சாதி இந்துக்களது வாக்குகளின் பயனாக மட்டுமே இவ்வாறு நடைபெறுவது சாத்தியமாயிற்று. எனவே, மாகாண சட்டமன்றங் களில் உள்ள தாழ்த்தப்பட்ட சாதி உறுப்பினர்கள், எவ்வகையிலும் தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பிரதி நிதித்துவப்படுத்துபவர் கள் அல்ல. மாறாக, அவர்கள் சாதி இந்துக்களின் கைக்கருவிகளேயாவர். அரசியல் நிர்ணயசபையிலும், ஆலோசனைக் குழுவிலும் தாழ்த்தப் பட்ட சாதியினருக்கு இரட்டைப் பிரதிநிதித்துவத்திற்கு வகை செய்வதற்கு மாறாக, தூதுக்குழு மன உறுத்தலின்றி, இந்த மறுக்க முடியாத சான்றுகளை எல்லாம் புறக்கணித்ததோடு, எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத வகையில், தாழ்த்தப்பட்ட சாதியினரை இந்துக்களின் தயவில் வாழச் செய்யும் மிகக் கொடிய துரோகத்தைச் செய்துள்ளது. தூதுக்குழுவின் தர்க்க வியலோ அல்லது அவர்களது தார்மிகப் பொறுப்பு உணர்ச்சியோ தாழ்த்தப்பட்ட சாதியினரைத் திருப்திபடுத்தவில்லை என்பதை நிர்வாகக் குழு அவர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறது.

5. அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் முழுவதும் விஷமத்தனமானதாகும். ஏனெனில் அது, முஸ்லீம் பிராந்தியத்தில் முஸ்லீம் அல்லாத சிறுபான்மையோரை செல்லாக்காசுகளாக்கு வதற்கு முஸ்லீம் பெரும்பான்மையோருக்கும், இந்து பிராந்தியத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் உள்ளிட்ட இந்துக்களல்லாத சிறுபான்மை யோரைச் செல்லாக் காசுகளாக்குவதற்கு இந்து பெரும்பான்மை யோருக்கும் சுதந்திரம் அளிப்பதன் மூலம் அது சிறுபான்மையோர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்கிறது. அமைச்சரவைத் தூதுக் குழு தனது திட்டத்தை உருவாக்குவதில், தாழ்த்தப்பட்ட சாதி யினரின் நலன்களைப் பாதுகாப்பதைக் காட்டிலும் முஸ்லீம் சமு தாயத்தைப் பாதுகாப்பதற்கே கூடுதல் அக்கறை காட்டியுள்ளது. தமது திட்டத்தின் 15வது பத்தியில், அமைச்சரவைத் தூதுக்குழு, அரசியல் நிர்ணய சபையின் வரம்புக்கு அப்பால் இருக்க வேண்டிய விஷ யங்களைக் குறிப்பிட்டுள்ளது. 15வது பத்தியில் இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருப்பதன் நோக்கம், இந்து சமூக முஸ்லீம் சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதேயாகும். இந்து பெரும் பான்மையோர் சம்பந்தமாக தாழ்த்தப்பட்ட சாதியினரின் அச்சம், முஸ்லீம் சமூகத்தினர் கொண்டுள்ள அல்லது கொள்ளக்கூடிய

அச்சத்தைக் காட்டிலும் மிக மிக அதிகமானதும் மெய்யானதுமாகும். தனித் தொகுதிகள் வாயிலாகப் பிரதிநிதித்துவம், தனிக் குடியிருப்பு களுக்கான ஏற்பாடு ஆகியவற்றின் மூலமாக மட்டுமே தாங்கள் பயனுறுதியான பாதுகாப்பைப் பெற முடியும் என்று ஷெட்யூல்டு சாதியினர் வற்புறுத்தி வருகின்றனர். இந்தக் கோரிக்கைகளையும், அவற்றுக்கு ஆதரவான அனைத்து சான்றுகளையும் அமைச்சரவைத் தூதுக்குழு அறிந்துள்ளது. எனவே மேலே குறிப்பிட்ட முறையில் இந்து பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திலிருந்து முஸ்லீம் சமூகத் திற்கு சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வதற்கு அமைச்சரவைத் தூதுக் குழு கடைப்பிடித்த அதே கோட்பாட்டைப் பின்பற்றி, அதே 15வது பத்தியில், சட்டமன்றங்களில் தனித்தொகுதிகள் மூலமாக தாழ்த்தப் பட்ட சாதியினர் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு உரிமை இருக்க வேண்டுமென்று வரையறுப்பதன் மூலமும் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திலிருந்து தப்பிக்கும் ஒரு வழிமுறையாக தனிக் குடியிருப் புக்களை அமைப்பதற்கு சட்டவிதியை உருவாக்குவதன் மூலமும் அரசியல் நிர்ணய சபையின் அதிகாரங்களை மேலும் கட்டுப்படுத் தவும் வகை செய்வது சாத்தியமே.

6. பிரிட்டனுக்கும் இந்திய அரசியல் நிர்ணய சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தை அங்கீகாரம் செய்வது, தாழ்த்தப்பட்ட சாதியினர் உள்ளிட்ட சிறுபான்மையோரின் பாதுகாப்புக்கு முறையான பாதுகாப்புகள் செய்யப்படுவதைப் பொறுத்து இருக்கும் என்று அமைச்சரவைத் தூதுக்குழு தமது இரண்டாவது அறிக்கையில்* குறிப் பிட்டிருந்ததை நிர்வாகக் குழு கவனித்தது. காங்கிரஸ் கட்சியைச் சமாதானப்படுத்தும் அவசரத்தில் அமைச்சரவைத் தூதுக்குழு, தனது முதலாவது அறிக்கையின் 22வது ஷரத்தில்-இது 1942 ஆம் ஆண்டின் கிரிப்ஸ் பிரேரணைகளின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும் இதனை உட்படுத்துவதற்குத் துணியவில்லை. தூதுக்குழு, தனது நிலையை மாற்றிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு யாருடைய பெய ரால் உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டனவோ அந்த பிரிட்டிஷ் மக்களின் கௌரவத்தைக் காப்பாற்றியுள்ளது குறித்து நிர்வாகக் குழு மகிழ்ச்சியடையும் அதே பொழுது கீழ்வரும் அம்சங்களில் தூதுக் குழுவின் திட்டம் திருத்தப்பட வேண்டும் என்று கோருகிறது:

★ எண். 376

(1) அறிக்கையின் 15வது பத்தியில், ஷரத்துகள் (7), (8) என்று பின்வரும் ஷரத்துகள் சேர்க்கப்பட வேண்டும்:

''(7) சட்டப் பேரவைகளில் தனித் தொகுதிகள் வாயிலாக பிரதிநிதித்துவம் பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரிமை இருக்க வேண்டும்.

''(8) தாழ்த்தப்பட்ட சாதியினருக்குத் தனிக் குடியேற்றங் களை உருவாக்கும் பணியை மேற்கொள்வதை அரசுக்குக் கட்டாயமாக்கும் ஒரு விதி அரசியல் சட்டத்தில் இருக்க வேண்டும்.''

(2) முதலாவது அறிக்கையின் 20வது பத்தி, கடைசியாக நடைபெற்ற பூர்வாங்கத் தேர்தல்களில் அதிக வாக்குகளைப் பெற்ற தாழ்த்தப்பட்ட சாதியினரின் உறுப்பினர்களை ஆலோசனைக் குழு வின் உறுப்பினர்களாக்கும் வகையிலும், தாழ்த்தப்பட்ட சாதியினரின் இதர ஐந்து பிரதிநிதிகளை அவர்கள் ஆலோசனைக் குழுவிற்குத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கும் வகையிலும் திருத்தப்பட வேண்டும்.

7. அமைச்சரவைத் தூதுக் குழுவினால் இழைக்கப்பட்ட தீங்கை உடனே சரி செய்வதற்கு முனைவதன் மூலம் தாழ்த்தப் பட்ட சாதியினர்பால் அவர்கள் தமது விசுவாசத்தை நிரூபணம் செய்ய வேண்டுமென்று மன்னர்பிரான் அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்கும் நிர்வாகக்குழு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறது. இதைச் செய்யத் தவறினால், நேரடி நடவடிக்கையில் இறங்கு வதைத் தவிர, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வேறு மாற்றுவழி இல்லை. ஏற்படவிருக்கும் விபத்திலிருந்து தாழ்த்தப்பட்ட சாதி யினரைக் காப்பாற்றுவதற்காக, அவசியமானால் நேரடி நடவடிக்கை யில் இறங்குமாறு அவர்களை கேட்டுக் கொள்வதற்கு நிர்வாகக் குழு தயங்காது.

8. அமைச்சரவைத் தூதுக்குழு முன்வைத்துள்ள திட்டத் தினால், தாழ்த்தப்பட்ட சாதியினரிடம் ஏற்பட்டுள்ள பீதியை நிர்வாகக் குழு உணர்ந்துள்ளது. கடந்த தேர்தல்களில் காங்கிரசுக்கு எதிராகத் தன்னந்தனியாகவும், வசதிகள் இல்லாமலும் போராடியதில் தாழ்த்தப்

பட்ட சாதியினர் காட்டிய துணிவையும் வீராவேசத்தையும் தொடர்ந்து பராமரிக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்ள நிர்வாகக் குழு விரும்புகிறது. அச்சமயம் காங்கிரஸ் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டது; அச்சுறுத்தி நிர்ப்பந்தம் செய்தது; தீவைப்பில் ஈடுபட்டது; மற்ற கட்சிகள், வாய்மூடி மௌனம் சாதித்தன; எனினும் இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது தாழ்த்தப்பட்ட சாதியினர் வீரமாகத் தேர்தலில் பங்கு கொண்டனர். எனவே, இப்பொழுது பீதியடை வதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று அவர்களுக்கு உறுதி யளித்தது. துணிவும் ஒருமைப்பாடும் இருந்தால், நீதியும் மனிதா பிமானமுமான அவர்களது இலட்சியம், அவர்களது விரோதிகளின் சூழ்ச்சிகள் ஒருபக்கமிருந்த போதிலும் வெற்றியடைவது திண்ணம்.

9. நேரடி நடவடிக்கையின் திசைவழிகளைப் பரிசீலனை செய்வதற்கும், இவற்றில் மிகவும் பயனுறுதியான ஒன்றை நிர்ணயம் செய்வதற்கும், அதைத் தொடங்குவதற்கான சமயத்தைத் தீர்மானிப் பதற்குமான கடமைப் பொறுப்புக்கொண்ட ஒரு நடவடிக்கைக் குழுவை அமைப்பதற்கு நிர்வாகக் குழு தலைவருக்கு இதன் மூலம் அதிகாரமளிக்கிறது.

10. நிர்வாகக் குழு, பின்வருவனவற்றைக் கவனத்தில் கொண் டுள்ளது:

(1) இந்தியா முழுவதிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிராக கொடிய அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்; இதில் பலர் மரணமடைந்தனர், பலர் காய மடைந்தனர். தேர்தல்களில் அவர்கள் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டனர், போராடினர் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் அன்றி அவர்கள் பயங்கர வன்முறையை யும், அட்டூழியங்களையும் நடத்தி வருகின்றனர்.

(2) இந்து போலீசார் தாழ்த்தப்பட்ட சாதியினரின் அப்பாவி யான ஆண்கள், பெண்களை சித்திரவதை செய்தும், கைது செய்தும் சாதி இந்துக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு அவ மானகரமான பங்கு வகித்து வருகின்றனர்;

(3) தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பங்கீட்டுப் பொருள்களை வழங்குவதை மறுப்பதன் மூலம் காங்கிரசின் ஆதரவாளர்களாக பங்கீட்டுத் துறை அதிகாரிகள் சட்ட விரோதமான முறையில் செயல்பட்டு வருகின்றனர்;

(4) நிரபராதியான ஆண்கள், பெண்களுக்கு எதிரான இந்த அநீதிகளை, அக்கிரமங்களை கண்டனம் செய்வதற்கு ஒரு போதும் கவலைப்படாத பத்திரிகைகள் மௌனத்தைக் கடைப் பிடிப்பதன் மூலம் சதி செய்து வருகின்றன;

(5) தாழ்த்தப்பட்ட சாதியினரின் உயிர்களையும் சொத்துக் களையும் பாதுகாப்பதில் மாநில அரசுகள் முற்றிலும் அசட்டை யாக இருந்து வருகின்றன.

பெரும்பான்மை சமூகத்தின் இத்தகைய நடத்தை, இந்து சமூகத்திடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுவதற்கு அது எவ்வாறு தகுதியற்றதாக இருக்கிறது என்பதை சிறிதும் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கிறது. மற்றும் அந்தப் பெரும்பான்மை சமூகம் தனது ஒழுக் கத்தை மேம்படுத்திக் கொள்ளாவிட்டால், தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, அவர்களுக்குத் திறந்துள்ள எல்லா முறைகளையும் கடைப்பிடிக்கும்படியான நிர்ப்பந்தத்திற் குள்ளாவார்கள் என்று நிர்வாகக் குழு உணருகிறது.

# 22

## டாக்டர் அம்பேத்கருக்குத் திரு. அட்லி கடிதம்[1]

பாரிஸ், ஆகஸ்டு 1, 1946

அன்பார்ந்த அம்பேத்கர் அவர்களே,

ஜூலை 1ம் தேதிய உங்களுடைய கடிதத்தையும் அத்துடன் இணைத்திருந்த ஆவணங்களையும் கவனமாக ஆய்வு செய்தேன்.[2]

அமைச்சரவைத் தூதுக் குழுவும் வைஸ்ராயும் தாழ்த்தப்பட்ட சாதியினரின்பால் அநீதியாக நடந்து கொள்கிறார்கள் என்ற கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. 1945 சிம்லா மாநாட்டில் கடைப்பிடித்த கொள்கையை அவர்கள் ஏன் மாற்றிக் கொண்டார்கள் என்பதற்கான காரணம் கடந்த வசந்த காலத்தில் நடைபெற்ற மாகாண சட்டப் பேரவைகளுக்கான தேர்தல்களின் முடிவுகளே என்று நீங்கள் கூறுகிறீர்கள். வாக்களிப்பு புள்ளிவிவரங்களை தூதுக்குழு கவனமாக ஆராய்ந்தது. நானும் அவற்றைப் பரிசீலனை செய்தேன். தற்போதைய தேர்தல் முறை, காங்கிரசுக்கு எதிரான தாழ்த்தப்பட்ட சாதி வேட்பாளர்களுக்கு நீதி வழங்குவதில்லை என்ற கருத்துக்கு ஆதாரம் இருக்கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். மறுபுறத்தில்,

---

1. அதிகார மாற்றம், தொகுதி VIII, எண். 105, பக். 170-72

2. ஜூலை முதல் தேதியன்று, டாக்டர் அம்பேத்கர், திரு. அட்லிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அத்துடன் சமீபத்திய கடிதப் போக்குவரத்து, கோரிக்கை மனு, ஒரு சொற்பொழிவு ஆகியவற்றின் நகல்களையும் மற்றும் சிலவற்றையும் இணைத்திருந்தார். டாக்டர் அம்பேத்கரின் கடிதமானது, ஜூன் 17ல் திரு. அட்லிக்கு அவர் அனுப்பிய ஒரு தந்தியின் தொடர்ச்சியேயாகும். அதுவும் இதுபோன்ற விஷயங்களையே கொண்டிருந்தது. அந்தத் தந்தியின் வாசகம் வருமாறு:

''கடந்த ஆண்டு சிம்லா மாநாடு நடைபெற்ற சமயத்தில், வைஸ்ராய் நான் தெரிவித்த ஆட்சேபத்தின் பேரிலும், பிரிட்டிஷ் அரசின் சம்மதத்தின் பேரிலும் இடைக்கால அரசில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவத்தை, 14 பேர் கொண்ட நிர்வாக சபையில் இரண்டு இடங்களாக அதிகரிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். நான் மூன்று இடங்களைக் கோரியிருந்தேன். சமரசத்தின் பேரில் இரண்டை ஏற்றுக்கொண்டேன். ஆனால் இடைக்கால அரசு நேற்று வெளியிட்ட புதிய பிரேரணைகளில், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் ஓர் இடம் மட்டுமே தரப்பட்டுள்ளது. உரிய ஆலோசனைக்குப் பிறகு அளிக்கப்பட்ட புனிதமான வாக்குறுதி மோசமாக மீறப்பட்டுள்ளது. ஓர் இடம் என்பது மிகவும் அநீதியானது. ஆறுகோடி தாழ்த்தப்பட்டவர்களை 40 லட்சம் சீக்கியர்களுடனும், 30 லட்சம் கிறித்தவர்களுடனும் பிரதிநிதித்துவ விஷயத்தில் தூதுக்குழு சமமாகக் கருதுகிறது. தாழ்த்தப்பட்ட சாதிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளவர் தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. இவர் முற்றிலும் இந்து வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், இவர் காங்கிரசின் ஒரு கைப்பாவையே. தாழ்த்தப்பட்ட சாதி காங்கிரஸ்காரர் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்குப் பிரதிநிதித்துவம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

பூர்வாங்கத் தேர்தல்களில் உங்களுடைய சம்மேளனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களின் சாதனைகள் குறித்து நீங்கள் கூறுவதைப் புள்ளி விவரங்கள் ஆதாரப்படுத்தவில்லை.[1] இங்கு இந்த விஷயம் குறித்து நான் விரிவாக வாதிக்க விரும்பவில்லை. ஆயினும், பூர்வாங்கத் தேர்தல் கள், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒதுக்கப்பட்ட 151 இடங்களில் 43க்கு மட்டுமே நடைபெற்றன என்பதே உண்மை. இந்த 43 பிரைமரி தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் சம்மேளனம் 22 இடங்களில் போட்டியிட்டு 13 இடங்களை வென்றது.

உங்களுடைய கடிதத்தில் நீங்கள் மூன்று திட்டவட்டமான வேண்டுகோள்களை விடுத்திருக்கிறீர்கள்.[2]

---

*(முன்பக்கத் தொடர்ச்சி )*

*வகிப்பதில்லை. காங்கிரசையே பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அமைச்சரவைத் தூதுக்குழு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நீங்குக்கு மேல் தீங்காக இழைத்து வருகிறது. காங்கிரசைத் திருப்தி செய்வதற்காகவும், நாட்டின் பொதுவாழ்வில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் சுயேச்சையான நிலையை ஒழித்துக் கட்டுவதற்காகவும் அவர்களைப் பலிகடாக்களாக்குவதில் முனைந்துள்ளனர். தயவு செய்து தலையிட்டு, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இரண்டு இடங்களை வழங்குமாறும் அவை சம்மேளனத்தின் பிரதிநிதி களால் நிரப்பப்பட வேண்டுமென்றும் தூதுக்குழுவுக்கு ஆணையிடுங்கள். சம்மேளனம் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்பதைத் தூதுக் குழு அறியும். தாழ்த்தப்பட்ட சாதியினர் இரு இடங்களை வற்புறுத்துகின்றனர். இல்லா விட்டால் ஒன்றும் வேண்டாம். என்னுடைய நோக்கம் பற்றித் தவறாகப் புரிந்து கொள் வதைத் தவிர்ப்பதற்காக இடைக்கால அரசில் அங்கம் வகிக்க நான் விரும்பவில்லை. நான் வெளியிலே இருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சாதியினரின் உரிமைகளுக்காக நான் போராடி வருகிறேன். பிரிட்டிஷ் அரசிடம் ஓரளவு நீதி உணர்ச்சி இன்னும் இருக்கிறது என்று நம்புகிறேன் - அம்பேத்கர்.[1]*

*(எல்/பி அண்ட் ஜே/10/50: எஃப்எஃப் 81-3 மற்றும் அட்லி ஆவணங்கள், பல்கலைக்கழகக் கல்லூரி, ஆக்ஸ்ஃபோர்டு).*

1. *ஜூலை 1ம் தேதிய தனது கடிதத்தில் டாக்டர் அம்பேத்கர் இவ்வாறு எழுதினார்:*

   *இந்தியாவில் பூர்வாங்க தேர்தல்கள் நடைபெற்ற இடங்களிலெல்லாம் அவற்றின் முடிவுகள் சம்மேளனம் நிறுத்தி வைத்த வேட்பாளர்கள் அதிக வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார்கள், காங்கிரஸ் நிறுத்தி வைத்த வேட்பாளர்கள் மிகவும் குறைவான வாக்குகள் பெற்றுத் தோல்வி அடைந்தனர். எல்/பி அண்ட் ஜே/10/50; எஃப். 81.*

2. *அவையாவன:*

   *(1) தாழ்த்தப்பட்ட சாதியினர், அமைச்சரவைத் தூதுக்குழு அறிக்கையின் 20வது பத்தியின் பொருள்படி ஒரு சிறுபான்மையினர் என்று மன்னர்பிரான் அரசாங்கம் கருதுகிறது என்று வெளிப்படையாகக் கூறவேண்டும்.*

   *(2) பெரும்பான்மையினர் பற்றிய அச்சமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு வகை செய்யும் திருப்திகரமான பாதுகாப்புகளை தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு, அரசுரிமையை விட்டுக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமுன் மன்னர்பிரான் அரசாங்கம் வழங்க வேண்டும்.*

   *(3) இடைக்கால அரசில் தாழ்த்தப்பட்ட சாதியினர் சார்பில் குறைந்தபட்சம் இரு பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். இவர்கள் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் நியமிப்பவர்களாக இருக்க வேண்டும். அதே கடிதம்: எஃப் 82.*

முதலாவதைப் பொறுத்தமட்டிலும், அமைச்சரவைத் தூதுக் குழுவின் மே 16, மே 25 அறிக்கைகளின் ஷரத்துகளுக்கு இசைவான முறையில் அரசியல் நிர்ணய சபைக்கு சாத்தியமான முழு செயல் சுதந்திரம் இருக்க வேண்டுமென்பதில் மன்னர் பிரான் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு முக்கிய சிறுபான்மையினர் என்று நாங்கள் கருதவே செய்கிறோம், சிறு பான்மையினர் ஆலோசனைக் குழுவில் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறவேண்டும். ஆனால் நீங்கள் கேட்கும் பிரகடனத்தை தாழ்த்தப் பட்ட சாதியினரோடு மட்டும் நிறுத்திக் கொள்ளப்பட முடியாது. ஆலோசனைக் குழுவில் சிறுபான்மையோர் என்ற வகையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நாங்கள் கருதும் அனைத்து சக்திகள் சம்பந்தப்பட்ட அறிக்கையாகவே அது இருக்க வேண்டும். அது மன்னர்பிரான் அரசாங்கத்தின் ஓர் அபிப்பிராயம் என்று மட்டுமே இருந்தபோதிலும்கூட, அது அரசியல் நிர்ணய சபையின் சுதந்திரத்தில் தலையிடுவதாகத் தவிர்க்க முடியாமல் வியாக்கி யானம் செய்யப்பட்டுவிடும். அந்த வகையில் அது கடும் அதி ருப்தியை ஏற்படுத்தக்கூடும். இந்த சூழ்நிலையில், அத்தகைய ஒரு பிரகடனம் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

உங்களுடைய இரண்டாவது வேண்டுகோளைப் பொறுத்த மட்டிலும், காமன்ஸ் சபையில் கடந்த மார்ச் 15ம் தேதியன்று நிகழ்த்திய என்னுடைய உரையில், நான் கூறியதாக நீங்கள் சுட்டி யுள்ள சொற்கள் இடம்பெறவில்லை.[1] நான் கூறியதெல்லாம் இதுதான்: ''சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமாக நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம். சிறுபான்மையோர் அச்சமின்றி வாழ்வதற்கு இயல வேண்டும்.'' மன்னர்பிரான் அரசாங்கத்தின் கருத்து இதுவே. மே 25ம் தேதிய அமைச்சரவைத் தூதுக்குழுவின் அறிக்கையின் 4வது பத்தியில் இது காணப்படுகிறது. அந்தப் பத்தி யில் கூறப்பட்டுள்ளதை விளக்கும் வகையில் இந்தக் கட்டத்தில் வேறு எந்த அறிவிப்பும் மன்னர்பிரான் அரசாங்கம் வெளியிடுவது விவேகமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. இடைக்கால

1. சிறுபான்மையோரின் பாதுகாப்புக்குப் போதிய வகை செய்யப்பட வேண்டும் என்று அமைச்சரவைத் தூதுக்குழு ஏற்கெனவே கூறியிருப்பதாக டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட் டிருந்தார். இந்த அறிக்கைக்குப் பின்வரும் சொற்கள், அதாவது, 'பெரும்பான்மை பற்றிய பயத்திலிருந்து விடுபட்டு தாழ்த்தப்பட்ட சாதியினர் சுதந்திரமாக வாழ்வதற்கு வகை செய்யும் பாதுகாப்புகள்' - என்ற சொற்கள் சேர்க்கப்பட்டால் அவருடைய இரண்டாவது வேண்டுகோள் பூர்த்தி செய்யப்படும். இந்த சொற்களை மார்ச் 15ம் தேதிய உரையில் அட்லியே குறிப்பிட்டிருந்தார் என்று டாக்டர் அம்பேத்கர் கூறியிருந்தார். அதே கடிதம்.

அரசில் தாழ்த்தப்பட்ட சாதியினர் சார்பில் குறைந்தபட்சம் 2 பிரதிகளாவது இடம்பெற வேண்டும் என்பதும், அவர்கள் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பதும் உங்களுடைய இறுதியான வேண்டுகோள். இது சாத்தியம் என்ற வகையில் எந்த நம்பிக்கையும் உங்களுக்கு நான் அளிக்க முடியாததற்காக வருந்துகிறேன்.

அரசியல் நிர்ணய சபைக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சி.ஆர்.ஏ.

# 23

## திரு. அட்லிக்கு டாக்டர் அம்பேத்கர் கடிதம்

(எல்/பி அண்ட் ஜே/10/50 : எஃப் 55)

''ராஜ்கிருஹா''
தாதர், பம்பாய் - 14
ஆகஸ்ட் 12, 1946

அன்பார்ந்த அட்லி அவர்களே,

1946 ஆகஸ்டு 1ம் தேதிய உங்களுடைய கடிதத்திற்கு நன்றி. 1946 ஜூலை 1ம் தேதிய என்னுடைய கடிதத்திற்கு பதிலளிப்பதற்கு உங்களுக்கு அவகாசம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே என்னுடைய கடிதத்தில் நான் எழுப்பியிருந்த பிரச்சினைகள் குறித்த உங்களுடைய கருத்துக்களை நான் அறியச் செய்வதற்கு உங்களுக்கு அவகாசம் கிடைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மன்னர்பிரான் அரசாங்கம் பின்பற்றிய கொள்கை 1945 சிம்லா மாநாட்டில் திருத்தப்படுவதை நியாயப்படுத்தி நீங்கள் கூறியுள்ளதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அதுபோன்றே தாழ்த்தப்பட்ட சாதியினர் விஷயத்தில் தூதுக்குழு நடந்து கொள்ளும் விதத்தையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் பெரும்பான்மையோர் காங்கிரசின் பக்கம் உள்ளனர் என்று காமன்ஸ் சபையில் திரு. அலெக்சாண்டர் கூறியிருப்பது அட்டூழியமானது, உண்மையில் அதற்கு எவ்வித ஆதாரமுமில்லை என்று என்னால் கூறாமல் இருக்க முடியாது. இது என்னுடைய கருத்து மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஆங்கிலேயரின் கருத்துமாகும். தற்போது இங்கிலாந்திலுள்ள சர் எட்வர்டு பெந்தாலை நீங்கள் ஆலோசனை கலந்தாலே, அவர் என்னை ஆதரிப்பார் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

3. பூர்வாங்கத் தேர்தல்களில் சம்மேளனத்தின் சாதனைகள் பற்றிய உங்களுடைய பகுப்பாய்வு சம்பந்தமாக, நான் கூறவேண்டியதெல்லாம், நிலைமையை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது மட்டுமே. மேலும், தேர்லைப் பற்றிய விவரங்கள் அல்லது அது நடந்த வழிமுறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை

அறியாத எவரும், போதிய விளக்கமில்லாமல், அவற்றின் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாது என்று நினைக்கிறேன். நிலைமையின் மறுபக்கத்தைக் காங்கிரஸ் எடுத்துக்கூறியபோது தூதுக்குழு என்னை அழைத்து விளக்கம் கேட்டிருக்க வேண்டியது அவர்களது தலையாய கடமையாகும். அதை அவர்கள் செய்ய வில்லை என்பதே தூதுக்குழுவின் மீது என்னுடைய முக்கிய குற்றச் சாட்டாகும். இதை அவர்கள் செய்திருக்க வேண்டியது நீதியின் பாற்பட்டதாகும். அவர்களுக்குத் திருப்திகரமான விளக்கம் அளிப் பதற்கு நான் தவறியிருந்தால், அவர்கள் எடுத்துள்ள முடிவு நியாய மாக இருந்திருக்கும். வங்காளத்திலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டதே, தூதுக்குழுவுக்குத் தவறான தகவல் கிடைத்துள்ளது என்பதை நிரூபணம் செய்துள்ளது. என்னுடைய செல்வாக்கு பம்பாயிலும் மத்தியப் பிரதேசத்திலும் மட்டுமே உள்ளது என்று தூதுக்குழு காமன்ஸ் சபையில் கூறியுள்ளது. அப்படியெனில், நான் எவ்வாறு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க முடியும்? என்னுடைய தேர்தல் சம்பந்தமாக, மூன்று விவரங்களை உங்கள் மனத்தில் பதியவைக்க விரும்புகிறேன்: ஒன்று, நான் மயி ரிழையில் வெற்றியடையவில்லை, மாறாக அதிக அளவு வாக்குகள் பெற்று, காங்கிரஸ் கட்சியின் மிக உயர்ந்த வங்காளித் தலைவர் திரு. சரத் சந்திர போஸையே தோற்கடித்திருக்கிறேன். இரண்டாவ தாக, வங்காளத்தின் தாழ்த்தப்பட்ட சாதி சமூகத்துடன் எந்த வகை யிலும் வகுப்புவாத பந்தங்களின் மூலம் நான் இணைந்திருக்க வில்லை. அவர்கள் என்னுடைய சாதியினின்றும் வேறுபட்டவர்கள். உண்மையில், என்னுடைய சாதியைச் சேர்ந்த மக்கள் வங்காளத்தில் இல்லவே இல்லை. இருந்தபோதிலும் வங்காளி தாழ்த்தப்பட்ட சாதியினர் மிகவும் தீவிரமாக என்னை ஆதரித்தனர். அதனால் நான் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட முடிந்தது. மூன்றாவதாக, வங்கா ளத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர் காங்கிரஸ் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும், காங்கிரஸ்காரர்களைத் தவிர வேறு யாருக்கும் ஓட்டளிக்கக் கூடாது என்ற அவர்களது கட்சியின் விதியை மீறி அவர்கள் எனக்கு வாக்களித்தனர். வங்காளத்தில் எனக்கு ஆதரவாளர்கள் யாரும் இல்லையென்பதையா இது நிரூபணம் செய் கிறது? அமைச்சரவைத் தூதுக்குழு தனது முடிவில் நேர்மையாக இருந்தால், காமன்சபையில் அவர்கள் தெரிவித்த தவறான கருத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும், மற்றும் சம்மேளனம் குறித்த கருத்தை யும் மாற்றிக் கொண்டு, அதற்கு முறையான அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

4. சிறுபான்மையினர் குறித்த ஆலோசனைக் குழுவில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் தகுதியைப் பொறுத்தமட்டிலும், பிரிட்டிஷ் அமைச்சரவை தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒரு முக்கிய சிறுபான்மையினராகக் கருதுவதாக வாக்குறுதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அமைச்சரவைத் தூதுக்குழு ஒரு பகிரங்கமான அறிக்கை விடுத்தாலன்றி, அதுவரையிலும் இந்தக் கருத்து தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உதவி செய்யாது என்று மீண்டும் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதைக் கூறுவதற்குக் காரணம், பேச்சுவார்த்தைகள் முறிந்து போவதற்கு முன்னால், காங்கிரசின் சார்பில் மௌலானா அபுல் கலாம் ஆசாத் வைஸ்ராயிக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில், தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையினர் என்னும் கருத்தை உறுதியாக மறுத்திருந்தார். இந்தக் கருத்தை பிரிட்டிஷ் அமைச்சரவை உரிய காலத்தில் திருத்தாவிட்டால் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வாதம் ஆலோசனைக் குழுவில் பரிசீலிக்கப்படாமல் போகக்கூடும் என்று தாழ்த்தப்பட்ட சாதியினர் அச்சமடைகின்றனர். ஏனெனில் அந்தக் குழுவில் காங்கிரஸ்காரர்களே பெரும் எண்ணிக்கையில் இருப்பார்கள் என்பது நிச்சயம். திரு. காந்தி அண்மையில் வெளியிட்ட அறிக்கையைப் பார்க்கும் போது, தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையினர் என்று கருதப்படாமல், இந்து சமூகத்தினுள் ஒரு சமூகப் பிரிவு என்ற நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் மிகவும் நிச்சயமெனத் தோன்றுகிறது. பிரிட்டிஷ் அரசு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அவர்களுடைய ஆதரவை அளிப்பதற்கு மறுத்துவிட்டுள்ள நிலைமையில், தாழ்த்தப்பட்ட சாதியினர் சம்பந்தமாகத் தான் விரும்பும் எதையும் இப்பொழுது செய்ய முடியும் என்று திரு. காந்தி நினைக்கிறார் என்பது தெளிவு.

5. இந்த சூழ்நிலைமைகளில், இந்த விஷயத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வருங்காலத் தகுதிக்கு ஏற்படவிருக்கும் உத்தேச அபாயத்தைத் தடுப்பதற்கு, தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு முக்கிய சிறுபான்மையினர் என்று ஒரு பிரகடனம் வெளியிட வேண்டுமென்றும் உங்களை வற்புறுத்துகிறேன்.

6. இடைக்கால அரசில் தாழ்த்தப்பட்ட சாதியினர் இரண்டு இடங்களைப் பெறுவதற்கு நீங்கள் எந்த உறுதியும் வழங்க முடியாது

என்பதை அறிய வருத்தமடைகிறேன். இந்த மறுப்பை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்று கருதுகிறேன். அவர்களின் (தாழ்த்தப்பட்ட சாதியினரின்) எண்ணிக்கையின் அடிப்படையிலும் மற்றும் 1945ம் ஆண்டில் நடைபெற்ற கடந்த சிம்லா மாநாட்டின் போது வழங்கப்பட்ட உறுதிமொழியை முன்னிட்டும், சீக்கியர்களுக்கும் பிற சிறிய சிறுபான்மையோருக்கும் வழங்கப்பட உத்தேசித்திருப்பதைக் காட்டிலும் அவர்கள் (தாழ்த்தப்பட்ட சாதியினர்) கூடுதல் மேம்பட்ட முறையில் நடத்தப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள். நான் முன்வைத்துள்ள கோரிக்கை மிகவும் நியாயமானது என்று கருதுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
**பி.ஆர். அம்பேத்கர்.**

# 24

## திரு. அட்லிக்கு பெதிக்-லாரென்ஸ் பிரபு கடிதம்[1]

எல்/பி அண்ட் ஜே/10/50: எஃப்எஃப் பக். 38-40

இந்தியா அலுவலகம், செப்டம்பர் 3, 1946

இந்தியா மந்திரியின் குறிப்பு: வரிசை எண். 48/46

பிரதம மந்திரி அவர்களே,

அம்பேத்கர் உங்களுக்கு எழுதியுள்ள ஆகஸ்டு 12ம் தேதிய கடிதம் குறித்த எனது கருத்துக்களை நீங்கள் கேட்டிருந்தீர்கள்.[2]

2. அவருடைய இரண்டாவது பத்தியைப் பொறுத்தமட்டிலும், அம்பேத்கரின் முந்திய கடிதத்திற்கான வரைவு பதிலுடன், என்னுடைய தனிச் செயலாளர் உங்களுக்கு ஜூலை 26ல்[3] அனுப்பிய குறிப்பில் தாழ்த்தப்பட்டவர்களுக்கான தேர்தல் முடிவுகள் பற்றிய ஒரு பகுப்பாய்வை நீங்கள் காண்பீர்கள். சுருங்கக் கூறின், உண்மை என்னவென்றால், பூர்வாங்கத் தேர்தல்களில் அம்பேத்கரின் ஸ்தாபனத்தைக் காட்டிலும் அதிக வாக்குகளைக் காங்கிரஸ் பெற்றுள்ளது, அதேபொழுதில் மேலும் அதிகமான வீதாசார வாக்குகளை சுயேச்சை வேட்பாளர்கள் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் அம்பேத்கரின் ஆதரவாளர்களாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஆனால், இதைத் தவிர, மூன்றிலிரண்டு பங்கு இடங்களை காங்கிரஸ் போட்டியில்லாமல் வென்றுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் முடிவானவையல்லதான். ஆனால், காமன்ஸ் சபையில் அளிக்கப்பட்ட அறிக்கைக்கு ''உண்மையில் ஆதாரமில்லை'' என்று கூறுவது நியாயமல்ல. அது மிகவும் ஆதாரபூர்வமானது என்றே கருதுகிறேன்.

3. அம்பேத்கர் கடிதத்தின் 3வது பத்தியைப் பொறுத்தமட்டிலும், அவருக்கு பம்பாயிலும் மத்திய மாகாணங்களிலும் மட்டுமே செல்வாக்கு உள்ளது என்று காமன்ஸ் சபையில் கூறப்

---

1. அதிகார மாற்றம், தொகுதி VIII, எண். 250, பக். 411-12.
2. எண். 142
3. எல்/பி. அண்ட் ஜே/10/50: எஃப் எஃப் பக். 63-9

படவில்லை. அவர் வாணிக குழுமத்தின் தலைவரது உரையைக் குறிப்பிடுகிறார். அதில் உண்மையில் அவர் கூறிய சொற்கள்: ''டாக்டர் அம்பேத்கரின் ஸ்தாபனம் (காங்கிரசோடு ஒப்பிடுகையில்) ஓரளவு அதிக ஸ்தலத் தன்மை வாய்ந்ததாகும். பிரதானமாக பம்பாயிலும் மத்திய மாகாணங்களிலும் அதற்குச் செல்வாக்கு இருக்கிறது என்பது தான். அரசியல் நிர்ணய சபைக்கு வங்காளத்திலிருந்து நடைபெற்ற தேர்தலில் என்ன நடந்தது என்பது பற்றி விசாரித்தேன். அது வீதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நடந்ததுதான். அம்பேத்கருக்கு முதல் விருப்ப வாக்குகள் ஐந்து கிடைத்தன. சரத் சந்திர போஸுக்கும் முதல் விருப்ப வாக்குகள் ஐந்து கிடைத்தன. வங்காளத்தில் தேர்தலுக் கான 'கோட்டா' நான்கு வாக்குகளாகும். இயல்பாகவே, காங்கிரஸ், தனது ஒவ்வொரு வேட்பாளருக்கும் சாத்தியமானவரையில் நான்கு முதல் விருப்ப வாக்குகள் கிடைக்கும் வகையில் தனது வாக்காளர் களை ஒழுங்குபடுத்திக் கொள்வது உண்டு. விகிதாசாரத் தேர்தலில் ''உயர்ந்தபட்ச'' ஓட்டுகளைப் பெற்றதாகக் கூறுவது உண்மையில் பொருளற்றதாகும். வங்காளத்தின் சில தாழ்த்தப்பட்டவர்களிடம் அம்பேத்கருக்கு செல்வாக்கு இருப்பதை யாரும் மறுக்கவில்லை. வங்காளச் சட்டசபையில் இருபத்தைந்து தாழ்த்தப்பட்ட சாதி உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் நால்வர் சுயேச்சையாளர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஒருவர் அம்பேத்கரின் வேட் பாளர். அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் அனைத்து சுயேச்சை யாளர்களும் அம்பேத்கருக்கு வாக்களித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. அல்லது, சில ஆங்கிலேய-இந்திய வாக்குகள் அவருக் குக் கிடைத்தனவா என்பதும் எனக்குத் தெரியாது.

4. அம்பேத்கரின் 4வது பத்தியைப் பொறுத்தமட்டிலும் தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒரு சிறுபான்மையோராக நாம் கருது வதாகவும், அவர்கள் சிறுபான்மையினர் ஆலோசனைக் குழுவில் பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்றும் நாம் ஒரு பொதுப் பிரகட னத்தை செய்ய முடியாது என்று உறுதியாகக் கருதுகிறேன். தனி அரசியல் பிரதிநிதித்துவத்திற்காக அவர்களை காங்கிரஸ் ஒரு சிறு பான்மையோராகக் கருதவில்லை என்பது சரியானதுதான். அதே போழ்தில் நாம் எப்போதும் அவ்வாறுதான் செய்து வந்துள்ளோம். ஆனால், சிறுபான்மையோர் ஆலோசனைக் குழுவில் அம்பேத் கரின் ஸ்தாபனம் பிரதிநிதித்துவம் பெறச் செய்யும் நிலைமையில் நாம் இல்லை.

5. அம்பேத்கருக்கு ஒரு பதில் அனுப்ப வேண்டியது உண்மையாகவே அத்தியாவசியம் என்று நான் கருதவில்லை. ஆனால் அவ்வாறு பதில் அனுப்ப வேண்டியது கூடுதல் மரியாதையானதாகும் என்று உங்களுக்குத் தோன்றினால் அதற்காக நான் ஒரு சிறிய முன் வரைவை[1] இத்துடன் அனுப்புகிறேன். நீங்கள் பார்க்க வேண்டுமென்று விரும்பினால் அதற்காக, காமன்ஸ் சபை விவாதத்தின்போது முதலாவது லார்டும் வாணிகக் குழுமத்தின் தலைவரும் ஆற்றிய உரைகளின் முக்கிய பகுதிகளையும் இத்துடன் அனுப்புகிறேன். என்னுடைய உரையிலும் பின்னால் கூறப்பட்டவரின் உரையில் உள்ளதைப் போன்ற ஒரு பகுதி இருக்கிறது. ஆனால் அது சுருக்கமானது.

பெதிக்-லாரென்ஸ்

1. அச்சாகவில்லை. டாக்டர் அம்பேத்கருக்கு திரு. அட்லி பதிலனுப்பியதாகத் தோன்றவில்லை.

# 25

## திரு. அட்லிக்கு பெதிக்-லாரென்ஸ் கடிதம்[1]

*எல்/பி அண்ட் ஜே/10/50: எஃப் எஃப் . 28-32*

இந்தியா அலுவலகம், செப்டம்பர் 9, 1946

*இந்தியா மந்திரியின் குறிப்பு: வரிசை எண். 51/46*

பிரதம மந்திரி அவர்களே,

அரசியல் நிர்ணய சபையின் ஆலோசனைக் குழுவில் தாழ்த்தப் பட்ட சாதியினரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக உங்களுடைய தனிப்பட்ட முறையிலான எண். எம்.296/46, செப்டம்பர் 4ம் தேதிய[2] கடிதம்.

2. ஆலோசனைக் குழுவில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதி நிதித்துவம் இருக்க வேண்டுமென்பதுதான் நிச்சயமாக தூதுக்குழு வின் எண்ணமாகும். நான் இதை அம்பேத்கருக்கு இந்தியாவில் எழுதிய கடிதத்தின்[3] வாயிலாகத் தெரிவித்தேன். ஆகஸ்டு 1ம் தேதிய[4] அவருக்கு உங்களுடைய பதிலின் மூன்றாவது பத்தியில், தாழ்த்தப் பட்ட சாதியினர் ஒரு முக்கிய சிறுபான்மையினர், அவர்கள் ஆலோ சனைக் குழுவில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்று மன்னர் பிரான் அரசாங்கமே கருதுகிற அதேசமயத்தில், இந்த வகையான ஒரு பகிரங்கப் பிரகடனம் வெளியிட வேண்டுமென்ற அவருடைய வேண்டுகோளுக்கு இசைவுதர இயலாது என்று டாக்டர் அம்பேத் கருக்கு நீங்கள் விளக்கியிருந்தீர்கள். ஏனெனில், அத்தகைய எந்தப் பிரகடனமும்

(அ) சிறுபான்மையினர் என்ற வகையில் ஆலோசனைக் குழு வில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று மன்னர்பிரான் அர

---

1. அதிகார மாற்றம், தொகுதி VIII , எண். 288, பக். 466-68.
2. எண். 253 (அதிகார மாற்றம் நூலில் வரிசை எண்ணைக் குறிப்பிடுகிறது - ஆ-ர்)
3. எண். 389, தொகுதி VII (பக்கம் 502 காண்க - ஆ-ர்.)
4. எண். 105, தொகுதி VIII (பக்கம் 509 காண்க - ஆ-ர்.)

சாங்கம் கருதுகிற பிற அனைத்துக் கூறுகளையும் குறிப்பிட்டுக் கூற வேண்டியிருக்கும்; மற்றும் (ஆ) அரசியல் நிர்ணய சபையின் செயல் சுதந்திரத்தில் தலையிடுவதற்கான ஒரு முயற்சி என்று இது வியாக்கி யானம் செய்யப்படக்கூடும்.

3. ஆயினும், நிலைமை என்னவெனில், ஆலோசனைக் குழு வின் இயைபு அரசியல் நிர்ணய சபையினால் முடிவு செய்யப்படு வதற்கு நாங்கள் விட்டுவிட்டோம். எனவே, அதை இப்பொழுது நாங்களே வரையறுத்துக் கூறமுடியாது. சபைக்குத் தவறான தகவல் தந்ததாக எங்கள் மீது குற்றஞ்சாட்ட முடியாது என்று நினைக் கிறேன்; ஏனெனில், ஜூலை 18ல் வாணிகக் குழுமத்தின் தலைவ ருடைய உரையில் நிலைமை தெளிவாகக் கூறப்பட்டிருந்தது. அத னுடைய பொருத்தமான பகுதி உங்களுக்கு என்னுடைய செப்டம்பர் 3ம் தேதிய கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டிருந்தது.[1]

4. தனி அரசியல் பிரதிநிதித்துவத்திற்காக தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையினரா அல்லது அவர்களை இந்துக் களுடன் சேர்த்துக் கருதப்பட வேண்டுமா என்ற பிரச்சினையின் மீதான சர்ச்சைக்கு ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. பின்னால் கூறப்பட்ட கருத்தைப் பிரசாரம் செய்வதில் காந்தி தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்டுள்ளார். செப்டம்பர் 3ம் தேதிய என் னுடைய குறிப்பின் 4வது பத்தியில், தனி அரசியல் பிரதிநிதித்துவத் திற்காக தாழ்த்தப்பட்ட சாதியினரைக் காங்கிரஸ் ஒரு சிறுபான்மையின ராகக் கருதவில்லை என்று நான் கூறியபோது வைஸ்ராயிக்கு ஆசாத் எழுதிய ஜூன் 25ம் தேதியக் கடிதம்[2] (மே 16ம் தேதிய நம் முடைய அறிக்கைக்கு சில வாரங்களுக்குப் பின்னர் எழுதியது) குறிப்பாக என் மனதிலிருந்தது. அதை டாக்டர் அம்பேத்கர் உங்க ளுக்கு எழுதிய இரு கடிதங்களிலும்[3] குறிப்பிட்டிருந்தார். அதில் ஆசாத், ''தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையோர் என்பதைக் காங்கிரஸ் நிராகரித்துள்ளது, அவர்களை இந்து சமுதாயத்தின் ஒருங் கிணைந்த பகுதியினராகவே கருதுகிறது'' என்று கூறியிருந்தார் (சிஎம்டி. 6861ன் 23வது பக்கத்தில் இரண்டாவது பத்தி). இந்த

1. எண். 250 (பக். 515 காண்க. - ஆ-ர்.)
2. தொகுதி VII, எண். 603 (அதிகார மாற்றம்)
3. எண். 105 மற்றும் எண். 142க்கான அடிக்குறிப்புகளைக் காண்க. (அதிகார மாற்றம்)

அறிக்கையில் திரு. ஜின்னாவுக்கு வைஸ்ராய் அளித்திருந்த வாக்குறுதி பற்றிய குறிப்பு இருக்கிறது.[1] இடைக்கால அரசில் சிறுபான்மையோரின் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்படும் இடங்களில் ஏதாவது காலியிடத்தை நிரப்புவதற்கு முன்னால் அவர் பிரதான கட்சிகளைக் கலந்தாலோசிப்பார் என்பதே அந்த வாக்குறுதி. தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தங்களுடைய சொந்தப் பொறுப்பு என்று காங்கிரஸ் கருதுவதும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதியை நியமிப்பதில் முஸ்லீம் லீக் அக்கறை காட்டுவதற்காகக் காங்கிரஸ் ஆட்சேபிப்பதும் முற்றிலும் அசாதாரணமானதல்ல.

5. ஆலோசனைக் குழுவில் தாழ்த்தப்பட்ட சாதிப் பிரதிநிதிகளைப் போதிய எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வதற்குக் காங்கிரஸ் விரும்பாது என்று நினைப்பதற்கு எத்தகைய நியாயமான காரணமுமில்லை. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இதுபற்றி கண்டனம் எதுவும் எழக்கூடாது என்பதில் அவர்கள் அக்கறை காட்டுவார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினரின் சாத்தியமான அளவு அதிகமான சதவீதத்தினரைத் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்கு, அல்லது குறைந்தபட்சம் அவர்களுடன் சமரசமாகப் போவதற்கே காங்கிரஸ் மிகவும் ஆவலாக இருக்கிறது, ஏனெனில், அவர்கள் முஸ்லீம் லீகுடன் கூட்டுச் சேர்ந்து விடாமல் தடுப்பதற்கே அது விரும்புகிறது. கமிட்டியானது குடிமக்களின் அதுபோன்றே சிறுபான்மையோரின் உரிமைகளை கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரதிநிதிகளை சேர்த்துக் கொள்வதானது, அவர்கள் சிறுபான்மையினரா அல்லது அல்லவா என்ற பிரச்சினையை எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது. மறுபுறத்தில், டாக்டர் அம்பேத்கரோ அல்லது காங்கிரசை எதிர்க்கின்ற தாழ்த்தப்பட்ட சாதியினரின் வேறு எந்த உறுப்பினரோ குழுவில் இடம் பெறுவார்கள் என்பதற்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை.

6. தூதுக்குழுவின் மே 16ம் தேதிய அறிக்கையின் 20வது பத்தியின் பொருளுக்குட்பட்டு தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையினர் என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்ற டாக்டர் அம்பேத்கரின் வேண்டுகோளுக்கு இசைவுதந்து நாம் ஓர் அறிவிப்பு வெளியிடக் கூடாது என்று இப்பொழுதும் கருதுகிறேன்.

1. தொகுதி VII, எண். 573 (அதிகார மாற்றம்).

நாம் அவ்வாறு செய்தால், அது அனேகமாக நிச்சயமாக காந்தியுடன் ஒரு சர்ச்சையைக் கிளப்பி விட்டுவிடும். அதன் விளைவாகக் காங்கிரஸ், அதை எதிர்த்து ஓர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கக் கூடும். தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சிறுபான்மையோர் என்று நாம் சொல்லாவிட்டாலும், குழுவில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறினாலே நமது அறிக்கை, ஆங்கிலோ-இந்தியர்கள் மற்றும் பிறருக்கு ஆதரவாக அதுபோன்ற அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும் என்ற வேண்டுகோள்களைக் கிளப்பிவிடும்; இது அரசியல் நிர்ணய சபை விஷயத்தில் தலையிடுவதாக வியாக்கியானம் செய்யப்படும்; இதைத் தவிர்ப்பதற்கு நாம் மிகவும் ஆவலுடன் இருக்கிறோம். அத்தகைய ஒரு பிரகடனம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஆலோசனைக் குழுவில் காங்கிரஸ் என்ன அந்தஸ்தைக் கொடுக்குமோ அதைக் காட்டிலும் மேம்பட்ட அந்தஸ்தைக் கொடுக்கும் என்பதற்கு எவ்வித சாத்தியக்கூறும் கிடையாது; அல்லது அது டாக்டர் அம்பேத்கருக்கு எவ்வித உதவியும் செய்யாது, ஏனெனில், அது தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பற்றி வெறுமனே குறிப்பிட மட்டுமே செய்யும். காங்கிரஸை ஆதரிப்பவர்களுக்கும், ஆதரிக்காதவர்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாட்டையும் காண்பிப்பதில்லை.

**பெதிக்-லாரென்ஸ்**

1. இந்தக் குறிப்பைப் பற்றி திரு. அட்லி: 'மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் இல்லை' என்று குறிப்பிட்டார். அட்லி ஆவணங்கள், பல்கலைக் கழகக் கல்லூரி, ஆக்ஸ்ஃபோர்டு.

## பகுதி III

## அறிக்கைகள்

# 1

## தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் (தீண்டப்படாதவர்கள்) பொறுத்த வரையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் செய்வதற்கு அமைச்சரவைத் தூதுக்குழு முன்வைத்த யோசனைகள் குறித்து

பி.ஆர். அம்பேத்கர்

எழுதிய திறனாய்வுக் கட்டுரை

# இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரை (தீண்டப்படாதவர்கள்) இந்திய தேசிய காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா?[1]

இந்தியாவில் நிலவும் அரசியல் தேக்க நிலைக்கு தீர்வு காணுவதற்காக, முட்டுக்கட்டை நிலைக்கு முடிவுகட்டுவதற்காக் இந்த ஆண்டின் துவக்கத்தில் தொழிற்கட்சி அரசாங்கம் அமைச்சரவைத் தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தது. ஓர் அரசியல் நிர்ணயசபை மூலம் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் ஒரு திட்டத்தை இத்தூதுக்குழு முன்வைத்தது. மாகாண சட்டமன்ற உறுப்பினர்களால் ஒற்றை மாற்று வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாக இந்த அரசியல் நிர்ணய சபை அமைந்திருக்கும். அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் நோக்கத்துக்காக மாகாண சட்டமன்ற உறுப்பினர்களை அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறது. அவை வருமாறு: (1) முஸ்லீம்கள்; (2) சீக்கியர்கள், (3) பொதுப் பிரிவினர்கள். இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்கெனத் தனிப்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருப்பர். இதன் பிரகாரம், அரசியல் நிர்ணய சபைக்கான முஸ்லீம் பிரதிநிதிகள் மாகாண சட்டமன்ற முஸ்லீம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இதேபோன்று சீக்கியப் பிரதிநிதிகள் சீக்கிய உறுப்பினர்களாலும், பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஏனையோராலும் தேர்ந் தெடுக்கப்படுவர். 'பொதுப் பிரிவினர்' எனப்படுவோரில் 1) இந்துக்கள் 2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 3) இந்தியக் கிறித்தவர்கள் மற்றும் 4) ஆங்கிலோ-இந்தியர்கள் முதலானோர் அடங்குவர்.

2. இந்துக்களோடு தங்களையும் சேர்த்திருப்பதை அறிந்த இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெரிதும் வியப்புக்குள்ளானார்கள். இந்திய தேசிய நீரோட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒரு தனி சக்தியாக அங்கீகரிப்பதாக பன்முறை திரும்பத் திரும்ப

1. ஆகாரம் - அச்சிட்ட சிற்றேடு (ஆ-ர்)

ஓர் அரசியலமைப்புச் சட்டமும் திணிக்கப்பட மாட்டாது எனவும் மன்னர்பிரான் அரசு உறுதி அளித்திருந்தது. அமைச்சரவைத் தூதுக் குழு முஸ்லீம்களையும் சீக்கியர்களையும் தனி சக்திகளாக ஏன் அங்கீகரித்திருக்கிறது; அதே தகுதி ஏன் தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு மறுக்கப்பட்டது என்று கேட்கப்படுகிறது.

அமைச்சரவைத் தூதுக்குழுவின் யோசனைகள் மீதான விவாதம் ஜூலை 18-ஆம் நாள் சட்டமன்றத்தில் நடைபெற்றது; அப்போது சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், திரு. அலெக்சாண்டர் மற்றும் பெதிக்-லாரன்ஸ் பிரபு ஆகியோர் இந்த விமர்சனத்திற்கு எதிராக பின்வரும் இரு வகைப்பட்ட வாதங்களை எடுத்து வைத்தனர்:

1. கடந்த பிப்ரவரியில் சட்டமன்றத்திற்கு நடந்த தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. இது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் காங்கிரசுடன் இருப்பதையும், தங்களுடைய கதிப்போக்கை காங்கிரசிடம் அதாவது இந்துக்களிடம் ஒப்படைத்து விட்டதை யும் காட்டுகிறது; இவ்வாறு இருக்கும்போது அவர்களைத் தனியாகப் பிரிப்பதற்கான முகாந்திரம் ஏதுமில்லை.

2. சிறுபான்மையினர் சம்பந்தமான ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும்; அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பிரதி நிதித்துவம் அளிக்கப்படும்; அவர்கள் தங்களுக்குத் தேவை யான பாதுகாப்புகளை வகுத்துக் கொள்வது சம்பந்தமான கருத்துகளைத் தெரிவிக்க உரிமை பெற்றிருப்பார்கள்.

இதில் இரண்டாவது வாதம் பயனற்றது மட்டுமல்ல மிக மோசமானதும் கூட. இதன் காரணங்கள் மிகத் தெளிவானவை. ஆலோசனைக் குழுவின் தகுதியும் அதிகாரங்களும் நிர்ணயிக்கப்பட வில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான பிரதிநிதித்துவம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை. ஆலோசனைக் குழுவின் முடிவுகள் ஒரு சாதாரணப் பெரும்பான்மையினாலேயே நிறைவேற்றப்படும். கடைசியாக, அந்தக் குழு அரசியல் நிர்ணய சபையின் வெறும் பிரதிபலிப்பாக இருக்குமே அன்றி வேறல்ல. அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் அனைவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பர்; அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் அல்லர். ஆகவே அவர்கள் காங்கிரஸ் கட்சியின் கட்டளைக்குக் கட்டுப்பட்ட

வர்கள் ஆவர். ஆலோசனைக் குழுவில் அமர்த்தப்படுவோரும் அதே கட்சிக் கட்டளைக்கு உட்பட்டவர்கள். அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலும் சரி அல்லது ஆலோசனைக் குழுவிலும் சரி, தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் உண்மையான கருத்தை எடுத்துக் கூறமுடியாது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தனியான சுதந்திரமான பிரதி நிதித்துவத்தை தாங்கள் அளிக்கத் தவறியதை நியாயப்படுத்துவதற்கு அமைச்சரவைத் தூதுக்குழு எடுத்தளித்த பிரதானவாதம் கடந்த தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இடங்களை காங்கிரஸ் தான் வென்றது என்பதேயாகும். இந்த வாதம் கூட தாக்குப்பிடித்து நிற்க முடியாது. இறுதித் தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இடங்களில் காங்கிரஸ் வென்றது என்பது உண்மையே. ஆனால் பல காரணங்களுக்காக இத்தேர்தல் முறைகளை ஒரு அளவுகோலாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

முதலாவதாக, பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைத்த தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கட்சி போன்ற கட்சிகள் இதன் காரண மாக மக்களிடையே செல்வாக்கு இழந்து போயிருந்தன.

இரண்டாவதாக, தேர்தல் சமயத்தில் நடைபெற்ற இந்திய தேசிய ராணுவ விசாரணை காங்கிரசுக்கு அனுகூலமாகவும் ஏனைய கட்சி களுக்குப் பிரதிகூலமாகவும் அமைந்துவிட்டது. தேர்தல் நேரத்தில் இந்திய தேசிய ராணுவ விசாரணை நடைபெற்றிருக்கவில்லை என்றால், காங்கிரஸ் படுதோல்வியடைந்திருக்கும்; அந்த அளவுக்கு அதன் செல்வாக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

இந்தத் தேர்தல் முடிவுகளை ஒரு அளவுகோலாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு இந்த இரண்டு காரணங்கள் தவிர, இதுபோல் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் காங்கிரஸ் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு இத்தேர்தல் முடிவுகளை ஓர் அளவுகோலாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற் கும் ஒரு விசேடக் காரணம் இருக்கிறது. அந்தக் காரணம் என்ன? தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தேர்தல்களை இறுதியாக முடிவு செய்யும் விஷயத்தில் இந்துக்களும் வாக்களிக்கக்கூடிய ஒரு கூட்டு வாக்காளர் முறை இருந்து வருவதுதான் அந்தக் காரணம். இந்துக் களின் வாக்குகள் மிக முக்கியமானவையாதலால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இடங்களில் போட்டியிடும் தாழ்த்தப்பட்ட வகுப்பு வேட்பாளரை முற்றிலும் இந்து வாக்குகளைக் கொண்டு

தேர்ந்தெடுப்பது காங்கிரசுக்குச் சுலபமாகி விடுகிறது. ஆகவே மாகாண சட்டசபைகளுக்கு காங்கிரசின் சார்பாக நிற்கும் தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த வேட்பாளர்கள் முற்றிலும் இந்துக்களின் வாக்குகளால் தேர்ந் தெடுக்கப்படுகிறார்களேயன்றி தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் வாக்குகளால் அல்ல என்பதை அமைச் சரவைத் தூதுக்குழு மறுக்க முடியாது.

இறுதிச் சுற்றுத் தேர்தலுக்கு முன் நடக்கும் பூர்வாங்கத் தேர்தல் முடிவுகள்தான் காங்கிரஸ் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறதா என்பதை நிர்ணயிக்கும் உண்மையான அளவுகோலாகும். ஏனெனில் பூர்வாங்கத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி வாக்காளர் தொகுதி உள்ளது. அதில் வாக் களிக்க இந்துக்களுக்கு உரிமை கிடையாது; ஆகவே பூர்வாங்கத் தேர்தல்கள்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உண்மையான உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியவை. அவ்வாறு பார்க்கும்போது பூர்வாங்கத் தேர்தல் முடிவுகள் எதைக் காட்டுகின்றன? தாழ்த்தப் பட்ட வகுப்பினர் காங்கிரசுடன் இருக்கின்றனர் என்பதை அவைக் காட்டுகின்றனவா?

மாகாண சட்டசபைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 151 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சிந்து மற்றும் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களைத் தவிர ஏனைய பல்வேறு மாகாணங் களில் அவை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. பூர்வாங்கத் தேர்தல்கள் என்பவை கட்டாயமல்ல; ஆனால் ஒரு இடத்திற்கு நான்கு வேட் பாளர்களுக்கு மேல் போட்டியிட்டால் அப்போது பூர்வாங்கத் தேர்தல் கள் நடத்துவது அவசியமாகிறது.

கடந்த இறுதிச் சுற்றுத் தேர்தலுக்கு முந்தைய பூர்வாங்கத் தேர்தலில், மொத்தம் 151 தொகுதிகளில் 40 தொகுதிகளில் பூர்வாங்கத் தேர்தல் நடத்துவது கட்டாயமாக்கப்பட்டது. அவை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டன:

| | | |
|---|---|---|
| மெட்ராஸ் | - | 10 |
| பம்பாய் | - | 3 |
| வங்காளம் | - | 12 |
| ஐக்கிய மாகாணங்கள் | - | 3 |

| | | |
|---|---|---|
| மத்திய மாகாணங்கள் | - | 5 |
| பஞ்சாப் | - | 7 |

பீகார் மற்றும் ஒரிஸ்ஸா மாகாணங்களில் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்கள் இல்லை.

40 தொகுதிகளின் துவக்கச் சுற்றுத் தேர்தல் முடிவுகள் இவ் வறிக்கையின் இணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன. அம்முடிவு கள் நிரூபிப்பதாவது:

I) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மொத்தம் இருந்த 283 இடங் களில் 46 இடங்களில் மட்டுமே காங்கிரஸ் தனது வேட்பாளர் களை நிறுத்தியிருந்தது (பார்க்க: அட்டவணை 1). வெற்றி பெற்ற மொத்த வேட்பாளர்கள் 168 பேரில் காங்கிரஸ் வேட்பாளர்கள் 38 பேர் மட்டுமே. (பார்க்க: அட்டவணை5)

II) பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் ஒரு கட்சி நுழைவதன் நோக்கமே, அது தன் கட்சியின் சார்பாக நான்கு வேட்பாளர்களை நிறுத்தி அதன் மூலம் மற்ற எதிர்க்கட்சிகளை வெளியேற்றிவிட்டு இறுதிச் சுற்றுத் தேர்தலுக்கு வருவதுதான். ஒரு கட்சி தன் சார்பாக நான்கு வேட்பாளர்களை நிறுத்த முடியுமா என்பது தன் கட்சிக்கு வாக் காளர்கள் எந்த அளவுக்கு வாக்களிப்பார்கள் என்று அது கொண் டுள்ள நம்பிக்கையைப் பொறுத்துள்ளது. காங்கிரஸ் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு வேட்பாளருக்கு மேல் நிறுத்த முயன்றதே இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களுக்கு வாக்களிப்பார் கள் என்ற நம்பிக்கை இல்லாததே காங்கிரசின் இந்தச் செயலுக்குக் காரணம் என்பது தெளிவு. தான் போட்டியிடும் ஒவ்வொரு தொகுதி யிலும் நான்கு வேட்பாளர்களை நிறுத்த ஒரு கட்சியினால் முடிந்த தென்றால் அது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம்தான். (பார்க்க: அட்டவணை 2, பகுதிகள்1,5 பத்திகள்3 மற்றும் 4)

III. காங்கிரஸ் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்களின் மொத்த வாக்குப் பதிவில் அது பெற்றது 28 சதவீதமே என்பது சந்தேகத்துக்கு இட மின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. (பார்க்க: அட்டவணைIV).

IV. இறுதிச் சுற்றுத் தேர்தலில் இந்துக்களின் வாக்குகள் உதவியுட னாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஆசை மட்டும்

இல்லையென்றால், சுயேச்சை வேட்பாளர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். அவ்வகையில் பார்த்தால் தாழ்த்தப்பட்ட வகுப் பினர் சம்மேளனம்தான் அச்சாதியினரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே கட்சி என்பதும், காங்கிரஸ் அல்லாத 72 சதவீத வாக்களிப்பும் அவர்களையே சேரும் என்பதும் ஏற்கக் கூடிய தாகும். (பார்க்க: அட்டவணை IV).

டாக்டர் அம்பேத்கரைப் பின்பற்றுபவர்கள் பம்பாய் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மட்டுமே என்று அமைச்சரவைத் தூதுக் குழுவினர் வாதிட்டனர்.

இந்தக் கூற்றுக்கு எத்தகைய அடிப்படையும் இல்லை. தாழ்த்தப் பட்ட வகுப்பினர் சம்மேளனம் பம்பாய் மற்றும் மத்திய மாகாணங் களைப் போல் குறிப்பிடத்தக்க தேர்தல் வெற்றிகளை ஏனைய மாகா ணங்களிலும் பெற்றுள்ளது. சம்மேளனம் மற்ற மாகாணங்களிலும் இயங்கி வருகிறது. இவ்வறிக்கையை அளித்த தூதுக்குழுவினர் அர சியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தலில் டாக்டர் அம்பேத்கர் பெற்ற மகத்தான வெற்றியைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறி விட்டனர். அவர் வங்காள சட்டசபையிலிருந்து ஒரு வேட்பாள ராகப் போட்டியிட்டார். அவர் அதில் 7 முதன்மை வாக்குகளைப் பெற்றதோடல்லாமல் காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. சரத் சந்திர போசையே தோற்கடித்து பொது இடத்துக்கான வாக்களிப்பில் முன்னணியில் நின்றார். டாக்டர் அம்பேத்கருக்கு பம்பாய் மற்றும் மத்திய மாகாணங்களுக்கு வெளியே செல்வாக்கு இல்லையென் றால் அவரால் எப்படி வங்காளத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட முடிந்தது? வங்க மாகாண சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு 30 இடங்கள் உள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 28 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அம்பேத்கர் கட்சியைச் சேர்ந்த மீதம் இருவரில் ஒருவர் தேர்தல் நாளன்று உடல்நலமின்றி வாக்களிக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பாக நின்று தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்கள் 6 பேர் காங்கிரஸ் கட்டளையை மீறி டாக்டர் அம்பேத்கருக்கு வாக்களித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இதிலிருந்து காங்கிரசைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப் பினர்கள் கூட அவரை தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. ஆகவே இது தூதுக்குழு வின் அறிக்கை முற்றிலும் தவறு என்பதை நிரூபிக்கிறது.

அமைச்சரவைத் தூதுக்குழுவின் சரணாகதியால் மிகவும் ஊக்கம் பெற்ற காங்கிரஸ் அக்குழுவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சிறுபான்மையினர் அல்ல என்று கூறும் அளவிற்கு சென்றுவிட்டது. இது எதைக் குறிக்கிறது? மற்ற சிறு பான்மை சமூகத்திற்கு அளிக்கப்படும் பாதுகாப்பினைக் கூட தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு காங்கிரஸ் அளிக்கத் தயாராய் இல்லை என்பதையே குறிக்கிறது. காங்கிரசின் இந்தக் கூற்றை அமைச்சரவைத் தூதுக்குழு மறுக்கவில்லை. இங்குதான் ஒரு பெரிய ஆபத்து மறைந் திருக்கிறது. ஆகவே விவாதத்தின்பொழுது தூதுக்குழுவை மடக்கி, அது தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்க்ளா இல்லையா என்பதைக் கூறும்படிக் கட்டாயப்படுத் துவது அவ்சியமாகிறது.

இறையாண்மை மாற்றப்படுவதற்கு முன் எல்லாச் சிறு பான்மையினரும் போதுமான பாதுகாப்புப் பெற்றுள்ளார்கள் என்ற மனநிறைவு நாடாளுமன்றத்திற்கு ஏற்பட வேண்டும் என்று தூதுக் குழுவினர் தங்கள் பிரேரணைகளில் தெரிவித்துள்ளனர். ஆனால் இப்பாதுகாப்பினைப் பெறுவதற்கான எந்த வழிமுறைகளையும் குழுவினர் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. சிறுபான்மையின ரின் பாதுகாப்பினை ஆராய நாடாளுமன்றத்தின் இரு அவைகளை யும் சேர்ந்த ஒரு கூட்டுக் குழு ஏற்படுத்தப்படுமா என்பதும் தெளி வாக்கப்படவில்லை. பாதுகாப்புகள் போதுமானவையா என்ற முடிவுக்கு வருவதில் மன்னர்பிரான் அரசு தனது சொந்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் என்று கூட குழு கூறவில்லை. இந்த விஷயங்கள் திட்டவட்டமாக்கப்படுவது அவசியம். ஏனென்றால் இது தூதுக் குழுவுக்கு பின்னால் தோன்றிய யோசனையாகும். அதன் ஆரம்ப திட்டங்களில் இது இடம்பெறவில்லை. சிறுபான்மையினரை மயக்கு வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஓர் உத்தி என்றே இதனை எண்ணத் தோன்றுகிறது.

*1946 பிப்ரவரியில் இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நடைபெறவிருந்த நிலைமையில் இந்தியாவில் மாகாண சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குப் போட்டியிடும் தாழ்த்தப்பட்ட வகுப்பு (தீண்டப்படாதவர்கள்) வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 1945 டிசம்பரில் நடைபெற்ற*

# பூர்வாங்கத் தேர்தல்களின் முடிவுகள் பற்றிய ஓர் ஆய்வு

*குறிப்பு: இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ள அட்டவணைகள் அதிகார பூர்வமான புள்ளிவிவரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை.*

அட்டவணை 1

## மாகாணவாரியாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு நடைபெற்ற பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்

| பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்களை நிறுத்திய கட்சியின் பெயர் | ஒவ்வொரு கட்சியும் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை | | | | | | எல்லா மாகாணங்களிலும் கட்சிகளால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | மெட்ராஸ் | பம்பாய் | வங்காளம் | ஐக்கிய மாகாணங்கள் | மத்திய மாகாணங்கள் | பஞ்சாப் | |
| 1. காங்கிரஸ் | 10 | 3 | 13 | 11 | 5 | 4 | 46 |
| 2. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | 35 | 6 | 8 | 9 | 12 | - | 70 |
| 3. ஹரிஜன் லீக் | - | - | - | 1 | 3 | - | 4 |
| 4. எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சையாளர்கள்) | 5 | 9 | 76 | 3 | 8 | 52 | 153 |
| 5. ஹிந்து மகாசபை | - | - | 1 | 1 | - | - | 2 |
| 6. கம்யூனிஸ்டுகள் | 6 | - | 1 | - | - | - | 7 |
| 7. தீவிர ஜனநாயகக் கட்சி | - | - | 1 | - | - | - | 1 |
| மொத்தம் | 56 | 18 | 100 | 25 | 28 | 56 | 283 |

## அட்டவணை II

### தொகுதிவாரியாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு நடைபெற்ற பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்

பகுதி 1 - மெட்ராஸ்

| பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் போட்டி நடந்த தொகுதி | போட்டியிட்ட வேட்பாளர் களின் மொத்த எண்ணிக்கை | தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களும் | | | |
|---|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | கம்யூனிஸ்டுகள் | எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சைகள்) |
| 1. அமலாபுரம் | 7 | 1 | 4 | 2 | எவருமில்லை |
| 2. காக்கிநாடா | 5 | 1 | 4 | எவருமில்லை | எவருமில்லை |
| 3. பந்தர் | 5 | 1 | 1 | 3 | எவருமில்லை |
| 4. கடப்பா | 5 | 1 | 4 | எவருமில்லை | எவருமில்லை |
| 5. பெனுகொண்டா | 5 | 1 | 4 | எவருமில்லை | எவருமில்லை |
| 6. திருவண்ணாமலை | 6 | 1 | 5 | எவருமில்லை | எவருமில்லை |
| 7. திண்டிவனம் | 6 | 1 | 5 | எவருமில்லை | எவருமில்லை |
| 8. மன்னார்குடி | 5 | 1 | எவருமில்லை | 1 | 3 |
| 9. பொள்ளாச்சி | 7 | 1 | 4 | எவருமில்லை | 2 |
| 10. நாமக்கல் | 5 | 1 | 4 | எவருமில்லை | எவருமில்லை |
| மொத்தம் | 56 | 10 | 35 | 6 | 5 |

## பகுதி 2 - பம்பாய்

## பூர்வாங்கச் சுற்றில் தேர்தல் தொகுதி

| பூர்வாங்கச் சுற்றில் தேர்தல் தொகுதி | போட்டியிட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களும் | | |
|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சைகள்) |
| பம்பாய் நகரம் (வடக்கு) | 7 | 1 | 1 | 5 |
| பம்பாய் நகரம் (பைகுல்லா மற்றும் பரேல்) | 6 | 1 | 1 | 4 |
| கிழக்கு கண்டேஷ் (கிழக்கு) | 5 | 1 | 4 | எவருமில்லை |
| மொத்தம் | 18 | 3 | 6 | 9 |

# அட்டவணை - II

## பகுதி 3 - வங்காளம்

| பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் நடந்த தொகுதிகள் | போட்டியிட்ட மொத்த வேட்பாளர்கள் எண்ணிக்கை | தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | ஹிந்து மகா சபை | எந்தக் கட்சியும் சாராதவர்கள் (சுயேச்சைகள்) | கம்யூனிஸ்டுகள் | ஜனநாயக கட்சி |
| 1. ஹூக்ளி | 5 | 1 | எவருமில்லை | எவருமில்லை | 3 | - | 1 |
| 2. ஹௌரா | 7 | 3 | எவருமில்லை | எவருமில்லை | 4 | - | - |
| 3. நாடியா | 12 | 1 | எவருமில்லை | எவருமில்லை | 11 | - | - |
| 4. ஜெஸ்ஸூர் | 7 | 1 | 2 | எவருமில்லை | 4 | - | - |
| 5. குல்னா | 11 | எவருமில்லை | எவருமில்லை | எவருமில்லை | 11 | - | - |
| 6. தினாஜ்பூர் | 16 | 2 | எவருமில்லை | எவருமில்லை | 13 | 1 | - |
| 7. போக்ரா | 6 | 1 | எவருமில்லை | எவருமில்லை | 5 | - | - |
| 8. மைமன்சிங் | 7 | 1 | எவருமில்லை | எவருமில்லை | 6 | - | - |
| 9. பாரித்பூர் | 18 | 2 | 3 | எவருமில்லை | 13 | - | - |
| 10. பாகர்கஞ்ச் | 6 | எவருமில்லை | 3 | 1 | 2 | - | - |
| 11. திப்பெரா | 5 | 1 | எவருமில்லை | எவருமில்லை | 4 | - | - |
| மொத்தம் | 100 | 13 | 8 | 1 | 76 | 1 | 1 |

## அட்டவணை II

### பகுதி 4 - ஐக்கிய மாகாணங்கள்

| பூர்வாங்கச் சுற்று தேர்தல் நடந்த தொகுதிகள் | போட்டியிட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | போட்டியிட்ட கட்சிகளும் அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | ஹரிஜன் லீக் | ஹிந்து மகா சபை | எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சை) |
| ஆக்ரா நகரம் | 11 | 1 | 5 | 1 | 1 | 3 |
| அலகாபாத் நகரம் | 6 | 1 | 4 | எவருமில்லை | எவருமில்லை | 3 |
| அல்மோரா | 8 | 3 | எவருமில்லை | எவருமில்லை | எவருமில்லை | 3 |
| மொத்தம் | 25 | 5 | 9 | 1 | 1 | 9 |

### பகுதி 5 - மத்திய மாகாணங்கள்

| பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் நடந்த தொகுதிகள் | போட்டியிட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | போட்டியிட்ட கட்சிகளும், அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் | | | |
|---|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | ஹரிஜன் லீக் | எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சைகள்) |
| நாக்பூர் மற்றும் சகோலி | 5 | 1 | 2 | 1 | 1 |
| ஹிங்கன் கட் | 6 | 1 | 2 | 1 | 2 |
| பந்தாரா | 5 | 1 | 3 | 1 | எவருமில்லை |
| யோத்மல் | 6 | 1 | 2 | எவருமில்லை | 3 |
| சிக்காலி | 6 | 1 | 3 | எவருமில்லை | 2 |
| மொத்தம் | 28 | 5 | 12 | 3 | 8 |

## பகுதி 6 - பஞ்சாப்

| பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் நடந்த தொகுதிகள் | போட்டியிட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | போட்டியிட்ட கட்சிகளும் அவை ஒவ்வொன்றும் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் | | |
|---|---|---|---|---|
| | | காங்கிரஸ் | ஐக்கிய வாதிகள் | எந்தக் கட்சியையும் சாராதவர்கள் (சுயேச்சைகள்) |
| குர்கான் | 10 | - | 1 | 9 |
| கர்னால் | 10 | 1 | - | 9 |
| அம்பாலா | 8 | - | - | 8 |
| ஹோஷியார்பூர் | 9 | 1 | 1 | 7 |
| ஜலந்தர் | 6 | 1 | 1 | 4 |
| லூதியானா | 10 | 1 | - | 9 |
| லையால்பூர் | 6 | - | - | 6 |
| மொத்தம் | 59 | 4 | 3 | 52 |

## அட்டவணை III

### பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்களில் போட்டியிட்ட கட்சிகள் மாகாண வாரியாகப் பெற்ற வாக்குகள்

| கட்சியின் பெயர் | ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மெட்ராஸ் | | பம்பாய் | | வங்காளம் | | ஐக்கிய மாகாணங்கள் | | மத்திய மாகாணங்கள் | | பஞ்சாப் | |
| | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் |
| 1. காங்கிரஸ் | 27838 | 33 | 5333 | 14 | 56848 | 32.7 | 4101 | 41.8 | 1131 | 10.7 | 8298 | 17.6 |
| 2. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | 30199 | 36 | 28489 | 74 | 21129 | 12.2 | 3093 | 30.5 | 8685 | 82.8 | இல்லை | |
| 3. சுயேச்சையாளர்கள் | 4648 | 4.5 | 3814 | 10 | 83869 | 47 | 1773 | 18.8 | 551 | 24618 | | |
| 4. ஹரிஜன் லீக் | இல்லை | | இல்லை | | இல்லை | | 370 | | 113 | | இல்லை | |
| 5. ஹிந்து மகாசபை | இல்லை | | இல்லை | | 760 | | 452 | | இல்லை | | இல்லை | |
| 6. ஐக்கியவாதிகள் | இல்லை | | இல்லை | | இல்லை | | இல்லை | | இல்லை | | 13521 | |
| 7. கம்யூனிஸ்டுகள் | 20814 | 25 | இல்லை | | 10049 | 5.8 | இல்லை | | இல்லை | | இல்லை | |
| மொத்தம் | 83,499 | | 36,536 | | 1,72,655 | | 9,789 | | 10,480 | | 46,437 | |

## அட்டவணை IV

### இந்தியா முழுவதும் துவக்கச் சுற்றுத் தேர்தல்களில் பதிவான வாக்குகளின் பகிர்ந்தளிப்பும், அவற்றில் காங்கிரஸ் மற்றும் காங்கிரசல்லாத கட்சிகளின் பங்கும்

| இந்தியா முழுவதும் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகள் | காங்கிரசுக்குச் சாதகமாக | | | | காங்கிரசல்லாத கட்சிகளுக்குச் சாதகமாக | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காங்கிரஸ் | ஹரிஜன் லீக் | மொத்தம் | சதவீதம் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | சுயேச்சையாளர்கள் | ஹிந்து மகா சபை | கம்யூனிஸ்டுகள் | ஐக்கியவாதிகள் | தீவிர ஜனநாயக கட்சி | மொத்தம் | சதவீதம் |
| 3,59,532 | 1,03,449 | 483 | 1,03,932 | 28 | 91,595 | 1,19,273 | 1212 | 30863 | 13521 | 136 | 2,55,600 | 72 |

அட்டவணை 5

## பல்வேறு மாகாணங்களில் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்களில் கட்சிவாரியாக வெற்றி பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை

| கட்சியின் பெயர் | மெட்ராஸ் | பம்பாய் | வங்காளம் | ஐ.மா. | ம.மா. | பஞ்சாப் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. காங்கிரஸ் | 10 | 3 | 12 | 4 | 5 | 4 | 38 |
| 2. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் | 24 | 5 | 6 | 5 | 11 | இல்லை | 51 |
| 3. சுயேச்சைகள் | 3 | 4 | 36 | 2 | 3 | 21 | 69 |
| 4. ஹிந்து மகாசபை | இல்லை | இல்லை | 1 | 1 | 1 | - | 3 |
| 5 ஹரிஜன் லீக் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | - | - |
| 6. கம்யூனிஸ்டுகள் | 3 | இல்லை | 1 | இல்லை | இலலை | - | 4 |
| 7. தீவிர ஜனநாயகக் கட்சி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | - | - |
| 8. ஐக்கியவாதிகள் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 3 | 3 |
| மொத்தம் | 40 | 12 | 56 | 12 | 20 | 28 | 168 |

# 2

# அமைச்சரவைத் தூதுக்குழுவும் தீண்டப்படாதவர்களும்[1]

## தீண்டப்படாதவர்களை அமைச்சரவைத் தூதுக்குழு எவ்வாறு புறக்கணித்தது?

அமைச்சரவைத் தூதுக்குழு தனது மே 10-ஆம் தேதிய அறிக்கையில் இந்தியாவின் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான இடைக் கால மற்றும் நீண்டகால யோசனைகளை முன்வைத்தது. அவர்களுடைய யோசனைகளில் மிகுந்த அதிர்ச்சியும் எரிச்சலும் அளிக்கக் கூடிய ஓர் அம்சமும் இடம்பெற்றிருந்தது; தீண்டப்படாதவர்களை இந்திய தேசிய நீரோட்டத்தில் ஒரு தனியான, குறிப்பிடத்தகுந்த அங்கமாக ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்ததுதான் அந்த அம்சம். குழு தனது நீண்ட அறிக்கையில் ஒருமுறை கூட தீண்டப்படாதவர் பற்றி குறிப்பிடவில்லை; அந்த அளவுக்கு அவர்களை அது முற்றிலும் புறக்கணித்து விட்டது. தாழ்த்தப்பட்டவர்களை எந்த அளவுக்கு தூதுக்குழு ஒதுக்கியது என்பதைக் கீழ்க்கண்டவற்றின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்:

i) சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ளதுபோல் மத்திய நிர்வாக சபையில் தீண்டப்படாதவர்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமை அளிக்கப் படவில்லை. தற்பொழுதுள்ள இடைக்கால அரசில் தாழ்த்தப்பட்ட வகுப்பு பிரதிநிதிகள் இருவர் இருக்கின் றனர். இவர்களில் எவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடம் விசுவாசம் கொண்டவர்களோ அல்லது அவர்களுக்கு எவ்வகையிலும் கடமைப்பட்டவர்களோ அல்ல. இவர்களில் ஒருவர் காங்கிரசால் நியமிக்கப்பட்டவர்; மற்றொருவர் முஸ்லீம் லீக்கால் நியமிக்கப்பட்டவர்.

ii) இடைக்கால அரசில் முஸ்லீம்கள் விஷயத்தில் செய்திருப்பதுபோல் தீண்டப்படாதவர்களுக்கு குறிப்பிட்ட அளவு ஒதுக்கீடு செய்து பிரதிநிதித்துவம் அளிக்கப்பட

1. ஆதாரம் : அச்சடிக்கப்பட்ட துண்டு பிரசுரம் - ஆசிரியர்.

வில்லை. பதினான்கு பேர் கொண்ட அமைச்சரவையில் தீண்டப்படாதவர்கள் இரண்டு உறுப்பினர்கள் இருப் பார்கள் என்று 1945ல் நடந்த சிம்லா மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது. 1945க்கும் 1946க்கும் இடையே இவ்வாறு களம் மாளியத்திற்கான காரணம் தரப்படவில்லை.

iii) அரசியல் நிர்ணய சபையில் தனிப் பிரதிநிதித்துவம் பெறும் உரிமை அவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

# II

## அமைச்சரவைத் தூதுக்குழுவின் முடிவு மன்னர்பிரான் அரசின் நிலைநாட்டப்பட்ட கொள்கையிலிருந்து எவ்வாறு ஒரு பிறழ்வாக அமைந்துள்ளது

2. இந்தியாவின் அரசியல் சம்பந்தமாகவும், தீண்டப்படாத வர்களின் நிலை சம்பந்தமாகவும் மன்னர்பிரான் அரசுக்கு அதன் கொள்கையில் வழிகாட்டி வந்த கோட்பாடுகளிலிருந்து அது பெரு மளவுக்கு விலகிச் சென்றுவிட்டதையே அமைச்சரவைத் தூதுக் குழு வின் முடிவு காட்டுகிறது.

i) 1920-க்கு முன், இந்திய அரசின் அரசியல் சட்டத் திருத் தங்கள் பிரிட்டிஷ் அரசின் சொந்த விருப்பத்தின் படியும், அவர் களுடைய சொந்த அதிகாரத்தின்படியும் செய்யப்பட்டு வந்தன. முதன்முதலாக 1920-ல் பிரிட்டிஷ் அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இந்தியர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்க முடிவு செய்தது. அதற்கேற்ப, இந்தியர்கள் அழைக்கப்பட்டு ஒரு வட்ட மேசை மாநாடு நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் பங்குகொண்ட இந்தியர்களுள், காங்கிரசுடனோ அல்லது வேறு எந்த அரசியல் கட்சியுடனோ சம்பந்தப்படாமல் சுயேச்சையாகவும் தனிப்பட்ட முறையிலும் அழைக்கப்பட்ட தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகள் இருந்தனர்.

ii) இந்திய தேசிய வாழ்வில் தாழ்த்தப்பட்டவர்களை ஒரு தனி அங்கமாக குறிப்பிடுவதை எதிர்த்தும், அவர்கள் இந்துக் களில் ஒரு பகுதியினரே என்றும், ஆகவே தனிப் பிரதிநிதித்துவத் திற்கு அவர்கள் உரியவர்களல்லர் என்றும் காங்கிரஸ் பிரதிநிதி யான திரு. காந்தி வாதிட்டார். பிரிட்டிஷ் அரசு திரு. காந்தியின் இந்த வாதத்தை நிராகரித்தது; தாழ்த்தப்பட்டவர்கள் இந்திய தேசிய வாழ்வில் ஒரு தனியான, குறிப்பிடத்தக்க அங்கம் என்றும் எனவே, அவர்கள் முஸ்லீம்கள், இந்திய கிறித்தவர்கள் போன்ற இதர சிறு பான்மையினர்களுக்குள் அதே பாதுகாப்புகள் பெற உரிமை உடைய வர்கள் என்றும் வகுப்புவாரித் தீர்ப்பின் மூலம் பிரகடனம் செய்தது.

iii) பிரிட்டிஷ் அரசு இதே கொள்கையை 1945 ஜூனில் நடைபெற்ற சிம்லா மாநாட்டிலும் பின்பற்றியது. அந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட இந்தியர்களில் காங்கிரஸ் அல்லது வேறு எந்த அரசியல் கட்சியையும் சாராத தீண்டப்படாதவர் பிரதிநிதி ஒருவர் மீண்டும் அழைக்கப்பட்டார்.

iv) 1942ல் கிரிப்ஸ் முன்வைத்த யோசனைகளில் ஒரு பகுதியாக இருந்த அரசியல் நிர்ணய சபையில் தீண்டப்படாதவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்க வகை செய்யப்படவில்லை, எனவே அமைச்சரவைத் தூதுக்குழுவின் தற்போதைய யோசனைகள் முந்திய நிலையிலிருந்து விலகிச் செல்லுவதைக் குறிப்பதாகக் கூறமுடியாது என்று வாதிக்கலாம். ஆனால் உண்மையில் இந்த யோசனைகள் முந்திய நிலையிலிருந்து விலகிச் செல்லுகின்றன என்பதே பதிலாகும். 1942ஆம் வருட கிரிப்ஸ் யோசனைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என்பதல்ல. உண்மையில், அரசியல் நிர்ணய சபையில் எந்தச் சிறுபான்மை வகுப்பினருக்குமே தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. ஆனால் அமைச்சரவைத் தூதுக்குழு முன்மொழிந்துள்ள அரசியல் நிர்ணய சபைக்கான அரசியல் சட்டத்தில் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தனிப் பிரதிநிதித்துவம் தீண்டப்படாதவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாரபட்சப் போக்கைப் பற்றித்தான் தீண்டப்படாதவர்கள் புகார்கள் எழுப்பியுள்ளனர்.

3. அமைச்சரவைத் தூதுக்குழுவின் யோசனைகள் நியாயமற்றவை; இந்திய தேசிய நீரோட்டத்தில் தீண்டத்தகாதவர்களை ஒரு தனி அங்கமாக ஏற்கும் கொள்கையிலிருந்து விலகிச் சென்றிருப்பதிலும் இஸ்லாமியர்களையும் சீக்கியர்களையும் போல் அவர்களை ஒரு தனி அங்கமாக ஏற்காததிலும், அவர்கள்பால் பாரபட்சம் காட்டுவதிலும்தான் இந்த அநீதி புதைந்து கிடக்கிறது.

**தீண்டப்படாதவர்களுக்கு மன்னர்பிரான் அரசு அளித்த வாக்குறுதிகளை அமைச்சரவைத் தூதுக்குழுவின் முடிவு எவ்வாறு மீறுகிறது?**

4. தீண்டப்படாதவர்களை ஒரு தனி அங்கமாக அமைச்சரவைத் தூதுக்குழு மறுப்பது பிரிட்டிஷ் அரசினால் அவர்களுக்கு

அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு மாறானது. கீழ்க்கண்ட சில வாக்குறுதிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை:

**(i)**

*''இந்திய ஒற்றுமையின் நலனைக் கருதி எந்த அரசியலமைப்புத் திட்டங்களிலும் இந்திய சமஸ்தானங்களை இணைக்க வேண்டும் எனும் முக்கியத் தேவையை நாம் மறந்துவிடக் கூடாது.*

*சிறுபான்மையினரின் விடாப்பிடியான கோரிக்கைகள் உள்ளன. இவற்றில் இரண்டை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பெரும் இஸ்லாமியச் சிறுபான்மையினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருமே அவர்கள். சிறுபான்மையினருக்குக் கடந்த காலத்தில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன; உண்மையில் அவர்கள் நிலை பாதுகாக்கப்பட வேண்டும்; அந்த வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும்.''*

*- 1940-ம் ஆண்டு ஜனவரி 10-ஆம் நாள், பம்பாய் ஓரியண்ட் கிளப்பில் லின்லித்கோ பிரபு ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.*

(ii)

*''இவைதாம் இப்போது எடுத்துள்ள இரண்டு முக்கியப் பிரச்சினைகள். இந்த இரண்டு பிரச்சினை குறித்த மன்னர் பிரான் அரசு தனது நிலைகளைத் தெளிவுபடக் கூறும்படி என்னைப் பணித்துள்ளது. முதலாவது, எந்த எதிர்கால அரசியலமைப்புத் திட்டத்திலும் சிறுபான்மையினரின் நிலை சம்பந்தப்பட்டது... இந்தியாவின் தேசிய வாழ்வில் வலிமை மிக்க சக்திகளால் மறுக்கப்படும் எவ்வகையான ஓர் அரசாங்க அமைப்பிடமும் இந்தியாவின் அமைதியையும் நலன்களையும் காப்பதற்குத் தற்போது தங்களுக்குள்ள பொறுப்புகளை மாற்றிக் கொடுக்கும் எண்ணம் எதுவும் மன்னர்பிரான் அரசுக்கு இல்லை என்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய சக்திகளை இப்படிப்பட்ட ஓர் அரசிற்குப் பணிந்து போகும்படி வல்லந்தப்படுத்துவதற்கு அவர்கள் துணை போகவும் முடியாது.''*

*- 1940, ஆகஸ்டு 8-ஆம் நாள் லின்லித்கோ பிரபு அளித்த அறிக்கையின் ஒரு பகுதி*

''காங்கிரஸ் தலைவர்கள் ஒரு போற்றற்குரிய ஸ்தாபனத்தைக் கட்டி வளர்த்துள்ளனர்; அது இந்தியாவின் திறமை வாய்ந்த அரசியல் இயந்திரமாகும்... இந்தியாவின் அரசியல் வாழ்வின் (முக்கிய) பிரதான பகுதியினர் எல்லோருக்குமாக தான் பேசுவதாகக் கூறிக் கொள்ளும் காங்கிரஸ் உண்மையில் அது பேசுவதில் வெற்றி பெற்றிருக்குமானால் - வெற்றி பெற்றிருக்கக் கூடுமானால் - அவர்களின் கோரிக்கை எவ்வளவு தீவிரமுடையதாக இருந்தாலும், பல அம்சங்களில் நம் பிரச்சினை இன்று இருப்பதை விட மிக அதிகம் இலகுவானதாக இருந்திருக்கும். பிரிட்டிஷ் இந்தியாவில் அவர்கள் மிகப் பெரிய தனிக் கட்சியாவர்; அதன் காரணமாக இந்தியாவிற்காக பேசுவதாகச் சொல்வதை இந்தியாவின் சிக்கலான தேசிய வாழ்வில் உள்ள பல மிக முக்கியமான பகுதியினர் மறுக்கின்றனர். இந்த மற்றவர்கள் எண்ணிக்கையில் தங்களைச் சிறுபான்மையினராக மட்டுமன்றி எதிர்கால இந்திய அரசியல் வாழ்வில் தனிமையான அங்கங்களாகவும் தாங்கள் கருதப்பட வேண்டும் என்று உரிமை கோருகின்றனர். இவர்களில் மிக முதன்மையானவர்கள் (பெரும் எண்ணிக்கையில் உள்ள) மகத்தான முஸ்லீம் சமூகத்தினர். பூகோள அடிப்படையில் அமைந்துள்ள வாக்காளர் தொகுதிகளில் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை வகுக்கும் அரசியல் சட்டத்தோடு அவர்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை. வெறும் எண்ணிக்கையில் பெரும் பான்மையினராக செயல்படுவோருக்கு எதிராக அரசியல் அமைப்பு சம்பந்தமான எந்த விவாதத்திலும் பங்கு பெறும் அங்கமாக தாங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் உரிமை கோருகின்றனர். தாழ்த்தப்பட்ட (தீண்டப்படாத) ஜாதியினர் என்று அறியப்படும் மகத்தான முக்கிய பகுதியினருக்கும் இது பொருந்தும். அவர்கள் சார்பில் திரு. காந்தி எடுத்துக் கொண்ட அக்கறையுடன் கூடிய முயற்சிகள் இருந்தபோதிலும், ஒரு சமுதாயம் என்ற முறையில் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான இந்து சமூகத்திற்கு வெளியில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.''

*- காமன்ஸ் சபையில் 1940 ஆகஸ்டு 14ல் இந்தியா மந்திரி மேதகு திரு. எல்.எஸ். அமெரி ஆற்றிய உரையிலிருந்து*

## (iv)

இந்தக் காரணங்களை எல்லாம் விவரமாகத் திரும்பிக் கூறிக் கொண்டிராமல், அச்சமயம் மன்னர்பிரான் அரசாங்கம் தெளிவாகக் கூறியதை உங்களுக்கு நினைவுப்படுத்துகிறேன்:-

(அ) போர் முடிந்த பிறகு இந்திய தேசிய வாழ்வின் பிரதான சக்திகள் கலந்தாலோசித்து ஓர் உடன்பாடான அரசியலமைப்பை வகுக்க வேண்டும், தேவையான ஒப்பந்த ஏற்பாடுகளை மன்னர் பிரான் அரசுடன் செய்து கொள்ள பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

(ஆ) நீங்கள் தெரிவித்திருப்பதுபோல் மத்திய சட்டமன்றத்திற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள ஒரு ''தேசிய அரசாங்கத்தை'' அமைக்க வேண்டுமானால் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்; ஆனால் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இந்தத் திருத்தத்தைச் செய்வது சாத்தியமல்ல. இன, சமய சிறுபான்மையினரதும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரதும் நலன்களைப் பாதுகாக்கும் தங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்வதும், அதேபோன்று இந்திய சமஸ்தானங்களுடன் தங்களுக்குள்ள ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றுவதுமே இந்த நிபந்தனைகளின் நோக்கமாகும்.

- *1944 ஆகஸ்டு 15ஆம் தேதியிட்டு திரு. காந்திக்கு வைசிராய் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.*

5. தீண்டப்படாதவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிப்பதில்லை என்ற அமைச்சரவைத் தூதுக்குழுவின் முடிவு இது சம்பந்தமான உண்மைகளை நேர்மையாக ஆராய்ந்து எடுத்த முடிவல்ல. மாறாக, தூதுக்குழு செய்ததென்னவென்றால் திரு. காந்தியின் தப்பெண்ணங்களைத் தட்டிக் கொடுத்ததுதான். தீண்டப்படாதவர்களை இந்திய தேசிய நீரோட்டத்தில் ஒரு தனி அங்கமாக ஏற்பதை திரு. காந்தி மூர்க்கமாக எதிர்த்தார். வட்டமேசை மாநாட்டிலும் அவர்களை சிறுபான்மையினராக ஏற்க மறுத்தார். அவருடைய எதிர்ப்பிற்கு மாறாக திரு. ராம்சே மெக்டொனால்டின் வகுப்புவாரித் தீர்ப்பில் அவர்கள் தனி அங்கமாக ஏற்கப்பட்டதை அறிந்ததும், தீண்டப்படாதவர்கள் தனி இனம் எனக் குறிப்பிட்டதை திரும்பப் பெறவில்லையெனில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாய் மிரட்டினார். மீண்டும் 1945-ல் முதல் சிம்லா மாநாட்டில் மன்னர் பிரான் அரசு தீண்டப்படாதவர்களுக்குத் தனி அந்தஸ்து அளிக்கப்பட்டதை அறிந்ததும் திரு. காந்தி அதனை எதிர்த்தார்.

அமைச்சரவைத் தூதுக்குழுவினர் தங்களுடைய யோசனைகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். திரு. காந்தியின் இசைவைப் பெற்றாலொழிய இது சாத்தியமில்லாமல் இருந்தது. திரு. காந்தி கேட்ட விலையை தூதுக்குழு கொடுத்தது. தீண்டப்படாதவர்களுக்கான தனி அரசியல் அங்கீகாரத்தைப் பலியிடுவதுதான் அந்த விலை. இன்னும் சொல்லப்போனால் சிறுபான்மையினரைப் பொறுத்தவரை அமைச்சரவைத் தூதுக்குழுவின் பிரேரணைகள் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் திரு. காந்தி முன்வைத்த திட்டத்தின் மறுபதிப்புத் தானே தவிர வேறல்ல. அரசியல் ரீதியாக மூன்று இனங்களைத்தான் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதாகத் திரு. காந்தி கூறினார். அவர்கள் 1) இந்துக்கள் 2) முஸ்லீம்கள் 3) சீக்கியர்கள். தூதுக்குழுவின் திட்டம் திரு. காந்தியின் திட்டத்தின் அசல்தான். வேறு விளக்கம் அதற்கு ஒன்றுமில்லை.

## III

### அமைச்சரவைத் தூதுக்குழு தனது முடிவுகளை நியாயப்படுத்த முன்வைத்த ஆதாரங்கள்

6. தீண்டப்படாதவர்களைத் தனி ஒரு அங்கமாக அங்கீகரிக்காததன் முடிவை நியாயப்படுத்த அமைச்சரவைத் தூதுக்குழு மாகாண சட்டசபைகளுக்கு 1948 பிப்ரவரியில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது. 1946 ஜூலை 18-ஆம் நாள் அமைச்சரவைத் தூதுக்குழுவின் பிரேரணைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்பொழுது, தூதுக்குழு உறுப்பினர்கள் பின்கண்ட விஷயங்களை வலியுறுத்த முயற்சித்தனர்:

(i) அதாவது இந்தத் தேர்தலில், தீண்டப்படாதவர்களுக்காக ஒதுக்கப்பட்ட எல்லா தொகுதிகளையும் காங்கிரஸ் கைப்பற்றியது; ஆகவே காங்கிரஸ் தீண்டப்படாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்நிலைமையில், தீண்டப்படாதவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிப்பது நியாயமல்ல.

(ii) அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனத்துக்கும் எனக்கும் பம்பாய் மற்றும் மத்திய மாகாணங்களில் மட்டும்தான் ஆதரவு உள்ளது.

7. சோடையான ஆதாரங்கள்

இவை அதீதமான அசுரத்தனமான கருத்துகள்; ஆழமான, நேர்மையான நுண்ணாய்வின்முன் இவை எடுபட மாட்டா. காங்கிரசின் பிரதிநிதித்துவத் தன்மையை மதிப்பிட தேர்தல் முடிவுகளை அடிப்படையாக எடுத்துக் கொண்டதின் மூலம் அமைச்சரவைத் தூதுக்குழு துவக்கத்திலேயே ஒரு பெரும் தவறைச் செய்துவிட்டது. இதன் காரணமாக தூதுக்குழு கீழ்க்கண்ட சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது:

i) இந்து வாக்காளர்கள் போர்க்காலம் முழுவதும், தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களாகவே இருந்தார்கள். அவர்கள் போர்க்காலப் பணிகளைச் செய்தாலும் அவற்றை விரும்பிச் செய்யவில்லை. காங்கிரஸ் கட்சி பிரிட்டிஷ் எதிர்ப்பாளராய் இருந்ததும், போர் முயற்சிகளில் ஒத்துழையாமல் இருந்ததும் இந்து வாக்காளர்களைப் பெரிதும் கவர்ந்து அக்கட்சியின்பால் ஈர்த்தது. மற்றைய கட்சிகள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரிட்டிஷ் ஆதரவாளர்களாய் இருந்ததாலும் போர் முயற்சிகளில் ஒத்துழைத்ததாலும் தேர்தலில் மிகுந்த பாதிப்புக்குள்ளாயின.

ii) தேர்தல் நாள் குறிப்பிடப்பட்ட நாளுக்குச் சற்று முன்னர் தான், வைஸ்ராய் மற்றும் தலைமை தளபதி இந்திய தேசிய ராணுவத்தினர் மீது விசாரணையைத் துவக்கினர். காங்கிரஸ் உடனே இந்திய தேசிய ராணுவத்துக்கு ஆதரவாகக் கச்சைக் கட்டிக் கொண்டு கிளம்பிற்று; இந்த விசாரணை தேர்தல் பிரச்சினையாகவும் ஆகிவிட்டது. சடசடவென்று சரிந்து கொண்டிருந்த காங்கிரசின் செல்வாக்கைத் தூக்கிப்பிடித்து நிறுத்தும் ஒரு முக்கிய ஆதாரக்கோலாக இந்த விசாரணை அமைந்துவிட்டது என்று கூறலாம்.

iii) ''சுதந்திரம் வேண்டும்'', ''வெள்ளையனே வெளியேறு'' என்ற கோஷத்தின் அடிப்படையில்தான் தேர்தல் நடைபெற்றது; எதிர்கால இந்திய அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது இத்தேர்தலில் ஒரு பிரச்சினையாக இடம்பெறவில்லை. அவ்வாறு இந்தப் பிரச்சினை இடம்பெற்றிருந்தால் காங்கிரஸ் தற்பொழுது பெற்ற பெரும்பான்மையைப் பெற்றிருக்கவே முடியாது.

iv) காங்கிரசை எதிர்த்து நின்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச்

சார்ந்த வேட்பாளர்களிடம் தேர்தல் அதிகாரிகளும், தொகுதி பொறுப்பு அலுவலர்களும் காட்டிய பகைமை உணர்வை தூதுக் குழு கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை. இந்த அதிகாரிகள் அனைவரும் சாதி இந்துக்களாக இருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வாக்குச்சீட்டைத் தர மறுக்கும் அளவுக்கும் வேட்பு மனுக்களை ஏற்க மறுக்கும் அளவுக்கும் கூட அவர்கள் சென்றனர்; காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க தீண்டப் படாத வாக்காளர்கள் தயாராய் இல்லை என்ற காரணத்துக்காக சாதி இந்துக்கள் அவர்களை எத்தகைய கொடுமைக்கும் வன்முறைக் கும் பயமுறுத்தலுக்கும் உள்ளாக்கினார்கள் என்பதைத் தூதுக் குழு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆக்ரா நகரத்தில் தீண்டப்படாதவர்களின் 40 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பம்பாயில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். மற்றும் நகர்ப் புறங்களில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வாக் காளர்கள் வாக்குச்சாவடிக்குச் செல்லவே அனுமதிக்கப்பட வில்லை. நாக்பூரில், தாழ்த்தப்பட்ட வாக்காளர்களை பயமுறுத்தித் துரத்துவதற்காகவே குற்றவியல் நடுவரின் அனுமதியில்லாமலேயே காங்கிரஸ் அனுதாபமுள்ள ஒரு காவல்துறை அதிகாரி துப்பாக்கி யால் சுட்டார். இதைப் போன்று இந்தியாவில் அனைத்து இடங் களிலும் எண்ணிலடங்கா நிகழ்ச்சிகள் நடந்தன.

8. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தால், தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வெற்றி முற்றிலும் அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலைமைகளால்தான் என்பதைத் தூதுக்குழுவினர் உணர்ந்திருப்பார்கள். இந்தச் சூழ்நிலைமைகளில் நடந்த தேர்தல்களின் முடிவுகளை வைத்துக் கொண்டு சட்டமன்றத் தில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்க இயலாது என்று நியாயப்படுத்தக் கூடாது.

### அமைச்சரவைத் தூதுக்குழு அதன் முடிவிற்கு எப்படி ஒரு தவறான அளவுகோலை எடுத்துக் கொண்டது

9. காங்கிரஸ் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதியா, இல்லையா என்பதை முடிவு செய்யத் தூதுக்குழு எடுத்துக் கொண்ட அளவுகோல், தீண்டப்படாதவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் இறுதித் தேர்தல்களில் எத்தனை தொகுதிகளில் காங்கிரஸ் வென்றது என்பதாகும். இந்த அளவுகோல் ஒரு தவறான அளவுகோல்; ஏனெ னில் இறுதித் தேர்தல்களின் முடிவுகள் தீண்டப்படாதவர்களின்

கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. புனா ஒப்பந்தத்தின்படி இறுதித் தேர்தல்கள் இந்து வாக்குகளால் முடிவு செய்யப்படுகின்றன. அப்படியானால் தூதுக்குழு எடுத்துக் கொண்டிருக்க வேண்டிய உண்மையான அளவு கோல் எது? தீண்டப்படாதவர்கள் எவ்வாறு வாக்களித்தார்கள், காங்கிரசுக்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகள் எத்தனை, எதிர்த்து அளிக்கப்பட்ட வாக்குகள் எத்தனை என்பதைக் கண்டறிவதுதான் உண்மையான அளவுகோலாகும். இது பூர்வாங்க தேர்தலின் முடிவுகள் மூலம்தான் கண்டறியப்படுமேயொழிய இறுதிச் சுற்றுத் தேர்தல் முடிவுகளின் மூலம் அல்ல. ஏனெனில் பூர்வாங்கத் தேர்தலில்தான் தீண்டப்படாதவர்கள் மட்டும் வாக் களிக்கின்றனர். பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்களின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டால் அமைச்சரவைத் தூதுக் குழுவின் முடிவுகள் உண்மைக்குப் புறம்பானவை, அபத்தமானவை என்பதை அறியலாம். ஏனெனில் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் களில் காங்கிரசுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் 28 சதவீதம் தான்; எதிர்த்து போடப்பட்ட வாக்குகளோ 72 சதவீதம்.

10. தாங்கள் காங்கிரசைச் சார்ந்தவர்கள் அல்ல என்று தீண்டப்படாதவர்கள் நினைத்திருந்தால், அவர்களுக்காக ஒதுக்கப் பட்ட 151 தொகுதிகள் ஒவ்வொன்றிலும் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலைப் பெற்று இருக்கலாம் என்று கூறப்படுகிறது. உண்மை யில், இந்தியா முழுமைக்கும் 43 தொகுதிகளுக்கு மட்டும்தான் பூர்வாங்கத் தேர்தல்கள் இருந்தன. மீதம் 108 தொகுதிகளில் தீண்டப் படாதவர்கள் ஏன் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலை நடத்தவில்லை? இந்த வாதம் கீழ்க்கண்ட காரணங்களினால் அர்த்தமற்றது:

i) பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் கட்டாயமானவையல்ல. ஒரு தொகுதியில் நான்கு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிட்டால்தான் அது கட்டாயமாகிறது. பூர்வாங்கச் சுற்றுத் தேர்தலில் நிற்பவர் இறுதித் தேர்தலிலும் போட்டியிடும் தேவை ஏற்படுகிறது என்பது உணரப்படுவதில்லை. இரண்டு தேர்தல்களிலும் போட்டியிடுவதால் ஏற்படக்கூடிய செலவை தாங்கிக் கொள்ள தீண்டத்தகாதவர்களால் முடியாது என்பதால் பூர்வாங்கச் சுற்று தேர்தல்களில் அவர்களை நிற்கத் தூண்டுவது சிரமமான காரியமாக இருக்கிறது. ஆகவே, 43 தொகுதிகளுக்குத்தான் பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல் நடத்தப்பெற்றது என்பதை தீண்டப்படாதவர்கள் காங்கிரசிடம் இருந்து வேறுபட்ட

வர்கள் அல்ல என்ற கருத்தினுக்கு அடிப்படையாகக் கொள்ள முடியாது.

ii) பூர்வாங்கச் சுற்றுத் தேர்தல்களில் ஒவ்வொரு தொகுதியிலும் நான்கு வேட்பாளர்களை ஏன் நிறுத்தவில்லை என்று காங்கிரசைத்தான் கேட்க வேண்டும். ஏனெனில், தீண்டப்படாதவர்களின் பிரதிநிதி தாங்கள்தான் என்று காங்கிரஸ் கருதியிருந்தால் 151 தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் நான்கு காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தி இறுதிச் சுற்றுத் தேர்தலுக்கு எந்த ஒரு கட்சியும் வர முடியாமல் செய்திருக்கலாம். காங்கிரஸ் இதைச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, 43 பூர்வாங்கத் தேர்தல்களில் கூட ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸ் ஒரு வேட்பாளரைத்தான் நிறுத்தியது. அதுவும் முதல் நான்கு பேர்களில் ஒருவராக வந்து இறுதிச் சுற்றில் இந்து வாக்குகளின் பலத்தால் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையால்தான் அவ்வாறு செய்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்குக் காங்கிரஸ் மீது நம்பிக்கையில்லை என்பதை அக்கட்சி தெரிந்திருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

iii) தாழ்த்தப்பட்டவர்கள் 1937-ல்தான் முதல் முறையாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். 1937-க்குப் பிறகுதான் தீண்டப்படாதவர்கள் தேர்தல்களில் பங்கு கொள்வதற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளத் துவங்கினர். தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனம் காங்கிரசால் தோற்கடிக்கப்பட்டது என்பதனால் தாழ்த்தப்பட்டவர்கள் காங்கிரசுடன் இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வருவது தவறானது. தேர்தல்களின் முடிவுகளைக் கொண்டு சம்மேளனத்திற்குப் பாதகமான முடிவுகளை எடுப்பதற்கு முன் அமைச்சரவைத் தூதுக்குழு காங்கிரசுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனத்திற்கும் இடையே உள்ள சமமில்லாத பலத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

### தங்களுடைய முடிவுகளை நியாயப்படுத்த தூதுக்குழு முன்வைத்த ஏனைய ஆதாரங்களின் பயனற்றத் தன்மை

11. டாக்டர் அம்பேத்கரைப் பின்பற்றுவோர் பம்பாய் ராஜதானி மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே என்று அமைச்சரவைத் தூதுக்குழு உறுப்பினர்கள் வாதிட்டனர். இந்தக் கூற்றுக்கு அடிப்படையே இல்லை. தாழ்த்தப்பட்ட சாதியினர் சம்மேளனம் மற்ற மாகாணங்களிலும் இயங்கி வருவது மட்டுமன்றி, பம்பாய் மற்றும் மத்திய மாகாணங்

களைப் போல் பெரிய அளவில் இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவில் தேர்தல் வெற்றிகளை அந்த இடங்களில் அது பெற்றிருக்கிறது. தூதுக்குழு இந்த அறிக்கையை வெளியிடுமுன் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் டாக்டர் அம்பேத்கர் பெற்ற தனிப்பெரும் வெற்றியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது. அவர் வங்க மாகாண சட்டசபையிலிருந்து வேட்பாளராகப் போட்டி யிட்டார். பொதுத் தொகுதியினைப் பொறுத்தவரை அவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சரத் சந்திரபோசைக் கூடத் தோற்கடித்து வாக்களிப்பில் முன்னணியில் இருந்தார். டாக்டர் அம்பேத்கருக்கு பம்பாய் மற்றும் மத்திய மாகாணங்களுக்கு வெளியே செல்வாக்கு இல்லையெனில் அவர் எப்படி வங்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டார்? வங்க மாகாண சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு 30 இடங்கள் உள்ளன என்பதை இங்கு நினைவுகூர வேண்டும். மொத்தம் 80 பேரில் காங்கிரஸ் வேட்பாளர்களாக 28 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டனர். அவர் கட்சியைச் சேர்ந்த இருவரில் தேர்தல் நாளன்று ஒருவருக்கு உடல்நலமில்லை. இதையும் மீறி டாக்டர் அம்பேத்கர் வாக்குப்பதிவில் முதன்மையில் இருந்தார். காங்கிரஸ் கட்சி சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப் பினர்கள் அவருக்காக வாக்களித்திருந்தாலொழிய இது நடந்திருக்க முடியாது. வங்காளத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் டாக்டர் அம்பேத்கரின் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதையும் இங்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காங்கிரசைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்கள் அவருடைய இனத்தைச் சாராதிருந்தும் அவரைத்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவ ராகக் கருதுகிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இது தூதுக் குழு உறுப்பினர்களின் அறிக்கையை முழுவதுமாக நிராகரிக்கிறது.

12. அரசியல் நிர்ணய சபையை அமைப்பதில் ஒரு சீரான முறையை நடைமுறைப்படுத்த, மற்ற வகுப்பினரின் விஷயத்தில் நடந்ததைப் போலவே தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்திலும், இறுதிச் சுற்றுத் தேர்தல் முடிவுகளே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சரவைத் தூதுக்குழு உறுப்பினர்கள் வாதிட்டனர். இது ஏதோ சாக்குப்போக்காக விளக்கங் கூறுவதாக இருக்கிறதே தவிர வலுவானதாகவே இல்லை; முஸ்லீம்கள், இந்தியக் கிறித்தவர் கள் மற்றும் சீக்கியர்கள் ஆகியோரது இறுதிச் சுற்றுத் தேர்தல்கள் தனி வாக்காளர் தொகுதிகளைக் கொண்டது என்பது தூதுக்குழு வுக்குத் தெரியும். ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இறுதித் தேர்தல் தனி வாக்காளர் தொகுதிகளைக் கொண்டது அல்ல. இதன்

காரணமாக ஒரே சீரான முறையைக் கடைப்பிடிக்க அரசியல் நிர்ணய சபையில் தீண்டப்படாதவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு பூர்வாங்கத் தேர்தல் முடிவுகளை தூதுக்குழு கணக்கிலெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். தூதுக்குழு இதைச் செய்யக் கடமைப் பட்டுள்ளது; ஏனெனில் தீண்டப்படாதவர்களுக்கான தேர்தல் முறை பற்றி புனா ஒப்பந்தத்தில் எடுக்கப்பட்ட முடிவு நியாயமானது அல்ல என்று விவாதத்தின் பொழுது சர் ஸ்டாபோர்ட் கிரிப்சால் ஒப்புக் கொள்ளப்பட்டது. பின் ஏன் தூதுக்குழு அப்போது இதை தனது முடிவுக்கு அடிப்படையாக ஏற்றுக் கொண்டது?

## IV

### எதிர்நோக்கும் அபாயத்திலிருந்து தாழ்த்தப்பட்டவர்களை காப்பாற்ற என்ன செய்ய வேண்டும்?

13. சாதி இந்துக்கள் அறுதிப் பெரும்பான்மையினராக உள்ள அரசியல் நிர்ணய சபையின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி தாழ்த்தப்பட்டவர்களை முற்றிலும் அவர்களது தயவில் இருக்கும் படி தூதுக்குழு விட்டுவிட்டது. மன்னர்பிரான் அரசின் வகுப்பு வாரித் தீர்ப்பில் தங்களுக்கு வழங்கப்பட்டதான வாக்காளர் தொகுதி களை திரும்பக் கொண்டுவர வேண்டும் என்றும், சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து திரு. காந்தியினால் தங்கள் மீது வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட புனா ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட வேண்டும் என்றும் தீண்டப்படாதவர்கள் விரும்புகின்றனர். இதை, இந்துக்கள் எதிர்க்கக் கூடும். இந்துப் பெரும்பான்மையினரின் தயவில் தாங்கள் விடப்பட்டு விட்டதாக தாழ்த்தப்பட்டவர்கள் முறையீட்டுக்குப் பதிலளிக்கும் வகையில், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஓர் ஆலோசனைக்குழு அமைக்க லாம் என்ற யோசனையைத் தூதுக்குழு பிரபலப்படுத்தி வருகிறது. இந்த உத்தேச ஆலோசனைக் குழுவின் அதிகாரங்களையும் அமைப் பையும் ஆராயும் எவரும் அது மோசமானதிலும் மோசமானது என்ற முடிவுக்கே வருவார்கள்.

i) அதன் அமைப்பில் அது அரசியல் நிர்ணய சபையின் ஒரு வெளிறிய பிரதிபிம்பமாகவே இருக்கும். அரசியல் நிர்ணய சபையைப் போலவே இதிலும் இந்துக்கள்தான் ஆதிக்கம் வகிப் பார்கள்.

ii) அரசியல் நிர்ணயசபையிலும் ஆலோசனைக் குழுவிலும் காங்கிரசின் ஆதரவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குறிப்பிட்ட எண்ணிக்கையில் தீண்டப்படாதவர்கள் இருப்பார்கள்; இது அவர்களுக்கு எந்தவிதத்திலும் உதவிகரமாக இருக்கப் போவதில்லை. ஏனென்றால் அவர்கள் இந்துக்களின் கைப்பாவைகளாகவே இருப்பார்கள்.

iii) சிறுபான்மையினரின் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனைக் குழுவின் முடிவுகள் சாதாரணப் பெரும்பான்மையைக் கொண்டே மேற்கொள்ளப்படும். இதன் பொருள் என்னவென்றால் அந்த முடிவுகள் சாதி இந்துக்களால் எடுக்கப்பட்டு, சிறுபான்மையினர் மீது திணிக்கப்படும் என்பது தான்.

iv) ஆலோசனைக் குழுவின் முடிவுகள் சாதகமாயிருந்தாலும் அவை வெறும் பரிந்துரைகளாகவே இருக்கும்; அவை அரசியல் நிர்ணய சபையை எந்த வகையிலும் கட்டுப்படுத்த மாட்டா.

14. ஆலோசனைக் குழுவை அமைக்கும் திட்டம் ஒரு மோசடி அல்லாவிட்டாலும் அது ஒரு கேலிக்கூத்து என்பதில் ஐயமில்லை; அது சிறுபான்மையினரின் நலனுக்கு இந்துப் பெரும்பான்மையினர் இழைக்கும் தீங்கிற்கு எதிராக செயல்படும் என்று நம்ப முடியாது. இந்துப் பெரும்பான்மையினர் தங்களுடைய நெடுநோக்கான திட்டங்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களை இலக்காகத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றே கூறவேண்டும். ஒரு பெரும்பான்மையினர் அளிக்கக் கடமைப்பட்டுள்ள அரசியல் பாதுகாப்பினை அவர்களிடமிருந்து கோரும் உரிமையை தீண்டப்படாதவர்களுக்கு மறுக்க அவர்கள் முடிவு செய்துவிட்டதாகவே தோன்றுகிறது. காங்கிரஸ் கட்சி 1946 ஜூன் அன்று (இனம் 21, 6861) எழுதிய கடிதத்தில் இருந்து இது தெள்ளத் தெளிவாகிறது. அக்கடிதத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் சிறுபான்மையினர் அல்ல என்ற ஒரு நிலையை காங்கிரஸ் எடுத்துள்ளது. இது ஓர் அதிர்ச்சியூட்டும் அறிக்கையாகும். ஏனெனில் 1939, அக்டோபர் 21 ஆம் தேதிய 'ஹரிஜன்' என்ற தமது வார இதழில் தாழ்த்தப்பட்டவர்கள்தான் இந்தியாவின் ஒரே உண்மையான சிறுபான்மையினர் என்று திரு. காந்தியே ஒப்புக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் இவ்வாறு ஒரு முழுக் குட்டிக்கரணம்

அடித்துள்ளது. காங்கிரஸ் தற்பொழுது எடுத்துள்ள நிலையானது, தாழ்த்தப்பட்டவர்களை சிறுபான்மையினர் என்று குறிப்பிடும் இந்திய அரசின் 1935 ஆம் வருடச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு முரணானது. இந்தத் தலைகீழ் மாற்றத்தின் மூலம் என்ன தீங்கு செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வது சாத்தியமல்ல. தாழ்த்தப்பட்டவர்களை சிறுபான்மையினராகக் காங்கிரஸ் கருதவில்லை என்றால் அரசியல் நிர்ணயசபை மற்ற சிறுபான்மையினருக்கு அளிக்க ஒப்புக்கொண்டுள்ள அதே பாது காப்பினை இவர்களுக்கு அளிக்க மறுக்கக்கூடும். ஆகவே ஆலோ சனைக் குழுவால் இந்த ஆபத்திலிருந்து தீண்டப்படாதவர்களைக் காப்பாற்ற முடியாது.

15. ஆகவே, தீண்டத்தகாதவர்களின் நிலை ஆபத்துக்குள் ளாக்கப்படாமலிருப்பதற்கு நாடாளுமன்றம் தலையிட வேண்டும். அது அளித்த வாக்குறுதிகளுக்காக மட்டுமன்றி அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் நடைமுறைப்படுத்தப்படக் கூடியவை அல்ல என்பதற்காகவும் இதைச் செய்ய வேண்டும்.

16. நாடாளுமன்றம் என்ன செய்ய முடியும்? தற்காலிக அரசைப் பொறுத்தவரை தீண்டப்படாதவர்கள் தங்களுக்கு இழைக்கப் பட்ட தீங்குகள் களையப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். தங்களுக்கான ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அவாவுகின்றனர். நிர்வாக சபைக்கு தங்கள் பிரதிநிதியை நியமனம் செய்யும் உரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று விழை கின்றனர். இவை புதிய கோரிக்கைகள் ஒன்றும் அல்ல. 1945 ஆம் வருட சிம்லா மாநாடு முதற்கொண்டே அவை தாழ்த்தப்பட்ட வர்களின் தனிப்பெரும் உரிமைகள் என்று குறிப்பிடப்பட்டு வந்துள்ளன. இந்தத் தீங்கு இப்போது களையப்படுவது கடினம் என்று அவர்கள் உணர்கிறார்கள். ஆனால் சூழ்நிலைகள் மாறி, அரசு திருத்தியமைக்கப்பட்டால் இந்தத் தீங்கைச் சரிசெய்யும்படி நாடாளுமன்றம் மன்னர்பிரான் அரசை வலியுறுத்தும் என்று எதிர் பார்க்கிறார்கள்.

17. தங்களுடைய அரசியல் பாதுகாப்பினைப் பறிக்க முடிவு செய்துள்ள சாதி இந்துக்கள் நிறைந்துள்ள அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தக் கூடிய பாதிப்பிலிருந்து தாழ்த்தப்பட்டவர்களைக் காப்

பாற்ற தற்பொழுது எவ்வளவோ செய்ய முடியும். இந்த ஆபத்தினைத் தடுக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கலாம்:

I. தாழ்த்தப்பட்டவர்களை தாங்கள் சிறுபான்மையினராகக் கருதுவதாக பிரகடனம் செய்யும்படி மன்னர்பிரான் அரசை வலியுறுத்தலாம்.

1946 ஜூன் 25-ஆம் நாளைய கடிதத்தில் (இனம் 21/6861) காங்கிரஸ் எடுத்துள்ள நிலைப்பாட்டின்படி இது மிக முக்கியமானது. காங்கிரசுக்கு வைஸ்ராய் எழுதிய 1946 ஜூன் 27-ஆம் தேதிய (இனம் 38/6861) கடிதத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் சிறுபான்மையினர் அல்ல என்ற காங்கிரசின் நிலைப்பாட்டைக் குறித்த ஒரு மறுப்பைத் தவிர்த்திருப்பதால் இது மிகமிக அவசியமாகிறது. தற்பொழுது அரசு ஓர் உறுதிமொழி அளிக்க வற்புறுத்தப்படவில்லையென்றால் தாழ்த்தப்பட்டவர் இரு வழிகளில் பாதிக்கப்படுவர்:

அ) இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் நிர்ணய சபை சிறுபான்மையினருக்கான உரிமையை அவர்களுக்கு அளிக்க மறுக்கும்.

ஆ) தாழ்த்தப்பட்டவர்களை ஒரு சிறுபான்மையினர் எனப் பாவிக்கத் தாங்கள் கட்டுப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தை வைத்து மன்னர்பிரான் அரசு அவர்களின் உதவிக்கு வர இயலாது போகும்.

II. சிறுபான்மையினருக்கு அரசியல் நிர்ணய சபை வகுத்துத் தந்திருக்கும் பாதுகாப்புகள் போதுமானவையா, உண்மையானவையா என்று ஆராய ஒரு அமைப்பை மன்னர்பிரான் அரசு நிறுவுமா, அப்படியெனில் எவ்வகையில் நிறுவும் என்பதை அறிவிக்கும்படி வலியுறுத்த வேண்டும்.

அ) அமைச்சரவைத் தூதுக்குழுவினர் தங்களுடைய 1946, மே 25-ஆம் நாள் (6835) கூடுதல் அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளனர்:

"அரசியல் நிர்ணய சபை தனது பணிகளை முடித்துக் கொண்டவுடன், இறையாண்மையை இந்திய மக்களுக்கு மாற்றித் தருவதற்குத் தேவையான செயல்பாடுகளை நாடாளுமன்றத்திற்கு மன்னர்பிரான் அரசு பரிந்துரைக்கும்; சர்ச்சைக்

கிடமற்ற முறையில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு விஷயங்களை மட்டுமே இதற்கு முன்நிபந்தனையாக விதிக்கும். அவையாவன: ஒன்று சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு (அறிக்கையின் 20வது பத்தி) போதுமானபடி வழிவகை செய்ய வேண்டும்; இரண்டு அதிகார மாற்றம் (அறிக்கையின் 22-வது பத்தி) சம்பந்தமாக எழும் விஷயங்களைப் பற்றி மன்னர்பிரான் அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள இணங்க வேண்டும்.''

இந்தப் பத்தியின் பொருள் சரியாக விளக்கப்படவில்லை. எனவே, தங்களுடைய எண்ணத்தை தெள்ளத் தெளிவாக்கும்படி மன்னர்பிரான் அரசு வலியுறுத்தப்பட வேண்டியது அவசியம்.

ஆ) ''மட்டுமே'' என்ற சொற்கள், அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்படும் சிறுபான்மையினர் பாதுகாப்பு போதுமானவையா, அவை உண்மையானவையா என்பதை அறியும் உரிமையை மன்னர்பிரான் அரசே வைத்துக் கொள்ளும் என்ற பொருளைக் கொண்டதெனில், அந்த ஆய்வுக்கு எந்த வகையான அமைப்பை நிறுவப்போகிறார்கள் என்று அறிவிக்கும்படி மன்னர்பிரான் அரசை வலியுறுத்துவது அவசியம். சிறுபான்மை வகுப்பினரில் இருந்து சாட்சிகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட ஒரு கூட்டு நாடாளுமன்றக் குழுவை அமைப்பது மிகப் பொருத்தமானதாக இருக்கும். இதற்கு ஒரு முன்னுதாரணம் உள்ளது. 1935 ஆம் வருட இந்திய அரசுச் சட்டம் வகுக்கப்பட்டு வந்த வேளையில் ஒரு கூட்டு நாடாளு மன்றக் குழு நியமிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையின் அறிக்கை சம்பந்தமாக இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றுவதில் தவறு ஒன்றும் இல்லை.

III. சாதாரண பெரும்பான்மையின் மூலம் சிறுபான்மையினரின் பாதுகாப்பினை நீக்குவதற்கு எதிர்கால இந்திய சட்டமன்றங்களுக்குள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு விதி அரசியல் நிர்ணய சபை உருவாக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டத்தை மாற்றுவதற்கும் சிறுபான்மையினருக்குள்ள பாதுகாப்புகளை நீக்குவதற்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து குறிப்பிடப்படவில்லை. இந்திய சட்ட மன்றங்களால் இந்தப் பாதுகாப்புகள் நீக்கப்படக் கூடுமானால்

நாடாளுன்றத்தில் இப்பாதுகாப்புச் சட்டங்களை அறிமுகப் படுத்துவதில் பயனே இல்லை. இச்செயல்களுக் கெதிரான ஒரே பாதுகாப்பு என்னவெனில் இந்திய சட்டமன்றங்களின் அரசியல் சட்ட அதிகாரங்களுக்கு ஒரு எல்லை நிர்ணயிப்பதும், சிறுபான்மையினரின் பாதுகாப்புகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமானால் அதற்கு சில நிபந்தனைகளை நிறை வேற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதும்தான். இவை போன்ற சில வழிவகை ஏற்பாடுகள் அமெரிக்க அரசியல் சட்டத்திலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ளன.

அ) இவ்விஷயம் சிறுபான்மையினருக்கு மிக முக்கியமானது எனினும் அமைச்சரவைத் தூதுக்குழு இதைச் சிந்திக்கவே இல்லை. இதுபற்றி தனது கருத்தைத் தெரிவிக்கும்படி மன்னர் பிரான் அரசை வலியுறுத்துவது அவசியமாகும்.

- பி.ஆர். அம்பேத்கர்

## சிறப்புப் பெயரகராதி


அட்லி பிரபு, 140, 144, 148, 151
அமெரி, 73, 74, 82, 86, 96
அம்பேத்கர், 59-61, 64, 70, 82, 84-85, 88, 89, 105, 107, 110, 116, 130, 140, 144, 148-151, 153, 162
அலெக்சாண்டர், 131, 158
ஆங்கிலோ-இந்தியர், 18, 27, 55, 92, 112, 154
ஆசாத், அப்துல்கலாம், 146, 152
ஆனே, 88
இந்து, 10, 11, 16, 79, 118
ஐரீஸ் குடியரசு, 77
கம்யூனிசம், 109
காங்கிரஸ், 64, 79, 95, 117
காந்தி, 28, 72, 75, 107, 113, 146
காயஸ்தர்கள், 49
கிரிப்ஸ், சர் எஸ்., 59, 61, 63, 67, 70, 79, 158
கிறித்தவர், 18, 27
சப்ரூ கமிட்டி, 99
சவுத்பரோ குரு, 10, 11
சரத் சந்திரபோஸ், 145
சிம்லா மாநாடு, 47, 114
சிவராஜ், ராவ் பகதூர் என்., 12, 28, 97, 132
சீக்கியர், 14, 18, 27, 46, 79, 95, 99, 147, 157
சைமன் பிரபு, 88
தீண்டாமை, 124
நாயர், 16, 17
முகமதியர், 18, 27, 46, 53
முஸ்லீம், 10, 11, 64, 79, 118, 157
முஸ்லீம் லீக், 64, 79, 95, 117
பம்பாய், 162
பார்டிக்கள், 49,
பனியா, 117
பாகிஸ்தான், 79, 104
பால் மார்ஸ்டன் பிரபு, 126
பிராமணியம், 125
பிரிட்டிஷ் அரசு, 123, 125, 126
புனா ஒப்பந்தம், 84
பெதிக்-லாரன்ஸ் பிரபு, 102, 109, 128, 130, 148, 158
வங்காளம், 145, 162
வேவல் பிரபு, 96, 97, 102, 111, 116, 132
லின்லித்கோ பிரபு, 63, 82, 86, 89
லும்பே, சர்.ஆர்., 63, 86
ராமசாமி முதலியார் சர்., 83, 116
ராமசாமி ஐயர், சர் சி.பி., 82
ராஜா, 59, 61, 84, 85
ஷெட்யூல்டு வகுப்பினர் சம்மேளனம், 97, 104
ஜின்னா, 153


★ ★ ★

